ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நிலை : **செல் குழு தலைவர்**

பாட புத்தகம் எண்: 7



நிலைகள்:

5. ஊழியர்

4. தலைவர் / மேய்ப்பர்

3. செல் குழு தலைவர்

2. சீஷர்கள்

1. ஆரம்ப நிலையில் உள்ளவர்

வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!

தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!

ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நோக்கம்:

→ ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்துக் கொள்ளுதல்

(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடத்துகொள்ளுவாய்."

- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

- கொலோ. 1: 27, 28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

→ பிறர் அவரை அறிந்துக் கொள்ள செய்தல்

(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

கொள்கை: "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!" (ரோமர்.11:36)

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

அட்டவணை பாட புத்தக எண்: 7

பக்க எண்

- கிறிஸ்தவ ஆலோசனை (6 பாடங்கள்) - முகவுரை 4

  (1) கிறிஸ்தவ ஆலோசனைக்குரிய ஆரம்பம்
  (2) கிறிஸ்தவ ஆலோசகருக்குரிய தகுதிகள்
  (3) எப்படி ஆலோசனை சொல்வது என்பதற்கான நடைமுறை வழிகாட்டிகள்
  (4) இரட்சிக்கப்படாதவருக்கு ஆலோசனை
  (5) பின்மாற்றத்திலுள்ளவர்களுக்கு ஆலோசனை
  (6) வியாதியஸ்தருக்கான ஆலோசனை

- திருமணம் செய்ய விரும்புவோருக்கான ஆலோசனை 16
- சாபத்திலிருந்து விடுதலை 31
- ஆலோசனை ஊழியம் 35
- வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை / விசுவாசத்தில் வாழ்தல் 43
- சமநிலை கிறிஸ்தவன் - அவன் வாழ்க்கை, விசுவாசம் மற்றும் அவன் நடத்தை 54
- நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலமாய் நமது வாழ்க்கையில் ஆளுகை 60
- தீர்க்கதரிசன வார்த்தையை பெறுவது எப்படி? / தீர்க்கதரிசனத்தை நிதானிக்க கற்றுக் கொள்ளல் 73
- நம்முடைய நாட்களில் நிறைவேறப் போகிற கர்த்தருடைய வார்த்தை 85
- ஆத்தும ஆதாயம்: மக்கள் எங்கேயோ அங்கு செல் (6 அதிகாரங்கள்) 89
  (மிகப்பெரிய அழைப்பு - ஆத்தும ஆதாயம், மக்கள் எங்கேயோ அங்கே செல், இங்கே நான் இருக்கிறேன், வெற்றிக்கான தெரிந்தெடுப்பு, மறக்கப்பட்டவர்கள், மேலான முக்கியத்துவம்)
- சுவிசேஷமும் சிறு குழு கூட்டங்களும்: குழுவுக்குள் நல்லுறவை எவ்வாறு மேம்படுத்துவது 113
- கிறிஸ்தவ பணியாளர்களுக்கான வழிகாட்டி (கட்டளை, மனதுருக்கம், அக்கறை, தொடர்பு, உரையாடல் (57 சாக்குபோக்குகளுக்கு பதில்), மனமாற்றம், நம்பிக்கைக்குள் கொண்டு வருதல், தவறான தோற்றம், கிறிஸ்து, பிரதிபலிப்பு) 128
- தனி வாழ்வில் பண நிர்வாகம் 159
- தசமபாகத்தின் வேதாகம புரிந்து கொள்ளுதல் 171
- உன் வாழ்க்கையில் முதன்மைத்துவத்தை நிறுவுதல் 179
- கிறிஸ்துவைப் போல பணி செய்வதின் அவசியம்: பணி செய்யுமிடத்தில் 183
- நீயாக நடத்தப்படுகிறாயா அல்லது பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகிறாயா? 186
- வாழ்க்கைக்குரிய கோட்பாடுகள் - 'சிந்தனைக்கு உணவு' 191

கிறிஸ்தவ ஆலோசனை - முகவுரை

கருத்து: சங் 33:11 (KJV) யோபு 12:13; நீதி 19:21

பாடம் 1 கிறிஸ்தவ ஆலோசனைக்குரிய ஆரம்பம்

A. ஆலோசனைக்கான தேவை:

கர்த்தர் மனிதனை உருவாக்கினபோது அது நல்லது என்று கூறினார்! கர்த்தர் தனக்கும் மனிதனுக்கும் அழகான உறவும், ஐக்கியமும் உண்டாகுமாறும் சிருஷ்டிகருக்கும். தன்னுடன் மனிதருக்கும் நல்ல தொடர்பு உண்டாகுமாறும் தன் சாயலாக சிருஷ்டித்தார். மனிதனின் கீழ்ப்படியாமையினாலும் வீழ்ச்சியினாலும் பாவமும் பிரிவினையும் ஏற்பட்டு கர்த்தரின் உண்மையான வடிவத்திலிருந்து மாறுபட்டு நாம் சுயத்தை மையமாகக் கொண்டவர்களாய் மாறினோம். இதனாலேயே எல்லாவித பிரச்சினைகளும் உண்டாகி இதிலிருந்து நாம் மீண்டு வரவேண்டிய அவசியம் உண்டாயிற்று.

இன்று நம்மை சுற்றியுள்ள உலகத்தைப் பார்க்கும் பொழுது பாவத்தால் உடைக்கப்பட்ட உலகத்தைக் காண்கிறோம். அவிசுவாசிகளிடம் மட்டுமல்ல, எல்லாரிடமும் பிரச்சினைகளும் தேவைகளும் இருக்கிறது.

வீழ்ந்து போன தம் சிருஷ்டியிடம் ஊழியம் செய்ய இயேசு வந்தார். அவர் மக்களின் பிரச்சினைகளைக் குறித்து பேசவும் அதை தீர்த்து வைப்பதற்கு விருப்பமாய் நேரம் எடுத்துக் கொண்டார். (உம்: சமாரியா பெண்; யோவான் 4) எல்லா மனிதருடைய முழுமைக்காகவும் அவர் ஊழியராய் வந்தார்.

இன்றைய தின மக்களும் உதவி செய்பவரை நோக்கியும், முழுமையானவரையும் தங்கள் பிரச்சினைக்கு விடை அளிப்பவரையும் தங்கள் காயத்தையும் உடைக்கப்பட்டதையும் குணமாக்குகிறவரை நோக்கி இருக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் நாம், நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் கருவியாய் நம்மை நாமே கர்த்தர் உருவாக்க இடம் கொடுக்க வேண்டும்.

B. கிறிஸ்தவ ஆலோசனை என்பது என்ன?

கிறிஸ்தவன் அல்லது சிறந்த வேதாகம ஆலோசனை என்பது: மக்களுடைய பிரச்சினை மற்றும் கடினமான சூழ்நிலைகளில் கர்த்தருடைய வார்த்தையின்படி அதைத் தீர்க்க உதவி செய்யும் ஊழியம் ஆகும். வேறு வார்த்தையில் சொல்வோமாகில், மக்களுடைய பிரச்சனையை பரிசுத்த ஆவியானவரின் உதவியால் கவனித்து கேட்கும் திறன் உடையவராயும், அவர்கள் எந்த பாதையில் கடந்து செல்கிறார்கள் என்பதை நன்கு அறிந்து அந்த குறிப்பிட்ட காரியத்தில் அதற்கான தீர்வை பகிர்ந்து கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

வேதாகம ஆலோசனை என்பது கர்த்தருடைய வார்த்தையோடும், கர்த்தருடைய வார்த்தையின்படியும் ஆலோசனை கூறுவதாகும். பொதுவாக தனிப்பட்ட நிலையில், மக்களை முழுமைக்குள் கொண்டுவரும்படி அவர்களை தேற்றுகிற ஊழியம் ஆகும். வேதாகம மேற்கோள்கள்: சங் 33:11; 1 தீமோத் 3:16; லூக். 4:18,19.

C. ஆலோசனையின் சரியான நோக்கம் என்ன?

கர்த்தருடைய சாயலின்படி ஒரு மனிதனை உயிர்ப்பிக்கப்படும்படியும் அல்லது புதிய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவைப் போல மனிதனை உண்டாக்கும்படி. ரோமர் 8:28-29.

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரை ஆலோசகர் என்று அழைக்கிறோம்; கிரேக்க மொழியில் "பாரகிளிடிஸ்" இதன் அர்த்தம்: உதவி செய்யும்படி அழைக்கப்பட்ட ஒருவராகும். ஆனால் ஆலோசனைக்கான நமது ஊழியம் என்ன? தனிப்பட்ட வாழ்க்கையின் செயல்முறையில் ஒருவர் பழுதுபட்டு இருக்கும் பொழுது, அவரை கர்த்தரின் சாயலுக்குள் உயிர்ப்பிக்க விசுவாசியாகிய நாம் உதவி செய்து பரிசுத்த ஆவியானவரின் தற்காலிக உதவியாளராக

நாம் மாறி அவருக்கு ஆலோசனைக் கூறுவதாகும். வேறு வார்த்தையில் கூறுவோமாகில், கர்த்தர் உண்மையிலேயே வடிவமைத்த பாதையில் ஒருவர் செயல்படத் துவங்க நாம் அவருக்கு உதவி செய்வதாகும்.

D. மனிதனுடைய வடிவமைப்பைப் புரிந்து கொள்ளுதல்

நாம் மற்றவருக்கு உதவி செய்வதற்கு முன் பொதுவாக அந்த மனிதனின் செயல்பாட்டைப் புரிந்து கொள்வது அவசியம் என்பது தெளிவாகிறது. அவனை சரியாக புரிந்து கொள்ளும்படி மட்டுமே நம்மை அமைத்து இருப்பதாக வேதம் கூறுகிறது.
1 தெச 5:23ல் மனிதன் உருவாக்கப்பட்டதைக் குறித்து நமக்குக் கூறுவது: ஆவி, ஆத்துமா, சரீரம். மனிதனுடைய செயல்பாடுகள் முழுவதும் ஒன்றாயும், அவனுடைய அமைப்பின்படி பிரிக்க முடியாததாயும் இருக்கிறது.

E. மனித அமைப்பிலுள்ள பகுதிகள்

மனித அமைப்பிலிருந்து எப்படி பிரச்சனைகள் உருவாகுகிறது என்பதையும், அந்த அமைப்பிலுள்ள 5 பகுதிகளைப் பார்க்கும் போதும் மனிதனுடைய செயல்பாட்டில் அவை ஒன்றுக்கொன்று எப்படி தொடர்புடையது என்பதையும் புரிந்து கொள்ளலாம். இந்த வழியில் நாம் கடந்து வரும் பிரச்சினைகளை விளங்கி, புரிந்து கொள்ள நம்மால் முடிகிறது.

1. மனிதன் ஆவியுடையவனாய் இருக்கிறான். (ஆசைகளையுடையது): ஆவிக்குரிய தேவைகள் கர்த்தரால் மட்டுமே சந்திக்கப்பட முடியும். சங் 63:1.

2. மனிதனுடைய காரியம் அவனுடைய சிந்தனையில் உள்ளது. பாவத்தின் பலனால் அவனுடைய சிந்தனை மாறுபடுகிறது. ("அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்.") நீதி 23:7ய (KJV)

3. மனிதன் தெரிந்தெடுப்பு / தன் விருப்பத்தின்படி செயலாற்றுபவனாய் இருக்கிறான். விருப்பம் உடையவனாயும் தெரிந்தெடுப்பு மற்றும் தீர்மானத்தை உண்டாக்குகிறவனாயும் இருக்கிறான். நீதி 19:21a

4. மனிதன் உணர்ச்சி / உணர்வு உடையவனாய் இருக்கிறான்: அவனுடைய வாழ்க்கையை உணர்வுகள் ஆளுகை செய்கிறதாய் இருக்கிறது. (நிறைவேற்றப்படாத அல்லது சரியான இலக்கின்றி குற்றமனப்பான்மையினால் வருத்தம், சந்தேகம் மற்றும் தாழ்வு மனப்பான்மை) சங் 42:3.

5. மனிதன் சரீரப் பிரகாரமாய் இருக்கிறான்: சரீரம் சரியாக செயல்படாவிட்டால் ஆவி மற்றும் மன நிலையில் பிரச்சினை உடையவன் ஆகிறான். (மனநிலை, சிந்தனை மற்றும் பழக்க வழக்கம்) ஆதி 2:7.

மனிதனுடைய தனிப்பட்ட அமைப்பிலுள்ள பலவிதமான பகுதிகளில் உள்ள பிரச்சனைகளை கூர்ந்து கவனிப்போமாகில், அவை:

Ad.1. இந்த பகுதிகளில் தொடர்புடைய பிரச்சினை: சோதனை, இச்சை, சந்தேகம், பின்மாற்றம், சோம்பல் முதலியன.

Ad.2. இந்த பகுதிகளில் உள்ள பிரச்சனை: மனச் சோர்வு, தாழ்வு மனப்பான்மை, நரம்புத் தளர்ச்சி முதலியவை.

Ad.3. இது சம்பந்தப்பட்ட பிரச்சனை: வாழ்க்கைத் துணை, வேலை, கல்லூரி, பணத்தைக் கையாடுதல் குறித்த தெரிந்தெடுப்பு முதலியன.

Ad.4. இதனோடு சேர்ந்த பிரசினை: தனிமை, குற்ற உணர்வு, சந்தேகம், வருத்தம் முதலியன.

Ad.5. பிரச்சனையோடு தொடர்புடையது: வியாதி, தீர்க்க முடியாத நோய் முதலியன.

இந்த சட்ட வடிவமைப்பில் உள்ள பிரச்சனைகளை எப்படிப்பட்ட ஆலோசனையை பயன்படுத்தி தீர்ப்பது என்பதை பாடம் 3ல் விவரிப்போம்.

பாடம் 2 கிறிஸ்தவ ஆலோசகருக்குரிய தகுதிகள்

முகவுரை:

ஆலோசகர் என்பவர் தன்னுடைய பிரச்சனைகளை தானே தீர்த்துக் கொள்ள முடியாத தனிப்பட்ட நபருக்கு உதவி செய்யக் கூடிய தலைவர் அல்லது முதிர்ந்த விசுவாசியாகும். ஆலோசகருக்குரிய தலையாய பொறுப்பு:

– தம்மை பரிசுத்த ஆவியானவருக்கு முழுமையாய் ஒப்புக் கொடுத்து தம் மூலமாய் ஆவியானவர் செயல்பட அனுமதி அளிப்பவராய் இருக்க வேண்டும். (சங். 16:7).

– வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் தன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். (2 தீமோத் 2:15)

– இதுவரை பரிசுத்த ஆவியானவர் அவரை எப்படி நடத்திக் கொண்டு வந்துள்ளார் என்பதைக் கொண்டு ஆலோசகருடைய பொறுப்பை அறிந்து கொள்ளலாம். (நம்மால் எவ்வளவு சிறப்பாய் முடியுமோ அவ்வளவு)

சவால்: ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும். (நீதி 11:14)

ஆலோசனைக்காரருக்கு உரிய தகுதிகள்:

1. விசுவாசமுள்ள மனிதராயும், ஆவியில் முதிர்ச்சி அடைந்தவராயும், கர்த்தரோடு நடக்கிறவராயும், அவருடைய குரலை கேட்கிற அளவிற்கு பரிசுத்த ஆவியினால் நிறைந்து, கர்த்தருடன் நிலையான ஐக்கியம் கொண்டவராயும், மனதளவிலும் உணர்ச்சியிலும் நிலையானவராயும், கர்த்தரை சார்ந்தவராயும் இருக்க வேண்டும். நெருக்கடியான நேரங்களிலும் ஜெபிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும். ஆவியானருவடைய வரத்தோடு செயல்படுகிறவராய் இருக்க வேண்டும். தன்னுடைய பிரச்சனையில் இருந்து தாமே விடுதலை ஆக்கப்பட்டவராய் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியாது. ஜெபம் என்பது ஆலோசனைக்குரிய அடிப்படை அடித்தளங்களில் ஒன்றாகும்.

2. கர்த்தருடைய சித்தத்தைக் குறித்த ஆவிக்குரிய ஞானம் உடையவராயும், கர்த்தருடைய வார்த்தையின் படி இதை எப்படி கையாள்வது என்பதையும் அறிந்தவராய் இருக்க வேண்டும். ஆகவே எல்லா ஆலோசனைக்கும் அடிப்படை கர்த்தருடைய வார்த்தை ஆகும். இந்த பிரச்சனைக்கு பதிலை எங்கிருந்து பெறுவது என்பதை அறியும் வண்ணம் அவர் வேதத்தை நன்கு அறிந்தவராய் இருக்க வேண்டும். (“துணி வெட்டுபவரின் அணுகுமுறையோடு” முந்தைய அனுபவம் மற்றும் தீர்வின்படி அல்லாமல்). கொலோ. 3:16; 2 தீமோத் 2:15; ரோமர் 15:14). “என் சகோதரரே நீங்கள் நற்குணத்தில் நிறைந்தவரும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வல்லவர்களுமாய் இருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்.”

3. மக்கள் மேல் அன்பும் கரிசனையும் உள்ளவராய் இருக்க வேண்டும். ஆலோசகர் அன்பானவரும், அக்கறையானவரும், எல்லாரும் எளிதில் அணுகக்கூடியவருமாய் இருக்க வேண்டும். இதனால் மக்கள் விடுதலையோடு அவரிடம் வந்து, தங்கள் மிகக் கடுமையான பிரச்சனைகளையும் அவரிடம் பகிர்ந்து கொள்ள முடியும். அவர் மேய்ப்பரின் இருதயத்தை உடையவராயும் இருக்க வேண்டும். (ஆலோசனை பெறும் நபராகவும்) “நீ யாராயிருந்தாலும், எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் உன்னை ஏற்றுக் கொள்வேன் என்பதை அறிக!” இந்த அன்பும் கவனிப்பும் இவர் மேலும் இவர் தீர்ப்பின் மேலும் மக்களிடத்தில் நம்பிக்கையை உண்டாக்கும். மக்களுடைய பிரச்சனைகள் மற்றும் தேவையில் தொடர்பு கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய அனுபவம் எதுவாக இருந்தாலும் அதை உணர்ந்து அவர்களுடைய பிரச்சனையை அடையலாம் காணுபவராய் இருக்க வேண்டும். (ரோமர் 12:25; கலா 6:2)

வேறு வார்த்தையில் கூறுவோமாகில் உணர்ச்சிப் பூர்வமாய் மற்றவர்களுடைய பிரச்சனையில் தலையிடாமல் அவர்களுடைய பிரச்சனையில் அவருடைய பாதத்திற்கு கீழே உங்களைத் தாழ்த்தக் கூடியவராய் நீங்கள் இருக்க வேண்டும். தன்னுடைய சொந்த பிரச்சனையை தீர்த்துக் கொள்வதில் ஆலோசனைப் பெறுபவர், ஆலோசகரையே சார்ந்து இராமல் ஆலோசகர் தற்காலிக உதவியாளர் மட்டுமே என்பதை அறிய வேண்டும்.

4. தெய்வீக அல்லது பரலோக ஞானம் நிறைந்தவராய் இருக்க வேண்டும். (யாக். 3:14; 1:5). நம்முடைய உறவை ஆளுகை செய்யும் தெய்வீக ஞானத்திற்குரிய காரியங்கள்:

   ✓ தூய்மையான நோக்கம்; சுத்தமாயும் சுயநலமில்லாததாயும் இருக்க வேண்டும்.

   ✓ சமாதானத்துக்குரியதாய், நம்முடைய நடத்தை சரியானதாய் இருக்க வேண்டும்.

   ✓ சிறந்தவர் அல்லது அக்கறையுள்ளவராய் இருப்பது, இது ஆலோசனை பெறுபவரிடம் இரக்கத்தைக் காண்பிக்க ஏதுவாய் இருக்கும்.

   ✓ தாழ்மை அல்லது எளிதாக புரிந்து கொள்பவராய் இருத்தல், பிடிவாதக்காரராய் இல்லாமல் கர்த்தருடைய வார்த்தையையும் பிரச்சனையின் காரணத்தின் பலனை அறிபவராயும், புரிந்து கொள்பவராயும் இருத்தல் வேண்டும்.

   ✓ இரக்கம் நிறைந்தவராய் அல்லது நல்ல கனி நிறைந்தவராய், தேற்றுகிறவராய் இருக்க வேண்டும். வேறு வார்த்தையில் கூறுவோமாயின் நம்முடைய ஞானத்தின் மூலமாகவும், நம் மூலமாகவும் ஆண்டவருடைய இருதயத்தை நம்மிடம் கண்டு தொடப்படுபவராய் இருக்க வேண்டும். (உதாரணம். யோவான் 8:1-11).

   ✓ பட்சபாதம் அற்றவராய் இருத்தல். தனிப்பட்ட நட்பு, பதவி, ஆஸ்தி, கவர்ச்சி முதலியவைகளின் ஆளுகை உங்கள் ஆலோசனையாய் இருக்கக் கூடாது.

   ✓ உண்மையாய் இருத்தல். வேறு வார்த்தையில் உங்கள் ஆலோசனை நேர்மையானதாய் இருக்க வேண்டும்.

5. பொறுமையானவராயும் கேட்பதைப் புரிந்து கொள்பவராயும் இருக்க வேண்டும். இது மிக முக்கியமான தேவையாகும். (யாக் 1:19) கவனித்துக் கேட்பவராய் இருக்க வேண்டும். அவசரப்படாமல், சூழ்நிலையை கட்டுப்படுத்த முயற்சிக்காமல் கேட்பதற்கு நேரம் எடுத்துக் கொள்வதில் விருப்பம் உடையவராய் இருத்தல் வேண்டும். ஆலோசனைக்குரிய செயல் முறையில் முக்கியமான பங்கு மற்றவர்களை பாரமாக எண்ணாமல் பொறுமையோடு காது கொடுத்துக் கேட்பவராய் இருக்க வேண்டும்.

6. இரகசியத்தை பாதுகாக்கிறவராய் இருக்க வேண்டும். வேறு வார்த்தையில் முத்திரிக்கப்பட்ட உதடுகள்! ஆலோசகரை நம்பியதால் ஆலோசனை பெறுபவர் தன்னுடைய பிரச்சனைகளை பகிர்ந்து கொள்கிறார். அந்த நம்பிக்கையையும், நிச்சயத்தையும் இழந்து போகாதவராய் ஆலோசகர் இருக்க வேண்டும்.

7. வேதத்தின் வாக்குத்தத்தங்களின் உறுதியோடு மற்றவர்களை வழி நடத்த ஆயத்தம் உள்ளவராய் இருக்க வேண்டும். தேவையுள்ள மக்களுக்கு ஆலோசனை வழங்குவதில் ஆலோசகர் தெளிவு மற்றும் நிச்சயம் உடையவராயும் நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும். தெளிவான வழி காட்டுதல் இல்லாமல் சிலர் குழப்பமாய் இருக்கக் கூடும். மற்றவர் தவறான திசையில் செல்பவராய் இருக்கலாம். அவருக்கு ஆலோசகர் அதிகாரத்தோடு எச்சரிப்பையும், கண்டிப்பான ஆலோசனையும் அளிப்பவராய் இருக்க வேண்டும்.

குறிப்பு: – இணைந்து ஆலோசனை அளிப்பது சிறந்த அறிவுரையாகும்.
– சிறந்த ஆலோசகர் குழு: கணவன், மனைவி, ஆணும், பெண்ணும் வித்தியாசமான எண்ணமும், சிந்தையும் கொண்டிருப்பதால்.

முடிவாக:
கிறிஸ்தவ ஆலோசனை ஊழியமும் அதன் பங்கும் சிறந்த தெளிவான உதாரணம் லாசரு சம்பவம் ஆகும். (யோவான் 11:1-44)

இந்த வேதாகமப் பகுதியில் சிந்தனைக்கு சிறந்தவை:

- கர்த்தர் காரியங்களில் தாமதிப்பாராகில் அவர் சிறந்த வாய்ப்புக்காக காத்திருக்கிறார் என்பதாம்.
- பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் லாசரு கல்லறையில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டார். ஆனால் சீஷர்கள் லாசருவை இழந்ததாகவே கூறினார். லாசருவை எழுப்ப இயேசுவால் கூடுமானால் அவனை விடுதலையாக்கவும் கூடும். ஆகையால் நம்மால் ஜீவனைக் கொடுக்க முடியாது. ஆனால் விடுதலையை கொடுக்க முடியும்.

மக்களுக்கு உதவி செய்ய தேவன் மக்களை உபயோகப்படுத்த முடியும். ஆகவே ஆலோசகராகிய நீங்கள் கர்த்தருக்கும் தேவையிலுள்ள மக்களுக்கும் இடையே தொடர்பை உண்டாக்குகிறவராய் இருக்கிறீர்கள். கட்டுகளில் வாழும் மக்களை கட்டுகளிலிருந்து விடுதலையாக்க உதவுவது நமக்கு கிடைத்த மிகச் சிறந்த வாய்ப்பும், கர்த்தருடைய மக்களை ஆவிக்குரிய திறனோடு காப்பதும் ஆகும்.

பாடம் 3 எப்படி ஆலோசனை சொல்வது என்பதற்கான நடைமுறை வழிகாட்டிகள்

A. தனிப்பட்ட நடவடிக்கை

சரியான நடத்தை உடையவராய் இருத்தல் மற்றவர்களுக்கு ஆலோசனை நடத்துவதற்கு தேவையானதாகும். என் நோக்கம் எப்பொழுதுமே மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்களை கட்டுவிப்பதே ஆகும். அவர்களிடம் தவறு கண்டுபிடிப்பது அல்லது அவர்களை கீழே தள்ளுவது அல்ல. (2 கொரி 13:10)

ஆலோசனைக்கான செயல்முறையில் கவனிக்கப்பட வேண்டிய சில குறிப்புகள் கீழே உள்ளன:

- ஜெபம்: ஜெபத்தோடு ஆலோசனை சொல்பவராய் இருத்தல் வேண்டும்.
- கண்டிப்பு அல்லது அதன் பலனை எதிர்பார்க்காமல் பொறுமையாய் கவனிப்பவராய் இருத்தல் வேண்டும்.
- இரக்கத்தோடு கவனிப்பவராய் இருத்தல் வேண்டும். அடுத்தவர் இடத்தில் உங்களை நிறுத்திப் பார்க்க முயற்சிக்க வேண்டும். உங்களிடம் பிரச்சனையை பகிர்ந்து கொண்டதின் மூலம் ஆலோசனை பெறுபவர் தமக்குள் பாரம் இறக்கப்பட்டது போல் உணரச் செய்ய வேண்டும்.
- அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதில் திறந்த மனம் உடையவராய் இருக்க வேண்டும். அவர்கள் கூறி முடிப்பதற்கு முன் உங்கள் ஆலோசனையைக் கூறக் கூடாது.
- தேவைப்படும் நேரத்தில் அவரிடம் கேள்வி கேட்டு அதற்குரிய பதிலைப் பெற வேண்டும்.
- ஆலோசனை பெறுபவர் குறிப்பிட்ட உண்மையை குறித்துக் கொள்ள வேண்டும்.
- கருத்துடையவராய். அதாவது அந்த நபர் தன்னில் தானே பிரச்சனையை தீர்த்துக் கொள்ள உதவியாய் வெளியிலிருந்து அந்தப் பிரச்சனையைப் பார்ப்பவர் போல பார்க்க வேண்டும்.
- அந்த நபரோடு அதிக உணர்ச்சி பூர்வமாய் இருப்பதை தவிர்க்க வேண்டும். இல்லையென்றால் அந்த ஆலோசனை பெறுபவர் உணர்வு பூர்வமாய் உங்களோடு ஒன்றி விடுவார்.
- அந்த நபரோடு பிரச்சனையின் அடையாளம் காண முயற்சிக்க வேண்டும். உதாரணமாக இதற்கு முன்பு இதே பிரச்சனையில் நீங்கள் இருக்கும் போது கர்த்தர் அதை எவ்வாறு தீர்த்தார் என்பதை அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

B. ஆலோசனையின் வழிமுறை

1. கண்டுபிடித்தல்

ஆலோசனை கூறுவதில் நம்முடைய நோக்கம் மக்களுடைய பிரச்சினையில் அவர்களுக்கு தீர்வு காண உதவி செய்வதாகும். சரீரத்திலுள்ள நோய்க்கென்று சில அறிகுறிகளும், அடிப்படைக் காரணங்களும் இருப்பது போல மனிதனுடைய பிரச்சினைக்கும் இருக்கிறது. எல்லா ஆலோசனை சொல்லும் சூழ்நிலையிலும் நமது நோக்கம் அறிகுறிகளை கவனிப்பது அல்ல. அந்த பிரச்சினையின் உண்மையான வேர் என்ன என்பதை கண்டுபிடிப்பதாகும். இதற்கு ஆவியானவரை சார்ந்திருப்பதும், ஞானத்தோடும், மனிதனுடைய நடவடிக்கை குறித்தும் அடிப்படை புரிந்து கொள்ளுதலும் தேவையாய் இருக்கிறது.

உ-ம்.1. திரு. X என்பவருக்கு சில காலங்களாக குடி என்ற பிரச்சினை உண்டு. ஆனால் அதிலிருந்து அவரால் விடுதலை பெற முடியவில்லை. அவர் தம் நண்பர்களோடு குடிக்கும் இடத்தில் இருக்க விரும்புவதாக கூறுகிறார். ஆலோசகர் இந்த நடவடிக்கைக்குரிய காரியத்தை கண்டுபிடிப்பது அவசியமாய் இருக்கிறது. இது இவருக்கு எப்படி பழக்கமானது? அல்லது தன்னுடைய திருமண பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள இப்படி செய்கிறாரா? பின்னால் குறிப்பிட்ட படி என்றால் ஏன்? எப்படி இந்த பிரச்சினை ஆரம்பமானது? அவருடைய தாழ்வு மனப்பான்மையினால் இது உருவாகி இருக்கலாம்.

உ-ம்.2. திருமதி. Y. கடந்த ஒன்றரை வருடமாக மாதா மாதம் நோயுற்று அதனால் வருத்தமுடையவராய் இருந்தார். ஆலோசகர் இதை ஏன் என்று கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. அவருடைய குடும்ப வழியில் இதே நோய் இருந்தா? அல்லது அதிகமான வேலையினாலா? அல்லது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை வாழ்வதனாலா? அல்லது குறிப்பிட்ட இடத்திற்கு மதத்திற்கான பயணத்தினால் இது ஆரம்பித்ததா? அல்லது விசுவாசியாக கர்த்தரின் பந்தியை அசட்டையாக பங்கு பெற்றதாலா? சரீர அழகு மனநிலை காரணத்தினாலா?

2. பிரச்சனையை தீர்த்தல்

பிரச்சனையை சரியாக அறிந்த பின் முதலாவது நாம் கர்த்தருடைய வார்த்தையின் மூலம் கர்த்தருடைய ஆலோசனையை முன்னிறுத்தி ஆரம்பிக்க வேண்டும். தீர்வுக்கு முதலாவது படி மன்னிப்பு மற்றும் கிறிஸ்து மூலமாக கர்த்தரோடு ஒரு உறவை துவங்குதல் ஆகும். பாவ மன்னிப்பு என்பது நம் மனதை மாற்றுதல் மற்றும் கர்த்தருக்கு நேராய் திருப்புதல் ஆகும். (ஓசியா 14:1-3) பாவத்தின் மனந்திரும்புதலோடு புதிதாய் கிறிஸ்துவை சார்ந்து வாழ்வதில் வளருவதாகும்.

இரண்டாவதாக. வேதாகமப்படி தீர்வை நாம் குறிப்பிட்டு காட்ட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆலோசனை பெறுவதற்கு அவருடைய வாழ்க்கையில் எந்த பகுதியில் கர்த்தருடைய வார்த்தையை உறுதி செய்வது அவசியமாய் இருக்கிறது என்பதை காண்பிக்கப்பட வேண்டும். (2 தீமோத் 4:26)

குறிப்பு:- இங்கு நாம் ஒவ்வொரு மனிதனும் அவருடைய ஒவ்வொரு சூழ்நிலையும் வித்தியாசமாக இருப்பதால் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து இருப்பது அவசியம். துணி வெட்டுபவருடைய தீர்வைப் போல் நாம் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு அணுகுமுறை கொண்டு இருக்க வேண்டும். பவுல் கூறிய பலவிதமான அணுகுமுறையை பார்ப்போம். (1 தெச. 5:14.; பிரசங்கி 8:5,6)

மூன்றாவதாக, வேதத்தில் கர்த்தருடைய தீர்வு அல்லது அவருடைய போதனையைக் காண்பித்து, இப்பொழுது அதை நாம் கையாள வேண்டியதாய் இருக்கிறது. வேறு வார்த்தையில், ஆலோசனை பெறுபவர் என்ன செய்ய வேண்டுமென்று சொல்வதாகும். அவருடைய சொந்த வாழ்க்கையில், வேதாகமத் தேர்வை எந்த முறையில் செயல்படுத்துவது என்ற நடைமுறை தெளிவாக பரிந்துரை செய்வது அவசியம். உதாரணம் ஆலோசனை பெறுபவர் ஒரு வேளை சாத்தானுடைய எதிர்ப்பினால் கஷ்டப்படலாம். பின்வரும் காரியங்களை அவரிடம் சொல்ல வேண்டியது அவசியம். (உதாரணம். லூக்கா சுவிசேஷத்தோடு துவங்க வேண்டும்.)

– எந்த மந்திர கயிறுகளையும், மந்திரித்த எந்த மறைவான பொருட்களையும் அழிக்க வேண்டும்.

– பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

– அவருடைய விடுதலைக்காக ஜெபிக்க வேண்டும்.

– விசுவாசியோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கவும். ஒழுங்காக ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

– கர்த்தருடைய வார்த்தையை தினமும் வாசிக்கச் செய்ய வேண்டும்.

நான்காவதாக, பின் தொடர்புக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். அதாவது அந்த நபர் உண்மையிலேயே அதன் வழியில் வருகிறாரா என்று பார்க்க வேண்டும். ஆலோசனைப் பெற்றவரை திரும்பவும் சந்திக்க நேரிடும் போது உங்கள் அறிவுரையை பின்பற்றுகிறாரா அல்லது குறைந்த பட்சம் நீங்கள் எடுத்த முயற்சியின்படி செய்கிறாரா? என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். (தொடர்ந்து ஆலோசனை தருவது எவ்வளவு கனி நிறைந்தது என்பதைக் காண்பிக்கும்.) அவர் கர்த்தரோடு நடக்கவும், அவருடைய விசுவாசத்தில் உற்சாகப்படுத்தவும் அவரோடு ஒரு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, ஆலோசனைப் பெறுபவருடன் கூடும் எல்லா ஆலோசனைக் கூட்டத்திலும் ஜெபிக்க நினைவாயிருக்க வேண்டும். குறிப்பாக ஆலோசனை பெறுபவர் பிரச்சனையின் எந்த நிலையிலும் தன்னை கர்த்தருக்கு ஒப்படைக்க ஆரம்பிக்கவும். கர்த்தரை நம்பி இருக்க கற்றுக் கொள்ளவும் செய்ய வேண்டும். (நீதி 3:5,6).

பாடம் 4 இரட்சிக்கப்படாதவருக்கு ஆலோசனை

ஒரு நபரை கர்த்தருக்குள் வழி நடத்தும் போது நம்முடைய பொறுப்பு அவரை இரட்சிப்பையும், ஒப்படைப்பையும் புரிந்து கொள்ளச் செய்வோம். அதோடு இரட்சிப்பின் நிச்சயத்தில் வழி நடத்தவும் வேண்டும். பின்பாக குறித்தவற்றை நாம் சரியாக செய்யவில்லையென்றால் அந்த நபர் சந்தேகம், பாதுகாப்பின்மை மற்றும் குழப்பத்தோடு வெளியேறி விடுவார். இரட்சிக்கப்படாதவருக்கு ஆலோசனை கூறும்போது செய்ய வேண்டிய அடுத்த படிகள் பின்வருகின்றன.

I. துவக்கவுரை

- உங்களை தனிப்பட்ட முறையில் அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ஆலோசனைப் பெறுபவரின் செயலைக் குறித்து சில கேள்விகளை கேளுங்கள்.
- பின்வரும் 3 முக்கிய கேள்விகளைக் கேளுங்கள்:

  1. நீங்கள் மரிக்கும்போது பரலோகத்திற்கு போவோம் என்ற நிச்சயம் இருக்கிறதா?
  2. ஒரு வேளை நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல நினைத்தால் கர்த்தர் ஏன் உங்களை அனுமதித்தார் என்று நினைக்கிறீர்களா?
  3. நீங்கள் பரலோகத்திற்குப் போக முடிவதற்கு முன் இப்பொழுது உங்கள் வாழ்க்கையில் சில மாற்றங்களை இந்த வழியாக கொண்டு வருகிறார் என்பதை சிந்திக்கிறீர்களா?

- தொடர்ந்து உங்கள் சாட்சியை கூறுங்கள்.
  சுருக்கமாக, உங்கள் கடந்த கால வாழ்க்கையை பகிர்ந்து கொண்டு நேர்மறை மாற்றங்களை விவரித்து நீங்கள் இப்பொழுது எப்படி வாழ்கிறீர்கள் என்பதை முக்கியப்படுத்துங்கள்.

II. மனிதருடைய பிரச்சனைகளை விவரியுங்கள்

- கர்த்தரிடத்திலிருந்து ஜீவனைப் பெற்று கர்த்தருடைய சாயலாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான்.

- அவன் விருப்பத்தை விடுதலையோடு அனுபவிக்கக் கூடியதை தவறாக பயன்படுத்தி கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் பாவத்தை உலகிற்கு கொண்டு வந்தான். ஆகையால் எல்லோரும் பாவியாக மாறினார். (ரோமர் 3:2,3).
- பாவத்தினால் மனிதன் பரிசுத்த தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு மரணத்திற்கும், நித்திய அழிவிற்கும் பாத்திரன் ஆனான். (ஏசாயா 59:2; ரோமர் 6:23)

III. மனிதனுடைய பிரச்சனைக்கு கர்த்தருடைய பதில்: சிலுவை

விவரி:

– மனித குலத்தை மீட்கும்படியாக கர்த்தர் தம்முடைய ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவை பூமிக்கு அனுப்பி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

– கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் பிறந்த படியால் அவரிடத்தில் பாவம் இல்லை. ஆகையால் அவரால் மட்டுமே சிறந்த பலியாக நம்முடைய பாவத்திற்கு தண்டனையாக (நமக்கு பதிலாக) சிலுவையில் மரிக்க முடிந்தது. (எபி 4:15; 1 பேதுரு 2:24)

– அதைத் தொடர்ந்து அவர் பரிபூரணராய் இருந்தபடியால் மரணம் கிறிஸ்துவை தன்னிடம் வைத்திருக்க முடியாமல் 3ம் நாளில் அவர் திரும்பவும் உயிரோடு எழுந்து பிதாவாகிய தேவனின் மகிமை மற்றும் பரலோக வல்லமையில் அவருடைய வலதுபாரிசத்தில் இப்போதும் அமர்ந்திருக்கிறார். (எபி 10:12)

– இன்றும் இயேசு உயிரோடு இருக்கிறார். உங்களை நேசிக்கிறார் மற்றும் நீங்கள் இரட்சிக்கப்படுவதையும் உங்களிடத்தில் மாற்றத்தையும் விரும்புகிறார்.

– உங்கள் வாழ்க்கையில் இயேசுவை கர்த்தரும் இரட்சகருமாய் ஏற்றுக் கொண்டு மனந்திரும்பும் போது நித்தியத்திற்கென்று உங்களுக்கு புதிய உள்ளான ஆவிக்குரிய வேலையை கொடுப்பார். (யோவான் 3:3,5,6)

– நாம் பின் தொடரும் கிறிஸ்துவை குறைந்தவராய் மதிப்பிடக் கூடாது. அவர் நமக்காய் கிரயம் செலுத்தியிருக்கிறார். இதற்கு விலையாக நாம் அவர் வார்த்தைக்கு கீழ்படிந்து நம்மை ஒப்புவிக்க வேண்டும். (மாற்கு 8:34)

அந்த நபர் கர்த்தரை ஏற்றுக் கொள்ள விரும்பும் போது அவருடைய ஒப்படைப்பின் ஒரு பகுதியாக பின்வரும் 4 படிகள் அவருக்கு அவசியம்.

IV. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அவருக்கு நம்மை ஒப்புக் கொடுத்தல்

1. நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டு, கர்த்தரிடத்தில் வந்து பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு, உங்களுடைய ஆவிக்குரிய தேவையை அனுமதியுங்கள். (1 யோவான் 1:9)
2. மனந்திரும்பு உங்கள் பாவத்தை விட்டுத் திரும்பி கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து அதை பின்பற்றுங்கள். (ஓசி. 14:1-3)
3. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததை விசுவாசித்து உங்களுடைய நித்திய இரட்சிப்புக்காக அவருடைய கரத்தில் உங்கள் வாழ்க்கையை நம்பி ஒப்படையுங்கள். (முழுமையான ஒப்படைப்பு) (அப் 16:31; 2 கொரி 5:15)
4. இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கை மற்றும் இருதயத்தில் தனிப்பட்ட கர்த்தரும் இரட்சகருமாய் வரவும் அவரோடுள்ள உங்கள் உறவில் கட்டப்பட ஆரம்பிக்கவும். ஜெபத்தின் மூலம் கேட்டுப் பெறுங்கள். (வெளி 3:20; யோவான் 1:12).

V. இரட்சிப்பின் நிச்சயத்திற்கான ஊழியம்

இரட்சிப்பு உணர்வின் அடிப்படையில் அல்ல. கர்த்தருடைய வார்த்தையின் சத்தியத்திலானதே ஆகும். ஆகையால் அவருடைய இரட்சிப்பையும் மன்னித்தலையும் பின்வரும் வேத வார்த்தையின் மூலம் உறுதிப்படுத்துங்கள்.

– ரோமர் 10:9-11,13.
– யோவான் 5:24; 6:47.
– 1 யோவான் 5:12.
– மீகா 7:19.

VI. <u>பின்தொடரும் பொறுப்புகள்.</u>

– கிறிஸ்துவுக்குள் நிலைத்து நிற்க உற்சாகப்படுத்துங்கள் மற்றும் அவர்களுடைய விசுவாசத்தை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

– வேதாகமம் ∴ புதிய ஏற்பாட்டைக் கொடுத்து, தினமும் எப்படி வாசிப்பது அவசியம் என்பதை விவரித்துச் சொல்லுங்கள்.

– தினமும் ஜெபித்தல் எவ்வளவு அவசியம் என்பதை முக்கியப்படுத்துங்கள்.

– விசுவாசிகளின் ஐக்கியத்திற்குள் அவரை கொண்டு வாருங்கள்.

– பரிசுத்த ஆவியானவரால் அவர் நிரப்பப்பட அவருக்காக ஜெபியுங்கள்.

– அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தொடர்ந்து ஜெபித்து அவரோடு எப்போதும் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்.

பாடம் 5 பின்மாற்றத்திலுள்ளவர்களுக்கு ஆலோசனை

1. பின்மாற்றம் என்பது என்ன?

இதன் அர்த்தம்: கர்த்தரோடுள்ள ஐக்கியத்தை ஒருவர் இழந்து ஆவிக்குரிய காரியங்களில் விழுந்து போதல் அல்லது குளிர்ச்சியாகவும், மாறுபட்டும் இருத்தல். (விலகியிருத்தல்)

பின்மாற்றத்தின் பல விதங்களைக் குறித்து வேதம் கூறுவது:
– கர்த்தரிடத்திலிருந்து திரும்பி (1 இராஜா. 11:9)
– உலகத்துக்கு நேராய் திரும்புதல் (2 தீமோத் 4:10)
– ஆதி அன்பை விட்டு விலகுதல் (வெளி 2:4)
– சுவிசேஷத்தை விட்டு விலகுதல் (கலா. 3:1-5)

2. பின்மாற்றத்தின் அளவுகோல்:

- விலகி இருத்தல்: குமாரனும் வார்த்தையும் வெளிப்படுத்த கர்த்தருடைய உண்மையை விட்டு விலகுவதால் விழுந்து போதல்.
- மாம்சீகப் பாவம்: "தன்னுடைய சொந்த இச்சை மற்றும் விருப்பத்தினால்" பாவத்தில் விழுதல் (உதாரணம். குடி, ஒழுக்கக்கேடு)
- பாவத்தின் ஆவி: ஆவியிலே மாறுபட்டு அதனால் கர்த்தருக்கு முன்பாகவும் சபைக்கு முன்பாகவும் உள்ள பொறுப்பில் குறைவுபடுதல்

3. பின்மாற்றத்திற்கு வழி நடத்தும் காரியங்கள்.

a) மற்ற விசுவாசிகள் மேலுள்ள கற்பனைகள் மாறுபடுவதாலும் அல்லது அவர்களுடைய நிலைத்தன்மை மாறுபடுவதாலும் சோர்வுறுதல்.
b) கர்த்தரோடுள்ள உறவில் மாறுபடுதல் அல்லது கர்த்தருடைய வார்த்தை, ஜெபம், விசுவாசிகளுடைய சாட்சியுள்ள வாழ்க்கை போன்ற இடத்தை அசட்டை பண்ணி பின்வாங்குதல்.
c) கர்த்தர் வெளிப்படுத்தின அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாது இருத்தல்.
d) அறிக்கையிடாத பாவத்தை தொடர்ந்து விரும்புதல்.

4. **பின்மாற்றம் ஏற்படுத்தக் கூடிய சில வேர்கள்:**
   - அவிசுவாசம் (எபி 3:12)
   - மனமேட்டிமை (நீதி 16:18)
   - பண ஆசை (2 தீமோத் 6:10)
   - ஆசீர்வாதத்தினால் கர்த்தரை மறந்து போதல் (உபா. 8:11-14)
   - உபத்திரவமும் துன்பமும் (மத் 13:20,21)

5. **பின்மாற்றத்தினால் உண்டாகும் விளைவு:**

   - ஆசீர்வாதத்தை இழப்பதும், கர்த்தரோடுள்ள ஐக்கியத்தில் உடைபடுதலும் ஆகும். (ஏசாயா 59:2)
   - கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதியற்றவராதல் (லூக்கா 9:62)

6. **<u>பின்மாற்றத்திலுள்ளவர்களுக்கு எப்படி ஆலோசனை கூறுவது?</u>**

முதலாவது இரண்டு வகையான பின்மாற்றக்காரர்கள் உண்டு என்பதையும், அவர்கள் ஒவ்வொரு விதத்தினரும் வித்தியாசமானவர்கள் என்பதையும் உணர்ந்து கொள்வது அவசியம்.

I. <u>அக்கரையற்ற பின்மாற்றக்காரன்</u>

கர்த்தரிடம் திரும்புவதற்கு அல்லது பாவ மன்னிப்புப் பெறுவதற்கு உண்மையிலேயே விருப்பம் அற்றவராய் இருப்பர். தன் நேர்மையான வாழ்க்கையிலே ஒரு வெறுமையைக் கண்டாலும் கர்த்தரிடத்தில் திரும்புவதற்கு விருப்பம் இல்லாது இருப்பர். இவர் பொதுவாக கர்த்தரையும் அல்லது மற்ற விசுவாசிகளின் நிலையையும் குற்றம் சாட்டிக் கொண்டே இருப்பார். மற்றவர்களுடைய அன்பற்ற காரியத்தினாலோ அல்லது அவர்கள் வேஷதாரியாய் இருப்பதாலோ இவர் காயமுற்றிருக்கலாம்.

இந்த நபர் மற்றவர்களுடைய பழக்க வழக்கம் எந்த விதத்திலும் இவர் கர்த்தரோடு கொண்டுள்ள உறவை சார்ந்ததல்ல என்பதை அறிவது அவசியம். வேறு வார்த்தையில் மற்றவர்கள் வேத மற்ற வாழ்வை தெரிந்து கொள்வது இவர் கர்த்தரை விட்டு விலகுவதற்கு சரியான காரணமாகாது. கர்த்தருடைய உண்மைத்துவத்தைப் பார்த்து தம்முடைய தெரிந்தெடுப்பில் உள்ள பொறுப்பினை உணரும்படியும் அவரை உற்சாகப்படுத்த வேண்டும்.

பின்வரும் வேத வாக்கியங்களை இதற்கு உபயோகிக்கலாம்:

a) சங் 119:90 மற்றும் சங். 89:33 வசனங்களை கர்த்தரின் உண்மைத்துவங்களை காண்பிக்க எடுத்துக் கூறவும்.
b) அந்த நபருக்கு ஏரே. 2:6ன் படி கர்த்தர் "என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டீர்கள்" என்று கேட்கிறார் என்றும் வச. 13ல் என் ஜனங்கள் ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டு வெடிப்புள்ள தொட்டியை தெரிந்து கொள்வது எத்தனை வேடிக்கையானது? என்று காண்பிக்கவும். வச. 19க்கு சென்று கர்த்தரை விட்டு பின்வாங்குதல் "கொடுமையும் கசப்புமாய் உங்களுக்கு காணப்படவில்லையா?" என்று கேட்க வேண்டும்.
c) நீதி 14:14யை அவரோடு பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த நபரை நேர்மையான அன்புடனும் திடமுடனும் கையாண்டு கர்த்தருடைய வார்த்தையை அவருடைய இருதயத்தில் விதைத்து, கர்த்தருடைய கிருபையினால் அவர் பின்மாற்றத்திலிருந்து திரும்பி வரவும் அவருடைய ஐக்கியத்தில் உயிர்ப்பிக்கப்படவும் முடியும் என்ற நம்பிக்கையை அவருக்குள் கொண்டு வர வேண்டும்.

II. <u>குற்ற உணர்வுடைய பின்மாற்றக்காரர்</u>

இந்த நபர் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவர் மூலமாய் குற்ற உணர்வடைந்து தன் பாவத்தையும் தன் தேடுதலையும் விட்டு கர்த்தர் பக்கமாய் திரும்பி வர ஆசையாய் இருப்பர். அவர் பாவத்தை உணர்ந்த நிலையில் இருப்பதாலும் நல்ல ஆலோசனையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாய் இருப்பதாலும் அவரைக் கையாள்வது எளிது.

இதற்கு உபயோகிக்கக் கூடிய சிறந்த வசனங்கள்:

கெட்ட குமாரன் கதை (லூக்கா 15:11-32) இதை அவருக்குத் தெளிவாய் காண்பிக்கலாம்.
– கெட்ட குமாரனின் இழிவான நிலை.
– அவனின் மனந்திரும்புதல்
– தன்னைத் தாழ்த்தி, திரும்பி வர எடுத்த தீர்மானம்
– தன்னுடைய பாவத்தை அறிக்கையிடுதலே தீர்வு என அறிவது.
– அவனுடைய தகப்பனுடைய சந்தோஷமும் மன்னித்தலும்.
– அவன் குடும்பத்தில் அவனுக்குரிய இடத்தில் திரும்பவும் வருதல்.

அந்த நபர் திரும்பவும் தன் வாழ்க்கையை கர்த்தருக்கு அர்ப்பணிக்க விரும்புவாராகில் பின்பற்றப்பட வேண்டிய படிகள் போன பாடத்தில் 4 முதல் 6 வரை உள்ளன.

பாடம் 6 வியாதியஸ்தருக்கான ஆலோசனை

1. **முகவுரை:**

மனிதனுடைய கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்திற்குள் நுழைந்து இதனால் வியாதியும் மரணமும் நேரிடக் காரணமாயிற்று. நம்மை சுற்றியுள்ள உலகத்தினின்று இலட்சக்கணக்கான மக்கள் வியாதியில் உள்ளனர். சிலர் வியாதியினால் அதிக துன்புறுகின்றனர். மற்றவர்கள் புகைபிடித்தல் அல்லது சாராயம் அருந்துவதாலும் தங்களுக்குள் வியாதியை கொண்டு வருகின்றனர். மற்றவர்கள் வியாதியினால் இத்தகைய காரியங்களைச் செய்கின்றனர். மற்றும் சிலர் வியாதியினால் ஏற்படும் சரீர வலியினால் உணர்வு பூர்வமாக மன அழுத்தம், பயம், பொறாமை அல்லது கசப்பு அடைகின்றனர்.

2. **வியாதி மற்றும் நோயைக் குறித்த வேதாகம குறிப்புகள்:**

★ சாபம் என்று அவர்கள் அழைத்தனர். உபாகமம் 28.
★ ஆதாமுடைய கீழ்ப்படியாமையினால் மனித குலத்துக்குள் இது வந்தது. ரோமர் 5:12
குறிப்பு: வியாதி என்பது எப்போதும் நேரடியான தனிப்பட்ட பாவத்தினால் மட்டும் ஏற்பட வேண்டிய அவசியம் கிடையாது. யோவான் 9:3யை பார்க்கவும். "அவனுடைய பாவத்தினாலோ அல்லது அவனுடைய பெற்றோருடைய பாவத்தினாலோ."

கல்வாரியில் இத்தகைய பாவத்திலிருந்து கிறிஸ்து நம்மை மீட்டுக் கொண்டதால் நாம் குணமாக்கப்பட முடியும். (கலா. 3:13)

3. **குணமாகுதலுக்குரிய வழிகள்:**

A. இயற்கையான குணமாகுதல். நீதி 17:22
B. மருத்துவத்தினால் குணமாகுதல். மத் 9:12
C. தெய்வீக குணமாகுதல். சங். 103:3,4.

பின் குறிப்பு: கர்த்தர் எப்பொழுதும் பாவத்தை அறிக்கையிட்ட பின் தம்முடைய குணமாக்கும் வல்லமையை அனுப்புகிறார். (சங். 103:3,4; யாக். 5:16)

4. **தெய்வீக குணமாகுதல் என்றால் என்ன?**

கர்த்தருடைய வார்த்தையினாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலும் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலும் முழு சரீரமும் குணமாக்கப்பட்டு, செப்பனிடப்பட்டு, வியாதியிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, அவருடைய வல்லமையினால் முழு சரீரமும் ஆரோக்கியமாகவும், நோய் தாக்குவதற்கு முன்பாக இருந்த படியே மாறும். கர்த்தருடைய செயலாகும். வேறு வார்த்தையில் இயற்கை மற்றும் மனிதனை கர்த்தர் ஆளுகை செய்யும் இடத்தில் இத்தகைய குணமாகுதல் இருக்கும்.

5. **தெய்வீக குணமாகுதலுக்குரிய அடிப்படை முறைகள் என்ன?**

A. குணமாக்குதலுக்குரிய கர்த்தருடைய உடன்படிக்கை.
யாத் 15:26ல் கர்த்தர் தம்மை யெகோவா "ரப்பா" (கர்த்தர் உன்னை குணமாக்குகிறவர்) என்பதாக வெளிப்படுத்தி அவர் தம் மக்களை குணமாக்குவதாக உடன்படிக்கை பண்ணினார். அதே வசனத்தில் குணமாக்குதலுக்குரிய வாக்குதத்தத்தில் குணமாக்குதலுக்கான நான்கு நிபந்தனைகளைக் கூறுகிறார்.

B. குணமாக்கப்படுதல்.
தீர்க்கதரிசனத்தின் படி. ஏசாயா 53:3-5
நிறைவேற்றப்படும் படி. மத். 8:16,17
சரி செய்யப்பட்டு குணமாக்கப்படுதல் என்பதின் அர்த்தம் கர்த்தர் நம்முடைய பாவங்களுக்காக மட்டும் அல்லாமல் நம் சரீரத்திலுள்ள வியாதிக்காகவும் சிலுவையில் அறையுண்டார். 1 பேதுரு 2:24.

6. **இதைக் குறித்து புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய விருப்பத்தை** கிறிஸ்துவின் வாழ்க்கையில் நாம் பார்க்கும் போது அவர் பூமியில் ஊழியம் செய்யும் போது தம்மிடத்தில் வந்த எல்லா வியாதியஸ்தரையும் குணமாக்கினார். (மத் 4:23-24; மத் 8:3) குணமாக்குதலைக் குறித்த கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் உள்ள மிகப் பெரிய திட்டத்தை நாம் காணலாம். (மாற்கு 16:15-20)

7. **குணமாக்குதலுக்கு தடையாய் இருக்கக் கூடியவை:**
A. குணமாக்குதலுக்கு முன்பாக அல்லது பின்பாக சரியான போதனையற்றிருப்பது. (உதாரணம் யோவான் 5:1-16)
B. பாவம். (ஏசாயா 59:2; மத். 13:15)
C. நம்பிக்கையற்றிருத்தல் (மாற்கு 6:5,6)
D. மன்னிக்க முடியாத ஆவி (மத். 6:14,15)

8. **பின்வரும் ஏதாவது ஒன்றின் மூலமாக குணமாகுதலைப் பெற்றுக் கொள்ள முடியும்:**
A. கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை (எபி. 11:6)
B. விசுவாசத்தோடு ஜெபித்து எண்ணெயால் அபிஷேகிக்கப்படுதல். (யாக். 5:14,15)
C. விசுவாசத்தோடு கரங்களை வைத்து ஜெபித்தல். (மாற்கு 16:18)
D. கர்த்தருடைய வார்த்தையை அனுப்புதல் (சங் 107:20; மத். 8:8)
E. ஆவியின் வரங்கள். (1 கொரி 12:9,10)
F. கர்த்தருடைய பந்தி (1 கொரி 11:23-32)
G. ஜெபத் துணிகள். (அப். 12:19).

திருமணம் செய்ய விரும்புவோருக்கான ஆலோசனை - யாரை திருமணம் செய்து கொள்வது என்பதை எப்படி நான் அறிய முடியும்?

மூன்று பெண்கள் பாடிய மிகப் பிரசித்தமான பாடல் ஒன்று, அது அந்த சிறு கிராமத்தில் உள்ள மனிதருள் நியமிக்கப்பட்ட திருமணத்தினால் விருப்பம் இல்லாத துணைவர் அமைந்து விடுவாரோ என்று அவர்கள் பயப்படுவதாக அந்த பாடல் அமைகிறது. " சரியான பொருத்தமுடைய வரனையே திருமண தரகர் காண்பிப்பார் என்று அவர்கள் நம்புவதாக பாடுகிறார்கள். ஆனால் அதே பாடலின் பின்பாக அந்த திருமண தரகரை தயவு செய்து அவசரப்படாதீர்கள் என்றும் கூறுகிறார்கள்! இந்த கதையில் இந்த குடும்பத்தில் தகப்பனே வல்லமையுடையவராய் இருக்கிறார். ஆனால் அவருடைய பெண்களில் ஒருவர் தன் தகப்பனிடம் போய் தான் விரும்பும் பையனை மணமுடிக்க அனுமதி கேட்கத் துணிகிறார். அதில் ஒரு பெண் மட்டுமே தன் குடும்பத்தினரின் நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வாலிபனை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறார்.

திருமணத்தைக் குறித்த காரியங்கள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றன. வேகமாக மாறி வரும் நகர கலாச்சாரத்தில் குடும்ப கட்டுகள் அதிகம் வற்புறுத்த முடியாமல் (தகப்பன் ஒரு அரசனைப் போல் ஆளுகை செய்யாமல்) திருமணப் பெண்ணும் ஆணும் தங்கள் துணையைத் தேர்ந்தெடுக்கும் தீர்மானத்தை தாங்களே எடுக்கும்படி தனி நபர் எண்ணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால் தனி நபர் தீர்மானம் சரியானது என்று எப்போதும் அர்த்தம் கொள்ள முடியாது.

வாலிபர் அல்லது துணையை இழந்த வயோதிபர் தவறான காரணங்களினால் அவர்களுடைய திருமணத்திற்குரிய தீர்மானத்தை எடுக்க தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள். வாலிபர் காதல் உணர்வுகளால் மட்டுமோ அல்லது தங்களுக்கு பிடித்த ஏதோ ஒன்றை மட்டுமோ கொண்டு திருமணத்திற்குள் நுழைய நினைக்கின்றனர். தன் துணையை இழந்தவர் தனிமையை உணர்வதால் மட்டுமே புதிய உறவுக்குள் செல்ல நினைத்து திருமணம் செய்கின்றனர். இதனால் பின்பு வருத்தம் அடைகின்றனர்.

திருமணம் செய்ய விரும்பும் அனைவரும் வேதத்தின் கொள்கைகளை நடைமுறைபடுத்துவது உபயோகமாய் இருக்கும்.

யாரைத் திருமணம் செய்வது என்பதை நான் எப்படி அறிய முடியும்?

இந்த காட்சியில் உள்ள வாலிபன் மிகவும் இளமையும், அழகும் வாய்ந்தவன். அவன் ஒரு சிறு கிராமத்தில் வளருகிறான். அவன் 40 வயதை நிறைந்தவனும், மிகவும் வசதி நிறைந்தவனும், தன் தகப்பனுக்கு ஒரே குமாரனும், தன் தகப்பனுடைய வியாபாரமான கால்நடை வளர்க்கிறவனுமாயிருந்தான். அவன் தகப்பனிடம் அதிக நாள் வேலை பார்த்த ஒரு வயதான மனிதரை திருமண வரன் பார்க்க அனுப்பி வைத்தனர். ஒரு நாள் அவன் ஒரு வாலிபப் பெண் வாழும் இடத்தை அடைந்து, அவளிடம் சென்று சில கேள்விகளைக் கேட்டு, அவளுடைய உறவினரிடம் பேசி, பின்பு தன் எஜமானுடைய மகனைத் திருமணம் செய்து கொள்வதற்கு சரியான பெண் இவளே என்று அறிந்து கொண்டான். அந்த வயதான மனிதன் அவள் தகப்பனிடம் அனுமதி கேட்டு பின்பு திருமணத்திற்கான ஒழுங்குகளைச் செய்ய அவளை அழைத்துச் சென்றான் - அவளும் விருப்பமாய்ச் சென்றாள்.

ரெபெக்காளும், ஈசாக்குமே இந்த மணப் பெண்ணும், மணமகனும் ஆகும். ஆதி. 24ல் இரண்டு பேரைத் திருமணத்தில் சேர்த்து வைப்பதில் கர்த்தருடைய வழி நடத்துதலுக்கு இது ஒரு அசாதாரணமான உதாரணம் ஆகும். இந்த உதாரணத்திலுள்ள எல்லா விளக்கங்களையும் இன்று நாம் பின்பற்ற முயற்சிக்க முடியாவிட்டாலும், ஆபிரகாமுடைய இந்த திருமண ஒழுங்கில் நாம் அநேக ஆரோக்கியமான கொள்கைகளைக் கடைபிடித்து, இன்றைய நாட்களில் இன்றைய கலாச்சாரத்தில் யாரைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கலாம்.

ஆகவே, ஈசாக்கு ரெபெக்காள் சம்பவத்தை நாம் மேற்கோள் காட்டுவது நமக்கு ஒரு நல்ல படிப்பினை ஆகும். உண்மையிலேயே நீங்கள் வேறு எதையும் படிப்பதற்கு முன்பாக உங்கள்

வேதத்தைத் திறந்து ஆதி. 24 முழுவதையும் படிப்பதனால் இன்றைய நாட்களில் கையாள வேண்டிய முறைகளைத் தெரிந்து கொள்வோம். யாரைத் திருமணம் செய்து கொள்வது என்பதில் நாம் சரியான வழியைப் பெற்றுக் கொள்ள வேதத்தின் மற்ற பகுதிகளில் நாம் பார்க்கும் போது கீழே வரும் ஒழுங்கு முறைகளை நாம் கண்டுபிடிக்கலாம்: (1) விசுவாசியைத் தேர்ந்தெடுத்தல் (2) கர்த்தரை நம்புதல் (3) குணத்தை கவனத்தில் கொள்ளுதல் (4) ஞானத்தை உபயோகித்தல் (5) மேற்கொண்டு சிந்தித்தல்

(1) விசுவாசியைத் தேர்ந்தெடுத்தல்

எண்ணெயும் தண்ணீரும் ஒன்றாய் கலக்க முடியாது. எலியும் அதை நசுக்கிக் கொல்லும் பாம்பும் நல்ல நண்பர்களாய் இருக்க முடியாது. உயரத்தைப் பார்த்தாலே பயந்து நடுங்கும் ஒருவருக்கு எவரெஸ்ட் சிகரத்தின் மேல் ஏறும் ஒருவரைத் துணையாக தேர்ந்தெடுப்பது ஞானமுள்ள தெரிந்தெடுப்பாகாது. அவிசுவாசியோடு கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் திருமணம் செய்து கொள்வது சரியான பொருத்தம் ஆகாது.

என்னுடைய துணை விசுவாசியா இல்லையா என்பது ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? உங்களுடைய ஆவிக்குரிய சரியான நிலையைக் காட்டிலும் இந்த திருமணக் காரியத்தில் மிக முக்கியமானது வேறு ஒன்றுமில்லை. ஆபிரகாம் இதை நன்கு அறிந்திருந்தார். அவர் தன் வேலைக்காரனை அதிக தூரம் பயணப்பட்டு (400 மைல்களுக்கு அப்பாற்பட்டு) தன் மகனுக்கு ஏற்ற ஆவிக்குரிய பெண்ணை கண்டுபிடிக்கும்படி கூறினார். இவர் வெறும் கட்டுப்பாடான தகப்பன் என்பது மட்டுமல்ல - திருமணத்தினால் தன் அடையாளத்தை இழந்து போகக் கூடும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆதி. 24. இது ஏன் என்பதை நாம் உணர்ந்து கொள்ள உதவியாய் இருக்கிறது. ஆபிரகாம் தன் ஊழியக்காரனிடம் (தன் உண்மையான வயதான ஊழியக்காரன் எலியேசர் என்று ஆதி. 15:2 குறிப்பிடுகிறது) கடுமையான நிபந்தனை விதித்தார். " ...நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்கு பெண் கொள்ளாமல், நீ என் தேசத்திற்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் கொள்..." (வச. 3,4) விக்கிரக ஆராதனை செய்வது கானானியருடைய அடிப்படை குணமாய் இருக்கிறது. தங்கள் பெண் மற்றும் ஆண் கடவுள்களுக்கு மனிதனை பலியிட்டும், மதத்தை முன்னிட்டு தவறான பாலியல் நடவடிக்கை கொண்டும் ஆராதனை செய்வர். நான் என்னுடைய ஆவிக்குரிய நிலைக்கு திருமணம் செய்யாவிட்டால் அது என்ன தவறுக்கு என்னைக் கொண்டு செல்லும்? பலவகையான தவறுகளுக்கு நேராக! இதைக் குறித்து நீ மோசேயிடமும், சாலொமோன் ராஜாவிடமும் பேசுவாயாகில் இரண்டு குடும்பங்களிலும் மற்றும் விசுவாச சமுதாயத்தினரிடமும் ஏற்படும் ஆபத்து குறித்து அவர்கள் உன்னிடம் பேசுவார்கள். இதைக் குறித்த நேரடியான கர்த்தருடைய வார்த்தையை மோசே பெற்றுக் கொண்டார். சாலோமோன் தன் அனுபவத்தின் வாயிலாக விசுவாசத்திற்கு புறம்பே இருந்து திருமணம் செய்வதால் ஏற்படும் கொடூரமான விளைவைத் தெரிந்து கொண்டார். தன்னைச் சுற்றியுள்ள தேசங்களில் பாகாலை வணங்கும் மக்களிடையே திருமண சம்பந்தம் வைத்துக் கொள்ள கூடாதென்று கர்த்தர் மோசேக்கு கட்டளையாகவே கொடுத்தார். உபா. 7:3,4 கூறுகிறது, " அவர்களோடு சம்பந்தங் கலவாயாக.... என்னைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களை சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப் பண்ணுவார்கள்." சாலொமோன் அதைக் குறித்து நன்கு அறிந்திருந்தும் பாகாலை வணங்கும் அந்நிய பெண்களை திருமணம் செய்து தன்னுடைய ராஜரீக வல்லமையை தவறாகப் பயன்படுத்தினான். இதனால் " .... சாலொமோன் வயது சென்ற போது அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப் பண்ணினார்கள். அவன் இருதயம் தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை." (1 இராஜா. 11:4) சாலொமோனும் அவனுடைய ராஜ்ஜியமும் இதனால் பாடுகளுக்குள்ளானது. (வச. 11-13)

இஸ்ரவேலின் வரலாறு முழுவதிலும், மக்கள் பாகாலை வணங்குவோரைத் திருமணம் செய்து கொள்ளும் போது கர்த்தருக்கு எதிர்மறையாகவே காணப்பட்டனர். அந்நிய சேனையின் கைகளில் தண்டனையை அனுபவித்த பின்பும், யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்த பின்பும் எஸ்றாவுக்கும் நெகேமியாவுக்கும் எதிராக கலகம் பண்ணினர். (எஸ்றா: 9,10 அதிகாரங்கள் நெகே. 13:23-27) மற்றும் பின்னர் (மல். 2:11,12) அவர்கள் சரி தவறு எது என்று அறிந்திருந்தாலும் இச்சையும் சுற்றுப்புற சூழ்நிலையும் அவர்களுடைய கண்களை குருடாக்கியது.

மிக அடிப்படைத் தேவையான ஆவிக்குரிய பொருத்தத்தை சோதனைகள் மேற்கொள்ளாதபடி காத்துக் கொள்ள வேண்டும். மற்றவர் " அழகாயிருக்கிறார்" " அன்பும் அக்கறையுள்ளவருமாய் இருக்கிறார்" , " என் மேல் உண்மையான அன்புடையவராய் காணப்படுகிறார்" இவை போன்றவை திருமண ஒப்பந்தத்திற்குள் நுழைய அடித்தளமாய் அமைவதில்லை. கர்த்தரோடு நீங்கள் கொண்டுள்ள உறவில் தடுமாற்றத்திற்குள் வழி நடத்த உங்கள் உணர்வுகளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது.

அவிசுவாசியான உங்கள் துணைவரை கர்த்தருக்குள் ஆதாயப்படுத்த முடியும் என்று பவுலும், பேதுருவும் கூறியிருந்தாலும் அது ஆவிக்குரிய காரியத்தில் பொருத்தம் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று அர்த்தம் ஆகாது. (1 கொரி 7:12-16; 1 பேதுரு 3:1,2) ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்து கொள்வதின் மூலம் தன் வாழ்நாள் முழுவதும் ஆவியில் இளைப்பாறுதல் அற்றவராயும், தன் பிள்ளைகளை ஆவிக்குரிய காரியத்தில் வளர்ப்பதில் போராட்டத்தைக் காண்பவராகவும் இருக்க நேரிடும்.

சிந்தனைக்கு. அவிசுவாசியை திருமணம் செய்து கொள்வது சரியில்லை என்று தெரிந்தாலும் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட திருமணத்தை ஏன் தெரிந்தெடுக்கிறார்கள்? எந்த வித ஆவிக்குரிய ஒற்றுமையோ அல்லது எது சரி என்ற உடன்பாடோ இல்லாத போது உண்மையில் அவர்களால் எப்படி ஒற்றுமையாக இருக்க முடியும்? இந்த வகையான திருமணத்தினால் பிள்ளைகளை விசுவாசத்திற்குள்ளும், கண்டிப்பிற்குள்ளும் எவ்வாறு வளர்க்க முடியும்?

(2) கர்த்தரையே நம்புங்கள்

நாம் எதிர்பார்த்திருக்கும் ஒன்றை யாரோ ஒருவர் தருவார் என்று காத்திருப்பது எளிதான காரியமல்ல. இது வேடிக்கையானது. ஒரு விரைவு உணவகத்தில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உணவின் வாசனையை, நான் பசி அடைந்திருக்கும் போது அதற்காக அதிக நேரம் காத்திருப்பது என்பது மகிழ்ச்சி அடையக்கூடிய காரியமல்ல. என்னுடைய வருமானத்தை நான் பெறுவதற்கு முன்பாக செலுத்தப்பட வேண்டிய அநேக கட்டண ரசீதுகள் ஆயத்தமாய் இருக்கும் போது இத்தகைய பண நெருக்கடியான சூழ்நிலையில் காத்திருப்பது என்பது என்னை மகிழ்ச்சி அடையச் செய்யாது. நம் வாழ்க்கை முழுவதும் மற்றவர்களையே சார்ந்திருக்கும் செயலை நாம் காண்கிறோம். நாம் குழந்தையாய் இருக்கும் போது நம்முடைய பாலுக்காவும், மூடிக் கொள்ளும் போர்வைக்காகவும், நமக்கு பிடித்த இறைச்சிக்காகவும், தூய்மையான மாற்றுடைக்காகவும் நாம் காத்திருக்கிறோம். எல்லாமே உடனடியாக கிடைக்காமல் திரும்பவும் திரும்பவும் காத்திருக்க கற்றுக் கொள்கிறோம். நமக்குத் தேவையானதைப் பெறுவதற்காக நமது தாய், தந்தை அல்லது மற்றவரை நோக்கி காத்திருக்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட கர்த்தருக்கென்று காத்திருப்பதைத் திரும்பத் திரும்ப கற்றுக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. இது எவருக்குமே எளிதான பாடமல்ல. எல்லாமே அவருடைய கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் அவர் தரும் நேரமே சிறந்தது என்பதை கண்டு கொள்கிறோம். காத்திருப்பதைக் காட்டிலும் அதை சொல்வது எளிது. பெண்ணோ அல்லது ஆணோ தன் திருமணத்திற்கென்று காத்திருப்பது மிகவும் கடினமானதாயும், நெஞ்சு வலியை உண்டாக்குகிறதாயும் இருக்கிறது.

கர்த்தரை நம்பி இருப்பதினால் நாம் பெறுவது என்ன என்பதைக் குறித்து ஈசாக்கு ரெபெக்காள் கதை நமக்கு என்ன கூறுகிறது? (ரெபெக்காள் மற்றும் ஈசாக்கு அல்லாமல்) ஆபிரகாமும் அவன் ஊழியக்காரன் எலியேசரும் நாம் பின்பற்ற வேண்டியவர்களுக்கு உதாரணமாய் இருக்கின்றனர். (ஆதி. 15:2-6; 24:2-4) 7ம் வசனத்தில் ஆபிரகாம் நான் நம்பி இருக்கிற கர்த்தர் உன்னை என் குமாரனுக்கு ஏற்ற பெண்ணுக்கு நேராய் வழி நடத்துவார் என்று தன் ஊழியக்காரனிடம் கூறுகிறார். மேலும் ஆபிரகாம் "கர்த்தர் நீ அங்கே இருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படிக்கு தம்முடைய தூதனை உனக்கு முன்னே அனுப்புவார். தனக்கு விருப்பமான சிந்தனையால் மாத்திரம் இந்த விசுவாச அறிக்கை உண்டாகவில்லை. ஆபிரகாம் கர்த்தரோடு அநேக நாட்கள் கொண்டிருந்த உறவினாலேயே இந்த வார்த்தை உண்டாயிற்று. கடந்த நாட்களில் தேவன் தம் தேவைகளை எப்படி சந்தித்தார். எப்படி வழி நடத்தினார் என்பதைப் பின்னோக்கிப் பார்த்து ஆபிரகாம் இவ்வாறு கூறி இருக்கலாம். தன் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் பார்க்கும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கர்த்தரை நம்பி இருப்பது மாத்திரமே அவரை வழி நடத்தும்

என்பதை அறிந்திருந்தார். நீதி 3:5,6ல் உள்ள சத்தியத்திற்கு ஆபிரகாமே ஜீவனுள்ள சுவாசிக்கும் சாட்சியாய் இருந்தார். "உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்." ஆபிரகாம் விசுவாச வாழ்க்கை வாழ்ந்தார். அதனால் கர்த்தர் அவரை ஆசீர்வதித்து, அவர் வாழ்க்கையில் வழிகாட்டினார். அவருடைய ஊழியக்காரன் எலியேசரும் இதே வகையான விசுவாசத்தையே வெளிப்படுத்தினார். அவர் ஜெபிக்கும் போது, "என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும். (ஆதி 24:12)

நம்முடைய வாழ்க்கையும் கர்த்தருடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் இன்றைக்கும் நாம் இதே நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருக்க முடியும். கர்த்தருடைய வழியை விட்டு திரும்பும் போது ஏதோ ஒன்றை நாம் இழந்து வருத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து அவருடைய வேளை வரும் வரை நாம் தாழ்மையுடனும், கீழ்ப்படிதலுடனும் நடந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தை உண்டாக்கின ராஜாவுக்கு முன்பாக ஆபிரகாம், தம்மைத் தாழ்த்தினது போல நாமும் நம் வாழ்க்கையில் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடும் போது அவர் நம் தேவை என்ன என்பதில் அக்கறை எடுத்துக் கொள்வார். (மத். 6:33) நமக்குத் துணையை கண்டுபிடிப்பதிலோ அல்லது அவருக்காக தனிமையாய் வாழ்வதற்கான உதவியை செய்வார்.

கர்த்தர் ஏன் அதிக காலம் எடுத்துக் கொள்கிறார்?

உன்னுடைய நன்மைக்காகவே இந்த தாமதமே அல்லாமல் உன்னை வருத்தப்படுத்துவதற்கு இந்த தாமதம் இல்லை என்று நீ அதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நீ திருமணம் செய்து கொள்வதிலோ அல்லது வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வருவதிலோ கர்த்தர் அமைதியாய் இருக்கும் போது உன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை நீ தெரிந்து கொள்ள முடியும்.

"வயது முதிர்வதைக் குறித்த பயம்" அனுபவம் அநேக வாலிப மற்றும் வயதானவர்களுக்கு உண்டு. வயதான அவன் ∴ அவள் கல்லூரிக்குப் போகும் போதோ அல்லது இவர்கள் வயதுள்ள மற்ற அவர்களுடைய நண்பர்கள் திருமணமாகும் போதோ வாலிபர்கள் பயமடையத் துவங்கக் கூடும். சில வயதான குடிமக்கள் அவர்கள் துணையை இழக்கும் போதோ அல்லது அவர்கள் வாழ்க்கையில் உண்மையிலேயே துணை தேவைப்படும் நேரங்களில் இத்தகைய பய உணர்வு அடையக் கூடும். வாலிபரோ அல்லது வயதானவரோ உடனடியாக தங்கள் திருமண துணையாளரைக் காண விரும்புகின்றனர். நீங்கள் வாலிபர் அல்லது வயதானவராக இருந்தாலும் நீங்கள் கர்த்தரை நோக்கிப் பார்த்து அவருக்கென்று காத்திருப்பதையே கர்த்தர் விரும்புகிறார். (சங். 27:13,14; ஏசா. 30:18) உங்களுடைய திருமணத்திற்கான விருப்பத்தில் நீங்கள் கர்த்தரோடு உண்மையாய் இருக்க வேண்டும. அந்த உணர்வே சரியும் நலமுமானதாகும்! ஆனால் பொறுமையிழந்து திருமணம் செய்து கொள்ள ஒருவரைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் கர்த்தரை விட்டு விலகி துணையைத் தேடக் கூடாது.

கர்த்தரோடு உங்கள் தனிப்பட்ட நடை எப்படி உள்ளது?

அனுதின வாழ்க்கையில் சிறு சிறு தீர்மானங்களில் கர்த்தரை நம்பி இருக்கிறீர்களா? தொடர்ந்து அவரைச் சார்ந்து வாழ்கிறீர்களா? உங்கள் கவனத்தை அவர் கவர்ந்த அதே இடத்திலும், அதே செயல்களையும் செய்கிறீர்களா?

ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளிடம் தான் நாகோரிடம் வந்த நோக்கத்தைக் கூறும் போது அவர், "நான் பிரயாணம் பண்ணி வருகையில் கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டிற்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தார். (ஆதி 24:27) என்று கூறுகிறார். கர்த்தர் எங்கு செல்ல வழி காட்டினாரோ அந்த திசையில் வந்து அவருடைய போதனையின்படியே எலியேசர் நடந்து கொண்டார். நாமும் நம் எதிர்காலத்தை கர்த்தர் நடத்துவார் என்று எதிர்பார்த்தால் இப்போது நாம் நடந்து வரும் வழியில் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கர்த்தர் எங்கு நடத்துகிறாரோ அந்த வழியில் நாம் இருக்கிறோமா? நம்மைச் சுற்றியுள்ள மக்கள் மத்தியில் நல்ல பெயரில்லாமல், திருமணத்திற்கு முன்பாக பாலுறவில் ஈடுபட்டு, நமது தனிப்பட்ட ஜெபத்தையும், ஆராதனை வேளையையும் அசட்டை பண்ணி, பாவ காரியங்களைச் செய்து

வந்தோமானால் கர்த்தர் நமக்கு சிறந்த கிறிஸ்தவ துணையை தருவார் என்று எதிர்பார்க்க முடியாது. கர்த்தருடைய வார்த்தை வெளிப்படுத்தின அவருடைய சித்தத்தை நாம் நன்கு அறிந்தும் கீழ்ப்படியாமையில் வாழ்வோமானால் நமக்கு சிறந்த துணையைத் தருவதில் கர்த்தர் உதவி செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்லோருக்கும் கர்த்தர் திருமணத் துணையைத் தருவாரா?
இல்லை. சிலர் தனித்து வாழ வரம் பெற்று வடிவமைக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் திருமணத்திற்கென்று வடிவமைக்கப்பட்டவர்கள். (1 கொரி 7) ஏதேன் தோட்டத்து வகையில் இருக்குமானால் எல்லா ஆணுக்கும் பெண்ணுக்கும் பூரணமான துணை கிடைக்கும். ஆனால் இந்த உலகம் குறை உள்ளதாய் இருக்கிறபடியால் நிறைவான துணை என்பது இனிமேல் இங்கு காண இயலாது. தற்போதைய சூழ்நிலையில் கர்த்தர் சிலரை தனித்து வாழவும், அவருக்காக அவர்களுடைய வாழ்க்கையில் அதிகமாய் கர்த்தரை எப்படி மகிமைபடுத்த முடியும் என்பதையும் காணலாம்.

துணைவரைத் தேர்ந்தெடுப்பதில் கர்த்தருடைய உதவி அவசியம். ஏன்?
திருமணம் செய்ய தீர்மானம் எடுத்த பின் அது நம் மனம் போராடுகிறதாயும், நம் வாழ்க்கையை மாற்றும் தெரிந்தெடுப்பாயும், மிக ஆழமானதாயும், ஆவிக்குரிய காரியங்களில் அதன் பலன் பிரதிபலிக்கத்தக்கதாயும் இருக்கக் கூடியது. நம்மில் அநேகர் நமக்குள் என்ன இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவில்லை என்பது மிக வெளிப்படையானது. நம்முடைய திருமணத்திற்கென்று தேவன் நம்மை ஆயத்தம் செய்யும்படியும், நமக்கு யார் சிறந்தவர் என்பதை தெரிந்தெடுத்துத் தர கர்த்தர் உதவி செய்ய வேண்டுமென்றும் ஜெபிப்பது அவசியம். யாக். 1:5ல் ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமான தேவனிடத்தில் கேட்கக் கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்''. நம்முடைய வாழ்க்கையில் உள்ள சோதனைகளைக் கையாள நமக்கு உதவி செய்யும்படி கர்த்தருடைய ஞானத்தைக் கேட்க வேண்டும் என்று யாக்கோபுடைய வார்த்தை கூறுகிறது. அவ்வாறே தனித்து வாழ முயற்சிப்பதும் மற்றும் கர்த்தர் விரும்பிய நபரை மணந்து வாழ்வதற்கும் அல்லது இதை ஒரு கடினமான போராட்டமாக எடுத்துக் கொள்ளாமலிருப்பதற்கும் கவனமாயிருக்க வேண்டும். நீதிமொழிகள் புத்தகத்தின் படி ஞானமாய் மிகப் பெரிய தீர்மானம் எடுக்க வேண்டிய பொழுது நாம் கர்த்தருக்கு பயப்படுதலை தெரிந்து கொண்டு, அதனால் அவர் நம்மை கனப்படுத்துவதையும் நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தவான்களுடைய பாதையை அவர் காண்பிப்பதையும் கண்டு கொள்ளலாம். (நீதி. 1:7; 2:1-11)

என்னுடைய தெரிந்தெடுப்பு, சிந்தனை, உணர்வுகளில் பரிசுத்த ஆவியானவர் எப்படி வெளிப்படுத்துவார்?
புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் உள்ளான உணர்வுகளின் மூலமாக எப்படி வழி நடத்த முடியும் என்பதற்கு அநேக மாதிரிகளை பார்த்திருந்தாலும் (அப். 8:29; 11:28; 13:2; 21:11; 1 கொரி 14:30) நம்முடைய உணர்வுகளையும் அல்லது கர்த்தருடைய ஆவியானவருடைய ஆழ்ந்த சத்தத்தையும் எப்போதும் வேறுபடுத்திப் பார்ப்பது எளிதான காரியம் அல்ல. கர்த்தருடைய தெளிவான கட்டளைகளிலிருந்து சிறிதும் ஆவியானவர் மாறுபட மாட்டார் என்று நாம் உறுதியாய் கூறலாம். அவிசுவாசியை திருமணம் செய்து கொள் என்றோ, பணத்திற்காக திருமணம் செய்து கொள்ள வழி நடத்துவதோ, ஞானத்திற்கு மாறான காரியங்களில் திருமணத்திற்கு நேராக வழி நடத்துவதோ ஆவியானவர் ஒரு போதும் செய்ய மாட்டார்.

நம்முடைய உறவில் எது சரி, தவறு என்ற உணர்வை நமக்கு கொடுத்து, நாம் வேதத்தில் வாசித்தபடியே நம்மை அவர் வழி நடத்துவார். கர்த்தருடைய ஞானம் சத்தியத்தின் படி நிலைத் தன்மையை நம்முடைய உள்ளான ஆவியில் உருவாக்குவார்.

நம்மை கணவனாக அல்லது மனைவியாக வழி நடத்தும்படி கர்த்தரிடம் நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?
அடிக்கடி மற்றும் எப்போதும் கர்த்தர் இந்த காரியத்தில் நம்முடைய விண்ணப்பத்தைக் கேட்க ஆர்வமாய் இருக்கிறார். உங்களுடைய விண்ணப்பத்தை அவருக்கு முன்பாக கொண்டு வரும் போதும், அவர் வழியில் உங்களை தாழ்த்தும் போதும் நம்மிடத்தில் அவர் என்ன எதிர்பார்க்கிறாரோ அதைத் தவிர வேறு ஒன்றும் தராதிருப்பார் என்று நாம் உறுதி கொள்ளலாம்.

சிந்தனைக்கு. அளவு கோலில் 1 முதல் 10ற்குள் நீங்கள் கர்த்தரை நம்பும் அளவில் எங்கு நீங்கள் இருப்பீர்கள்? நீங்கள் யாரை திருமணம் செய்து கொள்வது என்று ஜெபிப்பதில் நேரம் எடுத்துக் கொள்வீர்களா? நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற வாழ்க்கை வாழ்ந்து இயேசு கிறிஸ்துவோடுள்ள வாழ்க்கையில் வளருகிறீர்களா? நீங்கள் திருமணம் செய்யலாமா, வேண்டாமா எது உங்களை திருப்திபடுத்தும் என்ற இரகசியத்தை நீங்கள் கற்று உணர்ந்திருக்கிறீர்களா? (பிலி. 4:11-13)

(3) குணத்தை கவனியுங்கள்.

உங்கள் இருதயத்தில் அறுவை சிகிச்சை செய்ய எப்படிப்பட்ட நபரை நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்? மருத்துவமனையை ஏமாற்றிய, தொடர்ந்து போதைப் பொருள் அருந்துபவர், மன நோய்க்கான சிகிச்சை எடுப்பவர் அல்லது மருந்து மாத்திரைகளில் மட்டுமே வாழ்பவரை நீங்கள் விரும்புகிறீர்களா? மேலே குறிப்பிடப்பட்டவர் ஒருவரும் இல்லையா, சரி! உங்களுக்கென்று அறுவை சிகிச்சை செய்ய தயாராய் உள்ள தகுதியான பொருத்தமான மருத்துவரை தான் நீங்கள் தேர்ந்து எடுக்கிறீர்கள்.

ஈசாக்கு ரெபெக்காள் விஷயத்தில் முக்கியமான வித்தியாசமான குணநலன் என்ன இருந்தது?

நாகோரின் நகரத்திற்குள் எலியேசர் வந்த போது அவர் கர்த்தரிடம் குறிப்பிட்ட வகையான வாலிபப் பெண்ணைக் குறித்து கேட்டு ஜெபித்தார். அவர் ஒரு சிறு அடையாளத்தைக் கேட்டதாக நான் நினைக்கவில்லை. எலியேசர் கர்த்தரிடம் தாழ்மை, கீழ்படிதல், வேலைக்காரிக்குரிய நடத்தையுள்ள வாலிபப் பெண்ணைக் கொண்டு வரும்படி கேட்டார். இந்த குணநலனை அந்த பெண் எலியேசருக்கும், அவனுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தர விருப்பமாயிருந்ததிலிருந்து வெளியரங்கமாகிறது. (ஆதி. 24:13,14) ரெபெக்காள் இந்த தேவையை நிறைவேற்றின போது எலியேசர் அந்த பெண்ணை ஆழ்ந்து கவனித்து இதுவே ஈசாக்குக்கு ஏற்ற பெண் என்று முடிவு செய்தார். (வச. 21) எலியேசருடைய வேடிக்கையான வேண்டுதலைக் கேட்ட பின்பும் அவள் அவனோடு செல்வதை ஏற்றுக் கொண்டது கர்த்தருடைய நெருங்கிய உணர்வை வெளிப்படுத்துவதாக இந்த சம்பவம் இருக்கிறது.

வச. 16ல் ரெபெக்காள் மிக அழகிய கன்னியாக குறிப்பிடப்படுகிறார். அவளுடைய இயற்கையான அழகு அவளுக்கு வந்த வாய்ப்பை இழக்கக் கூடியதாய் இல்லாததால் அவளுடைய அழகு ஒரு முக்கியமான காரணியாய் எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் அவளுடைய கன்னித் தன்மையை மிக முக்கியமான காரியமாய் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பழைய ஏற்பாட்டு கற்பனைகள் பாலின நடக்கையில் மிக கடினமாக உள்ளது. (உபா. 5:18; 22:13-21) ஒருவருடைய பாலியல் தூய்மை திருமண நேரத்தில் ஏமாற்றப்படுமாயின் அது மரண தண்டனைக்கு வழி நடத்தும். (வச.21)

இன்று திருமணத்திற்குள் நுழையப் போகும் மக்களுடைய மிக முக்கியமான தகுதியான குணநலன்கள் யாவை?

இங்கு மற்றவர்களைப் பார்த்து நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய வித்தியாசமான குணநலன்கள்:-

1. <u>ஊழியம் செய்ய விருப்பமாயிருத்தல்; தாழ்மையாயிருத்தல்.</u>
   அவன் ∴ அவள் மற்றவர்களோடு அமைதியாய் வாழ தகுதியுடையவராயும், தாழ்மையிலும் அவர்களோடு இணைந்து வாழக் கூடியவர்களாயும், தங்களையே புத்திமான்கள் என எண்ணாதவர்களாயும் இருக்க வேண்டும். (யோவான் 13:1-7; ரோமர் 12:16) எல்லாவற்றுக்கும் மேலாக அவன் ∴ அவள் உங்களுக்கு ஊழியம் செய்ய மனம் உடையவராய் இருக்க வேண்டும்.
2. <u>பாலியல் தூய்மை.</u>
   பாலியல் திருமணத்திற்கென்றே வடிவமைக்கப்பட்டது. நீங்கள் உங்களை மற்றவருக்கென்று காத்துக் கொள்ள வேண்டும். அதே போல் அவன் / அவளும் தங்களை உனக்கென்று காத்துக் கொள்ள வேண்டும். (ரோமர் 13:13,14; எபி 13:4)

ஆனால் நீ அல்லது அந்த நபர் கடந்த நாட்களில் பாலியல் காரியங்களில் ஆர்வமுள்ளவராயிருந்தாலும்? சந்தோஷமான திருமண வாழ்க்கையை நீ இழந்து போகிறாயா? இல்லை உன் முந்தைய பாலியல் நடவடிக்கையால் ஏற்பட்ட காய உணர்வுகளை நீ கையாள கூடும். கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் எந்த நபரும் முழுவதும் மன்னிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தப்படுகின்றனர். (2 சாமு. 12:13; 1 யோ. 1:9)

தற்போதைய கணக்கெடுப்பின் படி அநேக தனி நபர்கள் ஏற்கனவே பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் இதை வாசித்து தங்களை மாற்றிக் கொள்கின்றனர். ஆகையால் உன்னுடைய தரத்தை நீ ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்திருக்கிறாயா? இல்லையா! கற்பனையை மீறச் செய்த பாவம் என்றைக்கும் சரியானதாக நம்மை மாற்றாது. கர்த்தருடைய இரக்கமும் பாவ மன்னிப்பும் மட்டுமே நம்முடைய பாவத்தை நம்மை விட்டு பிரிக்க முடியும்.

உங்களுடைய கடந்த கால பாலியல் பிரச்சனை அல்லது எதிர் காலத்தில் உங்களுக்குத் துணையாகப் போகும் துணைவருடைய கடந்த கால பாலியல் பிரச்சனை உங்கள் தனித்துவத்தில் ஆழமாய் பதிந்திருக்கக் கூடும். கடந்த கால பாவத்துக்குரிய பாலியல் நடவடிக்கைகள் உண்மையிலேயே உங்களால் உடைக்கப்பட்டு பின்னாக எறியப்பட்டதென்று நீங்கள் ஞானமாய் உறுதி செய்யப் பட வேண்டும். இல்லையென்றால் இதே பெலவீனம் உங்கள் எதிர்காலத்தை உங்கள் திருமண பாலியல் உறவில் காணப்படக் கூடும். இதைக் குறித்து ஞானமாய் உங்கள் போதகரிடமோ அல்லது கிறிஸ்தவ ஆலோசகரிடமோ நீங்களும் உங்கள் எதிர் காலத் துணைவரும் உண்மையாய் பேசி கடந்த காலத்தில் நடந்ததை பின்னாக எறிந்து விட்டதை உறுதி செய்து கொண்டு, பாலியலில் தூய்மையாய் இருப்போம் என்று ஒருவருக்கொருவர் ஒப்படைத்துக் கொள்ள வேண்டும்.

3. <u>கிறிஸ்துவை குறித்த தியானம்.</u> விசுவாசிக்கு குறையில்லாத நாம் தெரிந்தெடுத்த ஒருவர் ஆவிக்குரிய உணர்வுள்ளவராயும், கர்த்தரோடு வாழ விரும்புகிறவராயும் இருக்க வேண்டும். (2 கொரி. 6:14-18; எபே. 4:17; பிலி. 3:7-16; 1 யோ. 2:15-17)

4. <u>சரியான முதன்மைபடுத்துதல்</u>. உங்கள் வாழ்க்கையில் உங்கள் கணவராகவோ ∴ மனைவியாகவோ தெரிந்தெடுத்த ஒருவர் பணத்திற்கோ, புகழுக்கோ அல்லது சிற்றின்பத்திற்கோ தம்மை ஒப்படைத்தவராக இருக்கக் கூடாது. (பிர. 2:1-11; 5:8-17; 6:1-12; மத் 6:33; ரோமர் 12:2; 1 தீமோத் 6:10; எபி. 13:5)

5. <u>சரியான நம்பிக்கை.</u> மத வைராக்கியத்திற்கு வேறுபட்டவரைத் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். ஒவ்வொரு சிறு காரியத்திலும் நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் வேதாகம அடிப்படையில் ஆரோக்கியமான உபதேசத்தை மட்டுமே ஏற்றுக் கொள்வோம் என்று உறுதி செய்து கொள்ளுங்கள். (1 யோ. 4:1-6)

6. <u>உள்ளூர் சபையில் ஒன்றிணையுங்கள்.</u> கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு தனி நபருடைய விளையாட்டாய் இருப்பதை கர்த்தர் விரும்புவதில்லை. நம்முடைய தேவையை சந்திக்கும்படியும், நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படியும் தேவன் சபையை வடிவமைத்திருக்கிறார். இந்த காரியத்தை உங்கள் வருங்கால துணையோடு பேசி ஏற்றுக் கொள்ளச் செய்யுங்கள். (எபே. 4:1-16; எபி. 10:24,25)

7. <u>அன்பின் நடக்கை.</u> இது தான் ஒவ்வொரு விசுவாசிக்கும் இருக்க வேண்டிய அடிப்படை குணமாகும். (யோ. 13:15; கலா. 5:22; 1 யோ. 3:11-20) தொடர்ந்து முறுமுறுக்கிற நபரை திருமணம் செய்யாதீர். தங்கள் உண்மையான குணத்தை மறைத்து மற்ற தகுதியினால் எப்படி அவர்கள் மற்றவர்களை கவருகிறார்கள் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. நீதிமொழிகளிலுள்ள ஞானம் இப்படிப்பட்ட நச்சரிக்கிற கடினமான நபரைத் திருமணம் செய்வது தொந்தரவாய் முடியும் என்று நம்மை எச்சரிக்கிறது. (நீதி. 19:13; 21:9,19) உங்கள் உறவை சோதித்து அவரோடு தொடர்ந்து எவ்வளவு காலம் வாழ முடியும் என்று பாருங்கள். நீங்கள் எப்போதும் சண்டையிடுபவரா? உணர்விலும், செயலிலும் உங்களை தவறாய் பயன்படுத்துவதாக நீங்கள் உணருகிறீர்களா?

8. <u>சுய கட்டுப்பாடு.</u> கோபமான நேரத்திலும் நீங்கள் தெரிந்தெடுத்த துணை அதை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருக்கிறாரா? அல்லது அதிக எரிச்சலையும், கோபத்தையும் காண்பிக்கிறாரா? அவன் ∴ அவள் சாராயம், போதை, உணவு, பாலியல், வேலை, விளையாட்டு அல்லது தேவையில்லாததை வாங்கும் உணர்வுக்கு அடிமைப்பட்டவரா? (நீதி. 23:20,21; 25:28; கலா. 5:22,23; எபே. 5:15-18).

9. நேர்மை. நீதிமொழிகளை எழுதியவர் "செம்மையான மறுமொழி சொல்லுகிறவன் உதடுகளை முத்தமிடுகிறவனுக்கு சமானம்." (நீதி 24:26) ஒருவர் உண்மையிலேயே உங்களை நேசிப்பவராக இருந்தால், அவன் ∴ அவள் தன்னுடைய நேர்மையான வார்த்தையினால் தங்கள் அன்பை உங்களுக்கு காண்பிப்பார்.

10. உள்ளான அழகு. ஒரு மனிதன் மற்றும் மனுஷிக்குள் உள்ள உள்ளான தகுதியே கர்த்தரைக் கவருகிறதாகப் பார்க்கிறார். இதைவிடக் குறைந்ததாக நாம் இருக்கிறோமா? (1 சாமு. 17:7; நீதி. 11:22; 31:13; 1 பேதுரு 3:2-5) அழகு என்பது தோலின் ஆழம் வரை மட்டுமே இருக்கும். ஆனால் குணம் என்பதோ எலும்பு வரைச் செல்லும். நீங்கள் சரீரப் பிரகாரமாய் உங்களைக் கவரும் துணைவரைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அதைக் காட்டிலும் முக்கியமானது உள்ளான கவர்ச்சி. (நினைவில் கொள்க. அழகு என்பது பார்ப்பவரின் கண்களைப் பொறுத்தது)

11. பொறுப்பு. சுயநலவாதி விருப்பமே இல்லாத சோம்பேறி அல்லது தன் பொறுப்பை நிறைவேற்றுவதில் குறைவுபடுபவரை மணக்காதே. எலியேசருடைய பரிசுகள் மூலமும், ஈசாக்கைக் குறித்து அவன் கூறியவைகள் மூலமாகவும், ரெபெக்காளும் அவளுடைய தந்தையும் அவளுடைய தேவையை நிறைவேற்ற தகுதியானவன் அவன் என்பதை அறிந்து கொண்டனர். (ஆதி. 24:22; 35,53) நடைமுறையில் வசதி என்பது தேவையானதே, இல்லையா? ஆனால் சிலருடைய பிரசித்தமான கருத்து, அன்பின் வாக்குறுதியினால் உன்னுடைய ரசீதுகளுக்கான பணத்தை செலுத்த முடியாது. மேலும் சில இடங்களில் "தரித்திரம் பின் வழியாய் வரும் போது, அன்பு முன் புறவாசல் வழியாய் சென்று விடும்!" என்று கூறுவர்.

1 தீமோத். 5ல் அப். பவுல் கூறுகிறார், "... ஒருவன் தன் சொந்த ஜனத்தையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாமல் போனால், அவன் தன் விசுவாசத்தை மறுதலித்தவனாயும், அவிசுவாசியிலும் கெட்டவனாயும் இருப்பான்." (1 தீமோத் 5:8) பவுல் அக்கறையின்றி இந்த வார்த்தைகளைக் கூறமாட்டார். அப்படி தானே? நீங்கள் அவிசுவாசியை திருமணம் செய்யாது இருப்பது போல, பண விஷயத்தில் பொறுப்பில்லாதவராய், சோம்பேறியாய் இருப்பவரை திருமணம் செய்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவர்களுடைய சோம்பேறித்தனம் "அவிசுவாசியைக் காட்டிலும் கேடுண்டாக்குவதாய் இருக்கும்" சோம்பேறியைக் குறித்து நீதிமொழிகள் குறிப்பிடுவதின் மூலம் அப்படிப்பட்ட நபரை துணைவராக்குவதைத் தவிர்க்க வேண்டும். (நீதி. 24:30-34)

12. பெற்றோர்களுடன் நல்ல உறவு. ஒருவர் தன் பெற்றோரோடு எப்படிப்பட்ட உறவு கொண்டுள்ளார் என்பதைக் கொண்டு அவருடைய குணத்தை நாம் கூறிவிட முடியும். பெற்றோரிடத்தில் மரியாதையும், கனத்தையும் காண்பிப்பவரை கர்த்தர் சிறந்த மதிப்புடையவராய்க் கூறுகிறார். (எபே. 6:1-3).

எதிர்பார்ப்புகள் எப்படி மிக உயர்ந்ததாயும் அல்லது மிகத் தாழ்ந்ததாகவும் இருக்கக் கூடும்? சிலர் பூரணம் என்று எதிர்பார்ப்பது மற்றவர்களுக்கு குறைவானதாய் காணப்படுகிறது. மேலே வரிசைப்படுத்தினதில் இல்லாத எந்த அதிகப்படியான குணத்தையும் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது பிரச்சினைக்குரியதாய் இருக்கும். அடிப்படை ஆவிக்குரிய தகுதிகளை மட்டுமே மேலே குறிப்பிட்டிருந்தாலும் பூரணமான மனிதனை நாம் எதிர்பார்க்கக் கூடாது. இந்த கிரகத்தில் அப்படிப்பட்ட சிருஷ்டி எதுவும் இல்லை! நீங்கள் இதை நம்ப முடியவில்லை என்றால் தயவு கூர்ந்து உங்களையே கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். ஆகவே நியாயமாய் இருங்கள். அதிகப் படியான காரியத்தை திட்டமிடாமல் குணத்தில் வளருவதற்கு இடமளியுங்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் நபர் கிறிஸ்துவுக்கென்று தன்னை ஒப்படைத்தவரா? பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் வழி நடத்தப்படுகிறவரா? கிறிஸ்துவைப் போல் மறுபடி தன் வாழ்க்கையை கர்த்தர் கிரியை செய்யும்படி அனுமதி அளித்தவரா? இல்லையா? என்பதே வாழ்க்கையில் முக்கியமான காரியமாகும்.

மற்றுமொரு நடைமுறைக் குறிப்பு. திருமணத்திற்குப் பின் அவள் / அவரை முழுவதுமாய் மாற்றி விடலாம் என்று எண்ணி ஒருவரைத் தெரிந்தெடுக்கும்படி சிந்தனை செய்யாதே.

அவள் ∴ அவர் ஒரு போதும் மாறாவிட்டாலும் அவரோடு வாழ தயாராய் இருங்கள். எதிர்மறைப் பற்று அல்லாமல்: திருமணத்திற்கு முன்பாக ஒருவரை ஏற்றுக் கொண்ட வழியைப் போலவே திருமணத்திற்குப் பின்பும் அவருடைய வழி இருக்கும். இது எத்தனை தகுதியான சொல் என்பதை திருமணத்திற்கு பின் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்!!

சிந்தனைக்கு. உங்கள் வாழ்க்கையில் எந்த பகுதியில் ஜெபத்தோடு கூடிய கவனம் தேவைப்படுகிறது? ஒருவர் திருமணத் துணைவராக உங்களைப் பார்க்கும்போது நீங்கள் அதற்கு ஏற்றவரா? நீங்கள் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ள நினைக்கும் போது, அவன் ∴ அவள் நீங்கள் கர்த்தரோடுள்ள உறவில் வளர்வதற்கும் மற்றும் முன்னேறுவதற்கும் உதவி செய்யக் கூடியவரா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

(4) ஞானத்தை உபயோகியுங்கள்

நீங்கள் கார் வாங்க வேண்டும் என்று நினைக்கும் போது செய்தித்தாளைத் திருப்பி, அதில் வாகன விற்பனைக்கான விளம்பரத்தை எடுத்து, கண்களை மூடிக் கொண்டு அந்த பக்கத்தில் உங்கள் விரல்களை நகர்த்திக் கொண்டே போய் உங்கள் விரல் நிற்குமிடத்திலுள்ள காரை வாங்குவது ஞானமான காரியமாய் இருக்குமா? விளம்பரத்தில் உங்கள் விரல் காண்பித்த காரை கர்த்தர் தரும்படி அவரிடம் ஜெபித்து உதவியைக் கேட்பது நன்மையானதா? அல்லது அந்த முழு காட்சியும் வேடிக்கைக்குரியதாயும், இயற்கைக்கு அப்பாற்பட்டதாயும் இருக்கிறதல்லவா? நீங்கள் கார் வாங்கும் காரியத்திலும், நீங்கள் வாழ்வதற்கென்று ஒரு இடத்தைத் தெரிந்தெடுப்பதிலும், கல்லூரியைத் தேர்ந்தெடுப்பதிலும் சரியான நபரைத் திருமணத்திற்கென்று பார்ப்பதிலும் ஞானத்தை உபயோகப்படுத்துவதை கர்த்தர் விரும்புகிறார். நம் வாழ்க்கையில் சில தீர்மானங்களை எடுப்பது, நாணயத்தை சுண்டி விடுவது போல் இருக்கலாம். மதிய உணவிற்கு பாலடைக்கட்டி உள்ள சான்விச் அல்லது வெண்ணெயிலானதா எதை தெரிந்தெடுப்பது என்ற தீர்மானம். ஆனால் மற்ற அநேக தீர்மானங்களுக்கு நாம் அதிகமாக மூளையை பயன்படுத்த வேண்டியுள்ளது.

துணைவரைத் தேர்ந்தெடுப்பதில் அதிகமான சிந்தனை, அதிகமான ஜெபம், கர்த்தருடைய வழி நடத்துதலை அதிகமாய் சார்ந்து இருக்க வேண்டும். இந்த தீர்மானம் தான் மீதியான உங்கள் வாழ்க்கையை உங்கள் துணைவருடைய வாழ்க்கையை பாதிக்கத்தக்கதாய் இருக்கும். ஆகவே இதை எளிதானதாய் எடுத்துக் கொள்ளாதிருங்கள்.

ஈசாக்கும் ரெபெக்காளும் எப்படி தங்கள் ஞானத்தை வெளிப்படுத்தினர் என்பதைக் குறித்து இந்த கதை நமக்கு என்ன கூறுகிறது? ஆதி. 24ல் அநேக நடைமுறை ஞானத்திற்குரிய காரியங்கள் உண்டு. இந்த காரியத்தை முழு வேதாகமத்திலுள்ள போதனையோடு சேர்ப்போமானால் நமக்கு அதிகமான நடைமுறைக் குறிப்புகள் கிடைக்கக் கூடும்.

முதல் முறை இதை வாசிக்கும் போது இது ஏதோ ஆபிரகாமின் ஊழியக்காரன் விளம்பரத்திற்கான பக்கத்தில் தன் விரலை நகர்த்திச் சென்றது போல் இருக்கும்.

<u>ஆனால் இதை கூர்ந்து கவனிப்போமானால் இன்று நடைமுறையில் நாம் செயல்படுத்தக் கூடிய ஆரோக்கியமான உபதேசம் இருக்கும்:</u>

சரியான இடத்தை நோக்குவோம். ஈசாக்குக்கேற்ற ஆவிக்குரிய மனைவியைத் தேர்ந்தெடுக்க ஆபிரகாம் தன் ஊழியக்காரனை அனுப்பிய இடம் - தன் சொந்த ஊர். (ஆதி. 24:3,4,10) ஈசாக்குக்கு மனைவியைத் தேர்ந்தெடுக்க எலியேசர் பாகாலை வணங்கும் கானானியருடைய கிராமத்திற்குச் செல்லவில்லை. அதைப் போல நாம் புனித இடங்களுக்கோ, திருமணமாகாதவர் குடிக்கும் இடத்திற்கோ, கடவுள் இல்லை என்று சொல்லுகிறவர்களுடைய சங்கத்திற்கோ சென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசிப்பவரைத் தேடுவது ஞானமாகாது.

கர்த்தருடைய உதவியைக் கேளுங்கள். எலியேசர் தான் ஒழுங்கு பண்ணப் போகிற திருமணத்தைக் குறித்து ஜெபித்தார். மற்றும் இதனால் தேவனுடைய வழி நடத்துதலைப் பார்த்தார். இதற்கு மேலான நடைமுறைக் காரியமோ அல்லது ஞானமான காரியமோ ஒன்றுமில்லை. கர்த்தருக்குப் பயப்படுதலை ஞானத்தின் ஆரம்பம் என்று நீதிமொழிகள் திரும்ப திரும்ப கூறுகிறது. (நீதி. 1:7; 9:10) உங்கள் இருதயம் விரும்புவதை நீங்கள் கர்த்தருடைய கையில் விட்டுவிடுவதே நீங்கள் செய்யக் கூடிய புத்தியுள்ள காரியம் ஆகும்.

ஒரே ''அடையாளத்தின்'' அடிப்படையில் உங்கள் தீர்மானம் இருக்க வேண்டாம். அந்த அடையாளம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததாக நீங்கள் நம்பினாலும் உங்கள் ஞானத்தை இழந்து விடாதீர்கள். ஈசாக்கு ரெபெக்காள் கதையில் ஒரு பகுதியில் அவர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் தவறாய் புரிந்து கொள்ளுகிறவர்களாய் இருக்கின்றனர். எலியேசர் கர்த்தரிடமிருந்து அடையாளத்தைக் கேட்ட போது (தனக்கும் தன் ஒட்டகத்திற்கும் குடிக்க தண்ணீர் தரும் பெண்) அவள் அவ்வாறே தண்ணீர் எடுத்து தந்த போது எலியேசர் குறித்துக் கொண்டு தீர்மானம் எடுத்துவிட வில்லை. அவள் துவக்க பயிற்சியில் மட்டுமே தேர்ச்சி அடைந்து விட்டதாக அந்த பகுதி நமக்கு கூறுகிறது. எலியேசர் அதை கூர்ந்து கவனித்து உண்மையிலேயே அவள் ஈசாக்குக்கு சரியான பெண்ணா என்று ஆராய்ந்து பார்த்தார். (வச. 21) தனக்கும் தன் ஒட்டகத்திற்கும் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்ததில் ரெபெக்காளின் தாழ்மையான குணத்தை எலியேசர் கூர்ந்து கவனித்தார். (ஒட்டகம் எவ்வளவு தண்ணீர் குடிக்கும் என்பதை உண்மையிலேயே நீங்கள் அறிந்தால்) அது எவ்வளவு கடினமான வேலை என்று நீங்கள் அறிவீர்கள்! அவள் அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவள் நல்ல சரியான குடும்பத்தில் இருந்து வந்த பெண் என்பதை அறிந்து கொண்டார். (வச.24-27) எலியேசர் அவளுடைய தகப்பனோடும் சகோதரனோடும் பேசிய போது, அவர்கள் கொடுத்த உடனடி சம்மதத்தைப் பெற்றவுடன் அதிகப்படியான உறுதியை இந்த திருமணக் காரியத்தில் பெற்றுக் கொண்டார். ரெபெக்காள் தன் சொந்த அறிக்கையினால் அவள் இவரோடு வர விரும்பியதே இறுதி அடையாளமாகும். இந்த எல்லா காரணங்களும் ஒன்றாய் சேர்ந்து அவர் அவளைத் தெரிந்தெடுத்து உறுதி செய்வதற்கு உதவியாய் இருந்தது.

அறிவுரையை ஏற்றுக் கொள்ளுதல். எலியேசருடைய தீர்ப்பை ஈசாக்கு எவ்வளவு நம்பி இருந்தார் என்பதை நீங்கள் உணருகிறீர்களா? ஈசாக்கு எலியேசரை தன் வருங்கால மனைவியைத் தேட அனுப்புவதற்கு முன் அதைக் குறித்து அதிக நேரம் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம். தன் நெடுங்கால நண்பன் மற்றும் ஊழியக்காரனிடம் தனக்கு மனைவியாக வரக்கூடிய ஒரு பெண்ணிடம் தான் எதிர்பார்ப்பது என்ன என்று கூறியிருக்கலாம் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன். ஆபிரகாம் முழுவதும் தன் ஊழியக்காரனுடைய தீர்ப்பை நம்பி இருந்திருந்தார் என்று நாம் அறிந்திருந்தாலும் அவர் எளிதாய் இந்த தீர்மானத்தை எடுத்துவிடவில்லை. ஆதி. 24:24ல் எலியேசர் ரெபெக்காளின் தகப்பனிடம் தன் பயணத்தின் நோக்கத்தைக் குறித்து கவனமாய் விளக்கிக் கூறி தன்னுடைய ஆலோசனையை தாழ்மையாய் எடுத்துரைத்தார். (வச. 49) ரெபெக்காளும் தன் தகப்பன் மற்றும் சகோதரருடைய வழிகாட்டுதலை தாழ்மையாய் பின்பற்றினார். (வச. 51,58-61) நம் மனம் சரி என்று நினைக்கிறபடி நம் செயல் அமைவது இல்லை. ஒருவரை நாம் திருமணம் செய்ய விரும்பும் ஆர்வத்தில் நம் உணர்வுகள் நம் கண்களை நம் குணத்தில் ஒரு வீழ்ச்சியை உண்டாக்குகிறது. நம்மை நம்பியுள்ள மக்களுக்கு ஆலோசனையான தீர்ப்பு செய்வதில் நாம் இருமுறை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நீதிமொழிகள் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. (நீதி. 12:15; 20:18)

இன்று நாம் கவனிக்க வேண்டிய மற்ற நடைமுறைக் காரியங்கள் என்ன?

ஏற்கனவே நான்கு குறிப்புகளை நாம் மேலே குறிப்பிட்டிருந்தாலும் நாம் கூடுதலாக கவனிக்க வேண்டியவை பின் வருகின்றன: குடும்பத்தைக் குறித்து ஆராய்ந்தறியுங்கள். ஒரு நபர் அவருடைய பெற்றோர், சகோதரன் மற்றும் சகோதரிகளுடன் எப்படி நடந்து கொள்கிறார் என்பதை வைத்து அவருடைய குணத்தை நீங்கள் அறியலாம். ''தன் தகப்பனை கொள்ளை அடித்து, தன் தாயை துரத்தி விடுகிறவன், இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்.'' (நீதி 19:26). '' தன் தாயையும் தகப்பனையும் கனப்படுத்துபவர் கர்த்தருடைய பார்வைக்கு பிரியமானவராய் இருப்பார்.'' அவன் / அவளுடைய பெற்றோர் ஒருவருக்கொருவர் எப்படிப்பட்ட உறவில் உள்ளனர்? உங்களுடைய துணைவரும் அவர்களுடைய முன்மாதிரியினால் ஆழமாக கவரப்பட்டிருப்பார், என்பதை உறுதியாக கூற முடியும்.

அவ்வாறே உங்களுடைய திருமண வாழ்க்கையையும் உங்கள் பெற்றோருடைய திருமண வாழ்க்கையையும் ஆராய்ந்து பார்க்க மறவாதிருங்கள். அதைக் கூர்ந்து கவனித்து அப்படிப்பட்ட மாதிரியை பின்பற்றலாமா வேண்டாமா. அது கர்த்தருக்குப் பிரியமானதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவசரப்படாதீர்கள். உங்கள் வாழ்நாள் முழுவதுமான உறவுக்கு உங்களை

ஆயத்தப்படுத்தி ஒருவருக்கொருவர் சரியாய் இருக்கிறீர்களா என்பதை நீங்களும் உங்கள் துணைவரும் நன்கு அறிந்து உறுதி செய்து கொள்ளுங்கள். முதல் பார்வையிலேயே கவரப்பட்டேன் என்பதெல்லாம் வெறும் இனக் கவர்ச்சி ஆகும். அன்பு வளர்வதற்கும் அதை முன்னேற்றுவதற்கும் நேரம் எடுக்கும். உண்மையான கிறிஸ்துவைப் போன்ற அன்பிற்கான அழைப்பு ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்தலும் ஒப்படைத்தலும் ஆகும்.

நடைமுறை குறிப்புகளின் தொகுப்பு:

1. சரியான இடத்தில் தேடுங்கள்.
2. கர்த்தரிடம் உதவியைக் கேளுங்கள்.
3. ஒரு "அடையாளத்தை" அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்காதீர்கள்.
4. அறிவுரையைக் கேளுங்கள்.
5. அந்த குடும்பத்தை ஆராய்ந்தறியுங்கள்.
6. அவசரப்படாதீர்கள்.

வேறு குலத்திலுள்ளவரை நான் திருமணம் செய்து கொள்ளலாமா?

பழைய ஏற்பாட்டு கட்டுப்பாட்டின் படி யூதர்கள் யூத குலத்தவரை மட்டுமே திருமணம் செய்து, கர்த்தர் அழிக்க விரும்புகிற பாகாலை வணங்குகிற அந்நியரோடு நெருக்கமான உறவு ஏற்படாதபடி இஸ்ரவேலரைக் காக்க வேண்டும். கர்த்தருடைய திட்டத்தின்படி இஸ்ரவேல் ஒரு தனித்துவம் மிகுந்த தேசமாயும், அந்த குலத்தில் மீட்பர் வருவார் என வாக்கு கொடுக்கப்பட்டிருந்த படியாலும், அந்த குலத்தின் பரிசுத்தம் மிக முக்கியமானதாய் இருந்தது. குல வேற்றுமை என்பது முக்கியமாக ஆவிக்குரிய நிலையில் ஏற்படும் வித்தியாசமே ஆகும். புதிய ஏற்பாட்டில் குல வேற்றுமையை முக்கியப்படுத்தவில்லை. ஆகவே இன்றைய நாளில் வேறு குலத்தில் திருமணம் செய்வதை தடுப்பதற்கான வேதாகம காரணம் ஒன்றும் இல்லை. நாம் தோலின் நிறத்தில் வித்தியாசம் பார்க்காமல் அதைவிட முக்கியமான கலாச்சார பிண்ணனி மற்றும் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுதலை நடைமுறைக் குறிப்பாக ஏற்றுக் கொள்ளலாம். நீங்களும் உங்ள் திருமணத் துணைவரும் அநேக நிலையில் ஒருவரோடொருவர் உறவு வைத்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. எந்தவிதமான கலாச்சாரத் தடை இருந்தாலும் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சந்திக்கப் போகிற சமுதாய பிரச்சினைகளை மேற்கொள்ள உறுதியாய் இருங்கள். கலப்புத் திருமணத்திற்கு விரோதமாக பெருமைபாராட்டுவது மிக அசிங்கமான உண்மையாகும். ஏனென்றால் நாம் ஒவ்வொரு வரும் அதனோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் கவனமான மதிப்பிடுதலும் எச்சரிக்கையும் அவசியமாய் இருக்கிறது.

என் பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் என்ன செய்வது?

அவர்களுடைய விருப்பத்தின் படி நடக்கிறீர்களா? உங்கள் குடும்பத்தில் சமாதானத்தைக் காக்க வேண்டும் என்றால் அப்படியே செய்யுங்கள். உங்களுக்கு வயதானால் நீங்கள் முதிர்ச்சி அடைந்து உங்கள் தீர்மானங்களுக்கு நீங்களே பொறுப்பாகி உங்கள் சரியான தெரிந்தெடுப்பை நீங்களே சிந்தித்துக் கொள்ளலாம். வேறு என்ன? நீங்கள் என்ன செய்தாலும் உங்கள் பெற்றோருக்கு மரியாதை காண்பிக்க மறவாதிருங்கள். (எபே. 6:2,3) அவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும் நீங்கள் அவர்களை கனப்படுத்துங்கள். உங்கள் அன்பை காண்பிக்க நீங்கள் அவர்களோடு நேரம் செலவழியுங்கள். உங்கள் திருமணத்தைக் குறித்து அவர்களிடம் பேசுங்கள். இந்த திருமணத்தை அவர்கள் விரும்பாதிருப்பதின் உண்மையான காரணத்தை கண்டுபிடியுங்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் நபருடைய மோசமான குணத்தை அறியலாம் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை உங்களுக்கு தெரியாததாய் இருக்கலாம். அவர்களுடைய சந்தேகத்தை தீர்ப்பதற்கு சில காலம் நீங்கள் பொறுமையாய் இருங்கள். அதிகப்படியான எதிர் விளைவை காண்பிக்காதீர்கள். உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்கும் இந்த காரியத்தில் தெளிவை உண்டாக்க உதவுமாறு கர்த்தரிடம் கேளுங்கள். அவர்களிடம் உங்கள் அன்பையும், மதிப்பையும், மரியாதையையும் காண்பியுங்கள்.

உங்கள் போதகர் அல்லது மற்றவர் இதற்கு சரியான ஆலோசனை கொடுக்கக் கூடியவராய் இருப்பர். உங்கள் பெற்றோர் எதிர்ப்பது காரணம் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அவர்களோடுள்ள

உங்கள் உறவை பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய ஒப்புதலைப் பெற முயற்சியுங்கள். ஆனால் அவர்களை வற்புறுத்தாதீர்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் நபர் இதைப் புரிந்து சில காலம் காத்திருக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

நீங்கள் கவனத்தோடும் ஜெபத்தோடும் உங்கள் விருப்பத்தையும், நீங்கள் திருமணத்திற்கு தயார் என்பதையும் உங்களுடைய பொருத்தம் மற்றும் அன்பையும் பரிசோதித்து பின்பு கடைசியாக மட்டுமே உங்கள் பெற்றோருடைய விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்யுங்கள்.

<u>தெரிந்தெடுப்பதில் நான் எவ்வளவு சுதந்தரம் எடுத்துக் கொள்ளலாம்?</u>
உலகத்தில் ஒருவரை மட்டும் தெரிந்தெடுப்பதோ அல்லது உங்கள் தெரிந்தெடுப்பில் அநேகர் உள்ளனரா அது கர்த்தருக்குப் பிரியமானதா? எளிதில் பதிலளிக்க முடியாத இது மற்றொரு காரியம் ஆகும். ஏனென்றால் கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் படி இந்த காரியத்தை நம்முடைய சொந்த விருப்பத்திற்கென்று விடுதலை அளித்து இருக்கிறார். அது மனித புரிந்து கொள்ளுதலுக்கு மேலானது.

நாம் கர்த்தருடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்தாலும் அவர் நமக்கு விடுதலை அளித்திருக்கிறார் என்பதனை உறுதியாக கூற முடியும். அந்த விடுதலை நாம் தவறு செய்வதற்கும் ஏதுவாய் இருக்கிறது. பாவமான ஒன்றும் மற்றும் அறியாமையான ஒன்றும் இணைந்து இந்த உலகத்தில் ஒருவரையே நாம் தெரிந்தெடுத்து நாம் அனைவரும் சுற்றி அமர்ந்து திருமணம் செய்யலாமா வேண்டாமா என்று தெரிந்தெடுப்பதற்கான கர்த்தருடைய திட்டம் என்னவென்றால் அதனாலேயே நாம் சரியான நபரை நமக்குத் தருமாறு கர்த்தரையே நம்பி தொடர்ந்து அவரையே சார்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதாகும்.

<u>சிந்தனைக்கு.</u>
திருமணத்திற்கு முன்பாக நமது மூளையை உபயோகப்படுத்துவது நம்மை எவ்வாறு காக்கும்? இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ள சந்தோஷமான திருமணத்திற்கு முக்கியமான நடைமுறை குறிப்பு என்ன? உங்களை ஒருவர் திருமணம் செய்து கொள்ள விரும்பும் காரியத்தில் உங்களுடைய நடைமுறை தெரிந்தெடுப்பு என்ன? உங்களை ஒருவர் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்கான நடைமுறை காரணம் என்ன?

(5) மேற்கொண்டு சிந்திப்போம்.

நீங்கள் ஒரு குளத்தில் தலை குப்புற நீந்த நினைக்கும் போது அந்த குளம் எவ்வளவு ஆழம் மற்றும் எவ்வளவு வெதுவெதுப்பானது (அல்லது குளிர்ந்தது) என்பதை அறியாமல் நீந்த செல்வீர்களா? நீங்கள் ஒரு வீட்டை வாங்கவோ அல்லது வாடகைக்கு எடுக்கவோ தீர்மானிக்கும் போது முதலாவது அதை சரியாக பார்க்காமல் சம்மதிப்பீர்களா? நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்களுக்கு என்ன சம்பளம் தருவார்கள்? அதிலிருந்து என்ன நன்மைகள் கிடைக்கும் அல்லது எப்படிப்பட்ட வேலை என்று அறியாமல் அந்த வேலையை ஏற்றுக் கொள்வீர்களா? மற்றவர்களுடைய வற்புறுத்தலால் மட்டுமே இதை செய்ய விரும்புகிறீர்கள் அல்லது நம்பிக்கை இல்லாமல் இருக்கிறீர்கள். சரியா?

திருமணத்திலும் இதுவே உண்மையான நிலைமை. சிலர் தாங்கள் என்ன செய்கிறோம் என்ற சிந்தனை இல்லாமல் திருமணத்திற்குள் நுழைய தீர்மானிக்கிறார்கள். அவர்கள் மனதில் திருமணத்தைக் குறித்த வேத பார்வையில் குறையுள்ளவர்களாயும் அல்லது தங்களுடைய காதல் உணர்வுகள் எந்த தடையுமின்றி தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையில் இருப்பதுமே பிரச்சனை ஆகும். அவர்கள் தாங்கள் பார்த்து வளர்ந்த திருமண முறையிலேயே சிறப்பான திருமணத்திற்கு குறைந்த அளவிலேயே தொடர்ந்து வாழ நினைக்கின்றனர். அதன் பலனாக திருமணத்தில் பிரச்சினைகள் வரும்போது அதை சரியாக கையாளத் தவறி போராட்டத்தோடு வாழ்ந்து, அது தானாய் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையோடு அந்த பிரச்சனையை அசட்டை செய்கின்றனர் அல்லது திருமணத்தை முடிவிற்கு கொண்டு வர நினைக்கின்றனர். ஆகவே திருமணம் செய்ய நினைப்பவர்கள், தங்களுக்கு என்ன தேவை என்பதைக் குறித்து சிந்திப்பது அவசியமாய் இருக்கிறது.

திருமணத்தைக் குறித்து ஈசாக்கும், ரெபெக்காளும் என்ன யோசித்தார்கள்? ஆதி. 24ல் இதைக் குறித்து நமக்கு எதுவும் கூறப்படவில்லை. அவர்கள் ஆபிரகாமைப் போல, ஏதேன் தோட்டத்தில்

நடந்த முதல் திருமணத்தை அறிந்திருப்பார்கள் என நாம் கற்பனை செய்து கொள்ளலாம். மேலும் அவர்கள் கர்த்தருக்கு பயந்த தங்களுடைய பெற்றோரைப் பார்த்து திருமணத்தைக் குறித்த தங்கள் திட்டத்தை அறிந்திருப்பர். உதாரணமாக திருமணத்தில் பலமான ஆவிக்குரிய காரியங்கள் அடங்கி இருக்கிறது என்பதை ஈசாக்கு நிச்சயம் அறிந்திருக்க வேண்டும் - தன் மனைவி பாகாலை வணங்குபவர் அல்ல என்று அறிந்தபடியால் தனக்கு ஆவிக்கேற்றவர் என்றும், தன்னோடு இணைந்து விசுவாசத்தைக் காத்துக் கொள்பவள் என்றும், அதை அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்பவர் என்பதை அறிந்திருந்தார். (ஆதி. 24:1-7) இவர் பிறந்த 37 வருடங்களுக்கு பின்பு, அவர் தாய் இறந்ததால் ஈசாக்கு அவருடைய பெற்றோருடைய உறவை நன்கு அறிந்திருந்தார்.

திருமணத்தைக் குறித்து கர்த்தருடைய பார்வை என்ன? எல்லா மனித உறவிலும் மிக சிறந்ததும், மிக நெருக்கமானதாயும் கர்த்தர் திருமணத்தை வடிவமைத்தார். மனிதனும் மனுஷியும் ஒருவருக்கொருவர் சரீர, ஆவிக்குரிய, உணர்வு பூர்வ மற்றும் சமுதாயத்தின் தேவை மற்றும் தகுதிக்கான சிறப்பு உறவு முறையாய் உருவாக்கப்பட்டனர். அதையே நாம் திருமணம் என்று அழைக்கிறோம். (ஆதி. 2:18-25) அவர்களுடைய ஒற்றுமை பாலியல் நடவடிக்கையைக் காட்டிலும் அதிகமானது. அவர்கள் சேர்ந்து இருப்பதின் நோக்கம் இருதயம் மற்றும் ஆத்மீகமானது. நீங்கள் தெரிந்தெடுக்கும் திருமணத் துணைவர் உங்கள் தேவையை சந்திப்பவராகவும், உங்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்குபவராகவும் உங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய நோக்கத்தை நிறைவேற்றுபவராகவும் இருக்க வேண்டும்.

முதல் திருமண வைபவத்தை கர்த்தர் நடத்தினார். மற்றும் இன்று வரை எல்லா திருமண வைபவத்திலும் அவர் கலந்து கொள்கிறார். ஆதாம் ஏவாளை உருவாக்கியதைக் குறித்து இயேசு கிறிஸ்து குறிப்பிடுகையில் அவர் மனிதனும் அவன் மனைவியும் ஒரே மாமிசமாயிருப்பார்கள் என்றார். மேலும் அவர் "ஆகவே கர்த்தர் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்" என்றார். (மத் 19:6) கர்த்தர் விவாகரத்தை வெறுப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று தெளிவாக கூறுகிறார். (மல். 2:16) புதிய ஏற்பாட்டு பகுதியில் எபே.5ல் திருமண உறவில் பரிசுத்தம் மற்றும் கணவனும் மனைவியும் தங்களுக்குரிய அனைத்தையும் மற்றவருக்கு கொடுக்க வேண்டுமென்று எடுத்துரைக்கிறார்.

கணவன் மனைவியின் பொறுப்புகள் என்ன? சிலருடைய கருத்துக்கு மாறாக, திருமணம் என்பது எஜமான் - அடிமை உறவு முறை அல்ல. சிலர் பழைய திருமண முறைக்கு மாறாக ஒருவருக்கொருவர் எதிர்மறையான உறவல்ல.

கீழ்வருவன இரண்டு திருமணப் பொறுப்புகளாகும்:

* பாலியல் உண்மை. (யாத். 20:14; கலா. 5:19) இந்த உண்மை செயல் மற்றும் நடத்தை இரண்டிலும் இருக்க வேண்டும். கணவனும் மனைவியும் ஒரே விதமான பார்வையும், சிந்தையும் உடையவராக மட்டுமே இருக்க வேண்டும்.

* வித்தியாசமான பங்குகள். (1 கொரி. 11:13-16; எபே. 5:22-33; கொலோ. 3:18,19; 1 தீமோத் 3:4,12; தீத்து 2:4,5; 1 பேதுரு 3:1-7). திரித்துவத்துக்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எல்லோரும் சமமாய் இருந்தாலும் வித்தியாசமான பங்குடையவராய் இருப்பது போல கணவன் மனைவியும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வித்தியாசமான பங்குடையவராய் இருக்கின்றனர். அவையாவன:

= கணவன் அன்பான தலைமைத்துவத்தை ஏற்பவராய் இருக்க வேண்டும். (1 கொரி 11:3; எபேசி. 5:23-25,28; கொலோ. 3:19) அவன் அன்போடு நேசித்து (கிறிஸ்து பலியாக தன்னை கொடுத்தது போல) வழி நடத்துபவனாய் இருக்க வேண்டும். மனைவிக்கு கொடுக்க வேண்டிய அன்பான கனத்தை கொடுத்து அவளுடைய தேவை என்று நீங்கள் புரிந்து கொண்ட எல்லாவற்றையும் அவளுக்கு செய்ய வேண்டும். (1 பேதுரு 3:7)

= மனைவியானவள் தன் கணவனுக்கும் தன் குடும்பத்துக்கும் அன்போடு உதவி செய்கிறவளாய் இருக்க வேண்டும். (ஆதி. 2:18; எபே. 5:22; கொலோ. 3:18; தீத்து 2:4,5; 1 பேதுரு 3:1) அவள் தான் உதவி செய்வதற்கென்று உருவாக்கப்பட்டவள் என்பதை அறிந்து அவனுக்கு கீழ்ப்படிந்து மரியாதை செய்ய வேண்டும்.

கர்த்தர் ஆணையும் பெண்ணையும் வித்தியாசமான உயிரியல் கூறுகள் மற்றும் வித்தியாசமான பங்காற்றுகிறவர்களாக படைத்திருக்கிறார். கர்த்தர் உண்டாக்கின வித்தியாசத்தை அசட்டை செய்யுங்கள் அல்லது மேற்கொள்ளுங்கள் என்று வேதத்தில் எங்கும் குறிப்பிடவில்லை.

இது எளிதானதென்று ஒருவரும் கூற முடியாது! அன்பு கூற அநேக கிரியைகள் தேவை. ஒரு மனிதன் திருமணத்திற்குள் செல்லும் பொழுது தன் வாழ்க்கை முழுவதும் காதல் உணர்வு மட்டுமே உள்ளது என்ற எண்ணத்தில் விழிப்புணர்வு உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அநேக மக்கள் நிஜத்தை அதிகம் அறிந்திருந்தாலும் அந்த நிஜத்துக்கும் அதிகமானதையே எதிர்பார்க்கின்றனர்.

பாலியல் உறவு எவ்வளவு முக்கியமானது? உங்கள் பாலியல் உறவு முறை என்பது நீங்களும் உங்கள் துணைவரும் உங்கள் சரீரம் மற்றும் ஆத்துமாவில் எவ்வளவு நெருங்கிய உறவை வெளிப்படுத்துகிறீர்கள் என்பதைக் குறிப்பதாகும். பாலியல் உறவு என்பது வல்லமையான அழுத்தத்தைத் தருவதாகும். அந்த அழுத்தத்தை நிறைவு செய்யும் இடமாக திருமணத்தை தேவன் வடிவமைத்தார். (எபி. 13:4) திருமணம் செய்து கொள்வதற்குரிய ஒரு முக்கிய காரணம் பாலியல் விருப்பத்தை நிறைவேற்றக் கூடியதாக (1 கொரி. 7:2,9) நமக்கு கூறுகிறது. ஆகவே அதில் அதிக ஆர்வமாய் செயல்பட நமக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. (உண்மையில் பாலியல் உறவு என்பது ஒருவரோடொருவர் கொண்டுள்ள பொங்கி வழியும் அன்பை வெளிப்படுத்துவது ஆகும்) ஆனால் பாலியல் உறவில் திருமண உறவுக்குள் மட்டுமே மகிழ்ந்திருக்கத் தக்கதாகும். (நீதி. 5:15-19). தங்கள் துணையை பாலியலில் திருப்தி படுத்த வேண்டும் என்பதை கணவனும் மனைவியும் உணர்ந்திருக்க வேண்டும. (1 கொரி. 7:3-5) உண்மையான அன்போடும் ஒருவரையொருவர் தியாகத்தோடு ஒப்புக்கொடுத்திருக்கும் போது அது எளிதானதாகவும், சந்தோஷமாகவும் மாறும்.

திருமணத்திற்கு முன்பான ஆலோசனை அவசியமானதா?

அது அவசியமில்லாவிட்டாலும் திருமணத் தம்பதிகளுக்கு அது மிகவும் உதவியாய் இருக்கும். சிலர் தங்கள் பெற்றோரிடமிருந்து வளரும் போதே போதுமான நல்ல ஆரோக்கியமான வேத ஆலோசனையை பெற்றிருக்கின்றனர். ஏற்கனவே அவர்கள் நல்ல திருமண வாழ்க்கையை செயலில் பார்த்திருப்பதினால் மேற்கொண்டு ஆலோசனை அவர்களுக்கு தேவை இல்லை. அநேக போதகர்கள் ஒவ்வொரு திருமண தம்பதியருக்கும் ஆலோசனை நேரத்திற்குள் வழி நடத்துவது நல்ல யோசனை. கடைசியாக தம்பதிகள் திருமணத்தைக் குறித்த எல்லா காரியத்தையும் வேற்றுமை வரும்போது எவ்வாறு கையாள்வது, அவர்களுடைய பங்கை எவ்வாறு செயலாற்றுவது, பாலியலில் ஒருவருக்கொருவர் எவ்வாறு உறவு கொள்வது, ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய வாழ்க்கையில் எவ்வாறு கட்டப்படுவது என்பதை குறித்து திருமணத்திற்கு முன்பான ஆலோசனை பின்நாட்களில் வரும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு வழி வகுப்பதாய் இருக்கும்.

சிந்தனைக்கு.

மக்களில் சிலருக்கு திருமண பொறுப்புகளைக் குறித்த பயம் உண்டாவது ஏன்? திருமண ஒப்பந்தத்தைக் குறித்து இன்றைய சமுதாயத்தின் பார்வை என்ன? நீங்கள் வளர்ந்து வரும்போது உங்கள் குடும்பத்திலும் உங்கள் நண்பரிடத்திலும் நீங்கள் கவனித்த நல்ல மற்றும் மோசமான திருமண வகை யாது? உங்கள் திருமணத்தின் மூலமாக கர்த்தரை கனப்படுத்த உறுதி கொண்டிருக்கிறீர்களா?

"நான் செய்கிறேன்"

"நான் செய்கிறேன்" - இந்த 2 சிறிய வார்த்தையில் பல வெளிப்பாடுகள் அடங்கியுள்ளது. திருமண வைபவத்தில் "நான் செய்கிறேன்" என்ற வார்த்தை ஆணும் பெண்ணும் இந்த சிறப்பு உறவு முறைக்குள் நுழைய விரும்புவதையும் தங்கள் அன்பையும், ஒப்புக் கொடுத்தலையும் ஒருவருக்கொருவர் வாக்களிக்கிறதாய் இருக்கிறது - வாழ்நாள் முழுவதும். இது எளிதாய் எடுத்துக் கொள்ளப்படும் உறவு முறை அல்ல அல்லது அவசரமாய் நுழையக் கூடியதும் அல்ல. ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் ஆவியில் ஒற்றுமை உடையவர் என்றும் ஒருவருக்கொருவர் சரியானவர் என்றும் திருமண வாழ்க்கையில் வரும் சவால்களை சந்திக்க தயாராய் இருப்பவர்கள் என்பதையும் உறுதி செய்வது அவசியமாகும்.

முன்பாக மனிதன் கர்த்தருக்கென்று ‘‘நான் செய்கிறேன’’ என்று கூறுவானா? கர்த்தர் உன்னுடைய பாவத்தை மன்னித்து இங்கு மற்றும் நித்தியத்திலும் உன் வாழ்க்கையைக் குறித்து மகிழ்வாரா என்பதை நீ உணர வேண்டும். இந்த திருமணத்திற்குரிய நிபந்தனை மிகவும் எளிதானது. வெறுமனே கர்த்தரிடம் ‘‘நான் செய்கிறேன’’ என்று கூற வேண்டும் - அவருடைய பாவ மன்னிப்பின் அவசியத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூற வேண்டும். (ரோமர் 3:23) மற்றும் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து வாங்கி தந்த இலவச பரிசான நித்திய வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை நீங்கள் செய்வீர்களானால் எல்லாவற்றிற்கும் முதன்மையான எப்போதும் உங்களோடு நடக்கக்கூடிய ஒருவரை கண்டுபிடிக்கும் முக்கியமான படியில் ஏறிவிட்டீர்கள்: அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

சாபத்திலிருந்து விடுதலை

முகவுரை:

கலா. 3:13,14. சாபத்தை மாற்றி ஆசீர்வாதம்!

சாபங்கள் மற்றும் ஆசீர்வாதத்திற்குரிய இயல்புகள்
(இதைக் குறித்து வேதாகமத்தில் 600க்கும் அதிகமான குறிப்புகள் உள்ளன)

ஆசீர்வாதங்கள் மற்றும் சாபத்திற்கான விளக்கம்: நன்மைக்கு அல்லது தீமைக்கான பலனைக் கொண்டு வரும் இயற்கையின் வல்லமைக்கு அப்பாற்பட்ட செயல்.

தன்மைகள்: இது ஒரு சந்ததியிலிருந்து மற்றொரு சந்ததிக்கு கடந்து செல்கிறது. இவை பொதுவாக பேசும் அல்லது எழுதும் வார்த்தையில் இருக்கும். இதை ஒரு பொருளாகவும் மாற்றக் கூடும். (உதாரணம்: கர்த்தருடைய ஆசீர்வாதக் கோப்பை) பழைய ஏற்பாட்டின் உதாரணம்: பெண்ணின் கற்புத் தன்மையை சோதித்தல் (உண்மையை சோதித்தல்)

கர்த்தருடைய ஆசீர்வாதம் உள்ளே நுழையும் போது முதலாவது சாபங்கள் உடைக்கப்பட்டு விடுதலை கிடைக்கிறது. பொதுவாக அநேகருடைய காரியங்களில் சாபங்கள் உடைக்கப்படும் போது குணமாகுதல் பாய்ந்து வருகிறது.

ஆசீர்வாதங்கள் மற்றும் சாபத்திற்கான வடிவங்கள்:
உபா. 28 (அதன் தொகுப்பு):

ஆசீர்வாதங்கள்:-

1) மேன்மை படுத்துதல் (உயர்த்தப்படுதல்)
2) உற்பத்தி செய்தல் (வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் கனி தருதல்)
3) ஆரோக்கியம்
4) செழிப்பு மற்றும் வெற்றி
5) ஜெயம்
6) வாலாக்காமல் தலையாக்குதல் (சூழ்நிலையைக் கட்டுக்குள் கொண்டு வரும் வண்ணம் தலையானது முடிவெடுத்தல்)
7) கீழாகாமல் மேலாகுதல்

சாபங்கள்:-

1) தாழ்ச்சியடைதல்
2) மலட்டுத்தன்மை / உற்பத்தி செய்ய முடியாமல் போகுதல்
3) எல்லா விதமான நோய் உண்டாகுதல்
4) வறுமை / தோல்வி
5) தோற்கடிக்கப்படுதல்
6) தலையாயிராமல் வாலாயிருத்தல்
7) கீழாயிருத்தல் (மேலாயிராமல்)

ஒரு மனிதனின் வாழ்க்கையில் சாபம் இருப்பதற்கான அடையாளம்:- (பொதுவாக)

1) மனநிலை மற்றும் / அல்லது உணர்வுகளில் வீழ்ச்சி (விழுந்து போதல்)
2) நெடுநாளைய அல்லது திரும்பத் திரும்ப நோயுறுதல் (பரம்பரையாக)
3) பெண்களுக்கான பிரச்சனை: மலட்டுத்தன்மை, அடிக்கடி கருவழிதல், தீட்டு பிரச்சனை
4) குடும்பத்தில் தகராறு மற்றும் திருமணம் உடைபடுதல்
5) பணப் பற்றாக்குறை (அநேக காலங்களாக)
6) விபத்து ஏற்படுதல் (எப்போதும் விபத்துக்குள்ளாதல்)

7) குறிப்பிட்ட குடும்பத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட மரணம், அல்லது தற்கொலைக்கான வரலாறு அல்லது கடந்த கால இருளின் நிழல் ∴ கடந்த கால கொடுமையின் ''கரம்''. தொடர்ச்சியான தோல்வி.

நீதி. 26:2ல், ''எல்லா சாபத்திற்கும் ஒரு காரணம் உண்டு.'' ஆகையால் சாபத்திற்கான காரணத்தைக் கண்டுபிடிப்போம். (உபா. 23:5)

சாபத்திற்கான வேதாகமக் காரணங்கள்:-
உபா. 28. முக்கியமான காரணங்கள்:

1) உபா. 28:15 - கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுக்காமல் இருத்தல் மற்றும் கீழ்ப்படியாமல் இருத்தல் - சாபம்.
சாபத்திலிருந்து விடு பெற வேண்டுமானால் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

2) சாபத்திலிருந்து விடுதலையாக்க கர்த்தரால் மட்டுமே முடியும். கீழ்ப்படியாதவர்களை கர்த்தர் சபிக்கிறார். கர்த்திடத்திலிருந்து சாபம் தொடர்ந்து வரும். யாத். 20:3-5.
* மற்ற பொய்யான கடவுள்கள் - சாபம் (முதலாம் மற்றும் இரண்டாம் கட்டளையை மீறுதல்)
* விக்கிரக ஆராதனை - சாபம்
சாபம் தொடர்ந்து மூன்றாம் நான்காம் தலைமுறை வரைக்கும் இருக்கும்!

3) விக்கிரக ஆராதனையினால் மக்களுக்கு வரும் சாபத்தின் கட்டுகள்.
* அஞ்சனம் பார்த்தல் (வேறு கடவுள்களுக்கு) - சாபம். உதாரணம்: குறி சொல்லுதல், சிலை செய்தல் - உண்மையான தெய்வம் அல்லாதவற்றை உருவாக்குதல். ஒரு வழியாகவோ அல்லது மற்ற விதமாகவோ அநேகர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இந்த பாவத்தை நீங்கள் அறிக்கையிட்டு சாபத்திலிருந்து விடுதலை பெறுங்கள். (நான்கு சந்ததிகள் = 70 முற்பிதாக்கள்)

<u>உபா. 27:15-26. - சாபங்களுக்கான தொகுப்பு (பொதுவாக)</u>
1) விக்கிரக ஆராதனை
2) பெற்றோரை அவமதித்தல் (எபே. 6:1) தாயையும், தகப்பனையும் கனம்பண்ணாதிருத்தல்.
3) உதவியற்றவரையும்,பெலவீனரையும் சிறுமைபடுத்துதல்
4) பெலவீனர் மற்றும் உதவியற்றோருக்கு அநியாயம் செய்தல்
5) தவறான அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட பாலியல் உறவுகள். (அசுத்தமான உறவு) - சாபம் (கரு கலைத்தல் சாபத்தைக் கொண்டு வரும்)
* ஆதி 12:13; 27:29 - தகப்பனுடைய ஆசீர்வாதத்தில் விரிவடைதல். யூதர் அல்லாதோர் - யூதரை சபித்தல் - சாபத்தைக் கொண்டு வரும்.
6) மாம்சத்தை சாந்திருத்தல். சக. 5:1-4
* ஏரே. 17:5,6 (சபிக்கப்பட்ட மனிதனைப் பற்றிய விளக்கம்) மனிதனை சார்ந்து கர்த்தருடைய கிருபையிலிருந்தும் கர்த்தரிடத்தில் இருந்தும் பிரிந்திருப்பான்! (கர்த்தருடைய கிருபை மற்றும் இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையிலிருந்து பிரிந்து போயிருப்பான்)
7) கர்த்தருடையதை திருடுவோன்; கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதில் உண்மையோடிருப்பான்.
* மல். 3:8-10. கர்த்தருடையதில் கஞ்சத்தனமாய் இருத்தல் சாபத்தைக் கொண்டு வரும். உங்களுடைய சிறு அன்பளிப்புகள் கர்த்தருக்கு அவசியமில்லை. தாராளமாய் இருத்தல் (கற்பனைகளைக் காட்டிலும் கிருபை பெரியது) தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் கொடுப்பது நம்முடைய ஆராதனையின் ஒரு பகுதி.
8) சுவிசேஷத்தைத் தெரிவித்தல்:
* கலா. 18:9 - தவறான சத்தியத்தைப் போதித்தல் (சுவிசேஷத்தை திரித்துக் கூறுதல்) கர்த்தரையும் கர்த்தருடைய வார்த்தையையும் ஜாக்கிரதையாய் ஏற்றுக் கொள்வதே விசுவாசம்.

<u>சாபத்திற்கான மற்ற காரணங்கள்</u>: (அதிக குறிப்பாக)

- கர்த்தருக்காக மனிதன் பேசுதல். யோசு. 6:26. 1 இராஜா. 16:34ல் 500 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்றதை இதோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்! (அவர்கள் சுயத்தை சார்ந்திருக்கிறார்கள்
- இவர்கள் இதிலிருந்து விடுபட்டு சரி செய்யப்படும் வரை சாபத்தினுடைய வல்லமை தொடர்ந்து இருக்கும்).
- 2 சாமு. 1:21. 3000 வருடங்களுக்குப் பின்பாக, இன்று வரை கில்போவா மலை கனி தராமல் இருக்கிறது.
- 2 இராஜா. 5:26,27 கேயாசி குஷ்டரோகியாக மாறி அது அவன் சந்ததியையும் தொடர்ந்து பிடித்தது.

  இயேசு அத்திமரத்தை சபித்தார்.

<u>சாபத்திற்கான மற்ற வழிகள்</u>

(அதிகாரத்தோடு தொடர்புடைய நபர், உதாரணமாக கணவன், மனைவி, சபை - மேய்ப்பர்)
அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களிடம் பேசும் வார்த்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைக் கொண்டு வருவதாய் இருக்கிறது. (உதாரணம் குருவானவர் - சபை; கணவன் - மனைவி).

* உங்கள் பெற்றோரை கனப்படுத்தி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* ஆதி. 31:30-32 யாக்கோபு அறியாமல் ராகேலை சபித்தான். சில வருடங்களுக்குப் பின்பாக பிரசவத்தில் ராகேல் மரித்தாள்.

  உ.ம். கணவன் மனைவியை சபித்தல்

  தகப்பன் தன் மகனிடம் "நீ எப்போதும் தோல்வி அடைவாய், ஒரு போதும் நீ வெற்றியடையப் போவதில்லை" என்று கூறுதல்.

  தாய் தன் மகளை சபித்தல்

  ஆசிரியர் - மாணவன்: "நீ ஒரு முட்டாள்", "தோல்வி அடைவாய்".

  பொதுவாக சபித்தல் என்பது பிசாசின் காரியமாய் இருக்கிறது. யாக். 3:14,15. உனக்கு கோபம் வரும் போது உடனே அந்த சூழ்நிலையை விட்டு வெளியே வந்து விடு அல்லது உன் வாயிலிருந்து சாபமான வார்த்தை வந்து விடும்.

சாபத்தினால் வரும் பாவங்கள்

ஆதி. 27:11-13,46.
ஆதி. 27:13ல் ரெபெக்காள் தனக்கே சாபத்தை வருவித்துக் கொண்டாள். (வச. 46) உங்களைக் குறித்து எதிர்மறையான அறிக்கையை கூறாதீர்கள். நீங்கள் உங்களையே சபிக்கும் சாபத்தை மாற்றுங்கள் - நேர்மறையான வார்த்தையின் மூலம் எதிர்மறையானதை மாற்றுங்கள். (உதாரணம். இயேசுவும், பேதுருவும்: மூன்று முறை மறுதலித்து - மூன்று முறை சபித்தான், சத்தியம் பண்ணினான்) மத் 26:74,75.
கர்த்தரால் ஆபிரகாமை சாபத்திலிருந்து காக்க முடிந்தது. ஆனால் யூதர்களை அவர்களிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை.
கர்த்தர் உங்களை எல்லாவற்றிலிருந்தும் காக்க முடியும். ஆனால் நீங்களாய் வருவித்துக் கொள்ளும் சாபங்களிலிருந்து உங்களை காக்க முடியாது.

வேதத்திற்கு புறம்பான உடன்படிக்கைகள்

* யாத் 23:32. (அந்நிய தெய்வங்கள் மற்றும் அந்த மக்களும்) உதாரணம். சிலையை உருவாக்குதல் - இது மிகவும் பிசாசுக்கடுத்தது, பாகால் மற்றும் மற்ற தெய்வங்களோடு யெகோவாவையும் சேர்ப்பது.

* மலைகளின் மேல் வழிபாடு - தானே உண்டாக்குகிற வழிபாடுகள் முதலியன.

* மந்திரவாதிகள் - சாத்தானுடைய ஊழியக்காரர்களுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உண்டு. அவற்றை குறைவாக மதிக்காதீர்கள்; அது உண்மையானது, ஆனால் கிறிஸ்துவுக்குள் நாம் மிகப் பெரிய வல்லமையும் அதிகாரத்தையும் பெற்றவர்களாய் இருக்கிறோம்.

* எண். 22:4-6 உங்களுடைய சத்துரு உங்களை சபித்தால் உங்களால் அந்த போரில் வெற்றி பெற முடியும். 1 சாமு. 17:43 (தேவர்களுக்குள்ளே போர்)

* உபா. 7:25,26. உன் வீட்டிற்குள் மந்திரப் பொருட்களை கொண்டு வருவாயானால் உன் வீட்டை மந்திரவாதத்திற்கு திறந்து கொடுக்கிறவனாய் இருப்பாய். (உ.ம். சிறு குழந்தைகள் தூங்க முடியாமல் இருக்கும் போது உன் வீட்டில் மந்திரப் பொருட்கள் ஏதேனும் இருக்கிறதா என்பதை தேடி எடுத்து அதை வெளியேற்று)

சாபத்தை எப்படி உடைத்து முறிப்பது:-

- உணர்வடை
  மனந்திரும்பு (யாக். 4:7)
  விட்டு விலகு
  எதிர்த்து நில் - தொடர்ந்து இதை செய்.

- வேதாகமத்தின் அடிப்படையில் விடுதலையை நியமி. கலா. 3:13,14.
  எபே. 1:7; கொலோ. 1:12-14; 1 யோ. 3:8டி; லூக். 10:19.

- கர்த்தருக்குள் உன் விசுவாசத்தை அறிக்கையிடு.

- உனக்குத் தெரிந்த எல்லாப் பாவங்களையும் அறிக்கையிடு. (உன்னுடையது மற்றும் உன் முற்பிதாக்களுடையது.)

- எல்லா மனிதர்களையும் மன்னித்து விடு. மத். 6:25; நீ மன்னிக்கப்பட மற்றவர்களை மன்னிக்கவும். (உணர்வுப் பூர்வமாய் மன்னிப்பதல்ல, தீர்மானத்தோடு மன்னிக்கவும்)

- மந்திரத்தோடு உனக்குள்ள எல்லாத் தொடர்பையும் விட்டு விலகு. (உன்னுடைய சொந்த அல்லது உன் முற்பிதாக்களுடைய)

- மந்திரப் பொருட்களிலிருந்து விடுதலையாகு.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உன்னை விடுதலையாக்கு!
அறிக்கையிட்டு ஆபிரகாமுடைய ஆசீர்வாதங்களை எதிர் பாருங்கள்.
பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் ஆசீர்வாதங்கள் உள்ளது.
எல்லாக் காரியங்களும் ஆசீர்வதிக்கப்படும்!
கர்த்தர் கூறுவதைக் கேட்டு அதன்படி செய்யுங்கள்!

ஆலோசனை ஊழியம்

- மேய்ப்பனானவன் மக்களை தனியே சந்தித்து இரட்சிப்பைக் குறித்தும் அவர்களுடைய தனிப்பட்ட பிரச்சனையை குறித்தும் பேசக் கூடியவனாய் இருக்கிறான். அத்தகைய நேரங்களில் அவர்களுடைய சாட்சிகளில் உள்ள குறைகளை சுட்டிக் காட்டுகிறவனாய் இருக்கிறான். (மத். 18:15-17)
- கவலைகளிலும் வேதனையிலும் தேற்றுவதற்குக் கற்றவனாய் இருக்க வேண்டும்.
- அவன் மக்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நுழைந்து அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக மாறுகிறவனாய் இருக்க வேண்டும்.
- அவன் பூமியிலுள்ள எல்லா நாட்களிலும் கர்த்தருடைய சிறப்பு பிரதிநிதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஐக்கியத்தை உற்சாகப்படுத்துதல்

கிறிஸ்துவோடும் அவருடைய குடும்பத்தினரோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளும் அடிப்படையில் ஐக்கியம் அமைய வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒன்றாய் இருப்பதும், ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதும், ஒருவருக்கொருவர் ஒன்றாய் ஜெபிப்பதும், ஒன்றாய் பாடுவதும், ஒன்றாய் சிரிப்பதும், ஒன்றாய் அழுவதும் அவசியம். ஒன்றாய் சேர்ந்திருப்போம். (1 யோ. 1:7; 1:3)

1. **ஐக்கியத்தின் நோக்கம்.**
    1. ஆராதனை மற்றும் அப்பம் பிட்கும் சந்தோஷமான நேரங்களிலும் ஒருவரையொருவர் பலப்படுத்து ஐக்கியத்தின் நோக்கம் ஆகும். ஒன்றாய் உணவருந்தும் படி ஆண்கள் ஒன்று சேர்வதும், சாயங்கால வேளையில் பகிர்ந்து கொள்ளும் நேரத்தில் பெண்கள் ஒன்று சேரும் படியாகவும், வாலிபர்கள் விளையாட்டுகளில் ஒன்று சேரும்படியாகவும் அவர்களை கொண்டு வர வேண்டும் - இவையெல்லாம் கர்த்தருடைய வார்த்தையின் படியே அமைய வேண்டும். கிறிஸ்தவர்கள் பலப்படுத்தப்படுவதோடு வெளியேயுள்ள ஆட்களும் இதனால் கவரப்படுவார்கள்.
    2. வாழ்க்கையில் கடினமான வேளைகளில் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துவதும் ஐக்கியத்தின் நோக்கம் ஆகும். நாம் ஒருவருடைய இருதயம் வேதனையாய் இருக்கும் போது எதுவும் கூறக் கூடாது - அவர்களுடைய பாரத்தை எளிதாக்க நம்மால் கூடும்.
    3. எல்லாருடைய நன்மைக்காகவும் நம்முடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது ஐக்கியத்தின் நோக்கம் ஆகும். நாம் செய்த அதே தவறை மற்றவர் செய்யாதபடி நம்முடைய சாட்சி மற்றவரை காக்கும்.
    4. நம்முடைய ஜெபம் விசித்திரமாய் கேட்கப்பட்டதை மற்றவரோடு பகிர்ந்து கொள்வதே ஐக்கியத்தின் நோக்கம் ஆகும். சங். 9:15. அது நிச்சயமாய் மற்றவர்களும் ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்தும்.
    5. அழுகிறவர்களோடே அழுவதே ஐக்கியத்தின் நோக்கம் ஆகும். ரோமர் 12:15. கண்ணீர் விடுகிறவர்கள், துயரத்தில் உள்ளவர்கள், உபத்திரவப்படுகிறவர்களோடே அவர்களுடைய உபத்திரவத்தில் ஐக்கியம் கொள்ள வேண்டும்.
    6. பின் மாற்றத்திலுள்ளவர்களைக் கண்டித்து கர்த்தரின் பக்கமாய் அவர்களை திருத்த வேண்டும்.

2. **கிறிஸ்தவ ஐக்கியத்தின் பலன்கள்.**
    1. நாம் வெளிச்சத்தில் நடக்க கற்றுக் கொள்வோம் - 1 யோ. 1:7.
    2. நாம் மற்றவர்களோடு பாடுபட கற்றுக் கொள்வோம். - பிலி. 3:10
    3. நாம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய கற்றுக் கொள்வோம். - கொலோ. 4:7.
    4. ஒருவருக்கொருவர் தேற்ற கற்றுக் கொள்வோம். - 1 தெச. 4:18.
    5. நாம் ஒருவருக்கொருவர் ஜெபிக்க கற்றுக் கொள்வோம். - 1 தெச. 5:25.

6. நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க கற்றுக் கொள்வோம். - கலா. 6:2.
7. சந்தோஷத்தில் ஒருவரோடொருவர் களிகூரக் கற்றுக் கொள்வோம் - ரோமர் 12:15. சந்தோஷம் என்பது ஒருவரையொருவர் தொற்றிக் கொள்வது.
8. நாம் கர்த்தருக்குள் வளர்ந்து பிரகாசிப்போம் - 2 பேதுரு 3:18

எப்படி புத்தி சொல்வது

கர்த்தர் கிருபையாக பாவத்தின் தாக்குதலிலிருந்து நம்மை பரிசுத்தப்படுத்திக் கொள்ளும் வழியை நமக்கு அளித்திருக்கிறார். நாம் பாவத்தை அறிக்கை செய்யும்போது, 1 யோ. 1:9, நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். ஆனால் நம்முடைய பாவத்தை அறிக்கை செய்யாமல் கடினப்படுத்துவது ஆபத்தானதாகும். எபி. 3:13 கூறுகிறது, "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு, இன்று எனப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்". பாவத்திலிருந்து விலக புத்தி சொல்வது ஐக்கியத்தின் முக்கியமான காரியம் ஆகும்.

சகோதரர் ஒருவர் குறை உள்ளவராக தலைவர் கண்டால், அவரை அக்கரையோடு அணுகி, புத்தி சொல்வதின் மூலம் அவர் குறுகிபோகாதபடிக்கு, தலைவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

1. அவர் சாந்தமுள்ள ஆவியுடையவராய் இருக்க வேண்டும். - லூக். 9:54-56; 1 தெச. 2:11; மத். 12:20.
2. தாழ்மையாய் பேசக் கூடியவராய் இருக்க வேண்டும். - ரோமர் 12:10; எபே. 4:2.
3. கர்த்தருடைய வார்த்தையை உபயோகிக்க வேண்டும் - 2 தீமோத். 3:16 4-2; கொலோ. 3:15.
4. ஆவியானவரின் வழி நடத்துதலின் படி செயல்பட வேண்டும். - எபே.5:18,19.
5. வேதத்தின்படி தனிப்பட்ட முறையில் அவரை சரிபடுத்த வேண்டும். - மத். 18:15.

மூன்று வருஷ காலமாய் பவுல் இரவும் பகலும் இடைவிடாமல் கண்ணீரோடு புத்தி சொல்லி வந்தார். அப். 20:31.

கலந்துரையாடல் - ஒரு நபருக்கு கடுமையாக புத்தி சொல்வதின் மூலம் என்ன விளைவு ஏற்படும்? வெளிப்படையாக புத்தி சொல்வதின் மூலம் என்ன விளைவு ஏற்படும்? இதை நீங்கள் எப்படி தடுக்கக் கூடும்?

சபையிலுள்ள பாவத்தை எப்படி கையாள்வது

1. வேதாகமத்தின் படி. மத். 18:15-17.
    1. தவறு செய்பவரை தனியே சந்தித்து அவர் மனந்திரும்ப அவருக்கு புத்தி சொல்ல வேண்டும்.
    2. அவர் செவி கொடாமற்போனால், இரண்டு 3 சாட்சிகளை கூட்டிச் செல்ல வேண்டும்.
    3. தொடர்ந்து அவர் இருதயத்தைக் கடினப்படுத்துவாரானால் சபைக்கு அதை தெரியப்படுத்த வேண்டும்.
    4. தொடர்ந்து அவர் செவிகொடாமற் போனால் அவரை பாவமுள்ள மனிதராக கருத வேண்டும்.

2. ஒழுக்கத்தின் காரணமாக.
    1. தவறான போதனை. தீத்து. 1:13. சில நேரங்களில் தவறான போதனை விசுவாசிகளையும் வஞ்சிக்கும். இதிலிருந்து காத்துக் கொள்ள வேண்டும்.
    2. துணிகரமான பாவம். 1 தீமோத். 5:20
    3. ஒழுக்கக் கேடு. 1 கொரி. 5:1-5.

3. பாவம் செய்த சகோதரனை எப்படி சீர்படுத்துவது.
    1. தாழ்மையோடு - 1 கொரி. 10:12.
    2. நேர்மையோடு - மத். 7:3-5.
    3. அன்போடு - 1 கொரி. 13:4
    4. வேத வசனத்தின் மூலமாக.
    5. சாட்சி மற்றும் அனுபவத்தின் மூலமாக.

பின்மாற்றத்தில் உள்ளவர்களை கையாள்வது

அதிக பலமுள்ள கிறிஸ்தவர்கள் இன்று பின்மாற்றம் அடைந்திருப்பதை அநேக நேரங்களில் நாம் காண்கிறோம். 1 கொரி. 10:12 மற்றும் நீதி. 16:18ல் உள்ள எச்சரிக்கையை நாம் நினைவில் கொள்வோம். எந்த ஒரு பின்மாற்றக்காரரும் உடனடியாக பின்மாற்றம் அடைவதில்லை. அநேக காரியங்கள் அவர்கள் வாழ்க்கையில் மெதுவாக நுழைந்து அவர்களை பின்மாற்றம் அடையச் செய்கிறது.

1. பின்மாற்றத்திற்குரிய உண்மையான காரணங்கள்:
    1. ஜெபிக்கத் தவறுதல்.
    2. வேதம் வாசிக்கத் தவறுதல் - 2 தீமோத். 2:15.
    3. சபைக்கு வர தவறுதல் - எபி. 10:25.
    4. பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிய தவறுதல் - எபே. 4:30.
    5. கிறிஸ்துவிடம் அறிக்கையிட தவறுதல் - மத். 10:33.
    6. ஒளியில் நடக்க தவறுதல் - 1 யோ. 1:7.

2. பின்மாற்றத்தின் விளைவுகள்.
    1. வல்லமை, சமாதானம், சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியை இழத்தல்.
    2. அனுதின பாதையில் முறுமுறுப்பு மற்றும் இருள் சூழ்ந்திருத்தல்.
    3. பலனை இழந்து அந்த நபர் ''இழப்பின் வேதனையை'' அடைவார்.
    4. இது ஆத்தும இழப்பிற்கு நேராகவும் வழி நடத்தக் கூடும் என்று சிலர் போதிக்கின்றனர்.

3. திரும்புதலுக்கான கர்த்தருடைய அழைப்பு - ஏரே. 3:22; ஓசி. 14:4.

    உண்மையான கிறிஸ்தவன் பின்மாற்றத்தை வெறுக்கிறான் - சங். 101:3, ''தீதான காரியத்தை என் கண்முன் வைக்க மாட்டேன்.''
    நம்முடைய உண்மையான நோக்கம் இயேசுவையே நோக்கி இருப்பதாய் இருக்க வேண்டும். எபி. 12:2. பவுலின் நோக்கம் கிறிஸ்துவே. - பிலி. 3:4.

விவாகரத்து

நம்முடைய சபையிலும், ஐக்கியத்திலும் உள்ள குடும்பங்களில் பயமுறுத்துகிற கொடிய நோயான விவாகரத்தைக் குறித்து என்ன? உலகம் முழுவதிலும் குடும்ப வாழ்க்கையில் பிரிவினை என்பது மிகப் பெரிய பிரச்சனையாக கருதப்படுகிறது. சமுதாய அடிப்படையில் இது குடும்பங்களை சிறுமைப்படுத்துவதால் இது ஒரு சோகமயமானதாகும். நமது சபையில் கிறிஸ்தவ ஒற்றுமைக்கு அடையாளமாகவும் இதை பரிசுத்தம் என்று கர்த்தர் விரும்பினதாலும் கிறிஸ்தவ குடும்பங்களில் பிரிவினை ஏற்படுவது இரட்டிப்பு சோகத்தைத் தருவதாகும். திருமண உறவை சாத்தான் தாக்குவதால் இவ்வாறு ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து வேதனையை ஏற்படுகிறது: உடைந்த குடும்பங்கள், உடைந்த மற்றும் காயப்பட்ட இருதயங்கள், வீழ்ந்த குழந்தைகள், அநாதையான வாலிபர்கள், தனிமை மற்றும் கண்ணீர். வேதத்தின் அடிப்படையில் ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் பிரிவினை அனுமதிக்கப்படுகிறது. அது: வேசித்தனம். மத் 19:9. இதன் அர்த்தம்: தவறான, இழிவான பாலியல் உறவுகள், பழக்க வழக்கங்கள், திருமணத்திற்கு அப்பாற்பட்ட மூன்றாம் நபரோடு உறவு கொள்ளுதல். வித்தியாசமான சில விதி விலக்கு சம்பவங்களில் மட்டுமே இது அனுமதிக்கப்படுகிறதே ஒழிய வேதத்தில் இது கட்டளையாக கூறப்படவில்லை.

<u>நமது துணைவரிடம் இந்த மாறுபாடுகள் காணப்படும் போது நம்மால் சரி செய்யப்படக் கூடுமா? இங்கு சில ஆலோசனைகள்:</u>

1. நம் வாழ்வின் திருமண உடன்படிக்கை தெளிவாக போதிக்கிறது, ''மரணம் நம்மை பிரிக்கும் வரை.'' மத். 19:6. திருமணத்தில் இரண்டு தனி நபர்களை ஒரே மாமிசமாக மாற்றும் (நபராக) அதிசயத்தை தேவன் செய்கிறார். இதில் ஒருவர் இறந்து போகும் போது மாத்திரமே இது உடைபடுவதை தேவன் அனுமதிக்கிறார்.

2. குழந்தைகள் இருப்பார்களேயானால் அவர்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அவர்கள் நலனை அதிகம் கருத்தில் கொள்ள வேண்டும்.

3. பிரிவினை என்பது மிகப் பெரிய தோல்வியை வெளிப்படையாக அனுமதிப்பது என்பதைக் குறிப்பிட்டுக் காண்பிக்க வேண்டும்.

4. ஒருவருக்கொருவர் கர்த்தருக்குள் தம்மை சரிபடுத்திக் கொள்ள வேண்டும் என்று தம்மை மன்றாட வேண்டும். பாவத்தை அறிக்கையிட்டு, மனந்திரும்பி ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதின் மூலமாக திருமணத்தைப் புதுப்பிக்க முடியும்.

வாழ்வில் மனந்திரும்புதல் இடம் பெறும் போது, கணவன், மனைவி இருவரும் தங்கள் வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்வது எவ்வாறு எனில், "வாழ்விலும், தாழ்விலும், மரணம் நம்மை பிரிக்கும் வரை." ஒருவருக்கொருவர் இதைத் தொடர்ந்து செய்யுமாறு நாம் ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் இதை அன்போடு கையாள்வது மிக முக்கியம். ஒருவருக்கொருவர் பரிசுத்தமான அன்பை தருமாறு தொடர்ந்து கர்த்தரிடம் கேட்டு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தம்பதிகளுக்கான ஆலோசனை

நிச்சயதார்த்தம் என்பது இந்த இருவர் சீக்கிரத்தில் திருமணம் செய்து கொள்ளப் போகின்றனர் என்பதை சமூகத்தினருக்கு அறிவிக்கப்படும் அறிவிப்பாகும். ஒரு வருடத்திற்குள்ளாக இது நடைபெறும் என்பதே. தம்பதிகள் தங்களை தயார்படுத்திக் கொள்ளவும். உண்மையிலேயே தாங்கள் ஒருவருக்கொருவர் சரியானவர்களா என்பதைப் புரிந்து உணர்ந்து கொள்வதற்கு இது ஏற்ற நேரமாகும். அவர்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்பதால் ஒருவருக்கொருவர் அதிக உரிமை எடுத்துக் கொள்ளக் கூடாது. எதிர்காலத்தின் மகிழ்ச்சி முக்கியம். ஆதலால் கற்புத் தன்மையை இழக்கக் கூடாது. திருமண பாலியல் சந்தோஷங்கள் திருமணத்திற்கு பின்பு மட்டுமே என்று ஒதுக்கி வைக்க வேண்டும். இல்லையெனில் இத்தகைய சந்தோஷம் வெறுப்புக்கு நேராய்த் திரும்பும் மற்றும் ஒருவருக்கொருவர் இடையில் உள்ள மதிப்பை முழுவதும் இழக்கச் செய்து விடும். (2 சாமு. 13:15 - பார்க்கவும்)

கிறிஸ்தவக் குடும்பத்தை நிறுவுவதற்கு இந்த தம்பதிகளுக்கு கிறிஸ்தவ தலைவர் போதிப்பதற்கு இதுவே சிறந்த நேரமாகும். எபே. 5 மற்றும் தீத்து 2யை குறிப்பாக எடுத்துக் கொள்ளவும். எல்லா பிரச்சனை மற்றும் கருத்து வேறுபாடுகளிலும், தவறாக புரிந்து கொள்ளும் போதும் இருவரும் சேர்ந்து ஜெபிக்க கற்றுத் தரவும். வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் வார்த்தையிலும் செய்கையிலும் அன்பை வெளிப்படுத்த கற்றுக் கொடுக்கவும்.

திருமணம் என்பது மிகப் பழமையான மனித நிருமம் ஆகும். இரட்சிப்புக்கு அடுத்தபடியாக துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது வாலிபர் எடுக்கும் மிகப் பெரிய தீர்மானம் ஆகும். இத்தகைய கடினமான வேளையின் பொழுது ஆவிக்குரிய தலைவர்கள் பலமான ஆலோசனையும் அரவணைப்பும் தர வேண்டும்.

<u>சந்தோஷமான திருமணத்திற்கான விதிகள்:</u>

1. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களை மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும். - 2 கொரி. 6:14-17.
2. போதுமான ஜெபத்தோடு (உபவாசத்தோடு) கர்த்தருடைய சித்தத்தை நாட வேண்டும்.
3. மற்றவருடைய நல்ல மற்றும் தீய குணங்களை நன்கு அறிந்து கொள்ளும் வரை திருமணத்திற்கு காத்திருக்க வேண்டும். அவசரத் திருமணம் ஆபத்தானது.
4. அன்பிற்காக காத்திருங்கள். இனக் கவர்ச்சி போதுமானதல்ல. திருமணம் என்பது வாழ்க்கை ஆதலால் சந்தோஷமான குடும்பம் உண்டாக்க கூடிய கர்த்தருடைய அன்பு உண்டாக நேரம் எடுக்கும்.
5. திருமணத்திற்கென்று போதுமான வயது வரவும் முதிர்ச்சி உண்டாகவும் நீங்கள் காத்திருக்க வேண்டும். இதில் அதிக பொறுப்புகள் இருப்பதால் திருமணம் என்பது வயது வந்தவர்களுக்கானது, குழந்தைகளுக்கானதல்ல.

6. ஒழுக்கத்திற்கான பிரச்சினைகள் சரி செய்யப்படும் வரை காத்திருங்கள். ஒரு மனிதனை மாற்றுவதற்கென்று திருமணம் செய்யாதிருங்கள்.
7. பெண்ணின் பெற்றோரோடு சபை குருவானவரும் ஒப்புதல் தர காத்திருங்கள். இது மிக முக்கியமானது.
8. பொருளாதார நிலை தன்மையை அளவிடும் வரை காத்திருங்கள். சொத்துக்காக அல்ல நம் பாதுகாப்புக்காகவே.
9. வெளிப்படையான கிறிஸ்தவ திருமணத்தையே வற்புறுத்துங்கள். ஓடிப் போவதையோ அல்லது இரகசிய திருமணத்தையோ ஏற்றுக் கொள்ளாதீர்கள். திருமணம் என்பது மிகவும் பரிசுத்தமானது.

.

ஆலோசனை

கடந்த கால போராட்டத்தை சரி செய்யப்படுவதின் மூலம் நிகழ்காலத்தை எப்படி கையாள்வது என்று மக்களுக்கு உதவி செய்வதே ஆலோசனை ஆகும். நம் மனதை சாத்தான் பலமாக கட்டி இருப்பதினாலே நம் வாழ்க்கையின் பல பகுதிகளில் அநேக போராட்டங்கள் ஏற்படுகிறது. அவர்கள் விடுதலையாக்கப்படாததால் அவர்களால் வளரவும், முதிர்ச்சியடையவும் முடிவதில்லை. கிறிஸ்தவ ஆலோசனையின் நோக்கம் - ஆலோசனை தருவதற்கென்றே நியமிக்கப்பட்டவர், போதகர் - அல்லது நண்பர் - அவர்களை முதிர்ச்சிக்குள்ளும் கனி தருவதற்கென்று வழி நடத்தவும் கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய அனுபவம் அந்த நபரை விடுதலையாக்க உதவும்.

இதற்கிடையே உங்களுடைய கிறிஸ்தவ உறவுகளில் சாதாரண அல்லது அசாதாரணமான ஆலோசனையை நீங்கள் பெறும்படியாக 5 நடைமுறை குறிப்புகளை நான் தரும்படி எனக்கு அனுமதி அளியுங்கள்.

1. **பிரச்சனையின் வேரை அறிந்து கொள்ள மக்களுக்கு உதவுங்கள்**

   சங். 1:1-3, முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவனை கனி தரும் மரத்திற்கு உவமை படுத்துகிறது. மணலின் செழிப்பு மற்றும் பரவி இருக்கும் வேரின் ஆரோக்கியம் இதன் பலனால் நிலத்திற்கு மேலே உள்ள கிளைகளில் கனிகள் காணப்படுகிறது. சிறப்பாக விசுவாசிகள் கிறிஸ்துவின் அடையாளம் என்ற செழிப்பான மணலில் நடப்பட்டு அதின் வேர்கள் முதிர்ச்சிக்கு நேராய் பரவி அதினால் அதில் உற்பத்தியாக்கப்பட்ட நடைமுறையில் செழிப்புள்ளவர்களாய் இருக்கின்றனர். மக்கள் பொதுவாக தங்கள் அனுதின வாழ்க்கையில் தவறு நடக்கும்பொழுது ஆலோசனையை நாடுகின்றனர். கனி தருவதற்கு பதிலாக அவர்களுடைய வாழ்க்கை வெறுமையாய் காணப்படுகிறது. மரத்தைப் போலவே, அநேக நேரங்களில் ஆழமான பிரச்சினைக்கு அடையாளம் மேலாக சமபூமியில் காணப்படும் பிரச்சினை மட்டும் காரணம் அல்ல. அதன் கிளைகள் வறண்டு வெறுமையாய் காணப்படுகிறது. ஏனென்றால் வேரில் ஏதோ தவறு நேர்ந்ததினாலும் மற்றும் மணலுக்குப் போதுமான சத்து கிடைக்காததுமே ஆகும்.

   ஆலோசனை பெறுபவருக்கு (ஆலோசனை அல்லது அறிவுரையைப் பெறும் நபர்) அவருடைய கனியற்ற நடத்தையின் வேரைக் கண்டுபிடிக்க உதவி செய்வதே ஆலோசனையின் முதல் குறிக்கோளாகும். இவ்வாறு செய்யப்படும்போது, அவருடைய எந்த தேவைகள் சந்திக்கப்படவில்லை மற்றும் அத்தேவை சந்திக்கப்பட அவர் எவ்வாறு முயற்சிக்க வேண்டுமென்றும் உணர்ந்து கொள்வதற்கு உதவியாய் இருக்கும். அவருடைய சந்திக்கப்படாத தேவைகளுக்கான அவருடைய கருத்துக்களே அவரைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாய் இருக்கும். உதாரணமாக அவர் ''நான் எங்கு தேடியும் என்னை ஒருவரும் நேசிக்கவில்லை என்பதை உணருகிறேன்'', என்று கூறுவாராகில் அவருடையத் தேவை, அவரை ஏற்றுக் கொள்வதும், அவரை நேசிப்பதற்கென்று ஒருவர் இருப்பதும் ஆகும். அவர் ''நான் நல்லவர் இல்லை, நான் எப்போதும் இழப்பவன் '' என்று கூறுவாராகில் அவருக்கென்று ஒரு அடையாளமும், அவர் எதிர்பார்க்கும் மதிப்பும் அவருடைய தேவை ஆகும். அவர், ''என் வாழ்க்கை முடிந்து போனது, நான் சோர்ந்து போயிருக்கிறேன்'' என்பாராகில் அவருக்குப் பாதுகாப்பும் நம்பிக்கையுமே தேவை ஆகும். அவர் ''என்னால் எதையும் சரியாக செய்ய முடியாது'' என்று கூறுவாராகில், அவர் தன்னை தகுதியற்றவராக உணருகிறார். அவர் ''நான் செய்வதை என்னால் நிறுத்த முடியாது'' என்று கூறுவாராகில், அவருடைய தேவை அதிலிருந்து விடுதலையாகும்.

   அவருடைய பிரச்சனையின் வேரை வெளிப்படுத்தும் விதத்தில், அநேக நெருக்கடியான கேள்விகளின் மூலமாக நீங்கள் அவரை வழி நடத்துவது அவசியமாகும். இதிலிருந்து எப்படி வெளி வருவதென்பது அவருக்கு தெரியாததாகையால் இதற்குத் தீர்வு என்ன என்பதை அவர்களிடம் நேரடியாகக் கேட்கக் கூடாது. ஆனால் அநேக கேள்விகளுக்கான பதிலை நீங்கள் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுதே உங்கள் மனதில் குறித்துக் கொள்வது அவசியம்.

உணர்ச்சிப் பூர்வமான கோணத்தில், அவர்கள் எதிர்மறையான உணர்வில் இருப்பதால் இதை எங்கிருந்து துவங்கி உங்கள் கேள்விக்கு நேராய் கொண்டு வருவதென்பதை அறிந்து கொள்ள நீங்கள் முயற்சிப்பது அவசியம்: எப்போதிருந்து அவர் இவ்வாறு உணரத் துவங்கினார்? இந்த அனுபவத்திற்குக் கொண்டு வந்த நிகழ்ச்சிகள் என்ன? இந்த நிகழ்ச்சியினால் எப்படிப்பட்ட காரியம் உங்கள் வாழ்க்கையில் இடைபட்டது? இவருடைய உணர்வுகள் வெளிப்படுத்துகிற நிறைவேற்றப்படாத ''இலட்சியங்கள்'' என்ன?

2. **நேர்மையான உணர்வை உற்சாகப்படுத்துங்கள்**

பொதுவாக ஆலோசனை பெறுபவர் தனக்கு என்ன நடந்தது என்பதை பகிர்ந்து கொள்ள விரும்புவார். ஆனால் அந்த நிகழ்ச்சியில் தன்னுடைய குறைவு அல்லது தோல்வியை பகிர்ந்து கொள்வதை அதிகம் விரும்ப மாட்டார். மேலும் அதைக் குறித்து தான் உணர்வடைவதையும் விரும்ப மாட்டார். அவர்களை நேர்மையான உணர்வுக்குள் கொண்டு வராதவரை அவர்களுடைய உள்ளான போராட்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும், தீர்வு காண்பதற்கும் உரிய வாய்ப்புகள் குறைவு. கர்த்தருக்குள் அவர்களை நீங்கள் சரி செய்யவும், உண்மையான உணர்வுக்குள் அவர்களைக் கொண்டு வரவும் முடியாது.

கிறிஸ்தவன் தன்னை நேர்மையாக பகிர்ந்து கொள்ளாமல் தன்னுடைய உணர்ச்சிகளை இருளுக்குள்ளாக வைத்துக் கொண்டால் இருளின் அதிபதியாகிய சாத்தானின் பாதத்தின் கீழ் தன்னை ஒப்படைக்கிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தர் எல்லாக் காரியத்தையும் ஒளியில் செய்தார். (1 யோ. 1:5-7) ஒருவன் தனக்குரிய போராட்டத்தின் தீர்வை எப்படி உணருகிறான் என்பதை நேர்மையாக கூறும்போது தன் ஆத்துமாவை கிறிஸ்துவின் ஒளிக்கு நேராய் கொண்டு வருகிறான். சாத்தானும் அவன் தூதர்களும் கரப்பான் பூச்சியைப் போன்றவர்கள். அவர்களுடைய ஆளுகைக்குள் வெளிச்சம் வரும்போது இருளை நோக்கி ஓடுகிறார்கள். மக்கள் தங்கள் கடந்த காலத்தின் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, நிகழ்காலத்தில் விடுதலையின் வாழ்வை வாழும் போது அவர்கள் வெளிச்சத்தில் நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள். தங்கள் உணர்வில் நேர்மையைக் காத்துக் கொள்ளும் போது சாத்தான் அவர்களை விட்டு ஓடி விடுவான்.

3. **சத்தியத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்**

பொதுவாக உங்கள் உடன் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையை கடினமாக உணர்ந்து தங்களுக்கு ஏதோ தவறு நேர்ந்தது என்று எண்ணி உங்களிடம் ஆலோசனைக்காக வருவார்கள். அவர்களுடைய உணர்வின்படி கர்த்தர் அவர்களை கைவிட்டார்; கர்த்தரால் அவர்களை நேசிக்க முடியாது என்றும் உணர்வார்கள்.

கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய அடையாளத்தின் சத்தியத்தையும், அவர்களுடைய தவறான நம்பிக்கையை சரி செய்ய உதவும் சத்தியத்தை பகிர்ந்து கொள்வதும் எத்தனை சிலாக்கியம். தங்களுடைய சுய புலனறிவினால் தனித்து விடப்பட்டவர்களாய் உணரும் ஒருவரோடு நீங்கள் பேசும்போது நாம் கிறிஸ்துவுக்குள் தான் இருக்கிறோம் என்கிற வேத வார்த்தைகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். இந்த வேத வார்த்தைகளை சத்தமாக வாசிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். இதனால் இந்த மக்களிடம் மிகப் பெரிய மாற்றத்தை நீங்கள் காணலாம் - அவ நமபிக்கையிலிருந்து ஆனந்த களிப்பிற்கு மாறி இருப்பர். ஏன்? ஏனென்றால் அத்தகைய மக்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்கள் என்பதை நாம் அன்போடு பகிர்ந்து கொள்ளும்போது அவர்களுடைய தவறான நம்பிக்கை முறையில், அவர்களுடைய வாழ்க்கையின் அடிப்படை வேரில் கர்த்தருடைய வார்த்தை என்னும் சத்தியம் மருந்திடுவதாய் இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய அடையாளத்தின் சத்தியத்தை உணர்ந்து கொள்ள துவங்கும் போது மட்டுமே அவர்களுடைய ஆவிக்குரிய, உணர்வுப் பூர்வமான, ஒழுக்கக் கேடான, உறவுகள் போன்ற பிரச்சனையின் வேரை கண்டு தீர்வு காண முடியும்.

4. **ஏற்றுக் கொள்வதற்கான அழைப்பு**

ஆலோசனை பெறும் நபர் அந்த ஆலோசனையை தெரிந்தெடுத்து ஏற்றுக் கொள்ளும்படி நாம் சத்தியத்தை அன்போடும் ஜெபத்தோடும் பகிர்ந்து கொள்வதே ஆலோசனை தருபவராகிய நம்முடைய பங்காகும். ஆனால் நீங்கள் அவர்களுக்கானதைத் தெரிந்தெடுக்க முடியாது. கிறிஸ்தவ ஆலோசனை என்பது ஆலோசனை பெறுபவர் விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்வதை சார்ந்து இருக்கிறது. தன்னுடைய குணமாக்குதலின் தொடுதலை நாடுவோரைக் குறித்து நமது ஆண்டவர் ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.'' (மாற்கு 5:4); ''நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது.'' (மத்தேயு 8:13) நீ பகிர்ந்து கொள்வதை அவர்கள் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுக்கு உதவி செய்யும் படியாக உன்னால் வேறொன்றும் செய்ய முடியாது. நம்முடைய ஆலோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி நாம் முக்கியமாக விரும்ப வேண்டியது எது எனில் மனந்திரும்புவது, இதன் அர்த்தம் என்னவெனில் தங்கள் மனதை மாற்றி கர்த்தருக்கு நேராய் திரும்புவதாகும். ஆலோசனை பெறுபவர் கர்த்தருக்கு நேராகவும், அவருடைய நம்பிக்கைக்கு நேராகவும் தன் மனதைத் திருப்புவது அவசியம். தன்னுடைய மனதையும் தன்னுடைய நம்பிக்கையையும் அவன் மாற்றிக் கொண்ட பின்பே அவனுடைய நடத்தையில் மாற்றம் ஏற்படும்.

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை

கிறிஸ்தவனால் மிகச் சிறந்த வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும். ஏனென்றால் அவனுடைய நேர்மறையான நம்பிக்கை வல்லமையுடையதாய் இருக்கிறது. நம்பிக்கை அவன் சிந்தையை நிறைத்திருப்பதால், அது அவனை ஒரு எல்லைக்குட்படுத்த முடியாது. விசுவாசம் உண்மையில் அவன் மனதின் எல்லையை மாற்றி கண்ணுக்குத் தெரியாத உண்மையை அவனுக்குள் நியமிக்கிறது. எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தை (வேதாகமம்) மற்றும் ஜீவிக்கிறதுமான (கிறிஸ்து) வைகள் ஒரு விசுவாசியின் நம்பிக்கையை செல்லுபடியாக்குகிறது. உனக்குள் நேர்மறையான நம்பிக்கை ஏற்படும்போது இவ்வுலகத்தின் கர்த்தருடைய எல்லையில்லா காரியமான கிறிஸ்தவ நம்பிக்கைக்குள்ளும், எல்லையில்லா ஆவிக்குரிய உயரத்திற்குள்ளும் கொண்டு செல்கிறது.

''முடியும்'' என்பதின் வழியாக வெற்றியும், ''முடியாது'' என்பதின் வழியாக தீமையும் வரும் என்று சிலர் கூறுகிறார்கள். விசுவாசிப்பதினால் நீ வெற்றி பெறக் கூடிய கிறிஸ்தவ வளர்ச்சிக்கென்றும், முதிர்ச்சிக்கென்றும் எந்த விசுவாச முயற்சியும் எடுக்காவிட்டால் உன்னால் வெற்றி பெற முடியாது. உலகம், மாமிசம், சத்துருவினால் ஏற்படும் சோதனைகளை நீ எதிர்க்க முடியும் என்பதையும், கிறிஸ்தவனாய் உன் வளர்ச்சியில் முதிர்ச்சி அடைய முடியும் என்பதையும் ஆவியிலும் விசுவாசத்திலும் நீ நடக்க முடியும் என்பதையும் நீ ஏன் விசுவாசிக்க மறுக்கிறாய்? சர்வ வல்லமையுள்ள தேவன் மேலுள்ள உன் விசுவாசத்தின் அறிவை விரிவடையச் செய்வதற்காக கர்த்தருடைய வார்த்தையில் இருந்து தெரிந்து கொண்ட வெற்றிக்கான 20 ''முடியும்'' என்பன கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பரலோகத்தில் வாசஞ்செய்யும் கிறிஸ்துவோடு உங்களால் உட்கார முடியாது என்ற உங்களுடைய கற்பனையிலிருந்து உங்கள் விசுவாசத்தைக் கட்டி உயர்த்தும்படியாக இந்த சத்தியம் உங்களுக்கு அளிக்கப்படுகிறது.

<u>வெற்றிக்கான இருபது முடியும் என்பவைகள்:</u>

1. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று வேதம் கூறும்போது, என்னால் முடியாது என்று நான் ஏன் கூற வேண்டும். (பிலி. 4:13)

2. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவுகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்று அறிந்திருந்தும், நான் ஏன் குறைவுபடுகிறேன்? (பிலி. 4:19)

3. தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே எனக்கு கொடுத்திருக்கிறபடியால், நான் ஏன் பயப்படுகிறேன்? (2 தீமோத். 1:7)

4. கர்த்தர் எனக்கென்று அளவற்ற விசுவாசத்தை அருளியிருக்கும் போது, என் அழைப்பை அறிந்து அதை நிறைவு செய்யும்படி அளிக்கப்பட்ட விசுவாசத்தில் நான் ஏன் குறைவு படுகிறேன்? (ரோமர் 12:3)

5. கர்த்தர் என் வாழ்க்கையின் பெலன் மற்றும் தேவனை அறிந்திருக்கிறவர்கள் திடன் கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள் என்று வேதம் கூறுகிறபடி நான் கர்த்தரை அறிந்திருந்தும், ஏன் பெலவீனனாய் இருக்கிறேன்? (சங். 27:1; தானி. 11:32)

6. உலகத்தில் இருக்கிறவனைக் காட்டிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர் என்று இருக்கும் போது, என் வாழ்க்கையில் சாத்தானுடைய ஆளுகையை ஏன் அதிகமாய் அனுமதிக்கிறேன்? (1 யோ. 4:4)

7. கர்த்தர் எப்போதும் என்னை வெற்றிக்கு வழி நடத்துகிறார் என்று வேதம் கூறும் போது, நான் ஏன் தோல்வியை ஏற்றுக் கொள்கிறேன்? (2 கொரி. 2:14)

8. கர்த்தருக்குள் கிறிஸ்துவே எனக்கு ஞானமாய் மாறினார் என்றும், அவரிடத்தில் கேட்கும் போது எனக்கு பரிபூரணமான ஞானத்தைக் கொடுக்கிறார் என்று எண்ணும் போது, நான் ஏன் ஞானத்தில் குறைவுபடுகிறேன்? (1 கொரி. 1:31; யாக். 1:5)

9. கர்த்தருடைய அன்பின் இரக்கத்தையும், மனதுருக்கத்தையும், அவருடைய உண்மையையும், நம்பிக்கையையும் என் மனதிலே வைத்திருக்கும் போது, நான் ஏன் சோர்வடைகிறேன்? (புல. 3:21-23)

10. கிறிஸ்து என்னை விசாரிக்கிறபடியால் அவர் மேல் என் கவலைகளையெல்லாம் வைத்து விடும் போது, நான் ஏன் கவலைப்பட்டு கலங்குகிறேன்? (1 பேதுரு 5:7)

11. கிறிஸ்துவின் ஆவியினாலே நான் விடுதலையாக்கப்பட்டேன் என்று அறிந்தும், நான் ஏன் எப்போதும் கட்டுகளிலிருக்கிறேன்? (கலா. 5:1)

12. கிறிஸ்துவுக்குள் இருக்கும் பொழுது எனக்கு ஆக்கினை தீர்ப்பில்லை என்று வேதம் கூறும் போது, நான் ஏன் ஆக்கினை தீர்ப்படைவது போல் உணருகிறேன்? (ரோ. 8:1)

13. அவர் எப்போதும் என்னோடு இருக்கிறேன் என்றும், என்னை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை என்று இயேசு கூறும் போது, நான் ஏன் தனிமையை உணருகிறேன்? (மத். 28:20; எபி. 13:5)

14. கிறிஸ்து எனக்காக சாபமாகி அவருடைய ஆவியை நான் பெற்றுக் கொண்டதால் நான் சாபத்திற்கு நீங்கலாகினேன் என்று வேதம் கூறும் போது, நான் ஏன் சபிக்கப்பட்டவனாகவும், அதிர்ஷ்டம் இல்லாதவனாகவும் என்னை உணருகிறேன். (கலா. 3:13,14)

15. பவுலைப் போல எல்லா சூழ்நிலையிலும் மனரம்மியமாய் இருக்க கற்றுக் கொண்டிருந்தும், நான் ஏன் அதிருப்தி அடைகிறேன்? (பிலி. 4:11)

16. கிறிஸ்து எனக்காக பாவமாகி, அவருக்குள் தேவனுடைய நீதியை நான் பெற்றிருக்கும் போது, நான் ஏன் தகுதியற்றவனாக உணருகிறேன்? (2 கொரி. 5:21)

17. தேவன் என்னுடைய பட்சத்தில் இருக்கும் போது, என்னை ஒருவரும் எதிர்க்க முடியாது என்பதை அறிந்தும், நான் ஏன் மற்றவர்கள் என்னை எதிர்க்கிறார்கள் என்ற எண்ணம் கொள்கிறேன்? (ரோ. 8:31)

18. தேவன் சமாதானத்திற்கு தேவன் என்றும், எனக்குள் வாசம் பண்ணும் அவருடைய ஆவியின் மூலமாக எனக்கு அறிவைத் தருகிறார் என்று கூறும் போது நான் ஏன் குழப்பம் அடைகிறேன்? (1 கொரி. 14:33; 2:12)

19. கிறிஸ்துவுக்குள் நான் முற்றும் ஜெயங் கொள்ளுகிறவனாய் இருக்கும் போது நான் ஏன் தோல்வியாய் உணருகிறேன்? (ரோ. 8:37)

20. உலகத்தையும் அதிலுள்ள உபத்திரவங்களையும் இயேசு ஜெயித்தார் என்பதால் நான் திடன் கொண்டு இருக்கும் போது, வாழ்க்கையின் அழுத்தங்கள் என்னில் ஏன் பாதிப்பை உண்டாக்குகிறது? (யோ. 16:33).

நீ என்ன விசுவாசிக்கிறாயோ அதற்கு மேல் உன்னால் வாழ முடியாது!!!

தனிப்பட்ட மதிப்பீட்டை சரிபார்த்துக் கொள்ளுதல்:

	குறைவு	அதிகம்
1. நான் எப்படி வெற்றி பெற்றவன் ஆவேன்? நான் அதிக வெற்றி பெற்றவனாக முடியும் இது இருந்தால்	1 2 3 4 5	
2. நான் எப்படி குறிப்பிடத்தக்கவன் ஆவேன்? நான் அதிக குறிப்பிடத்தக்கவனாக முடியும் இது இருந்தால்	1 2 3 4 5	

3. நான் எப்படி நிறைவு பெற்றவன் ஆவேன்?
நான் அதிக நிறைவு பெற்றவனாக முடியும் இது இருந்தால் 1 2 3 4 5

4. நான் எப்படி திருப்தி உள்ளவன் ஆவேன்?
நான் அதிக திருப்தி உள்ளவன் ஆவேன் இது இருந்தால் 1 2 3 4 5

5. நான் எப்படி சந்தோஷம் உள்ளவன் ஆவேன்?
நான் அதிக சந்தோஷம் உள்ளவன் ஆவேன் இது இருந்தால் 1 2 3 4 5

6. நான் எவ்வளவு வேடிக்கை உடையவனாய் இருக்கிறேன்?
நான் அதிகம் வேடிக்கை உடையவனாய் இருக்க முடியும்
இது இருந்தால் 1 2 3 4 5

7. நான் எப்படி பாதுகாப்பாய் இருக்க முடியும்?
நான் அதிக பாதுகாப்பாய் இருக்க முடியும் இது இருந்தால் 1 2 3 4 5

8. நான் எப்படி சமாதானம் உடையவனாய் இருப்பேன்?
நான் அதிக சமாதானம் உடையவனாய் இருப்பேன்
இது இருந்தால் 1 2 3 4 5

தற்போதைய உங்கள் நம்பிக்கையின் படி ''இது இருந்தால் ....'' நான் அதிக வெற்றி அடைந்தவனாய் இருப்பேன், ''இது இருந்தால் .... நான் அதிக குறிப்பிடத்தக்கவன் ஆவேன். முதலியவற்றிற்கு நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதை பதிலாக அளிக்க முடியும். உங்களுடைய அடிப்படை மனநிலையின்படி தேவைகள் (உணவு, இருப்பிடம், பாதுகாப்பு முதலியன) சந்திக்கப்பட்டால் உங்கள் வாழ்க்கையில் உங்கள் நோக்கமாகிய வெற்றி, நிறைவு, திருப்தி, சந்தோஷம், வேடிக்கை, பாதுகாப்பு மற்றும் சமாதானம் ஆகியவை கிடைக்கும் என்று நீங்கள் நம்பலாம். கர்த்தர் குறிப்பிட்டபடி விசுவாச வாழ்க்கை வாழாவிட்டால் நீங்கள் நம்புகிற இந்த எட்டு மதிப்பும் நீங்கள் எதிர்பார்க்கிற அளவு உங்களுக்கு கிடைக்காது.

விசுவாசத்தில் வாழ்தல்

உங்கள் சொந்த திட்டத்தில் வெற்றியடைய உங்கள் சுய மதிப்பை அடிப்படையாக கொண்டு இருப்பீர்களானால் உங்கள் வாழ்க்கை ஒரு நீண்ட, மேலே ஏறி கீழே இறங்கும் இராட்டின பயணத்தைப் போல் இருக்கும். கர்த்தருடைய வார்த்தையாகிய சத்தியத்தின்படி விசுவாசத்தில் நடக்கும் வழி ஒன்றே இப்படிப்பட்ட இராட்டின பயணத்திலிருந்து இறங்கி வெளியே வர முடியும்.

சரியான வழி நடத்துதல் சரியான நடக்கைக்கு கொண்டு செல்லும்
சாத்தான் உன்னை தொடர்ந்து ஆவிக்குரிய இருளின் சங்கிலியில் கட்டுவதற்கும் அல்லது உன் வாழ்க்கையில் உன் நம்பிக்கை முறையில் உணர்வுபூர்வமான குழப்பத்தை உண்டுபண்ணுவதுமே அவனுடைய அடுத்த சிறந்த காரியமாக கருதுகிறான். நீ கர்த்தருடைய பிள்ளையாய் மாறும் போது அவன் நித்தியத்தில் உன்னை இழக்கிறான். ஆனால் ஒரு பகுதி சத்தியத்தைக் கொண்டு உன் விசுவாசத்தை பலவீனப்படுத்தி, உன் மனதைக் குழப்பி விட அவனால் கூடும். ஏனென்றால் கிறிஸ்தவனாகிய உன் வளர்ச்சியை தடைபடுத்தி, கர்த்தருக்கென்று வல்லமையாய் உன்னால் செயல்பட முடியாதபடி இதன் மூலம் அவனால் செய்யக் கூடும்.

நாம் வெற்றி கரமான, நிறைவான, சந்தோஷமானவராகவே இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரென்று நமக்குத் தெரியும். இத்தகைய வெற்றி நிறைவு, திருப்தி, சந்தோஷம், வேடிக்கை, பாதுகாப்பு மற்றும் சமாதானம் இவைகளைக் குறித்த உன்னுடைய நம்பிக்கையில் ஆவிக்குரிய முதிர்ச்சி அடைந்து வேத வார்த்தையில் நங்கூரமிட்டிருக்க வேண்டும். இந்த பாட திட்டத்தில் இந்த நம்பிக்கையின் பகுதிகள் கர்த்தருடைய வார்த்தையில் அடித்தளமிட்டிருப்பதை புதுப்பிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மேலே நீங்கள் எழுதிய தனிப்பட்ட மதிப்பீட்டை சரிபார்த்துக் கொள்ளுதலில் உள்ள எட்டு குறிப்புகளை பின்வரும் எட்டு விதமான வாக்கியங்களோடு உவமைபடுத்திப் பார்ப்போம். இந்த குறிப்புகள் உங்களுடைய சரியான நடையை மையப்படுத்தி சில மாறுதல்கள் ஏற்படுத்த உங்களுக்கு உதவியாயிருக்கும்.

1. வெற்றி, மையக் கருத்து: குறிக்கோள்கள்

சில வருடங்களுக்கு முன்பாக ஒரு சனிக் கிழமை ஆலோசனைக்கென்று ஒரு வாலிபப் பெண் என்னிடம் வந்தாள். திருமதி. A. ஒரு கிறிஸ்தவர். ஆனால் அவருடைய வாழ்க்கை குழம்பிப் போய் இருந்தது. அவள் சாத்தானின் வார்த்தைக்கு செவி கொடுத்து அநேகப் பிரச்சினையில் பீடிக்கப்பட்டுப் போய் இருந்தாள். திருமதி. A. என்னிடம் 3 யோவான் 2ன் முதல் பாகத்தை தன்னுடைய தனிப்பட்ட வாக்குதத்தமாக கூறினாள். ''பிரியமானவனே, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.'' ''கர்த்தர் எனக்கு செழிப்பு, வெற்றி, ஆரோக்கியம் முதலியவற்றை கொடுப்பேன் என்று வாக்குபண்ணி இருந்தார். ஏன் என் வாழ்க்கை இப்படி சீர்கேடு அடைந்திருக்கிறது?'' என்று அவள் என்னிடம் குற்றம் சாட்டினாள். நான் அவளிடம் ''அந்த வசனத்தில் இன்னும் சில காரியம் உண்டு, அவற்றை வாசித்து முடி'' என்று கூறினேன். அவள் ''உன் ஆத்துமா வாழ்கிறது போல'' என்று முடித்தாள். நான் அவளிடம் குறிப்பாக ''உன் ஆத்துமா எப்படி இருக்கிறது?'' என்று கேட்டேன். இதன் பிறகு திருமதி. A. தன்னுடைய சோகக் கதையை என்னிடம் கூறினாள். அவளுடைய இழிவான பாலியல் உறவின் விளைவாக 3 முறை கருக்கலைப்பு செய்து கொண்டதாகவும், தற்போது அவள் திருமண உறவுக்குப் புறம்பே உள்ள மற்றொரு மனிதனுடன் வாழ்வதாகக் கூறினாள். திருமதி A. வாக்குதத்தத்தை தவறாக எடுத்துக் கொண்டதின் விளைவாக அவளுடைய வாழ்க்கை எல்லைக்கு வெளியே உள்ளது. தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள்களில் அவள் தவறான நம்பிக்கை உடையவளாய் இருந்ததால் அவளுடைய வாழ்க்கையின் வெற்றியில் குறைவுள்ளவளாய் இருந்தாள்.

வெற்றி என்பது குறிக்கோள்களுடன் நேரடித் தொடர்புடையது. வெற்றியை அடைவதில் உங்களை நீங்களே குறைவுபடுத்தி இருந்தால் உங்கள் வாழ்க்கையின் குறிக்கோளை நீங்கள் அடைவது கடினமாய் இருக்கும். உங்களுடைய குறிக்கோளை நீங்கள் அடைய முடியாவிட்டால் நீங்கள் தவறான குறிக்கோளுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதாகும்.

நமக்கான கர்த்தருடைய குறிக்கோளின் சரியான தொகுப்பை 2 பேதுரு 1:3-10ல் காணலாம்:

"தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்துக்கு உண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குதத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப் போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை." (2 பேதுரு 1:3-10)

கர்த்தருடைய குறிக்கோள் நீங்கள் யார் என்ற அடிப்படையில் ஏற்கனவே உங்களுக்குள் காரியங்களை நடப்பிக்க கர்த்தர் துவங்கிவிட்டார் என்பதை கவனியுங்கள். அவர் உங்களுக்கு, "ஜீவனையும், கர்த்தத்துவத்தையும்" கொடுத்திருக்கும் போதே உங்களுக்குள் நீதி செய்தலும் பரிசுத்தபடுதலும் ஏற்கனவே துவங்கி விட்டது. கடந்த கால - பாவ கறைக்கு - தப்பி, ஏற்கனவே நீங்கள் தெய்வீக இயல்பிற்கு பங்குள்ளவர்களானீர்கள். என்ன சிறப்பான துவக்கம்!

தற்போது உங்களுடைய மிக முக்கியமான வேலை என்னவெனில், கர்த்தர் குறித்துள்ள குணநலன்களை உங்களோடு நீங்கள் இணைத்துக் கொள்வது - ஞானம், இச்சையடக்கம், நீடிய பொறுமை, தேவ பக்தி, சகோதர சிநேகம், தேவ அன்பு - உங்கள் வாழ்க்கையில் இதை செயல்படுத்துங்கள். கர்த்தருடைய குறிக்கோளுக்கு நேராய் உங்கள் கவனத்தை செலுத்தும்போது அது உடனடி வெற்றிக்கு நேராய் வழி நடத்தும். கர்த்தர் குறித்துள்ள வெற்றி. இத்தகைய குணநலன்களை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதை அதிகரிக்கும் போது நீங்கள் பிரயோஜனம் உள்ளவர்களாயும், கனி தருகிறவர்களாயும், அசைக்கப்படாதவர்களாயும் இருப்பீர்கள். இதுவே வெற்றி!

இந்த வரிசையில், எல்லா விசுவாசிகளுக்குள்ளும் சரிசமமாய் பகிர்ந்து தரப்படாத தாலந்து, புத்தி மற்றும் வரங்கள் இதில் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனியுங்கள். இந்த தகுதிகளைக் கொண்டு உங்கள் சுய மதிப்பு கருதப்படுவதில்லை. கிறிஸ்துவுக்குள் உங்கள் அடையாளம் மற்றும் அவருடைய குணநலனில் உங்கள் வளர்ச்சி, இதனடிப்படையிலேயே உங்கள் சுயமதிப்பு உள்ளது. இது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் சமமாய் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. கர்த்தர் குறித்துள்ள இந்த குணத்திற்கென்று தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்காத கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை திருமதி A. யைப் போல சோகக் கதையாய் மாறி விடும். பேதுரு குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் தாங்கள் யார் என்பதை மறந்து போயிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய உண்மையான அடையாளம் மற்றும் கிறிஸ்துவின் நோக்கத்தின் தொடுதலுக்கு அப்பாற்பட்டு இருக்கிறார்கள்.

உங்கள் முக்கியத்துவத்தை நீங்கள் அதிகரிக்க விரும்பினால், உங்கள் பெலனை முக்கியத்துவமான செயலுக்கு நேராய் கொண்டு செல்லுங்கள்: அது உங்களை நித்தியத்திற்கென்று கொண்டு செல்லும்.

மற்றுமொரு வெற்றிக்கான வழி நடத்துதலை, வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேலரை வழி நடத்தின யோசுவாவின் அனுபவத்தில் நாம் காணலாம். கர்த்தர் அவரிடம், "என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும் படிக்கு, அதை விட்டு வலது இடது புறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக்

கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்.'' (யோசுவா 1:7,8)

யோசுவாவின் வெற்றி மற்ற மக்கள் அல்லது அந்த சூழ்நிலையை சார்ந்திருந்ததா? நிச்சயமாக இல்லை. வெற்றி முழுவதும் அவருடைய கீழ்ப்படிதலையே சார்ந்து இருந்தது. கர்த்தர் என்ன கூறினார், மற்றும் என்ன செய்ய சொன்னார் என்பதை விசுவாசித்தால் அவரால் வெற்றியடைய முடியும். கேட்பது எளிது. ஆனால் அது போதுமானதல்ல, கர்த்தர் உடனடியாக யோசுவாவை சோதிக்கும்படி இயல்புக்கு மாறான படி எரிகோவை சுதந்தரிக்கும் ஒரு போர் திட்டத்தை ஆண்டவர் யோசுவாவுக்கு கொடுத்தார். 7 நாட்கள் எரிகோவை சுற்றி வந்து எக்காளம் ஊதுவது என்பது யோசுவாவின் காலத்து சரியான இராணுவ முறைக்கு நிச்சயமாய் ஏற்றுக் கொள்ளதக்கதாய் இருந்திருக்காது!

ஆனால் அந்த திட்டம் எப்படி முட்டாள்தனமாய் தெரிந்தாலும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் நிபந்தனையைக் கொண்டே யோசுவாவின் வெற்றி அமைந்திருந்தது. யோசுவா 6ன் படி சூழ்நிலையின்படி போர் செய்யாமல் கர்த்தர் கூறியபடியெல்லாம் கீழ்ப்படிந்ததினாலேயே யோசுவா வெற்றி பெற்றான். இதுவே உங்களுடைய மாதிரியாய் இருக்கட்டும். உங்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய குறிக்கோளை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிதலோடு அதை பின்பற்றுங்கள். அதுவே உங்களை வெற்றிப் பாதையின் மையத்திற்கு கொண்டு செல்லும்.

2. முக்கியத்துவம். மையக் கருத்து: நேரம்

முக்கியத்துவம் என்பது நேரம் சம்பந்தப்பட்டது. நேரத்தில் என்ன மறந்தோம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதல்ல. நித்தியத்திற்கென்று எதை நினைவில் வைத்து இருக்கிறோம் என்பதே மிகவும் குறிப்பிடத்தக்கது. பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது; ''அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் ... அவன் கூலியைப் பெறுவான்'', என்று கூறுகிறார். (1 கொரி. 3:14) அவர் தீமோத்தேயுவுக்கு போதனையாக: ''தேவ பக்திக்கேதுவாக முயற்சி பண்ணு... தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமானதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது'' (1 தீமோத். 4:7,8) என்று கூறினார். உங்கள் முக்கியத்துவத்தை நீங்கள் அதிகரிக்க விரும்பினால் முக்கியத்துவமான செயலுக்கு நேராய் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்: அவைகள் நித்தியத்திற்கென்று நிலைத்திருக்கும்.

திரு. B என்பவர் ஒரு சிறு சபைக்குப் போதகராய் இருந்தார். அவர் என்னுடைய வகுப்புகளில் ஒன்றில் கலந்து கொண்டார். அவர் தனது வயதில் 30ன் மத்தியில் இருந்தார். அவருக்கு திருமணமாகி இருந்தது. அப்போது தான் அவருக்கு புற்று நோய் என்ற கண்டுபிடித்திருந்தனர். மருத்துவர் அவர் இரண்டு வருடங்களுக்குக் குறைவாகவே வாழ்வார் என்று கூறி இருந்தனர். ஒரு நாள் திரு. டீ என்பவர் என்னிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார். அவர் என்னிடம் ''10 வருடங்களுக்கு முன்பாக எனது சபையில் ஒருவர் என்னைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறினார். அப்போது அவர், நான் கர்த்தருக்கென்று மிகப் பெரிய காரியத்தைச் செய்யப் போவதாக கூறினார். நான் சில நூறு மக்களை கர்த்தரிடம் வழி நடத்தியுள்ளேன். ஆனால் இதுவரை கர்த்தருக்கென்று மிகப் பெரிய காரியம் எதுவும் செய்யவில்லை. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி கர்த்தர் என்னை குணமாக்குவார் என்று எண்ணுகிறீர்களா?'' என்று கேட்டார். நான் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றேன். ''நீங்கள் கர்த்தருக்கென்று சில நூறு மக்களை வழி நடத்தியும், கர்த்தருக்கென்று மிகப் பெரிய காரியங்களை செய்து முடித்ததாக நினைக்கவில்லையா? திரு. B எனக்கு தெரிந்த சில பெரிய சபையின் போதகர்கள் கூட இவற்றை கர்த்தரிடம் கேட்கவில்லை. எனக்குத் தெரிந்த சில வேத அறிஞர்கள் கிறிஸ்துவிடம் ஒருவரைக் கூட வழி நடத்தவில்லை. நீங்கள் இன்று வழி நடத்தின சில மக்கள் எவ்வளவு அதிகமான மக்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுக்கென்று திருப்புவார்கள் என்று யாருக்குத் தெரியும். ஆகவே இதுவே கிறிஸ்துவுக்காக மிகச் சிறந்த வேலையாக நான் கூறுவேன். (திரு. B கிறிஸ்துவுக்கென்று சில நூறு மக்களை சந்திக்கும் தன்னுடைய குறிப்பிடத்தக்க ஊழியத்தை முடித்து இன்று கர்த்தரோடிருக்கிறார்.)

என்னுடைய வாழ்க்கையில் உள்ள ஒரு சில சிறந்த நாயகர்களில் ஒருவர் டாக்டர். பில்லிகிரஹாம் எத்தனை இடர் வந்தாலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் தன் அழைப்பில் அவர் உண்மையாய் நிலைத்திருந்தார். அநேக வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் ஒரு உணவகத்தின் நடைபாதையில் நடந்து கொண்டிருந்த போது நான் அவரை சந்திக்கும் நிகழ்வு நடந்தது. இதற்கு முன் நான் அவரை சந்தித்ததில்லை, அவரை பார்க்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்ததில்லை. நான் அவரைப் பார்த்து, ''நான் ஒரு எளிய போதகராயிருந்தும் உங்களை சந்திக்க ஆவல் கொண்டிருந்தேன் என்று டாக்டர். பில்லிகிரஹாமிடம் கூறினேன். அவர் அன்பாக என்னை வாழ்த்தி என்னை அருகில் அழைத்து கூறியது, ''எளிய போதகர் என்று ஒன்று கிடையவே கிடையாது என்று கூறினார். அவர் கூறியது மிகவும் சரியே. கர்த்தருக்குள் எளிய போதகர் அல்லது எளிமையான சிறு குழந்தை என்று ஒன்று இல்லவே இல்லை. நாம் அனைவருமே நித்தியத்திற்கென்று பொக்கிஷத்தை சேர்க்கும் மிகவும் குறிப்பிடத்தக்க வேலையில் உள்ளோம். இந்த உலகத்தில் அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் காணப்படுகிறதோ, அது ஒரு பெரிய காரியமல்ல. நாம் கர்த்தருக்கென்று என்ன செய்கிறோமோ, என்ன கூறுகிறோமோ அது என்றுமே அழிவதில்லை.

3. நிறைவேற்றுதல். மையக் கருத்து: பணியை தெரிந்து கொள்ளுதல்

ஒரு பிரசித்த பெற்ற சுவரொட்டி இவ்வாறு தொகுத்து கூறுகிறது: உண்மையான கிறிஸ்தவன் தன் வாழ்க்கையின் நிறைவைப் பெற, ''எங்கு நீ நடப்பட்டு இருக்கிறாயோ அங்கு கனி கொடு'' என்று கூறுகிறது. இந்த வழியில் பேதுருவும் ''அவனவன் பெற்ற வரத்தின் படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளை பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.'' (1 பேதுரு 4:10) நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட தனித்துவ வரங்களையும் திறமைகளையும் கண்டுபிடிக்கும் போதும், கர்த்தருடைய நாம மகிமைக்காகவும் மற்றவர்களை கட்டி எழுப்பவும் அதை உபயோகப்படுத்தும் போது உன் வாழ்க்கையின் மிகச் சிறந்த நிறைவைப் பெறுவாய்.

நான் ஊழியத்தில் நுழைவதற்கு முன்பாக இந்த மிகப் பெரிய தத்துவத்தை நான் உணர்ந்து கொள்ளும்படி கர்த்தர் அனுமதித்தார். கர்த்தர் என்னை தம்முடைய செய்தியை கொண்டு செல்லும் தூதுவனாய் மாற்ற விரும்புகிறார் என்று நான் வேலை செய்யுமிடத்தில் அறிந்தேன், அப்பொழுது நான் என் அலுவலகத்தில் காலை உணவு நேரத்தில் வேதபாட வகுப்பைத் துவங்கினேன். என்னுடைய அலுவலகத்தில் என்னுடைய வேதபாட வகுப்பைக் குறித்த அறிவிப்பை சுவரில் ஒட்டிய ஒரு மணி நேரத்திற்குள்ளாக அதை ஒருவர் என்னிடம் கிழித்துக் கொண்டு வந்து, ''இயேசுவை நீ இங்கு கொண்டு வர முடியாது'' என்று அவர் என்னை எதிர்த்தார். ''இதைத் தவிர என்னால் வேறு ஒன்றும் செய்ய முடியாது, ஒவ்வொரு நாளும் இங்கு என்னோடு வரும் இயேசுவுடனே நான் இங்கு நடக்கிறேன்'', என்று நான் கூறினேன். என்னுடைய பதில் அவரிடத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை! வேதபாட வகுப்பின் மூலமாக இயேசுவை கண்டு கொண்டவர்களில் ஒருவர் இன்று பற்றி எரிகிற சுவிசேஷகராய் இருக்கிறார். அவர் போகும் இடங்களிலெல்லாம் கைப்பிரதிகளை விநியோகிக்கிறார். நான் அந்த நிறுவனத்தை விட்டு வெளியேறி ஊழியத்திற்கென்று வந்த பின் அவர் அந்த வேதபாட வகுப்புகளை நடத்துகிறார். சில மாதங்களுக்குப் பின்பாக என்னுடைய நண்பர்களை நான் சந்திக்கும்படியாக அந்த வேதபாட வகுப்புகளுக்குச் சென்றேன். அப்போது அதன் தலைவர் என்னிடம், ''நம்மை எதிர்த்த அந்த நபரை உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார். ''ஆம், எனக்கு நன்றாக நினைவிருக்கிறது'' என்று கூறி என்னுடைய வேதபாட வகுப்பை அவர் கடுமையாக எதிர்த்ததை நினைவு கூர்ந்தேன். அவர் என்னிடம் அவர் நோயுற்று மரணத்தருவாயில் உள்ளார். நான் அவருடைய மருத்துவமனைக்கு ஒவ்வொரு நாள் இரவும் சென்று அவரை சந்தித்து, இறுதியில் அவரை கர்த்தருக்கு நேராய் வழி நடத்தினேன் என்று கூறினார். இதை அறிந்து நான் மிகவும் வியப்படைந்தேன். அப்பொழுது நான் இவர்களுடைய ஆவிக்குரிய முற்பிதாவாய் உணர்ந்தேன். அப்பொழுது எனக்குள் ஒரு நிறைவு தோன்றியது. பவுல் கூறியது போல, ''சுவிசேஷகனுடைய வேலையை செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்ற வார்த்தையின் படி என் அலுவலகத்தில் சிறிய வேதபாட வகுப்பைத் துவங்கியதினாலே இது நடைபெற்றது.

நம் ஒவ்வொருவருக்கென்றும் கர்த்தர் வித்தியாசமான ஊழியத்தை வைத்துள்ளார். அது எந்த இடம் என்பதை சரியாக நீங்கள் அறிந்து கொள்வதே உங்கள் வாழ்க்கையின் நிறைவுக்கு மிக

முக்கியமானதாகும். அதில் உங்களுடைய பங்கு என்ன என்பதை நீங்கள் கண்டுபிடித்தபின், அதை வேறொருவருக்கு அளிக்காமல் நீங்கள் அதை ஏற்றுக் கொண்டு அந்த இடத்தில் நீங்கள் என்ன பங்கு வகிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ அதைத் தீர்மானிப்பதே இதன் மையக் கருத்தாகும். உதாரணமாக இந்த உலகத்தில் ஐந்து பில்லியன் மக்கள் இருந்தாலும் கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கின்ற இடத்தில் அந்த பங்கை நிறைவேற்றும்படி, உங்கள் வீட்டில் உங்களை தகப்பனாக, தாயாக, மனைவியாக, கணவனாக, பெற்றோர் அல்லது குழந்தையாக வைத்து இருக்கிறார். உங்கள் குடும்பத்தில் அந்த குறிப்பிட்ட சூழ்நிலையில் ஊழியம் செய்யும்படி கர்த்தர் உங்களை சிறப்பாக அந்த இடத்தில் விதைத்து இருக்கிறார்.

மேலும், உங்களை அண்டை வீட்டார் என்ன செய்கிறார்கள் என்பதை உங்களால் மட்டுமே அறிய முடியும். நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்களோ அங்கு நீங்கள் கிறிஸ்துவின் தூதுவன் என்ற தனத்துவப் பங்கு வகிக்க வேண்டும். இதுவே உங்களுடைய பணித்தளம் மற்றும் அங்கு அறுவடை செய்யும்படி கர்த்தரே உங்களை வேலையாளாக நியமித்திருக்கிறார். உன்னுடைய திறமையை சிறப்பாய் செய்யும்படி கர்த்தர் உன்னை வைத்திருக்கிற தனித்துவம் நிறைந்த இடத்தில் அதை ஏற்றுக் கொண்டு பங்கு வகிப்பதின் மூலமே மிகச் சிறந்த நிறைவு உனக்கு வரும். ஆனால் மிக வருந்தத்தக்கவிதமாக, உலக காரியங்களை நிறைவேற்றும்படி அநேகர் தங்கள் வாழ்க்கையின் அழைப்பைத் தவறவிடுகின்றனர். இந்த உலகத்தில் கிறிஸ்துவின் தூதுவனாய் இருக்க தீர்மானிப்பதின் மூலம் கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் நிறைவை நீ கண்டுபிடிக்க முடியும்! (2 கொரி 5:20)

4. திருப்தி. மையக் கருத்து: தரம்

கர்த்தருக்கென்று நீதியாய் வாழ்வதின் மூலமும், நீ ஈடுபடுகிற பணியில், உறவுகளில் அதன் தரத்தை உயர்த்த முயற்சிப்பதின் மூலமாகவும் திருப்தி வரும். பவுல் குறிப்பிட்டுள்ளபடி கர்த்தர் என்ன காரியத்திற்கென்று அவரை அழைத்தாரோ அதை செய்வதே அவருக்கு திருப்தி அளிக்கும் என்பதையே உன் வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கொள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." (2 தீமோத். 4:7)

சிலர் அல்லது சில காரியங்கள் உன்னை திருப்தியற்றவனாய் மாற்றுவது என்ன? உறவுகள், பணிகள் இவற்றின் தரம் குறைவதினாலேயே பொதுவாக இது நேரிடுகிறது. எப்போது நீங்கள் திருப்தியற்றவர்களாய் மாறினீர்கள் என்று நான் அடிக்கடி மக்களிடம் கேட்பதுண்டு. அவர்கள் உற்பத்தி செய்த பொருள் அல்லது அவர்கள் ஏற்றுக் கொண்ட பணி, உறவுகள் இவற்றின் தரம் குறைந்த பொழுதே அவர்கள் திருப்தி அற்றவர்களாக மாறினதாக அந்த நேரத்தை அடையாளம் காட்டினர்.

திருப்தி என்பது தரத்தை சார்ந்தது, எண்ணிக்கையை சார்ந்தது அல்ல. அநேக காரியங்களை அவசரமாக அல்லது அரை குறையாக செய்வதைக் காட்டிலும் எடுத்த சிறிய காரியத்தை சரியாக செய்வதின் மூலமே மிகப் பெரிய திருப்தியை நாம் அடைய முடியும். உன்னுடைய பொறுப்புகளை அதிகப்படுத்துவதினால் அல்ல. ஆனால் உனக்கிருக்கும் சிறு பொறுப்பின் தரத்தை உயர்த்தும்படி ஆழப்படுத்துவதே தனிப்பட்ட திருப்திக்கு மையமாகும்.

இதே உண்மை உறவுகளுக்கும் பொருந்தும். உன் உறவுகளில் நீ அதிருப்தியாக இருந்தால், உன்னையே நீ சிறுமைபடுத்துகிறாய். சாலோமோன் "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும. சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு" (நீதி. 18:24) கூறுகிறார். இந்த பூமியில் அநேக மக்களை அறிந்து இருப்பது நல்லது. ஆனால் ஒருவருக்கொருவர் தரமான உறவைக் கொண்டவராய், சில உண்மையான நல்ல நண்பர்கள் உனக்கிருப்பது அவசியம். இதுவே கர்த்தர் நம்மை உருவாக்கின மாதிரி. அவர் அநேகருக்கு போதித்தார் மற்றும் எழுபது பேரை தன் ஊழியத்திற்கென்று பயிற்சிவித்தார். ஆனால் அவருடைய அதிகமான நேரத்தை 12 சீஷர்களோடு செலவழித்தார். இந்த 12 பேரில் அவர் 3 பேரைத் தெரிந்தெடுத்தார். பேதுரு, யாக்கோபு, யோவான் - மறுரூபமலை, ஒலிவ மலை மற்றும் கெத்சமனே தோட்டத்தில் தம்மோடு இருக்கும்படி தெரிந்து கொண்டார். மேலும் சிலுவையில் பாடுபடும் போது தன்னுடைய நெருங்கிய நண்பனான யோவானிடம் தன் தாயை கவனித்துக் கொள்ளும்படி ஒப்படைத்தார். அது தரமான உறவு, மேலும் தரமான உறவே நமக்கு அவசியமான திருப்தியை கொண்டு வரும்.

5. சந்தோஷம், மையக் கருத்து: பெற்றிருப்பதில் நீ மகிழ்ச்சியாயிரு

இந்த உலகத்தின் பார்வையில் மகிழ்ச்சி என்பது நாம் என்ன விரும்புகிறோமோ அதைப் பெறுவது. எற்கனவே நாம் என்ன கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டிலும் நமக்கு அருமையான வேகமாக அல்லது எளிதாக உபயோகப்படுத்தக் கூடிய அநேக பொருட்கள் அல்லது பளபளப்பான கார், கவர்ச்சியான பெண் நமக்கு அவசியம் என்று மிகப் பிரசித்தி பெற்ற மாத இதழ் நமக்கு கூறுகிறது. நாம் விளம்பரங்களையும், வர்த்தக இதழ்களையும் படிக்கும் போது தற்போதைய நாகரீக பொருட்களை பெற்றுக் கொள்ளும்படி ஆசைப்படுகிறோம். நாம் விரும்புவதைப் பெற்றுக் கொள்ளும்வரை நாம் சந்தோஷமாக இருப்பதில்லை. கர்த்தருடைய பார்வையில் மகிழ்ச்சி என்பதின் தொகுப்பை இந்த எளிய நீதிமொழியின் தொகுப்பில் காணலாம்; ''அவன் என்ன பெற்றிருக்கிறானோ அதை விரும்புவதை அவனுக்கு மகிழ்ச்சி ஆகும்.'' நீங்கள் எதைப் பெறவில்லையோ அதிலேயே கவனமாய் இருக்கும் வரை நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்கப் போவதில்லை. ஆனால் நீங்கள் என்ன பெற்றிருக்கிறீர்களோ அதைப் புகழ ஆரம்பிக்கும் போது உங்கள் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாய் இருக்கும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, ''போதும் என்ற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.'' (1 தீமோத். 6:6-8)

உண்மையிலேயே உங்களை எப்போதும் சந்தோஷப்படுத்தக் கூடியதை நீங்கள் ஏற்கனவே பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவைப் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்கு அவசியமான எல்லாவற்றையும் தருவதாக பிதாவினுடைய வாக்குதத்தத்தைப் பெற்று அன்பு கூரப்பட்டிருக்கிறீர்கள். வேதம் உங்களைத் திரும்பத் திரும்ப நன்றியுடையவர்களாய் இருக்க கட்டளையிட்டிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. (1 தெச. 5:18) உண்மையிலேயே நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க விரும்பினால் உங்களிடத்தில் என்ன இல்லையோ அதைக் குறித்து பேராசைப்படாமல், நீங்கள் என்ன பெற்றிருக்கிறீர்களோ அதிலே நன்றியுடையவர்களாயிருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

6. வேடிக்கை. மையக் கருத்து: இயல்பாக ஏற்படுவது.

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் எவ்வளவு வேடிக்கை நிறைந்தவர்களாயிருக்கிறீர்கள்? வேடிக்கை என்பது பூங்காக்களில் நேரத்தை செலவிடும் போது மட்டுமே ஏற்படுவது என்று சில மக்கள் நினைக்கின்றனர். ஆமாம் இத்தகைய நேரங்களில் அதிக வேடிக்கை ஏற்படுவது உண்மை. ஆனால் நாம் சோர்வுற்று நம்முடைய பணப்பை காலியாகும் போது இத்தகைய வேடிக்கை ஏற்படுவதில்லை.

வேடிக்கை என்பது இயல்பாகவே ஏற்படக் கூடியது. வாய்ப்புகள் எல்லாம் உண்மையிலேயே இழக்கும் போதும் இயல்பாகவே ஏற்படக் கூடியது வேடிக்கையாகும். பெரிய நிகழ்வுகள் மற்றும் அதிகம் செலவழித்து நாம் செல்லும் வெளியூர் பயணங்களில் நமக்கு சந்தோஷம் உண்டாகும். ஆனால் நாம் தீர்மானித்தபடி எல்லாம் நடைபெற்று செலவழிந்தபின் அந்த சந்தோஷம் முடிவுற்று விடும். நான் என் குழந்தைகளோடு தலையணைகளை வைத்து சண்டை போடும் போது இயல்பாகவே அதிக சந்தோஷம் அடைகிறேன்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய தடைகளை அகற்றுவதின் இரகசியம் தடையில்லாமல் இயல்பாகவே மகிழ்ந்து களிகூருவதாகும். கிறிஸ்தவர்களுடைய வேடிக்கையானது தடைகளை அகற்றி மாம்சீக சிந்தனையில் இருந்து நம்மைக் காத்துக் கொள்வதாகும். தவறான உபதேசங்களினால் தவறான இடத்தில் அல்லது மற்றவர்கள் குறைவாய் நினைக்கும் இடத்தில் நாம் இயல்பாய் சந்தோஷம் அடைய கூடாது. மனுஷரைப் பிரியப்படுத்துவதைக் குறித்து பவுல் ஆலோசனையாக மனுஷரைப் பிரியப்படுத்துகிறவன் கிறிஸ்துவின் ஊழியக்காரர் அல்ல என்று கூறுகிறார். (கலா. 1:10)

தாவீது ராஜாவுக்குள் இருந்த இயல்பான சந்தோஷத்தைப் பார்க்கும் போது நான் அதை மிகவும் விரும்புகிறேன். அவர் கர்த்தரின் பிரசன்னத்திற்குள் இருப்பதே மிகவும் மகிழ்ச்சி என் அறிந்திருக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி திரும்ப எருசலேமுக்கு வரும் போது கர்த்தருக்கு முன்பாக

அவர் ஆடிப்பாடி மகிழ்ந்தார். கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் மகிழ்ச்சி உண்டு என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவருடைய மனைவி மீகாள் இது ஒரு ராஜாவுக்குரிய நடத்தை அல்ல என்று எண்ணி கடுமையான வார்த்தைகளைக் கூறினாள். தாவீது அவளை நோக்கி, ''நான் உன்னையோ அல்லது மற்றவர்களையோ பிரியப்படுத்த அல்ல, கர்த்தரைப் பிரியப்படுத்தவே ஆடுகிறேன். நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் தொடர்ந்து இவ்வாறே செய்வேன்.'' (2 சாமு. 6:21 என் சொந்த வார்த்தையில்) இந்த நிகழ்ச்சியினால் தாவீது அல்ல மீகாளே கர்த்தரால் நியாயந்தீர்ப்புக்கு உள்ளானாள். (2 சாமு. 6:23) நீங்கள் மனிதனைப் பிரியப்படுத்த முயற்சிப்பதைக் காட்டிலும் கர்த்தரைப் பிரியப்படுத்த அதிக வேடிக்கை உணர்வுள்ளவர்களாய் இருங்கள்.

7. பாதுகாப்பு. மையக் கருத்து: நித்தியத்தோடு தொடர்புடையது

உங்கள் வாழ்க்கையின் பாதுகாப்பு அனுபவத்தில் முக்கியமானது, அது தற்காலிகமானதல்ல. அது நித்தியத்தை சார்ந்த காரியம். கிறிஸ்தவர்கள் அடிக்கடி பாதுகாப்பு அற்றவர்களாய் உணருகின்றனர். ஏனென்றால் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத தற்காலிகமான காரியங்களை சார்ந்து இருப்பதாலே ஆகும். உன் தேவைகள் அத்தனையும் சந்திப்பேன் என்ற கர்த்தருடைய வாக்குதத்தத்தைக் காட்டிலும் சிலர் தங்களுடைய பணத்தையே பாதுகாப்பாக கருதுகின்றனர். பிற்காலத்திற்காக தங்கள் பணத்தை எங்கு பாதுகாப்பாக வைக்கலாம்? சேமிப்பு மற்றும் கடன் நிறுவனங்கள் இதற்கு தகுந்த இடமாயிருக்குமா. ஆனால் அநேகர் இதில் தவறி தவறான மக்களிடம் பாதுகாப்பாக கொடுத்து அவற்றை இழக்கின்றனர்.

பாதுகாப்பு நித்தியத்திற்கென்று நங்கூரம் இட்டிருப்பதின் தொடர்பினால் மட்டுமே வருகிறது. இயேசு கிறிஸ்து கூறும் போது, நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். ஒருவனும் அவைகளை என் கைகளிலிருந்து பறித்துக் கொள்வதில்லை என்று கூறுகிறார். (யோ.10:27-29) கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு எதுவும் பிரிக்கமாட்டாதென்று பவுல் வெளிப்படுத்துகிறார். (ரோமர் 8:35-39) மேலும் அவர் நாம் பரிசுத்த ஆவியானவரால் முத்திரிக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறுகிறார். (எபே. 1:13,14) நீங்கள் தற்காலிகமான உறவுகள் மற்றும் மதிப்பீடுகளை நம்புவீர்களானால் நீங்கள் எப்போதும் பாதுகாப்பு அற்றவர்களாகவே உணருவீர்கள். ஏனென்றால் இத்தகைய காரியங்கள் தோல்விக்குரியவைகள். கர்த்தர் தமக்குள் கொண்டுள்ள நிலையான மதிப்பையும் உறவுகளையும் நீங்கள் உடையவர்களாய் இருக்கும் வரை அதனால் ஏற்படும் சிறப்பான பாதுகாப்புணர்வை நீங்கள் அனுபவமாய் பெறக் கூடும்.

8. சமாதானம். மையக் கருத்து: உள்ளான போராட்டத்தின் தீர்வு

எல்லோரும் எதிர்பார்ப்பது என்னவென்றால் பூமியிலே சமாதானமும், மனிதர்கள் மேல் தயவும், ஆனால் வெளிப்படையான சமாதானத்திற்கு ஒருவரும் உத்தரவாதம் அளிக்க முடியாது. ஏனென்றால் மற்ற மக்கள் அல்லது அவர்களது சூழ்நிலையை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. தேசங்களின் அடையாளங்களையும் அவைகளின் சமாதானத்தை உடைத்து அவர்களுடைய ஒழுங்கை பயமுறுத்தக் கூடிய காரியங்கள் உண்டு. ஒரு சமாதான குழுவும், மற்றொரு சமாதான குழுவும் சந்தித்து முடிவில் அது சண்டையிலே நிறைவடைகிறது. தம்பதிகள் தங்கள் குடும்பத்தில் சமாதானம் ஏற்பட, ''அவன் ∴ அவள் மாற்றப்படும்போது மட்டுமே'' இது கிடைக்கும் என்று நினைக்கின்றனர்.

உள்ளான போராட்டத்தினை நன்கு புரிந்து கொள்ளுதலே சமாதானத்திற்கான மிக முக்கியமான அனுபவம் ஆகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் நாம் ஏற்கனவே சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1) இதற்காக நாம் போராட வேண்டியதில்லை; நாம் மறுபடியும் பிறக்கும்போதே இதைப் பெற்றிருக்கிறோம். கர்த்தருக்கு விரோதமான போராட்டம் முடிவு அடையும்போதே உங்களுடைய உள் மனதில் கர்த்தரோடு நித்திய சமாதானம் ஏற்படுகிறது.

வெளி உலகத்தில் அனுதின வாழ்க்கையில் அநேக பிரச்சனைகளின் நடுவில் இருக்கிற நமக்கு கர்த்தருடைய சமாதானம் தேவையாய் இருக்கிறது. (யோவான் 14:27) உங்களுடைய உறவுகள் சூழ்நிலைகள் எல்லாவற்றையும் உங்களால் கட்டுப்படுத்த முடியாது. ஆகையால் இந்த உலகத்தில் அநேக காரியங்கள் உங்களை உபத்திரவப்படுத்துவதாய் இருக்கிறது. ஆனால் உங்களுடைய

அனுதின வாழ்க்கையில் கர்த்தருடைய சமாதானம் உங்கள் இருதயத்தை ஆள அனுமதிக்கும்போது உங்களுடைய உண்மையான சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும் உங்களால் கட்டுப்படுத்த முடியும். நம்மை சுற்றிலும் இரைச்சல் நிறைந்த புயல் காணப்பட்டாலும் கர்த்தர் அதைக் காட்டிலும் பெரியவர். என் மேஜையின் மேலுள்ள ஒரு சிறிய காகித வசனம் அடிக்கடி எனக்கு நினைவுபடுத்துவது: ''கர்த்தரும் நானும் தீர்க்கமுடியாத எதுவும் இன்று எனக்கு நேரிடுவது இல்லை.'' தனிப்பட்ட ஆராதனை, ஜெபம் மற்றும் கர்த்தருடைய வார்த்தையோடு இடைபடுதல் ஆகியவை கர்த்தருடைய சமாதானத்தை நமக்குள் கொண்டு வரும். (கொலோ. 3:15,16; பிலி. 4:6,7)

கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை முறையில் உள்ள இந்த எட்டு குறிப்புகளை நாம் பகிர்ந்து கொள்ளும் போது அடிக்கடி மக்கள் இவ்வாறு கூறுவதை நான் கேட்கிறேன். ''நல்லது, இது உண்மை, ஆனால் இன்னமும் நான் இதை நம்புகிறேன் ...'' அதிலேயே அவர்கள் வாழ்கின்றனர். உண்மை என்ன என்று அவர்கள் அறிந்திருந்தும் அல்லது அவர்கள் ''இன்னமும் நம்புவது'' என்ன? எப்போதும் பின்னானதையே - எப்பொழுதும்! நாம் எதை நம்புகிறோம் என்பதே நாம் எவ்வாறு நடக்கிறோம் என்பதை தீர்மானிக்கிறது. இது கோல்.்ப்ளர் கூறியது போன்றதே, ''என்னுடைய பிடிமானத்தை மாற்றிக் கொள்வதினால் பந்தை மாட்டிக் கொள்வதிலிருந்து காக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.'' ஆனால் உண்மையிலேயே சரியான பிடிமானத்தை அவர் அறிந்து கொள்ளும் வரை அவர் என்ன கூறினார் என்பதை அவராலேயே நம்ப முடியாமல் இருந்தது. மக்கள் எதை உண்மையிலேயே நம்புகிறார்கள் என்பதை அவர்களுடைய செயல்களே வெளிப்படுத்தும்.

இந்த எட்டு வகைகளின் மூலம் உங்களுடைய விசுவாச வாழ்க்கையில் உங்களுடைய நம்பிக்கை முறையை ஒப்பிட்டு உங்களை சோதிக்கும் போது ஏன் உங்களுடைய செயல்கள் இவ்வாறு நடைபெறுகின்றது என்பதின் காரணத்தை கண்டுபிடித்திருக்கிறீர்களா? சரியான வழியை மையப்படுத்தி உங்களுடைய விசுவாச வாழ்க்கையை ஒழுங்கிற்கு கொண்டு வருவதற்கு உங்களுடைய நம்பிக்கை முறையை மாற்றிக் கொள்ள ஆயத்தமாய் இருக்கிறீர்களா?

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலமாய் நமது வாழ்க்கையில் ஆளுகை

சாத்தானின் கட்டுகளிலிருந்து நம்மை விடுவிப்பதும் பூமியிலே அவருடைய ஆளுகையை ஸ்தாபிப்பதுமே இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்ததின் நோக்கமாகும். ஆதாமின் வழி வந்து அவனுடைய பங்கை நிறைவு செய்வதையே கர்த்தர் வற்புறுத்துகிறார். அவர் ''அவர்கள் ஆளக்கடவர்கள்'' என்றார். (ஆதி. 1:26) ஆதாமையும், ஏவாளையும் மட்டும் அவர் குறிப்பிடவில்லை. அவர்களுடைய சந்ததியாரும் ஆளுகை செய்ய வேண்டும் என்றார். ஆதாமும் ஏவாளும் தள்ளப்படவில்லை என்றால் அவர்களும், அவர்களுடைய சந்ததியாரும் கர்த்தருடைய ராஜரிகத்தின் கீழ் பூமியை ஆளுகை செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருப்பார்கள்.

ஆதாமின் கீழ்ப்படியாமையினால் கர்த்தர் தம் திட்டத்தை தள்ளிப் போட்டார். ஆனால் அதை ஒரு போதும் அவர் தள்ளி விடவில்லை. இந்த பணியை ஏற்றுக் கொள்ளும்படி கர்த்தர் இஸ்ரவேலுக்கு வாய்ப்பு கொடுத்தார். ''இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்.'' (யாத்.19:5,6) அவர்களும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் தவறியது துக்ககரமானது. அதனால் அவர்களும் ஆளுகை செய்யும் உரிமையை இழந்தனர். கர்த்தர் ''பூமியும் அதின் நிறைவும் என்னுடையது. என்னால் அதை உனக்குத் தர முடியும். என் நாம மகிமைக்காக இந்த உலகத்தை ஆளுகை செய்யும் ஆசாரியரும், ராஜரீக கூட்டமுமாய் உன்னை மாற்ற முடியும்'' என்று கூறினார். ஆனால் அவர்கள் அவருடைய உடன்படிக்கையை மீறி, அவர் வைத்த பரீட்சையில் தோல்வியுற்றனர்.

இறுதியாக கர்த்தர் சபைகளின் மூலமாக தமது நோக்கத்தை நிறைவேற்றத் தீர்மானித்தார்.

கிறிஸ்துவின் ஊழியம் என்பது:

- சாத்தானின் ஆளுகையை தூக்கி எறிவது.
- அவனுடைய கட்டுகளிலிருந்து மனித குலத்தை விடுவிப்பது.
- புதிய ஒரு கூட்ட மக்களை தேர்ந்தெடுப்பது.
- அவர்கள் வாழ்க்கைக்கு எஜமானாய் இருக்கும் சாத்தானின் காரியங்களை உடைத்தெறிவது.
- சாத்தானின் கிரியைகளை அழிக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பது.
- புதிய அதிகாரத்தின் கீழ் அவர்கள் வாழ்க்கையை அதிகாரம் செய்ய போதிப்பது.
- திரும்பவும் கர்த்தருடைய இராஜ்ஜியத்தை பூமியிலே ஸ்தாபிப்பது.

இதுவே பூமி மற்றும் மனித குலத்தைக் குறித்த கர்த்தருடைய நித்திய நோக்கமாகும். இது அநேக காலமாய் கர்த்தருடைய மனதில் உருவாகி இருப்பது. தற்போதைய வடிவில் பூமி உருவாவதற்கு முன்பே இத்திட்டம் உருவானது. எப்போதும் இதுவே அவருடைய விருப்பமாதலால் ஒரு போதும் அதிலிருந்து மாற அனுமதிக்க மாட்டார்.

வாழ்க்கையில் இயேசுவின் ஆளுகை

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை என்பது மாறாத வெற்றியின் ஒன்றாகும். உண்மையில் அவருடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் ஆளுகை செய்து வெற்றி கண்டார்.

A. அவர் சாத்தானின் மேல் ஆளுகை செய்தார்.

இயேசு கிறிஸ்து யோர்தானில் ஞானஸ்நானம் பெற்ற உடனேயே ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டார். அவர் ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, சாத்தானால் சோதிக்கப்பட்டார். (மத். 4:1-11; லூக். 4:1-13) அப்பொழுது அவர் 40 நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்து சரீரப் பிரகாரமாக மிகவும் பெலவீனமாய் காணப்பட்டார். அவருடைய பெலவீன சூழ்நிலையை சாத்தான் தனக்கு சாதகமாக பயன்படுத்தி அவரை சோதித்து வீழ்த்த முயற்சி செய்தான். வெற்றிகரமாக

அவரை வீழ்த்த இதுவே சரியான சந்தர்ப்பமாக இருக்கும் என்று எண்ணினான். அவர் பசியாகவும், தாகமாகவும், சோர்வாகவும் இளைப்படைந்தவராகவும் இருந்தார். இவை எல்லாவற்றையும் சாத்தான் அறிந்து அவருக்கு விரோதமாய் வந்தான். வல்லமையான சோதனை உண்டாக்கும் காரியங்களை அவன் கிறிஸ்துவுக்கு முன்பாக கொண்டு வந்தும் அவன் தோற்கடிக்கப்பட்டான். ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தால் அவனை மேற்கொண்டார். அதே ஆயுதத்தைக் கொண்டு நம் வாழ்க்கையில் சாத்தானுடைய தாக்குதலை நம்மால் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

B. அவர் சோதனைகளின் மேல் ஆளுகை செய்தார்.

கிறிஸ்துவால் பாவங்களை மேற்கொள்ள முடிந்ததா இல்லையா என்று பல நூற்றாண்டு வாக்குவாதத்திற்குரிய காரியம் ஆகும். அந்த வாக்குவாதத்திற்குள் நுழைவது நமது நோக்கம் அல்ல. ஆனால் கிறிஸ்துவுக்கு சோதனைகள் வந்தது என்பது மிகவும் உண்மை. உண்மையிலேயே அவர் சோதிக்கப்பட்டார். இல்லையெனில் வனாந்திரத்தில் நடைபெற்ற முழு நிகழ்ச்சியும் வீணாகும். (மத். 4:1-11; லூக். 4:1-13) கிறிஸ்துவும் சோதிக்கப்பட்டார் என்று அறிவதினால் நமக்கு உண்டாகும் மிகப்பெரிய ஆறுதல் ''நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும்'' பாவமில்லாதிருந்தார். (எபி. 4:15) மிக ஆச்சரியமான காரியம் இதைக் குறித்து நாம் அறிவது என்னவென்றால் நம்மைப் போல் அவர் எல்லாப் பகுதியிலும் சோதிக்கப்பட்டு பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். (எபி. 4:15) ''ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அநேக முறைகள் கிறிஸ்து தம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டார். ஆனால் எல்லாவற்றிலும் அவர் வெற்றி பெற்றார்.

C. பாவத்தின் மேல் ஆளுகை செய்தார்.

கிறிஸ்து பூமிக்கு வந்த போது கரைதிரையற்ற, குற்றமற்ற கர்த்தருடைய ஆட்டுக் குட்டியாய் பஸ்காவின் ஆட்டுக் குட்டியைப் போல் பூரண நிறைவுள்ளவராய் வந்தார். அவருடைய வாழ்க்கையை சோதிக்கும்படி, அவருடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் சோதனை வந்தது. ''ஆனாலும் அவர் பாவமில்லாதவராய் இருந்தார்.'' (எபி. 4:15) அவருடைய வாழ்க்கையின் இறுதியை அடைந்தபோது அவர் கூறியது. ''இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.'' (யோவான் 14:30) சாத்தானின் தாக்குதல் கிறிஸ்துவை மேற்கொள்ளவில்லை. அதனால் அவன் தலை உயர்த்தப்படவில்லை. அவன் ஜெயிக்கும் வண்ணமாக கிறிஸ்துவின் வாழ்க்கையில் சிறு தவறு காணப்படுமாவென்று அவன் கவனித்தும் அவன் தோல்வியே அடைந்தான். கிறிஸ்துவின் வாழ்க்கை வார்த்தை, சிந்தை செயல் ஒன்றிலும் அவர் ஒரு முறை கூட வீழ்ச்சி அடையாமல் எல்லா சோதனையிலும் மகிமையாய் வெற்றி சிறந்தார்.

D. பிசாசின் மேல் ஆளுகை செய்தார்.

ஒவ்வொரு முறை பிசாசை துரத்தும் போதும் சாத்தானுடைய ராஜ்ஜியத்தை தோற்கடிக்கச் செய்தார். அவனுடைய கட்டுப்பாட்டின் கீழுள்ள பொல்லாத ஆவியின் கூட்டத்தினால் அவனுடைய ராஜ்ஜியத்தை அவன் கட்டுக்குள் வைத்திருந்தான். அதிகார வரம்பிற்கேற்ப அவன் சேனைகளை வரிசைப்படுத்தி இருந்தான். (எபே. 6:12) அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றத்தக்கதாய் அவனுடைய அதிகாரத்தின் கீழ் அவைகள் கீழ்ப்படிந்திருந்தன. பூமியிலே சாத்தானுடைய விருப்பத்தை நிறைவேற்றும்படி அவைகள் மனித குலத்தின் மூலம் செயலாற்றி மனிதர்களை அவனுக்கு சொந்தமாக்க முயற்சித்தது. அவனுக்கு சொந்தமான அல்லது அவனை எதிர்த்த மக்களை தேவன் உடனடியாக கண்டு கொண்டார்.

எப்போதெல்லாம் இவ்வாறு நிகழ்ந்தோ அப்போது எல்லாம் சாத்தானின் இராஜ்ஜியத்தின் வல்லமைக்கு மேலான தேவனுடைய மேலான வல்லமையின் அதிகாரத்தை வெளிப்படுத்தினார். சாத்தானுடைய பொல்லாத செய்கைகளுக்கு மேலான கர்த்தருடைய ராஜரீக அதிகாரத்தை சாத்தானின் மேல் செயல்முறை படுத்திக் காண்பித்தார். பிசாசின் கட்டுக்குள் உள்ள நபர்களை தேவன் சந்தித்தபோது எல்லாம் அவருடைய அதிகாரத்தினால் பிசாசை வெளியேறும் படி கட்டளையிட ஒரு போதும் தவறவில்லை. ''அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றி திரிந்தார்.'' (அப். 10:38)

E. கிறிஸ்து இயற்கையின் மேல் ஆளுகை செய்தார்.

இயற்கையின் மேல் ஆளுகை செய்யும் அதிகாரத்தை ஆதாம் இழந்து போனான். இரண்டாம் ஆதாமாகிய இயேசு வந்தபோது அந்த அதிகாரத்தை திரும்பவும் புதுப்பித்தார். புயலினால் இரையும் கடலைப் பார்த்து அவர் கட்டளையாக "இரையாதே, அமைதலாயிரு" என்று தம் அதிகாரத்தை செயல்முறைப்படுத்தினார். காற்றும் கடல் அலையும் கூட அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, இயற்கையின் மேல் அவருக்கு உள்ள அதிகாரத்தை தண்ணீரை அவர் திராட்சை ரசமாக அவர் மாற்றிய போது செயல்முறை படுத்திக் காண்பித்தார். (யோ. 2:1-13) யாரோ ஒருவர் இதைக் குறித்து "தன்னுடைய எஜமானின் முகத்தைப் பார்த்த போது தண்ணீரே திராட்சை ரசமாய் மாறியது" என்று கூறினார். ஒரு சில மீன்களையும் அப்பங்களையும் கொண்டு அநேகரைப் போஷித்தது. இயற்கையின் மேல் அவருக்குள்ள அதிகாரத்தை செயல்முறை படுத்திக் காட்டிய மற்றொரு நிகழ்ச்சி ஆகும்.

F. அவர் சூழ்நிலைகளின் மேல் ஆளுகை செய்தார்

அவருடைய ஆளுகையை நாம் கண்டு கொள்ள லூக். 4:28-30ல் உள்ள கதை மிக அழகான உதாரணம் ஆகும். நாசரேத்திலுள்ள ஆலயத்தில் இருந்தவர்கள் அவருக்கு விரோதமாய் பேசிக் கொண்டிருந்த போது அவர் அவர்களுக்க நடுவிலிருந்து காணாமல் போய் விட்டார். அதை ஒருவரும் காணவில்லை. கோபம் அடைந்த கூட்டத்தினர் எல்லாவிதத்திலும் கோபமாக அவரை அழிக்கப் பார்த்ததை கற்பனை செய்து பார்ப்போம். அவர்கள் கோபமாக எழும்பி அவரை ஒருவன் ஊருக்கு புறம்பே தள்ளவும் தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சுவரிலிருந்து அவரை தள்ளிவிடவும் அவரை கொண்டு சென்றனர். பின்பு நாம் வாசிக்கும் போது அவரோ அவர்கள் நடுவிலிருந்து கடந்து போய் விட்டார். அவர் நடந்து கொண்டதை நாம் கவனித்து பார்ப்போம். கோபமடைந்த கூட்டத்தினர் அவரை அழிக்க நினைத்த போது அவர் அமைதியாக அத்தனை கூட்டத்தின் நடுவிலிருந்தும் தம் வழியே சென்றார். அவரை அழிக்கும்படி பயமுறுத்திய சூழ்நிலையை மகிமையான அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். இதற்கு ஒத்த சூழ்நிலை யோ. 8:58,59ல் ஏற்பட்டது. "உனக்கு என்ன வயதாகிறது" என்ற கேள்வி ஏற்பட்ட போது இயேசு "நான் ஆபிரகாமுக்கு முன்னமே இருக்கிறேன்" என்று கூறினார். இந்த முறை கூட்டத்தினர் அவர் மேல் கற்களை எறியும்படி கற்களை எடுத்துக் கொண்ட போது மறுபடியும் அவர் அவர்கள் நடுவே கடந்து தம் வழியே சென்றார்.

G. வியாதிகளின் மேல் ஆளுகை செய்தார்

அநேக நேரங்கள் சாத்தான் இயேசு கிறிஸ்தவில் வியாதியை உண்டாக்க முயற்சித்தும் அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை என்பதை நான் உறுதியாக எண்ணுகிறேன். கிறிஸ்துவை தாக்க முடியாமல் பாவம் மரணம் என்ற உடன்படிக்கை அவரிடத்தில் செயல்பட முடியாமல் போனது. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" என்பதால் இயேசு கிறிஸ்து முழுவதும் பாவமற்றவராய் இருந்தபடியால் அவருக்குள் வியாதியைக் கொண்டு வர முடியவில்லை. ஆகவே தம் சொந்த வாழ்க்கையில் வியாதியின் மேல் எஜமானனாய் இருந்தார். மற்றவர்களுடைய வாழ்க்கையில் வியாதியை காணும்போதும் அவர் அதற்கு எஜமானாய் இருந்தார்.

தோராயமாக கிறிஸ்துவின் ஊழியத்தில் 2.׃3 பங்கு வியாதியஸ்தரை சொஸ்தமாக்குகிறதாகவும், பிசாசை துரத்துவதாகவும் இருந்தது. இவ்வாறு செய்யும் போது அவர் வியாதியஸ்தரை விடுதலையாக்கினது மட்டுமல்லாமல் வியாதியின் மேலுள்ள தன் அதிகாரத்தை வெளிப்படுத்தினார். அவர்களை சாத்தானின் வல்லமையான பிடியிலிருந்து விடுதலையாக்கி அவர்கள் மேலுள்ள சாத்தானின் ஆளுகையை அழித்துப் போட்டார். இயேசுவைக் குறித்து கூறும் போது அவர் "சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார்." (மத். 4:23) வியாதிகள் மேல் முழுமையாக ஆளுகை செய்கிறவராயும் எஜமானாயும் இருந்தார்.

கல்வாரி என்பது அவரது மிகச் சிறந்த வெற்றி

சிம்சோன் தன் வாழ்க்கையின் இறுதியில் அவர் கோயிலை அழித்த போது 3000 பெலிஸ்தரைக் கொன்று மிகப் பெரிய வெற்றியை அடைந்தார். கிறிஸ்துவும் தன் வாழ்க்கையின் இறுதியில் நடைபெற்ற காரியத்தின் மூலமாக மிகப் பெரிய வெற்றியை அடைந்தார். கல்வாரி என்பது கர்த்தரின் இரகசிய

ஆயுதம். இதுவே மிகச் சிறந்த ஒன்றாகும். எல்லா மனித குலத்தின் மேலுமுள்ள மரண தண்டனையை எடுக்கும்படி முழுவதும் கிரயம் செலுத்தி இயேசு கிறிஸ்து மரணத்தின் மேல் ஜெயமாய் எழும்பி அவருடைய பாவமற்ற வாழ்க்கையில் கல்லறை எந்த வல்லமையும் பெறாதபடிச் செய்தார்.

கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் சாத்தானுடைய ஆண்டவர் துவத்தை முறித்தது. அந்த கணத்திலிருந்து சாத்தான் பரிகரிக்கப்பட்டான். அப்போதிலிருந்து அவன் அவனுடைய முந்தைய எல்லா வல்லமையையும் இழந்தவனாய், அழிக்கப்பட்டவனாய், தோற்கடிக்கப்பட்டவனாய் ஆனான். சிலுவையின் மூலமாக கிறிஸ்து வெற்றி சிறந்தார். (கொலோ. 2:14,15) அகில உலகத்திற்கும் சாத்தானுடைய தோல்வியை வெளியரங்கமாக்கப்பட்ட கண்ணாடியாய் வெளிப்படுத்தினார். சாத்தானுடைய காரியங்கள் அழிக்கப்பட்டு இப்போது அவனுடைய தந்திரமான காரியங்கள் மட்டுமே உள்ளன. ஏதாவது வழி கிடைக்குமா என்று வஞ்சனையை நடப்பிக்கும்படி இருளின் காரியங்களைச் செய்து வருகிறான். அவன் வெளிச்சத்துக்கு வருவானாகில் அவனுடைய ஒன்றுமில்லா தன்மையும், பெலவீனமும் எல்லோருக்கும் நிரூபணம் ஆக்கப்பட்டு ஒருவனும் அவனால் கவரப்படாதிருப்பர். கிறிஸ்து வெளிச்சத்தில் இருந்தது போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏன் வெளிச்சத்தில் நடக்க வேண்டும் என்பதற்கு இதுவே காரணம் ஆகும். (1 யோ. 1:7) சாத்தான் வெளிச்சத்தை வெறுப்பதால் நாம வெளிச்சத்தில் நடக்கும் போது அவன் நம்மை விட்டு விலகிச் செல்வான்.

நம்மாலும் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்ய முடியும்.

கிறிஸ்து பெற்ற வெற்றி அவருக்காக மட்டுமல்ல, நமக்காகவும் வெற்றி அடைந்தார். கிறிஸ்துவின் சிந்தையில் கிறிஸ்துவுடனேகூட நாமும் அடையாளம் காட்டப்பட்டுள்ளோம். கிறிஸ்து சாத்தானை தோற்கடித்த போது நாமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். அவருடைய வெற்றி நம்முடையதும் கூட. ''கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமாமே.'' (ரோமர் 5:17) இந்த நூற்றாண்டிலும் நம்முடைய ஆளுகை கிறிஸ்துவுடனே கூட ஆளுகை செய்வதில் எந்த தடையுமில்லை என்பதை கவனிப்போம். தூரத்தில் உள்ள எதிர்காலத்தில் ஆளுகை செய்வதல்ல. இந்த வாழ்க்கையிலேயே நம்முடைய ஆளுகையை செயல்படுத்த முடியும். இந்த வாழ்க்கையிலேயே நம்முடைய ஆளுகையையும், அதிகாரத்தையும் பயிற்சிவிப்பதின் மூலமாக நம்முடைய எதிர்கால பங்கிற்கென்று நம்மை ஆயத்தப்படுத்தி தகுதிப்படுத்த முடியும்.

பாவத்தின் மேல் நாம் ஆளுகை செய்வோம்

பாவத்தின் மேல் ஆளுகை செய்யத்தக்கதாய் தேவன் நம்மை புது சிருஷ்டியாக்கி இருக்கிறார். ஆளுகை என்பது: ஏதோ ஒன்றை கைப்பற்றும், தேற்கடிக்கவும், நமக்குக் கீழ்ப்படுத்தி அதின் மேல் ஆளுகை செய்யும் வல்லமை. இது பாவத்தின் மேல் ஆளுகை செய்வதற்காகவே கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்டது என்பது சரியாகும். இதனாலேயே பவுல் ''பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது'' என்று கூறினார். (ரோ. 6:14) பாவம் உங்களை ஆளுகை செய்யாது ஆனால் நீங்கள் பாவத்தை ஆளுகை செய்வீர்கள். ''பாவத்திற்கு கீழ்ப்படியத்தக்கதாக சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தையும் பாவம் ஆளுகை செய்யாதிருப்பதாக.'' (ரோ. 6:12) பாவம் உங்கள் மேல் ஆளுகை செய்ய முடியாது. நாம் பாவத்தின் மேல் ஆளுகை செய்வோம். அதுவே நமக்குக் கொடுக்கப்பட்ட உரிமையும், சலுகையும் ஆகும். நம்முடைய கடந்த கால பாவம் மன்னிக்கப்பட்டதுமல்லாமல் பாவத்தை நாம் மேற்கொள்ள நீதியின் வரமும் கர்த்தரால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மைக் கைப்பற்றும் பாவத்தை விட நாம் மேலானவர்கள். பாவம் மரணம் ஆகிய பிரமாணங்கள் பூமியிலே இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நம்மை பாவம், மரணம் என்பவைகளிலிருந்து விடுதலையாக்கிற்றே! (ரோமர் 8:2)

நாம் பிசாசுகளின் மேல் ஆளுகை செய்வோம்

கிறிஸ்து சாத்தானுடைய வல்லமையின் மேலும் பிசாசுக்குரிய வல்லமையின் மேலும் அவனுடைய எல்லாப் போதனைகளுக்கும் மேலான அதிகாரத்தை செயல்படுத்தியது போல நமக்கும் அத்தகைய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். ஒரு காலத்தில் சாத்தான் நமக்கு எஜமானனாய் இருந்தான். இன்று நாம் அவனுக்கு எஜமானனாய் இருக்கிறோம். ''உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களுக்குள்

இருக்கிறவர் பெரியவர்.'' (1 யோ. 4:4) ''சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது.'' (லூக்.10:19) ''என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்.'' (மாற்கு 16:17)

நம்முடைய சூழ்நிலைகளின் மேல் ஆளுகை செய்ய முடியும்

கிறிஸ்தவர்களாகிய நாம் விதிக்கு பலியானவாகள் அல்ல. சூழ்நிலைக்கு கீழானவர்களும் அல்ல. நம்முடைய வாழ்க்கையை வாய்ப்புகள் ஆளுகை செய்ய முடியாது. அவைகள் கர்த்தருடைய ஆளுகையின் கீழ் உள்ளது. கர்த்தர் நம்மேல் கொண்டுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதை தடை உண்டாக்கும்படி சாத்தான் வழி தேடுகிறான். ஆனால் அவ்வாறு செய்ய அவனுக்கு அதிகாரம் இல்லை. கர்த்தருடைய நோக்கத்தை தன்னுடைய வாழ்க்கையில் நிறைவேற்ற முடியாதபடி பவுலுக்கு அடிக்கடி தற்காலிக தடை ஏற்பட்டது. ஆனால் அவன் உடனடியாக சாத்தானுடைய நோக்கம் மற்றும் திட்டங்களில் இருந்து ஜெயம் பெற்றான். வாழ்க்கை என்பது எப்பொழுதும் எளிதான நடைபாதை அல்ல.

அநேக நேரங்களில் பிரச்சினைகளும் தடைகளும் நம்மை பயமுறுத்தி நமக்குள் சோர்வையும் தடையையும் உண்டாக்கலாம். நம்மை எதிர்க்கும் எல்லா சக்திகளுக்கும் மேலான ராஜரீக வல்லமை நமக்குள் உண்டு. விசுவாசத்தில் நாம் எழும்பி நம்முடைய சூழ்நிலைகளின் மேல் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள துவங்கவே கர்த்தர் விரும்புகிறார். பிரச்சனைகளை நீங்கள் சந்திக்கும் போது கர்த்தர் உங்களுக்கு ஆளுகை செய்ய கொடுத்த அதிகாரத்தை பயிற்றுவிக்க வாய்ப்பாகும். ஒவ்வொரு முறை நீங்கள் உங்கள் சூழ்நிலையை மேற்கொள்ளும் பொழுது உங்கள் ஆளுகையின் தன்மையை மேம்படுத்துகிறீர்கள். முழு வாழ்க்கையும் சவால் நிறைந்தது. தோற்கடிக்கப்பட்டவர்களாய் சோகத்தோடு நீங்கள் அமர்ந்திருக்க வேண்டாம். ''வாழ்க்கை என்பது உனக்கு மிஞ்சியது. உன்னால் எதுவும் செய்ய முடியாது'' என்று சத்துரு உங்கள் காதில் முணுமுணுக்க அனுமதிக்காதீர்கள். ''இவைகள் எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே'' (ரோமர் 8:37) என்பதை நாம் நினைவில் கொள்வோம். இயேசுவின் நாமத்தினாலே நாம் எழும்பி ஆளுகை செய்வோம்.

வியாதியின் மேல் நாம் ஆளுகை செய்ய முடியும்

இன்றைய நாட்களில் அநேக மக்கள் வியாதியஸ்தராகின்றனர். அதில் கிறிஸ்தவர்களும் அதின் ஆளுகைக்குள் வருகிறது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. நீங்கள் எங்கு வாழ வேண்டும் என்ற கர்த்தருடைய விருப்பத்திற்கு இது மாறானது ஆகும். வியாதியால் பீடிக்கப்படாதிருங்கள். ''நல்லது, எல்லோருமே சில நேரங்களில் வியாதியடைகின்றனர்'' என்று தவிர்க்க முடியாத படி இவ்வாறு கூறி உங்களை வியாதிக்கு ஒப்படைக்காது இருங்கள். கிறிஸ்து உங்கள் வியாதிகளை சுமந்தபடியால் நீங்கள் அதை சுமக்க வேண்டியதில்லை. நேர் மறையான விசுவாசத்தின் கீழாய் உங்களைக் கொண்டு வாருங்கள். சில வியாதியின் பயமுறுத்தலுக்கு எதிர்த்து நில்லுங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவைகளைக் கட்டுங்கள். அவைகள் உங்களை ஆளுகை செய்ய அனுமதிக்காமல் அவைகளை ஆளுகை செய்யும் சவாலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நாம் வாலாகாமல் தலையாவோம்

''இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக் கொள்ளவும், அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்க செவிகொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.'' (உபா. 28:14) இது ஒரு ஆர்வமான வேதாகம வாக்குதத்தம் ஆகும். இதன் அர்த்தம்: கர்த்தர் தம் மக்களை தோல்விக்கல்ல, ஜெயத்திற்கென்றே நியமித்திருக்கிறார்.

இந்த வெற்றியில் நாம் மகிழும்படி நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அவருடைய கற்பனையின் படி நடக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தை நமக்கு வெளிப்படுத்துவது: ''கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்.'' (சங். 27:1) ''உலகத்திலிருப்பவனைக் காட்டிலும் எனக்குள் இருப்பவர் பெரியவர்.'' (1 யோ. 4:4) ''கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிறவர்.''

(1 கொரி. 2:14) கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் என்பதை இங்கு நீ பார்க்கலாம். நீ தோல்விக்கு அல்ல ஜெயத்திற்கென்றே உருவாக்கப்பட்டவன். உன் மேல் ஆளுகை செய்ய அல்ல. நீ ஆளுகை செய்யவே உன்னை நியமித்திருக்கிறார்.

வாழ்க்கையில் நாம் எப்படி ஆளுகை செய்வது

சில கொள்கைகளை நாம் கைக் கொள்வதின் மூலமாக நம்முடைய ஆளுகை நிலைநிறுத்தப்படுகிறது. அந்த கொள்கைகளை வேதாகமம் நமக்கு தெளிவாக காட்டுகிறது. அது நாம் நடக்கக் கூடிய ஒன்றாய் இருக்கிறது. நம் வாழ்க்கையின் மூலமாக நாம் ஆளுகை செய்வது:

கர்த்தருடைய வார்த்தை

கர்த்தருடைய வார்த்தையின் படி சரியான நடத்தையே நம் வாழ்க்கையை ஆளுகை செய்யும் திறவுகோல் ஆகும். நம் வாழ்க்கையையும் அதன் உண்மையான நோக்கத்தையும் அறிந்து கொள்ளும் ஞானத்தின் ஊற்று உண்மையிலேயே கர்த்தருடைய வார்த்தை மட்டுமே ஆகும். அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை தேடி அலைகின்றனர். சிலர் சத்தியத்திற்குரிய காரியங்களை மட்டுமே அறிந்திருக்கின்றனர். ஆனால் வேதம் மட்டுமே முழு சத்தியத்தையும், அதாவது சத்தியத்தை மட்டுமே கொண்டிருக்கும் புத்தகம் ஆகும்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையின் வல்லமையினால் அகில உலகத்தையும் நிலை நிறுத்தினார். ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது 10 முறை ''உண்டாகக் கடவது'' என்றார். ஒவ்வொரு முறையும் அதற்கு சிறப்பான பலன் உண்டாயிற்று. அதே வார்த்தையின் மூலம் கர்த்தர் தொடர்ந்து பூமியிலே நிலை நிற்கிறார். (கொலோ. 1:17) கர்த்தர் இந்த உலகத்தை சிருஷ்டித்த போது சிருஷ்டியும் அவருடைய ஆளுமை தன்மைபடியே செயல்படும்படி நியமித்தார். இது கர்த்தருடைய உலகம். ஏனென்றால் அவர் இதை உருவாக்கியபடியால் அவை தொடர்ந்து நிலை நிற்க அவரையே முழுவதும் சார்ந்து இருக்க வேண்டியதாய் இருக்கிறது.

கர்த்தர் தாம் சிருஷ்டித்த ஒவ்வொன்றிற்கென்றும் பலவிதமான செயல்பாடுகளை நியமித்தார். அவர் ஸ்தாபித்த நட்சத்திரங்களும் மற்றவைகளும் அவர் நியமித்த நோக்கத்திலிருந்து மாறுபடவில்லை. (சங். 8:3) அவர் நியமித்த எல்லைக்கு கீழ்ப்படிந்து சமுத்திரங்கள் செயல்படுகின்றன. (நீதி. 8:29) அவர் தமது வார்த்தையின் மூலமாக பூமியை ஆளுகை செய்கிறார். அவருடைய வார்த்தையின் மூலமாக அவருடைய உன்னத அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார்.

இந்த நியமத்தை இயேசு கிறிஸ்து உறுதிபடுத்தினார். அவரும் கர்த்தருடைய வார்த்தையை உபயோகப்படுத்தி ஆளுகை செய்தார். ''நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாய் இராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாய் இருக்கிறது'' (யோ. 14:24) என்று இயேசு கூறினார். வனாந்திரத்தில் சாத்தானை எதிர்த்தபோது இயேசு கர்த்தருடைய வார்த்தையை மேற்கோள் காட்டியே அவனை தோற்கடித்தார். இருளின் அதிகாரத்தை நாம் மேற்கொள்ளவும், ஒளியின் ராஜ்ஜியத்தை நிலை நிறுத்தவும் நமக்கு ஜெயத்தைத் தரும் ஆயுதம் கர்த்தருடைய வார்த்தை என்கிற ஆவிக்குரிய பட்டயமாகும்.

நாமும் கர்த்தருடைய வார்த்தையாகிய அதிகாரத்தின் மூலம் ஆளுகை செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கையை எப்படி ஆளுகை செய்வது என்ற நம்பிக்கைக்குரிய ஊற்று வேதமே ஆகும். ஜீவனுள்ள ராஜ்ஜியத்தின் தொடர்பான எல்லா காரியங்களையும் தத்துவங்களையும் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தையால் போதிக்கப்பட்டு இரவும் பகலும் அதை தியானிக்க வேண்டும். நமக்குள் அவருடைய ராஜ்ஜியத்தின் ஆளுகையை நிலை நிறுத்த நம்முடைய சிந்தையை, நடத்தையை, உரையாடலை காக்கிறவர்களாய் இருக்க வேண்டும். இவைகள் நம் வாழ்க்கையை ஆளுகை செய்யும் செயல்பாடுகளாக இருக்கிறது. ஜீவனுள்ள ராஜ்ஜியத்தின் வல்லமையை நமக்குள் விடுவிக்கிறதாய் இது இருக்கிறது.

சர்வ அதிகாரம்

கிறிஸ்து கல்லறையை விட்டு உயிரோடு எழுந்த போது அவர் கூறிய அறிக்கை ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.'' (மத் 28:18) வானத்திற்கும்

பூமிக்கும் மேலான ''உன்னத அதிகாரம் இப்பொழுது'' அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. லூக்.10:19 கிறிஸ்துவின் வார்த்தையின் வெளிச்சத்தில் இது எவ்வளவு உண்மையானது என்பதை நாம் அறிவோம். ''சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். பிதாவானவர் கிறிஸ்துவுக்கு கொடுத்த அதே வல்லமையை கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு / தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை பேசுவதின் மூலமாக இந்த அதிகாரத்தை நாம் வெளிப்படுத்த முடியும்.

இதே அதிகாரத்தைக் குறித்து சாத்தான் லூக். 4:6ல் குறிப்பிடுகிறான். சாத்தான் இந்த அதிகாரத்தை கிறிஸ்துவுக்கு அளிப்பதாக கூறுகிறான். நமது ஆண்டவர் அவனுடைய விதிமுறைக்கு உட்பட்டு அதை ஏற்க மறுத்து விட்டார். அவ்வாறு செய்திருப்பாராயின் அவனோடு ஒத்துப்போகிறவராய் இருந்திருப்பார். ஆனால் நமது ஆண்டவர் அதற்கு பதிலாக அவனை சிலுவையில் தோற்கடித்து அவனுடைய அதிகாரத்தைப் பறித்தார். இப்பொழுது வல்லமையும் அதிகாரமும் கிறிஸ்துவினுடையதாய் இருக்கிறது. அதை அவர் தமது சுதந்தரர்களோடே பகிர்ந்து கொள்கிறார். (ரோமர் 8:17) ஆகையால் அவர்களும் அவரோடே கூட ஆளுகை செய்ய முடியும்.

நம்முடைய வார்த்தையில் அதிகாரம்

கர்த்தருடைய அதிகாரத்தின் சத்தத்தோடு நாம் பேசும் போது விசுவாசிகளாகிய நாமும் அந்த சிறந்த அதிகாரத்தை கிறிஸ்துவோடு கூட பெற்றுக் கொள்ளும்படி கிறிஸ்து நமக்கு அதை பகிர்ந்தளிக்க அனுமதித்திருக்கிறார். கிறிஸ்து அதிகாரம் உள்ள சத்தத்தோடே பேசினார். நாமும் அவ்வாறே செய்ய விரும்புகிறார். அவர் அத்திமரம் பட்டுப்போகும்படி கட்டளை இட்டார். (மாற்கு 11:12-24) அது அவ்வாறே ஆயிற்று. மறுநாள் அதை சீஷர்கள் கண்டபோது அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

வார்த்தையின் மூலம் நடைபெற்ற அதிசயத்தை யோபு 22:21-30 வரையுள்ள வசனங்களில் உள்ள தனித்துவமும் ஆச்சரியமும் நிறைந்தவற்றை நாம் இங்கு அறிமுகப்படுத்தலாம். முதலாவது யோபு கர்த்தர் மேலுள்ள ஆழமான நம்பிக்கையை மேம்படுத்தும்படி உற்சாகப்படுத்துகிறார். பின்பு அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்வதின் மூலம் கிடைக்கும் எண்ணற்ற சுதந்திரத்தை விவரிக்கிறார். (வச. 23-30) அத்தகைய சலுகைகள் ஆவிக்குரிய அதிகாரத்தினால் நமக்கு கிடைக்கிறது. ''நீர் ஒரு காரியத்தை நிர்ணயம் பண்ணினால் அது உமக்கு நிலைவரப்படும்.'' அதன் அளவு என்னவெனில்: மிகுந்த அதிகாரத்தோடு பேசப்படும் நபர் மூலம் வார்த்தை அல்லது கட்டளை ஆகும். இத்தகைய பாக்கியத்தை கர்த்தர் நமக்கு தருகிறார், நாம் கர்த்தருடைய நாமம் மற்றும் அதிகாரத்தில் ஒன்றைக் கட்டளை இடும் போது அதை நமக்கு நிலைநிறுத்துகிறார். ''அவன் சொன்னபடியே ஆகும்.'' (மாற்கு 11:23)

அநேக கிறிஸ்தவர்கள் ''அறிக்கையிடுதல்'' என்பதை தங்களுடைய பாவம், பெலவீனம், இயலாமை ஆகியவற்றை அறிக்கையிடுவதே என்று எண்ணுகின்றனர். நாம் நேர்மறையான காரியங்களை அறிக்கையிடுவதின் மூலம் நம் வாழ்க்கையில் வல்லமையை பெற்றுக் கொள்வதை கர்த்தர் விரும்புகிறார். வேதத்தில் ஒரு வார்த்தை அறிக்கையிடுதல் என்பதை கிரேக்க மொழியில் ''ஹோமோலாஜியோ'' என்று மொழி பெயர்க்கிறது. இதின் அடிப்படை அர்த்தம் ''சொல்கிற வார்த்தையின் படியே'' நடக்கிறது. கர்த்தர் கூறிய வார்த்தையின் படியே நாம் அறிக்கை இடும் போது மிகப் பெரிய அவருடைய அதிகாரத்தின் வல்லமையை நாம் விடுவிக்கிறவர்களாய், கிறிஸ்துவோடுகூட நம் வாழ்க்கையில் ஆளுகை செய்ய நம்முடைய அதிகாரத்தை வெளிப்படுத்த வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தேவன் நமக்கு கூறி இருக்கிறார். எபேசியர் ஒன்றாம் அதிகாரம் நாம் ''அதே காரியத்தை பேசும் போது'' (ஹோமோலாஜியோ) அதே ஆசீர்வாதங்கள் நமக்குள் கிரியை செய்து நம்முடைய வாழ்க்கையை வல்லமையுடையதாய் மாற்றுகிறது.

விசுவாசம்

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்.'' (எபி. 11:6) ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.'' (எபி. 10:38) ''விசுவாசம் நமக்குள் கிரியை செய்யாவிட்டால் கர்த்தர் நமக்காகப் பேசின வார்த்தைகளில் ஒரு பலனும் இராது. விசுவாசத்தின் மூலம் காரியங்களை

செயல்படுத்தும் முறை விருதாவாய் இருக்கும். கர்த்தர் என்ன கூறினாரோ அதை வெறும் பேச்சில் மட்டுமே கூறிக் கொண்டிராமல் முழு ஆத்துமாவோடும் காத்தர் என்ன பேசினாரோ அதற்கேற்றவாறு விசுவாச கிரியை செய்ய வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை இறுதியும் நிறைவாயும் ஏற்றுக் கொள்வதே விசுவாச தன்மை ஆகும். ஆகவே அது ஏற்கனவே செய்து முடிந்து விட்டது போல் நாம் பேசி கிரியை செய்ய வேண்டும். நமது வெற்றியைக் குறித்த நிச்சயம் நாம் பயிற்றுவிக்கும் விசுவாசத்தைச் சார்ந்ததாகும். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (1 யோ. 5:4) ஆணும் பெண்ணம் விசுவாசத்தினால் தங்கள் வாழ்க்கையில் ஆளுகை செய்கிறவர்களாயும் அவருடை ராஜரிகத்தை வெளிப்படுத்தும்படி முடிவில்லாத அவருடைய ராஜரீக காலத்தில் ஆணும் பெண்ணும் விசுவாசத்தின் மூலமாக ஆளுகை செய்ய முடியும்.

நாம் கிறிஸ்துவோடு கூட ஆளுகை செய்வோம்

"அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டு கொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும், நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே." (ரோமர் 5:17) "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்ஜியங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்ஜியம் நித்திய ராஜ்ஜியம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்." (தானி. 7:27) "எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்." (வெளி. 5:10)

கர்த்தர் பரிசுத்தவான்களுக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்ததற்கு ஒரு காரணம் மேசியா இயேசுவின் நித்திய ராஜ்ஜியத்தில் ஒரு நாளில் அவரோடே கூட பூமியில் ஆளுகை செய்ய அவர்களை ஆயத்தப்படுத்தவே ஆகும். நம்முடைய விசுவாசத்தையும், அதிகாரத்தையும் தற்சமயம் பயிற்றுவிப்பது அவர் பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் ஆளுகை செய்யப் போவதால் அந்த கர்த்தருடைய ராஜாங்கத்தில் வருங்காலத்தில் நாம் நித்திய பங்கு வகிக்க நம்மை ஆயத்தப்படுத்தவே ஆகும். நம்முடைய குணத்தையும் ஆவிக்குரிய முதிர்ச்சியையும் மேம்படுத்துவதில் கர்த்தர் ஏன் ஆர்வமாய் இருக்கிறார் என்பதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

கிறிஸ்துவோடு கூட பாடுபடுவது அவரோடு கூட ஆளுகை செய்ய நம்மை ஆயத்தப்படுத்தும்

"அவரோடே கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்." (2 தீமோத். 2:12) இந்த வேத வார்த்தை அநேக வருடங்கள் எனக்குள் குழப்பத்தை உண்டுபண்ணியது. எப்படி கிறிஸ்துவோடு கூட பாடுபடுவது உண்மையிலேயே ஒரு மனிதனை அவரோடு கூட ஆளுகை செய்ய தகுதிபடுத்தும் என்பது என்னால் விளங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது. இது ஒரு வகையான ஈடு செய்யக் கூடிய காரியம் என்று நான் நினைத்தேன். அதாவது அவரோடு கூட பாடுபடுவதால் அவரோடு கூட ஆளுகை செய்வது என்பது அதற்கு கிடைக்கும் கூலியாக நான் நினைத்தேன். இது கூட எனக்கு சரியான விளக்கமாய் காணப்படவில்லை. மற்றொரு வேத வார்த்தையை ஒரு நாள் நான் படிக்கும் வரை இது எனக்கு குழப்பமாகவே இருந்தது. ஏற்கனவே இதை அநேகந்தரம் படித்திருந்தும் இந்த குறிப்பிட்ட காரியத்தை கவனிக்க தவறிவிட்டேன். அந்த வசனம் எபி. 5:8. "அவருடைய குமாரனாய் இருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு" உடனடியாக ஆவியானவர் எனக்குள் உணர்த்தி கூறியது, இந்த பாடுகளே 2 தீமோத். 2:12ல் கூறப்படுகிறது - "பாடுகள் நமக்கு கீழ்ப்படிதலை கற்றுத் தருகிறது." பின்பு நான் இந்த வார்த்தையை படித்துப் பார்த்தேன். இந்த பாடுகள் நமக்கு ஆளுகை செய்வதற்கு தகுதிப் படுத்தாமல் இந்த பாடுகளின் மூலமாய் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்கிறோம். ஏனென்றால் <u>கர்த்தருடைய ராஜ்ஜியம் இரண்டு விதிகளை அடிப்படையாய்க் கொண்டது.</u>

1. கர்த்தருடைய அதிகாரம்
2. நம்முடைய கீழ்ப்படிதல்

கீழ்ப்படியாமையினாலே ஆதாம் ஆளுகை செய்யும் உரிமையை இழந்தான். கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினாலே அவர் சாத்தானை மேற்கொள்கிறவராகி அவருடைய ராஜ்ஜியத்தை திரும்ப பெற்றார். வருகிற கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தில் அவரோடே கூட ஆளுகை செய்ய நம்மைத் தகுதி படுத்தும் படி கீழ்ப்படிந்து நாம் நடக்க வேண்டும்.

ராஜ்ஜியத்திற்குரிய விதி முறைகள்

ஒவ்வொரு குடிமகனும் கையாளத்தக்கதாய் ஒவ்வொரு ராஜ்ஜியத்திற்கும் சட்டங்கள் இருக்கும்.

ஒரு ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட அடிப்படை விதிகள்:

A. ஒரு ராஜா அல்லது ஒரு உன்னத தலைமை
B. மக்கள் அல்லது அவர் ஆளுகை செய்ய ஒரு கூட்டம்
C. அவர் ஆளுகை செய்ய சில விதிகள் அல்லது சட்டங்கள்

கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கென்றும் சில கட்டளைகள் உண்டு. அவைகளை கைக்கொள்ளும் போது ஜீவனுள்ள ராஜ்ஜியத்தில் மகிழ்ந்திருக்ககலாம். மோசேயின் கற்பனைகளைப் போல அவை ஆக்கினைத்தீர்ப்பிற்கென்று வற்புறுத்தாமல் அவைகளை உடைப்பதற்கான அவருடைய ராஜ்ஜியத்தின் கற்பனைகள் உள்ளது. அவைகள் வாழ்க்கைக்குரிய விதிமுறைகளாய் கர்த்தருடைய வார்த்தை, அவருடைய ராஜ்ஜியத்தில் உள்ள குடிமக்களை கட்டத்தக்கதாயும் உள்ளது. ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்று பவுல் நம்மை அழைக்கிறார். (கலா. 5:16) மேலும் அவர் ஆவிக்கேற்றபடி நடக்கும் போது அவருடைய ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்வோம் என்கிறார். (கலா. 5:21) இந்த கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படியாவிட்டால் நாம் ஆவியில் பாடுபடுவோம். கர்த்தரோடுள்ள நம்முடைய அனுதின வாழ்க்கையில் சந்தோஷம், ஆசீர்வாதம், சமாதானம் ஆகியவற்றை இழப்பதே நம்முடைய அனுபவமாய் இருக்கும். ஆகவே, நாம் எப்படி வாழ வேண்டும் என்ற அவருடைய ராஜ்ஜியத்திற்குரிய விதிகளை கண்டுபிடித்து அவற்றின்படி நடத்தல் அவசியமாய் இருக்கிறது. கர்த்தருடைய கற்பனை "அது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாய் இருக்கிறது." (சங். 19:7).

மத்தேயு 5,6,7-ம் அதிகாரங்களில் தம்முடைய ராஜ்ஜியத்திற்குரிய சட்டங்களை இயேசு ராஜா நமக்கு அறிவிக்கிறார். இந்த அதிகாரங்களை இன்னும் அதிகமாய் அறிந்து கொள்ள திரும்பவும் ஒரு முறை வாசிக்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். இங்கு நாம் முழுமையாய் பரிசோதிக்க முடியாவிட்டாலும் சுருக்கமாய் இதைக் குறித்துப் பார்க்கலாம்.

1. நியாயமில்லாத கோபத்திற்கு எதிரான கற்பனை (மத். 5:21-26)

நியாயமான கோபங்கள் உண்டு. உதாரணமாக வேதத்தில் அநேக முறை பலவிதமான மக்கள் மேல் கர்த்தர் கோபங் கொண்டதை நாம் பார்க்கிறோம். அத்தகைய கோபத்தை அடிக்கடி கர்த்தர் நீதி செய்தலாய் அழைக்கப்படுகிறது. இது அவருக்குப் பிரியமில்லாததை அவருடைய வெறுப்பை, கசப்பு, எரிச்சல், குற்றம் சாட்டுதல் இதனால் ஏற்படும். கோபத்தை ராஜ்ஜியத்திற்குரிய கற்பனை தடை செய்கிறது. இத்தகைய கோபம் ஒரு மனிதனுக்கு எதிராய் செயல்பட்டு அவனை நாசப்படுத்துகிறது. ஒருவனை அவன் கட்டுப்பாட்டை இழக்கச் செய்யும் அவன் கோபத்தை கர்த்தர் வெறுக்கிறார்.

2. உள்ளான பரிசுத்தத்திற்கான கட்டளை (மத். 5:27-32)

விபசாரம் செய்யாதிருப்பாயாக என்று மோசேயின் கற்பனையில் கூறப்படுகிறது. (யாத். 20:14) ராஜரீகத்தின் கற்பனை அதைவிட மேலானது. அது மோசேயின் கற்பனையை மாற்றாமல் அதை மேம்படுத்திக் கூறுகிறது. "நான் உங்களுக்கு சொல்லுகிறேன். ஒரு ஸ்தீரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று" என்று (மத். 5:28) இயேசு கூறினார். இந்த பிரச்சினையை சரிபடுத்தும்படி முதலாவது எல்லா பரிசுத்தத்தைக் குலைக்கும் காரியங்களுக்கு விரோதமான காரியங்களைக் கூறி பின்பு அதனால் ஏற்படும் விளைவுகளையும் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து நேரடியாக செய்யப்படும் பாவம் அல்லது கண்களினால் செய்யப்பட்ட பாவம் என்று வேறு பிரிக்கவில்லை. பிரச்சினையின் உண்மையான காரணி கண்களோ அல்லது கைகளோ இல்லை. கைகளையும் கண்களையும் செயல்படுத்தத் தூண்டும் மனதின் நோக்கத்தையே அவர் கூறுகிறார். "உங்கள் இருதயத்தைப் பரிசுத்தப்படுத்த எவையெல்லாம் அவசியம் என்பதை அறிந்து அதை திட்டமாய் செய்யுங்கள். நீங்கள் பாவத்தோடு விளையாடினால் அது உங்களை அழித்து விடும்."

3. நேர்மை மற்றும் நிலைத்தன்மைக்குரிய கற்பனை (மத். 5:33-37)

ராஜ்ஜியத்தின் குடிமகன் தன் வார்த்தையில் உண்மை உள்ளவனாய் இருக்க வேண்டும். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் அவன் கூற வேண்டும். அவனுடைய வார்த்தை உண்மையாய் இருந்தால் மக்கள் அவன் மேல் நம்பிக்கை வைத்து அவன் வார்த்தைகளை நம்புவதற்கு கற்றுக் கொள்வார்கள். அவன் உண்மை உள்ளவனாயும், நிலைவரமானவனாயும் இருக்க வேண்டும். மற்றவரை சந்திப்பதற்கு நேரம் பொருத்திக் கொள்வதிலும் அந்த நேரத்தை சரியாய் காத்துக் கொள்வதிலும் நாம் இந்த உண்மைத்துவத்தை உபயோகிக்க வேண்டும். நமக்கு அனுகூலம் இல்லாத சூழ்நிலையிலும் கொடுத்த வாக்கைக் காக்க வேண்டும்.

4. பதில் செய்வதற்கான கற்பனை (மத். 5:38-42)

பதில் செய்யும் ஆவி நமக்குள் இயல்பாகவே இருக்கும் ஒன்று. ஆகையால் கிறிஸ்துவே இதிலிருந்து விடுதலையாக்க வேண்டும். இயேசுவே இதற்குரிய உன்னத உதாரணம். ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நிதானமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.'' (1 பேதுரு 2:23) நாமே நியாயம் தீர்க்காமல் அதை கர்த்தரே செய்ய அனுமதிக்க வேண்டம் என்று இயேசு நம்மை உற்சாகப்படுத்துகிறார். ''பழி வாங்குதல் எனக்குரியது; நானே பதில் செய்வேன்.'' (ரோமர் 12:19) அவர்களை கர்த்தர் கையாளும்படி அனுமதித்து விட்டு நாம் செய்ய வேண்டியது அவர்களுக்கு (எதிரிகளுக்கு) அன்பு பாராட்டுவதும், நன்மை செய்யவதுமே ஆகும். ராஜ்ஜியத்திற்குரிய குடிமக்கள் தீமைக்கு பதில் செய்ய மாட்டார்கள். தங்கள் அயலானுக்கு விரோதமாக கற்பனையை மீற மாட்டார்கள். எப்படித் தன் எதிரியை ஆசீர்வதிக்கலாம் என்று வகை தேடுகிறார்கள்.

5. பூரண அன்பிற்கான கற்பனை (மத். 5:43-48)

இந்த கற்பனையை நிறைவு செய்வதை வெளிப்படுத்தும் ஒரே வார்த்தை - ''அன்பு''. (ரோமர் 13:8-10) எல்லா மனித அன்பின் எல்லையையும் தாண்டிச் செல்லக் கூடியது ராஜரீக அன்பு. மனுஷீக அன்பு அழிந்து போகும் போது இது வெற்றி சிறக்கிறதாய் இருக்கிறது. ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.'' (மத். 5:44) ராஜரீக அன்பினால் இது ஒருவனால் செய்யக் கூடிய காரியம். கர்த்தர் அன்பாய் இருக்கிறவரானபடியால் அன்பு ஒரு மனிதனை கடவுளைப் போலாக்கும். (1 யோ. 4:8)

6. சரியான நோக்கத்திற்கான கற்பனை (மத். 6:1-18)

சரியான நடக்கையும், செயல்களையும் மதம் அதிகமாக வற்புறுத்துகிறது. ஆனால் நமது ராஜா உள்ளான நோக்கத்தில் மிகவும் அக்கறை கொள்பவராய் இருக்கிறார். நான் செய்யும் காரியங்களை நோக்கம் என்ன? என் நோக்கம் தூய்மையானதா? சரியான காரணத்திற்காக செயல்படுகிறேனா? மத சடங்குகளைச் செய்வதில் பரிசேயரும் சதுசேயரும் சிறப்புமிக்கவர்கள். அவைகளை மிகவும் சரியாக செய்வார்கள். ஆனால் அதன் நோக்கம் சரியானவை அல்ல. அவர்களுடைய நீதியைக் காட்டிலும் உங்கள் நீதி அதிகமாய் இருக்க வேண்டும். (மத். 5:20) கர்த்தருடைய ராஜ்ஜியத்தில் நான் சரியான, தூய்மையான, நேர்மையான நோக்கத்தோடு செயல்படுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

7. கண்காணி பொறுப்பிற்கான கற்பனை (மத். 6:19-34)

ராஜ்ஜியத்தின் குடி மக்களாகிய நாம் நம்முடைய உடைமைகளை ராஜாவிற்கென்று ஒப்படைக்கிறவர்களாய் இருக்கிறோம். நமக்கென்று சொந்தமாய் எதுவும் வைத்திராமல் அவருடைய ''அன்பிற்கு மட்டுமே அடிமைகளாய்'' இருக்கிறோம். நம்முடையவை அனைத்தும் கிறிஸ்துவுக்குரியதாய் இருக்கிறது. இப்பொழுது நாம் ராஜாவுக்காக என்ன கொண்டு

இருக்கிறோமோ அதற்கு கண்காணியாக மட்டுமே இருக்கிறோம். கண்காணியின் பொறுப்புக்கான திறவுகோல் வசனம். (மத். 6:21) ''உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். நம்முடைய பணத்தை நாம் எதில் முதலீடு செய்திருக்கிறோமோ அதுவே நம்முடைய இருதயம் எங்கு இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்.'' நாம் பூமிக்குரிய காரியங்களில் முதலீடு செய்திருந்தால் பூச்சி, துரு, திருடர் அந்த முதலீட்டை அழிக்க நேரிடும். நித்திய ராஜ்ஜியத்திற்கென்று நம்முடைய பொக்கிஷங்களை முதலீடு செய்திருந்தால் அது நித்திய ஆதாயத்தை உண்டாக்கும்.

8. சரியான முன்னுரிமைக்குரிய கற்பனை (மத். 6:24-34)

வெற்றிகரமான ஜீவனுள்ள ராஜ்ஜியம் அதிகமாக நம்முடைய சரியான முன்னுரிமையையே சார்ந்து இருக்கிறது. அதாவது முதலாவது மிக முக்கியமான காரியத்தில் நம்முடைய கவனத்தை செலுத்துவது. நமது முதன்மையான காரியத்தை இயேசு மிகத் தெளிவாக வகையறுக்கிறார். ''முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடுங்கள். பின்பு ''இவைகளெல்லாம்'' - உணவு, பானம் மற்றும் உடை முதலியன கூட கொடுக்கப்படும்.'' உங்களது எண்ணம விருப்பம் செயல் ஆகியவற்றில் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கும் அவருடைய நீதிக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். அதுவே உங்கள் வாழ்க்கையின் முதன்மையான இடத்திற்கு கொண்டு வர வேண்டும். மற்றவை எல்லாவற்றையும் இரண்டாம் இடத்திற்கு மாற்ற வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய ராஜ்ஜியத்தை நேசியுங்கள். அந்த நோக்கத்திற்கென்று ஒப்படைப்போடும் தியாகத்தோடும் ஊழியம் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அவர் உங்களுக்கு அளிப்பார்.

9. உங்கள் சகோதரனை சகித்துக் கொள்வதற்கான கற்பனை. (மத். 7:16)

தன்னுடைய சொந்த பெலவீனம் தவறுகள் எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் அதை கணக்கில் கொள்ளாமல் உலகப்பிரகாரமான மனிதர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கவும் குற்றஞ்சாட்டவும் செய்வர். அவர்களுடைய கண்ணில் உத்திரம் இருக்கும் போது மற்றவர்கள் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்துப் போட அடிக்கடி முயற்சிப்பர். தேவனுடைய ராஜ்ஜியத்தின் காரியம் இப்படிப்பட்டதல்ல. நம்முடைய சகோதரனை குற்றஞ்சாட்டுவது அல்லது கடிந்து கொள்ளக் கூடாதென்று இயேசு கூறுகிறார். மோ.ப்பெட் மொழி பெயர்ப்பில் ரோமர் 14:13ல் ''.... இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்ப்பதை நிறுத்துங்கள்'' என்று கூறுகிறது. இதற்காக நம் சகோதரனுடைய தவறுகளை அசட்டை செய்வது அல்லது அதைக் காணாமல் குருடரைப் போல் இருப்பது என்று அர்த்தம் அல்ல. அதைக் குறித்து அக்கறையற்று நாம் இருக்கக் கூடாது. இதின் அர்த்தம் அவர்களை குற்றஞ்சாட்டுவது அல்லது விமர்சிப்பதற்கு பதிலாக அன்போடும் மனதுருக்கத்தோடும் அவர்களுடைய பெலவீனத்தை மேற்கொள்ள உதவி செய்ய வழிகாணும் ஊழியத்தை செய்ய வேண்டும். நம்முடைய செயல் எதிர்மறையாய் இல்லாமல் நேர்மறையாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வாறே நாம் மற்றவர்களை நடத்த வேண்டும். ''நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீங்கள் மற்றவர்களை தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்.'' (மத். 7:2)

10. பகுத்து போதிப்பதற்கான கற்பனை (மத். 7:6)

பன்றிகள் மற்றும் முத்துக்களை குறித்த போதனை. நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற ராஜ்ஜியத்திற்குரிய உண்மைகளை இயேசு முத்துக்கள் என்று கூறுகிறார். சிப்பிக்குள் இருந்து முத்து உருவாகிறது. இந்த சத்தியங்கள் பரிசுத்தமும் விலையேறப் பெற்றது. இந்த சத்தியத்தை உங்களுக்குள் கட்ட மிக ஆழமான பாதையின் வழியாக கர்த்தர் உங்களை கொண்டு சென்றிருக்கிறார். அவைகள் பரிசுத்தமும், தூய்மையும், தனித்தன்மையும் வாய்ந்தது. ஆகவே அவைகளை உங்களை சுற்றி இருக்கிற தகுதி அற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாதிருங்கள். ஏனென்றால் அவை நாய்களுக்கு முன் பரிசுத்தமான காரியங்களை போடுவதும் அல்லது

பன்றிகளுக்கு முன் முத்துக்களைப் போடுவதற்கும ஒப்பானது. அத்தகைய விலையேறப் பெற்ற சத்தியங்களை கனத்துக்குரியதாய் எண்ணுங்கள்.

தகுதி உள்ளவர்களிடம் மட்டுமே ராஜ்ஜியத்திற்குரிய செய்திகளை பகிர்ந்து கொள்ளுங்கள். ராஜ்ஜியத்திற்குரிய ரகசியங்கள் மிகவும் குறிப்பாய் உள்ளது. ஆகவே முதிர்ந்த உண்மைகளை முதிர்ச்சி அடையாத மக்களுக்கு வெளிப்படுத்த முயற்சிக்காதீர்கள். ராஜ்ஜியத்திற்குரிய ஆழமான சத்தியங்களை யாருக்கு, எப்போது, எப்படி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை ஆவியானவர் தாமே உங்களுக்கு வெளிப்படுத்துவாராக. மறுபடி பிறக்காத மனிதன் ராஜ்ஜியத்திற்குரிய காரியங்களை காண முடியாது என்று நினைவு கூறுங்கள். அப்படி ஒன்று உண்டு என்பதைக் கூட அவனால உணர்ந்து கொள்ள முடியாது.

11. ஜெபத்திற்கான போதனை (மத். 7:7-12).

நிலையாய், தொடர்ச்சியாக செய்வதும் அதில் மேம்படுவதும் ஜெபத்திற்கான போதனையில் இணைந்தது. பின்வருமாறு இயேசு இதை கோடிட்டு காட்டுகிறார்:

1. "**கேளுங்கள்,** அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்." இது ஜெபத்தின் எளிமையான வடிவம். ஸ்தோத்திரத்தோடே நம்முடைய விண்ணப்பத்தை கர்த்தருக்கு தெரியப்படுத்துவது.
2. "**தேடுங்கள்,** அப்பொழுது கண்டடைவீர்கள்" ஜெபத்தில் கர்த்தரிடம் தெரிவிப்பதற்கு மேலான இது ஒரு ஆழமான நிலை ஜெபமாகும். கர்த்தரை தேடுவது என்பது ஜெபத்தில் ஊக்கமாய் தொடர்ந்து அவரை வற்புறுத்துவது ஆகும். உங்கள் முழு இருதயத்தோடும் தேடினால் அவரை கண்டடைவீர்கள். கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள் என்று தாவீது நம்மை அழைக்கிறார். இதற்கு எளிமையான ஜெபத்தைக் காட்டிலும் அதிகமான நேரம், ஒப்படைப்பு, தியாகம் ஆகியவை தேவை. இதனால் சாதாரண காரியங்களைக் பெறாமல மிகப் பெரிய வெகுமதிகள் பலனாய் நமக்குக் கிடைக்கும். மிக ஆழமான ஆவிக்குரிய காரியங்களை நாம் மேம்படுத்தும்படி இதையே நாம் விரும்ப வேண்டும்.
3. "**தட்டுங்கள்**" அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும். ஆவிக்குரிய காரியங்களின் முதிர்ச்சிக்கான ஆழமான நிலையை இது உங்களுக்கு அறிமுகப்படுத்தும். இது கதவை உடைக்கிறதாய் இல்லாமல் அதை திறக்கச் செய்கிறதாய் இருக்கிறது. இது வற்புறுத்தி கதவை உடைக்கிறதை விரும்புகிறதாய் இராது. அதற்கு பதிலாக அமைதலான விண்ணப்பதோடு தட்டுகிறதாய், முதிர்ச்சி அடையாதவர்கள் எல்லா சூழ்நிலையிலும் கதவு திறக்கப்பட வேண்டும் என்று எண்ணுவது போல் எண்ணாமல் கர்த்தரை புரிந்து கொள்கிறதாய் இருக்கிறது. காயப்படுத்தி அல்லது மூர்க்கத்தனமாக பதிலைப் பெறும்படி வற்புறுத்தாமல் அசைக்க முடியாத விசுவாசத்தோடு இருப்பதே ஆகும். உதாரணமாக தங்களை ஆள ஒரு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேலர்கள் வற்புறுத்தினார்கள். கர்த்தர் அவர்கள் விண்ணப்பத்திற்கு பதிலளிக்க விரும்பாத போது அவர்கள் ஆத்துமாவில் இளைப்படைந்தனர். அவர்கள் "அமைதலாய் கதவைத் தட்டி" அவர் எப்படி பதில் அளிக்கிறார் என்பதைப் பார்த்திருந்தால் எவ்வளவு ஞானமாய் இருந்திருக்கும்.

12. பலமான அஸ்திபாரத்திற்கான போதனை (மத். 7:24-27)

வெறுமனே கேட்கிறதாய் இராமல் "வார்த்தையின் படி வாழ்வதற்கான" அவசியத்தை இயேசு நமக்கு போதிக்கிறார். அவருடைய வார்த்தையை கேட்டு அதை நடைமுறைப்படுத்தாதவர்கள் மணலின் மேல் வீட்டைக் கட்டின மதியீனருக்கு ஒப்பிட்டு இயேசு கூறுகிறார். அதின் அஸ்திபாரம் நிலையாய் இல்லாததால் வாழ்க்கையில் புயல் அடிக்கும் போது அவை வீழ்ந்து போகிறது. இதற்கு எதிர்மறையாக இயேசுவின் வார்த்தையைக் கேட்டு அதின்படி வாழ்ந்து அதை நடைமுறைபடுத்தினவர்களை கற்பாறையின் மேல் வீட்டைக் கட்டின புத்தியுள்ளவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். அவர்களுடைய வாழ்க்கையின் அமைப்பு எல்லாப் புயலிலும் நிலைத்து நிற்கத்தக்கதாய் இருக்கும்.

> ‘‘இயேசு கூறிய வார்த்தைகளைக் கேட்க’’ அநேக கிறிஸ்தவர்கள் விரும்புகின்றனர். அதை மனதில் பதித்து நினைவில் வைத்துக் கொள்கின்றனர். கேட்பதற்கு புத்தியுள்ளவர்களாய் இருக்கின்றனர். ஆனால் அந்த போதனைகளை கைக் கொள்வதில்லை. நூற்றுக்கணக்கான சத்தியங்களைக் கேட்டு அவற்றில் ஒன்றையும் நடைமுறைப்படுத்தாது இருப்பதைக் காட்டிலும் ஒரு சத்தியத்தைக் கேட்டு அதைக் கைக்கொள்வதே சிறந்ததாகும்.

நிலையான அஸ்திபாரமாய் ராஜ்ஜியத்தைக் கட்ட இந்த போதனையின் படி வாழ்வது ராஜ்ஜியத்திற்குரிய நம்முடைய பங்கு ஆகும். இந்த போதனைகளை கைக் கொள்வதின் மூலம் எல்லா தேசங்களையும் ஆளுகை செய்யத்தக்கதாய் கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் வருகைக்கென்று கர்த்தர் நம்மை ஆயத்தப்படுத்துவார்.

தீர்க்கதரிசன வார்த்தையை பெறுவது எப்படி?

ஒரு தீர்க்கதரிசி உங்கள் மேல் கரங்களை வைத்து தீர்க்கதரிசன வார்த்தையை உங்களுக்குக் கொடுப்பது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கக் கூடும். எதிர்காலத்தில் உங்கள் வாழ்க்கையை வல்லமையாய் கர்த்தர் உபயோகப்படுத்தும்படி தீர்க்கதரிசனம் கூறுவது உங்களுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டாக்கும்.

ஆனால் அந்த வார்த்தையைக் கேட்டு நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள்? அந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி நடைபெறாதபடி நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? அல்லது முன்னிலைமையைக் காட்டிலும் உங்கள் வாழ்க்கை மோசமாய் போய்க் கொண்டிருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? விடுதலை மற்றும் ஜெயத்திற்கு பதிலாக சோதனைகளும் பாடுகளும் வரத் துவங்கும் போது என்ன செய்வீர்கள்?

தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பெற்றுக் கொண்ட பின் நீங்கள் கருத்தில் கொண்டு பின்பற்ற வேண்டியவைகள்:

அந்த வார்த்தை கர்த்தரிடமிருந்து வந்திருக்கிறதா மற்றும்

அதற்கு மதிப்பளித்து நீங்கள் என்ன செய்தீர்கள்.

தீர்க்கதரிசன வார்த்தையை பரிசோதியுங்கள்

முதலாவது எல்லா தீர்க்கதரிசன வார்த்தையையும் கர்த்தருடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப் பாருங்கள் - **வேதாகமத்தோடு**. உண்மையான தீர்க்கதரிசன வார்த்தையை வேதாகமம் **ஏற்றுக் கொள்ளாமல் இராது**. வேதாகமம் என்பது **உன்னத அதிகாரம்**. வேதாகமம் **ஒருபோதும் மாறாது**.

''தீர்க்கதரிசன'' வார்த்தை உங்களுக்கு ஒருவர் அளிக்கும் போது அது உங்களை கர்த்தரை விட்டு வேறு வழியில் நடத்துவதாக இருந்தாலும் எந்த வழியிலாவது வேத வார்த்தைக்கு கீழ்படியாமல் இருக்கச் சொல்லுமாகில் நீங்கள் **அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல் இருங்கள்.** ''உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும் சொப்பனக்காரனாகிலும் எழும்பி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் **சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக**; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்.'' (உபா. 13:1-3).

தீர்க்கதரிசியை மதிப்பிடுங்கள்

<u>பின்வருவனவற்றை முதலாவது நாம் கவனிக்க வேண்டும்:</u>

தீர்க்கதரிசியின் குணநலன் இயேசு கிறிஸ்துவின் குணநலனை ஒத்து இருக்கிறதா?

தீர்க்கதரிசியின் வார்த்தை அன்போடு பக்தி விருத்தி உண்டாக்குகிறதாய் இருக்கிறதா? அல்லது விமர்சிக்கிறதாயும் கடுமையாயும் இருக்கிறதா? தீர்க்கதரிசன வார்த்தை கேட்பதற்கு ''கடினமாய்'' இருக்கலாம். உங்களால் எளிதில் ஏற்றுக் கொள்ள கூடாத நடத்தையோ அல்லது செயலையோ செய்ய சொல்லி உங்களை சவாலுக்கு அழைக்கலாம். ஆனால் தீர்க்கதரிசன வார்த்தை இயேசு கிறிஸ்துவின் கிருபையோடும் அன்போடும் அளிக்கப்பட வேண்டும்.

தீர்க்கதரிசி உங்களுக்குத் தெரிந்தவராயும், தீர்க்கதரிசி என்று நிரூபிக்கப்பட்டவராயும் இருக்கிறாரா?

ஆவிக்குரிய அதிகாரத்தோடு, நேர்மை, தாழ்மை மற்றும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவராய் இருக்கிறாரா?

தீர்க்கதரிசன வார்த்தை சரியானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனென்றால் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களும் மாம்சத்தில் பேசக் கூடும். (மத். 16:21-23) கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறார்களா என்பதில் நாம் எப்போதும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றி இருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளா என்று சோதித்து அறியுங்கள்." (1 யோ. 4:1) தீர்க்கதரிசன வார்த்தையைப் பேசுகிறவர்கள் யார் என்பது பெரிதல்ல. உண்மையான கர்த்தருடைய வார்த்தை உங்கள் ஆவியில் ஒரு உறுதிப்பாட்டைக் கொண்டு வரும். உங்கள் மனதில் கூட இந்த தீர்க்கதரிசன வார்த்தையை நினைத்துப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் உங்கள் ஆவியில் அதை ஏற்றுக் கொள்ள கர்த்தர் ஏற்கனவே உங்களை ஆயத்தப்படுத்தி இருப்பார்.

உங்களைத் தாழ்த்துங்கள்

கர்த்தர் உங்களைக் கொண்டு செய்யப் போகும் பெரிய காரியத்தைக் குறித்த தீர்க்கதரிசனத்தை நீங்கள் பெறும் போது முதலாவது உங்கள் முழங்காலை முடக்குங்கள்! அந்த தீர்க்கதரிசன வார்த்தை கர்த்தரிடத்திலிருந்து வந்து இருக்குமாயின் அந்த கிரியை துவங்கத்தக்கதாக உங்கள் வாழ்க்கையையும், உங்கள் இருதயத்தையும் முதலாவது ஆயத்தப்படுத்துவார். உங்கள் மூலமாக புதிய காரியங்களை கர்த்தர் செய்ய விரும்பும்போது உங்களை பரிசுத்தம் படுத்தும்படியாக முதலாவது உங்களை சோதித்து தாழ்மைப்படுத்துவார். அவர் செய்ய நினைத்ததை தடை செய்யும்படி உள்ள காரியங்களை நீக்கி உங்கள் வாழ்க்கையை முதலாவது பரிசுத்தப்படுத்துவார்.

கர்த்தர் எப்போதும் முதலாவது நம்மை எவ்வாறு மாற்ற வேண்டும் என்பதையே கவனிப்பார். கர்த்தருடைய குணநலனை நாம் பிரதிபலிக்கும் போது நாம் அவருக்காக செயல்படும்படி நம்முடைய தேவைகளைப் புரிந்து கொண்டு நம்முடைய குறைகளை நிறைவாக்குவார். நம் வாழ்க்கை அவருடைய சாயலாய் மாறும்போது நம் இருதயம் விரும்புவதற்கு மேலான காரியங்களை நம் மூலமாக நமக்குள் இருந்து அவரால் செய்ய முடியும். (2 நாளா. 16:9)

பெரிய தீர்க்கதரிசன வார்த்தையை நீங்கள் பெறும் போது அதினிமித்தம் நீங்கள் பாடுகளையும் சோதனைகளையும் அனுபவிப்பீர்களாகில் நீங்கள் அந்த வார்த்தையை தவறு என்று நினைக்காதீர்கள் அல்லது நீங்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாய் செயல்படுகிறீர்கள் என்று நினைக்காதீர்கள். கர்த்தர் உன்னை தெரிந்து கொண்டார் என்பது அதிக நிச்சயம். (1 பேதுரு 5:10) கடினமான சூழ்நிலையிலும் கர்த்தருடைய மகிமைக்காக உன்னால் செயல்பட முடியும் என்று அவர் உன்மேல் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார். (2 கொரி. 4:17) கர்த்தர் உனக்குள் செயல்படுகிறவர் என்பதால் உன் மூலமாக கிரியை நடப்பிக்கப்பட உன்னை நீ அவருக்காக ஆயத்தம் செய்ய வேண்டும்.

கர்த்தருக்காக காத்திருத்தல்

"சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்." (2 கொரி. 13:16). நீ என்ன தீர்க்கதரிசன வார்த்தையைப் பெற்றுக் கொண்டாயோ அதை உறுதிப்படுத்தும் வரை காத்திரு. அந்த வார்த்தை உறுதிப்படும் வரை நீ ஒன்றும் செய்யாதே. கர்த்தர் உடனடியாக அதன் உறுதிப்பாட்டைத் தருவார். ஆனால் அந்த தீர்க்கதரிசனம் நிறைவேற அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியதிருக்கும். நாம் காத்திருக்கும் நாட்களில் நம்முடைய வாழ்க்கையில் உள்ள பெலவீனமான பகுதிகளை நமக்கு வெளிப்படுத்தும் வேளையாக கர்த்தர் அதை எடுத்துக் கொள்வார். நம்முடைய முழு பெலத்தோடும் அதைச் செய்ய விரும்பலாம் அல்லது அந்த நேரத்தில் கீழ்ப்படியாதிருக்க அல்லது கர்த்தருடைய ஆலோசனையை மறுக்க நேரிடலாம். சரியான அதிகாரத்தின் கீழ் நம்மைத் தாழ்த்த மறுக்கலாம் அல்லது நாம் எப்படி இருக்க வேண்டும் எனறு கர்த்தர் விரும்புகிறபடி மற்றவரை நேசியாமல் இருக்கலாம். கர்த்தருடைய அழைப்புக்கென்று காத்திருந்து விடுதலை பெற எவ்வளவு ஒப்படைப்போடு இருக்கிறோம் என்பதை கர்த்தர் சோதித்து அறியலாம். கர்த்தர் எப்போதும் நம்முடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அவருடைய விருப்பத்தின்படி நாம் செயல்பட அந்த நேரத்திற்கென்று காத்திருக்கும் பொழுது செயலாற்றுவார்.

கர்த்தருடைய வார்த்தையின் உறுதிப்பாட்டைப் பெற காத்திருக்க நமக்கு தாழ்மை தேவையாய் இருக்கிறது. உங்கள் இருதயம் தாழ்மையோடு காத்திருக்க வேண்டும். இது சாத்தானுடைய வஞ்சனையான வழி நடத்துதலிலிருந்து உங்களை காக்கும். நமது எதிராளியாகிய சாத்தான் நமக்குள் உள்ள மாம்சத்தையும் பெருமையையும் பயன்படுத்தி நம்மைத் தவறான திசையில் தவறான நேரத்திற்குள்ளாக நடத்த விரும்புவான். கர்த்தர் அவருடைய விருப்பத்தை உறுதிப்படுத்தும் வரை நாம் காத்திருக்க தாழ்மை உதவும்.

நான் எப்படி தெரிந்து கொள்வது?

உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் உண்மை என்று அறிந்து அந்த தீர்க்கதரிசன வார்த்தை என் வாழ்க்கையில் நிறைவேறுகிறது என்பதை எப்படி கண்டு கொள்வது? அந்த வார்த்தை கர்த்தரிடத்திலிருந்து வந்தது மற்றும் அவர் தம்முடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார் என்ற மிக முக்கியமான காரியத்தை நாம் ஞாபகத்தில் கொள்வோம். கர்த்தர் தம்முடைய வார்த்தையை அனுப்பின படியால் அதை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். ஆகையால் அந்த வார்த்தை எப்படி நிறைவேற்றப்படும் என்று நாம் அறிந்திருக்க வேண்டியதில்லை. (ஏசா. 55:11) பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம்மாற ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண். 23:19) நீங்கள் கர்த்தருக்கு பயந்து அவருடைய சித்தத்திற்கு இணங்கும் போது உங்களிடத்தில் ஞானம் ஆரம்பிப்பதற்கு இடமளிக்கிறீர்கள். (சங். 111:10 பார்க்கவும்) மேலும் நீங்கள் தாழ்மையாய் அதிக ஞானத்தை கர்த்தரிடம் கேட்கும் போது அதை உங்களுக்குத் தருவதாய் வாக்களித்திருக்கிறார்.

பொதுவாக தீர்க்கதரிசன வார்த்தை தனிப்பட்ட வழி நடத்துதலுக்குரிய விளக்கத்தையோ அல்லது கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்றக் கூடிய படிப்படியான திட்டத்தையோ அளிப்பதில்லை. அத்தகைய ஞானம் கர்த்தரிடமிருந்து நேரிடையாக வருவதாய் இருக்கிறது. நாம் கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக அந்த ஞானத்தைத் தேடி அவருடைய வழி நடத்துதலுக்காக ஜெபிக்க வேண்டும். தீர்க்கதரிசன வார்த்தை போதனையாக வருமாகில் கர்த்தர் நம்மிடத்தில் என்ன விரும்புகிறார் என்பதை ஏற்கனவே நாம் அறிந்ததை உறுதிப்படுத்துவதாக மட்டுமே இருக்கும்.

கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையைப் பெற்ற பின் நம்முடைய ஆவிக்குரிய தலைவர்களிடம் நாம் என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்கலாம். அது தீர்க்கதரிசனம் பெறுவதைக் காட்டிலும் வித்தியாசமானது. (சங். 1:1; நீதி. 11:14 பார்க்கவும்) ஆவிக்குரிய தலைவர்கள் கர்த்தருடைய வார்த்தையின் ஞானம் அல்லது அறிவைப் பெற்றவர்களாய் இருக்கலாம். ஆகவே அது நீங்கள் பெற்றுக் கொண்ட தீர்க்கதரிசன வார்த்தையின் படி எப்படி நடந்து கொள்ளலாம் என்று நீங்கள் உணர்ந்து கொள்ள உதவியாய் இருக்கும். உங்களுக்கு தீர்க்கதரிசனம் கூறிய தீர்க்கதரிசியும் ஞானம் மற்றும் அறிவின் வரத்தை உடையவராய் இருக்கலாம்.

நாம் நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியம் என்னவென்றால் கர்த்தருடைய வார்த்தையை நாம் வாசித்து, கீழ்ப்படிந்து ஜெபத்தில் அவரைத் தேடுவதினால் அனுதின வாழ்க்கைக்குரிய வழி நடத்துதல், நம் வாழ்க்கைக்குத் தேவையான விளக்கங்கள் எல்லாம் தேவனிடத்திலிருந்து வருவதாய் இருக்க வேண்டும்.

ஆபத்தான அடையாளங்கள்

நீங்கள் ஒரு சாலையில் தவறான பாதையில் போகும் போது அல்லது பாதுகாப்பற்ற தெருவில் திரும்பும்போது, அவ்வழியே போக வேண்டாம் என்று எச்சரிக்கும் அடையாளப் பலகை அங்கிருக்கும். அதைப் போலவே சில "ஆபத்தான அடையாளங்கள்" நாம் கர்த்தரை பின்பற்றுவதற்கு பதிலாக மாம்சத்தின் வழியில் நாம் செல்லும் போது நாம் அறிந்து கொள்ள உதவியாய் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

நான் இப்பொழுது தொடங்கலாம்!

நமது மாம்சம் என்பது சுய நலம், பொறுமை இன்மை மற்றும் எளிதில் மாறக்கூடியது. நீங்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையைக் கேட்டவுடன் நீங்கள் மிகவும் சந்தோஷமும் களிப்பும்

அடைகிறீர்கள். அப்பொழுதே காரியத்தைச் செய்யத் துவங்க விரும்புகிறீர்கள், கவனமாய் இருங்கள்! அது ஒரு ஆபத்தான அடையாளம். தீர்க்கதரிசன வார்த்தையை உங்கள் மாம்சத்தின்படி செய்ய விரும்புகிறீர்கள். உங்களுக்குள் உள்ள பெருமை, உங்களுக்குள் எழும்பி நீங்கள் குதித்து மேலெழும்ப விரும்பி உங்களை ''சிறந்த''வனாய் காட்ட விரும்பும்.

நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து சிந்திக்க துவங்கும் போது, ''இது என்னால் செய்யக் கூடும்'' அல்லது ''நான் இதைச் செய்வேன்", இது ஒரு வகையான ஆபத்தான அடையாளம். உங்கள் மாம்சத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதில் கவனமாய் இருங்கள். உங்களுடைய உற்சாகத்தினால் அநேக திட்டங்கள் அல்லது ஒப்புக் கொடுத்தலுக்குள் நீங்கள் செல்லலாம். ஆனால் அது கர்த்தரால் வழி நடத்தப்படுதலல்ல. நீங்களாகவே அநேக கடினமான வேலைகளுக்குள் செல்லலாம். ஆனால் ஒன்றையுமே சரியாக செய்ய முடியாது. உங்களுடைய வேலைகளில் எந்த கனிகளையும் காண முடியாது. காரியங்கள் தோல்வியில் முடியலாம்; உங்கள் குடும்பத்தார் அல்லது மற்றவர்கள் சோர்வடையலாம்; நீங்கள் குற்றஞ்சாட்டத் துவங்கலாம், தேவனே நீர் எங்கே இருக்கிறீர்? அவர் பொதுவாக உங்களுடைய வலது புறத்தில், உங்களுக்கு பின்பாக, உங்கள் வேலைகளை நீங்கள் குறைத்துக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்கிறதற்காக அவர் காத்து இருக்கிறார்.

முதிர்ச்சி அடைந்த தலைவர்கள் தீர்க்கதரிசன அழைப்பை சமாதான உணர்வோடு பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் ஊழியத்திற்காக தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ளவோ அல்லது அவசரப்படவோ முயற்சிக்க மாட்டார்கள். தொடர்ந்து அதை ஜெபமாகிய பலிபீடத்தில் வைத்து கர்த்தருடைய விருப்பப்படியே அவர்களுடைய ஊழியத்தில் கர்த்தர் எழுந்தருள வேண்டுமென்று விரும்புவார்கள். உங்கள் இருதயத்தின் கதறல் எப்போதும் ''தேவனே என்னை நடத்தும்'' அல்லது ''தேவனே நான் என்ன செய்ய?'' அல்லது ''தேவனே எனக்கு பெலத்தையும் ஞானத்தையும் தாரும்'' - ஆனால் மிக முக்கியமாக, ''தேவனே இது உம்முடைய வல்லமையினால் மாத்திரமே'' என்று இருக்க வேண்டும்.

''நான்'' என்ன விரும்புகிறேன் அல்லது ''என்னால்'' என்ன செய்து முடிக்க முடியும்? என்பதையே மாம்சம் கவனிக்கும். ஆவியில் நிரம்பின தலைவர்கள் கர்த்தர் தம்முடைய விருப்பத்தை நிறைவேற்ற முழு இடம் அளிக்கின்றனர் - தாழ்மையாய் கர்த்தர் பங்கு பெற அனுமதி அளிக்கின்றனர். கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறத்தக்கதாய் காரியங்கள் நடைபெற கர்த்தருக்கு உதவி செய்ய முயற்சிப்பதில் கவனமாய் இருங்கள். கர்த்தருக்கென்று காரியங்களை நடப்பிப்பது எளிதானது. ஆனால் கர்த்தருக்கென்று காத்திருப்பதோ கடினமானது. நம்முடைய வேளையைக் காட்டிலும் அவருடைய வேளை எப்போதும் வித்தியாசமானது. அடிக்கடி நாம் நினைவில் கொள்ளும்படி ஒரு முறை இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தையை கவனத்தில் கொள்வோம்: ''என்னைப் பின்பற்று'' அவரைப் பின்பற்றுவதில் முக்கியமான காரியம் ... எங்கு நடத்துகிறாரோ, எப்போது நடத்துகிறாரோ நாம் அவரைப் பின்பற்ற வேண்டும்.

கடினப்பாடம்

கர்த்தர் தமக்குக் கூறியவற்றை உடனடியாக நடக்க வேண்டும் என்று நினைப்பவருக்கு மிகச் சிறந்த உதாரணம் ஆதி. 37ம் அதிகாரம். இங்கு நாம் யோசேப்பையும் அவன் கண்ட தீர்க்கதரிசன கனவுகளையும் வாசிக்கிறோம். அவன் உடனடியாக மிகவும் மதியீனமாக தனது சொப்பனத்தை தன் சகோதரர்களிடம் பகிர்ந்து கொள்கிறான். துரதிஷ்டவசமாக அவனுடைய சகோதரர்கள் ஏற்கனவே அவன் மேல் பொறாமை கொண்டிருந்தனர். அதற்கு அவர்கள் தகப்பன் அவன் மேல் அளவுக்கதிகமான அன்பு கொண்டிருந்ததே காரணம். மேலும் அவர்கள் அனைவரும் தாழ விழுந்து பணிந்து கொள்வதாய் யோசேப்பு கண்ட சொப்பனம் அவர்களை மேலும் அவனுக்கு விரோதமாய் மாற்றியது. ஆகவே அவாகள் அவர்களுடைய இளைய சகோதரனுக்கு விரோதமாய் சதி ஆலோசனை செய்தனர். அவர்கள் அவனை அடிமையாக விற்று காட்டு மிருகம் அவனைக் கொன்று போட்டதாய் தங்கள் தகப்பனை நம்பச் செய்தனர். யோசேப்பு தன் சொந்த சிந்தனையற்ற ஞானக் குறைவினால் தனக்குத் தானே பாடுகளை வருவித்துக் கொண்டான். ஆனால் கர்த்தர் அதை உபயோகப்படுத்திக் கொண்டார். அவருடைய திட்டம் நிறைவேறத்தக்கதாயும், அவனுடைய அழைப்பின் பலனாலும், யோசேப்பை அதிகம் நேசித்ததாலும் எல்லாவற்றையும் நன்மையாய் உபயோகப்படுத்துவதில் கர்த்தர் உண்மையுள்ளவராய் இருந்தார். (ரோமர் 8:28ஐப் பார்க்கவும்) தன் குடும்பத்தை விட்டு

பிரிக்கப்பட்டு அடிமையாய் விற்கப்பட்டாலும் யோசேப்பின் பொறுமையையும் அவனுடைய உண்மையான ஊழியத்தையும் மிகப் பெரிய பொறுப்பிற்கு ஆயத்தமாக அவன் இருதயத்தையும், குணநலனையும் மாற்ற கர்த்தர் அதை உபயோகப்படுத்திக் கொண்டார்.

சிறந்த பொறுப்பு

இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளுக்கு கர்த்தர் காண்பித்த பலமான தீர்க்கதரிசன வார்த்தை சிறந்த பொறுப்புக்குரிய உதாரணம் ஆகும். (லூக். 1:26ல்) தேவ தூதன் மரியாளை சந்தித்ததையும், கன்னிகையாகிய அவளின் மூலமாக கர்த்தரின் மைந்தன் பிறப்பதையும் தீர்க்கதரிசனமாக உரைப்பதை நமக்கு காட்டுகிறது. லூக்கா துவங்குவதே இத்தகைய ஆச்சரியமான செய்திகளை அடக்கியுள்ளது. மரியாள் தாழ்மையுடன், உடனடியாக பொறுப்பேற்றுக் கொண்டாள். அவள் தன்னை ஆண்டவரின் கரங்களில் ஒப்புக் கொடுத்து எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதே தன்னுடைய விருப்பமாக வெளிப்படுத்தினாள். (வச. 38) அதன் உறுதிப்பாட்டை எலிசபெத்திடமிருந்து அவள் பெற்றாள். (வச. 39-45) அதன் வெளிப்பாடாக தாழ்மையுடன் கர்த்தரைத் துதித்தாள். (வச. 46-55) இயேசு குழந்தையாய் பிறந்த பின்பும் அவர் உண்மையாய் மேசியா என்று உறுதிபடுத்திய போதும் அமைதியான விசுவாசத்தோடு மரியாள் அதை ஏற்றுக் கொண்டாள். ''மரியாளோ இந்த சங்கதியெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனை பண்ணினாள்'' என்று லூக். 2:19 நமக்கு வெளிப்படுத்துகிறது.

கர்த்தர் மட்டுமே அவர் கூறிய வார்த்தையை நிறைவேற்ற முடியும் என்பதை மரியாள் உணர்ந்திருந்தாள். கர்த்தருடைய வார்த்தையை பெற்று அவருடைய இணக்கத்தை முழு இருதயத்தோடு வெளிப்படுத்தி கர்த்தர் கொடுத்த அவருடைய வழி நடத்துதலுக்கு கீழ்ப்படிய அவள் இடமளித்தாள்.

அநீதியான பாடுகள்

கர்த்தர் சில நேரங்களில் தலைவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள உதவியாக பலவிதமான சூழ்நிலைகள் வழியாய் செல்ல அவர்களை அனுமதிக்கிறார். நம்முடைய வழிகள் எல்லாம் செம்மையானதாய் தோன்றி நம்மை வஞ்சிக்கக்கூடும். (நீதி. 21:2) ஆனால் கர்த்தர் நம் இருதயங்களைச் சோதித்து உண்மையிலேயே அதற்குள் என்ன உண்டு என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறார். (நீதி. 17:3; 1 தெச. 2:4)

வாழ்க்கை என்பது சோதனைகள் நிறைந்தது. இதற்கென்று நீங்கள் அதிக பணம் செலவழிக்கலாம். ஆனால் உங்கள் தவறை உங்களால் சரிபடுத்தக் கூடுமா? மற்ற தலைவர்களுடைய தோல்வி அல்லது பெலவீனங்களைக் குறித்து நீங்கள் கேள்விப்படலாம். நீங்கள் அந்த வதந்தியைப் பரப்பி அவருடைய காரியங்களை வெளியரங்கப்படுத்தலாமா? நீங்கள் உங்கள் சிந்தனையை மறைத்து அதற்கு மேலாக கர்த்தரைக் கவர காணிக்கைகளைக் கொடுக்கலாம். அவ்வாறு உங்களால் கொடுக்கக் கூடுமா?

நாம் தோற்றுப் போவோம் என்ற நம்பிக்கையில் நமக்கு கர்த்தர் சோதனைகளைக் கொடுப்பதில்லை. நம்முடைய இருதயத்தில் என்ன உள்ளது என்பதை அறிந்து கொள்ள உதவியாக கர்த்தர் நம்மை நேசிக்கும் அளவுக்கு ஏற்ப நம்மை சோதிக்கிறார். நாம் எங்கு குறைவு படுகிறோம், எவற்றால் வஞ்சிக்கப்படுகிறோம் மற்றும் அநேக காரியங்களை வெளிப் படுத்தத்தக்கதாய் கர்த்தர் நம்மை சோதிக்கும் போது நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம்.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களை மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார். (1 யோ. 1:9).

தேவன் ஒருவரையும் பொல்லாங்கினால் சோதிக்கிறவர் அல்ல. (யாக். 1:13-14) நம்மை தோற்கடிப்பதற்கென்று கர்த்தர் நம்மை சோதிக்கிறவரல்ல. ஆனால் நாம் ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆயத்தப்படுத்துவதற்காகவே அவர் நம்மை சோதிக்கிறார். (யாக். 1:12)

யோசேப்பு விபச்சாரத்திற்கு தன்னை ஒப்புக் கொடுப்பானோ, மாட்டானோ என்பதை அறிய சோதிக்கப்பட்டான். (ஆதி. 39 வாசிக்கவும்) அந்த சோதனையில் அவன் வெற்றி பெற்றான்.

ஆனால் அவளால் அவனுடைய கற்புத்தன்மையை குலைக்க முடியாததாகையால் போத்திபாரின் மனைவி தவறாக குற்றஞ்சாட்டினாள். அதனால் அநியாயமாக அவன் சிறைச்சாலையில் தள்ளப்பட்டான். ஆனால் வேதம் கூறுகிறது. கர்த்தர் யோசேப்போடே இருந்து, அவன் மேல் கிருபை வைத்து, அவனுக்கு தயவு கிடைக்கப் பண்ணினார். (ஆதி. 39:21) இந்த காரியத்தினால் யோசேப்பு கசப்படையவில்லை என்பது ஆச்சரியமானது. அவனுடைய தீர்க்கதரிசன சொப்பனம் நினைவுக்கு வரும்போது எல்லாம் அவன் ஆச்சரியப்பட்டிருக்கலாம். அந்த சிறைச்சாலையிலிருந்து வெளியேற அவன் சொந்த முயற்சி மேற்கொண்டான். (ஆதி. 40:14) ஆனால் யோசேப்பு ஆண்டவரைக் குற்றம் சாட்டியதாக நம்மால் எங்கும் காண முடியாது. யோசேப்பு தனக்கு இழைக்கப்பட்ட அநீதி மற்றும் கடுமையான சூழ்நிலைகளில் திடமாயும் உண்மையுள்ளவனாயும் இருந்தான். ஆகவே கர்த்தர் அவனை நம்பி மிகப் பெரிய பொறுப்புடன் அவனை சிறைச்சாலையை விட்டு விடுதலையாக்கினார்.

ஆலோசனைக்காரர் அநேகரினால்...

நம்பிக்கையான தலைவர்கள் மற்றும் கர்த்தருக்கு பயந்த நண்பர்களிடம் ஆலோசனை மற்றும் தீர்க்கதரிசன உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள திறந்த மனமுடையவர்களாய் இருங்கள். ''அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்'' என்று நீதிமொழிகள் 11:14 வெளிப்படுத்துகிறது.

நீங்கள் யாரிடம் ஆலோசனைக் கேட்க வேண்டுமோ அவர்களிடம் மட்டும் கூற ஜாக்கிரதையாய் இருங்கள். பொதுவாகவே அவர்கள் சுயநலம் உடையவர்களாய், உங்களை மேற்கொண்டுச் செல்ல உற்சாகப்படுத்துகிறவர்களாய் இருப்பார்கள். ஏனென்றால் உங்களுடைய வெற்றியையும், மகிமையையும் பகிர்ந்து கொள்ள விரும்புவார்கள். உண்மையான நண்பர்கள் உங்கள் மேல் அன்பு மற்றும் கரிசனை உடையவர்கள் ஆதலால் உங்களிடம் கடினமான வார்த்தையை பேசலாம். ''சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்.'' (நீதி. 27:6) உண்மையான நண்பர்களின் கடிந்து கொள்ளுதலையும், எச்சரிப்பையும் ஏற்றுக் கொள்ள தீர்மானித்து அவர்களுடைய வார்த்தையையும் ஆலோசனையையும் ஜாக்கிரதையாய் கவனியுங்கள்.

மக்களை திருப்திபடுத்துகிறவர்களாய் இராமல் ஜாக்கிரதையாய் இருங்கள். மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் என்று வேதம் கூறுகிறது. (நீதி. 29:25) கர்த்தர் உங்களுக்கு தெளிவான அழைப்பு அல்லது போதனையை கொடுப்பாராகில் அது உறுதியும் நிலைவரப்படுமாகில் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் எனறு நினைக்காமல் அதற்கு கீழ்ப்படியுங்கள். உங்கள் குடும்பத்தாரும், உங்கள் நண்பர்களும் சிறப்பாக இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்கு தங்கள் இருதயத்தை ஒப்புக் கொடுக்காதவர்களாய் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நீங்கள் மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் அல்லது செய்வார்களோ என்று பயப்படாமல் கர்த்தருடைய வார்த்தைக்கு உறுதியாய் கீழ்ப்படிய தயங்காது இருங்கள். என்ன செய்யலாம், எப்போது செய்யலாம் என்றும் மற்ற உங்கள் தயக்கங்கள் அல்லது பின்மாற்றத்திலிருந்து உங்களை காத்துக் கொள்ளும் படியாகவும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலில் கவனமாய் நிலைத்திருங்கள்.

கர்த்தரை நம்புங்கள்

தீர்க்கதரிசன வார்த்தை முழுவதும் சிறந்த வாக்குத்தத்தமாய் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். நீங்கள் என்ன செய்வீர்கள்? தாழ்மையாய் ஜெபத்தில் கர்த்தருக்கு பலிபீடத்தின் முன் வையுங்கள். அந்த வார்த்தை உண்மையாயும் அது ஏற்றக் காலமாயும் இருந்தால் கர்த்தர் அதை உங்களுக்கு வெளிப்படுத்துவார். இதற்கிடையில் அவர் உங்களை ஆயத்தப்படுத்தி சோதித்து, காத்திருக்கும்படி சொல்லுவார்.

இத்தகைய காரியங்கள் எளிதானதல்ல, இந்த செயல் முறையில் நீங்கள் ஆவியில் ''செத்ததைப்'' போல உணருவீர்கள். ஆனால் செத்துப் போவது என்பது உங்கள் மாம்சத்தின் விருப்பமாய் மட்டுமே இருக்கும் என்று நம்புங்கள். நீங்கள் கர்த்தருடைய கிரியைகளை சரியாய் ஏற்றுக் கொள்ளும் போது ஆவியில் உங்கள் உள்ளான மனுஷனில் பலப்படுவீர்கள். (எபே. 3:14-21)

நீங்கள் சோர்வுறும்போது அல்லது காரியங்களை உங்கள் சொந்த பெலத்தினால் செய்ய முற்படும் போது கர்த்தருடைய இந்த வாக்குதத்த வசனத்தை நினைவில் கொள்ளுங்கள். ‘‘உன் சுய புத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும், கர்த்தரில் நம்பிக்கையாய் இருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப் படுத்துவார்.’’ (நீதி. 3:5,6)

தீர்க்க தரிசனத்தை நிதானிக்க கற்றுக் கொள்ளல்

வேதத்தின் பார்வை

ஆவியின் வரங்களில் ஒன்றான இந்த வரம் மிகவும் ஆச்சரியமும் வல்லமையுமாய் செயல்படுவதில் ஏற்பட்டுள்ள ஆர்வம் அதிகரித்திருப்பதாக நான் காண்கிறேன். தீர்க்கதரிசன வரம் - கர்த்தருடைய மனிதன் அல்லது மனுஷியின் உதடு மற்றும் சிந்தையின் மூலமாக ஆவியானவர் உரைப்பது. சிறிய ''கேள்வி மற்றும் பதில்'' படிப்பது நன்மையும் சிறந்ததுமாய் இருக்கும் என்று நான் உணருகிறேன்.

A. தீர்க்கதரிசனம் எப்போதும் பூரணமானதா?

1 கொரி. 13:9-10 போதிப்பது: ''நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது.'' இந்த வசனம் தீர்க்கதரிசனம் சொல்லுவது குறைவுள்ளது மற்றும் அது ''ஒரு பகுதி" என்று நமக்கு போதிக்கிறது. 1 தெச. 5:20,21 கூறுகிறது: ''தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள்; எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதை பிடித்துங் கொள்ளுங்கள்.'' தீர்க்கதரிசனம் சொல்லுதலை அற்பமாய் எண்ணாதிருக்கும் படி இந்த வசனம் நமக்கு கட்டளையாக கூறுகிறது. ஆனால் அதைத் தொடர்ந்து அடுத்த வசனம் ''நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று தெளிவாக கூறுவது நலமல்லாதவற்றை விட்டு விடுங்கள் என்று அர்த்தம் ஆகும்.

அந்த வரத்தையும் அதன் கிரியைகளையும் நாம் அற்பமாய் எண்ணக் கூடாது. ஆனால் பூரணமில்லாத வழியின் மூலமாய் வரும் வார்த்தைகளை நாம் அறிந்து கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியானவரின் உண்மையான வார்த்தை மற்றும் துல்லியமாக ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக தீர்க்கதரிசனத்தை நிதானித்து அறிய கவனம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

B. தீர்க்கதரிசனத்திலுள்ள பாதுகாப்பான உண்மைகள் என்ன?

1 கொரி. 14:3 கூறுகிறது: தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்தி விருத்தியும், புத்தியும் ஆறுதலும் உண்டாகத்தக்கதாய் பேசுகிறான். பொதுவான இந்த 3 உண்மைகளை தீர்க்கதரிசனத்தில் எல்லாத் தாழ்மையோடும் பரிசுத்தத்துடன் பயமில்லாமல் நடைமுறைப் படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்: பக்தி விருத்தி, புத்தி, ஆறுதல் உண்டாக்கும்.

1 கொரி. 14:31 கூறுவது: ''எல்லோரும் கற்கிறதற்கும், எல்லோரும் தேறுகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராக தீர்க்கதரிசனம் கூறலாம்.'' ஒவ்வொருவராக தீர்க்கதரிசனம் சொல்லுவதின் காரணம், ஒருவர் கற்றுக் கொள்ளும் போது தவிர்க்க முடியாமல் சில தவறுகளை ஏற்படுத்தலாம். இந்த தவறுகளினால் மற்றவர்களுடைய தாழ்மை, உண்மை, கர்த்தரை பின்பற்ற வேண்டும் என்கிற விருப்பம் இடறல் அடைய அவசியம் இல்லை.

<u>கற்றுக் கொள்ளுகிறவர்கள் கற்றுக் கொள்ளும் போது கவனிக்க வேண்டிய காரியங்கள்:</u>

1. **கட்டப்படுதல்**
   கேட்கிறவர் விசுவாசம், அன்பு மற்றும் பரிசுத்த ஆவியில் கட்டப்படுதல்.
2. **புத்தி**
   கேட்கிறவர் சிறந்த அன்பு மற்றும் ஆவிக்குரிய நடக்கையில் குறிப்பாய் முன்னோக்கிச் செல்ல ஊக்கப்படுத்துதல்
3. **ஆறுதல்**
   இளைப்படைந்த, பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களை ஆறுதலுக்குள் கொண்டு வருவது.

C. கர்த்தரிடமிருந்து ஆக்கினைத் தீர்ப்பு வருமா?

''உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை அனுப்பவில்லை'' என்று யோவான் 3:17 நமக்கு போதிக்கிறது. ரோமர் 8:1 கூறுவது: ''ஆனபடியால் கிறிஸ்து

இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து மாம்சத்தின் படி நடவாமல் ஆவியின் படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை.'' ஆறுதலுக்குப் பதிலான ஆக்கினைத் தீர்ப்பு வரும் போது அது நிராகரிக்கப்படுகிறது. ரோமர் 8:34ல் சுயமாய் கேள்வி எழுப்பி அதற்கு பதில் அளிக்கிறது. ''ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறார். எல்லா ஆக்கினைத் தீர்ப்பையும் அவர் சிலுவையில் தீர்த்துவிட்டார்.''

ஆகையால் ஆக்கினைக்குள்ளான தீர்க்கதரிசனம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையாய் இருக்க முடியாது. ஆவியானவர் கடிந்து கொண்டு புத்தி கூறலாம்; ஆனால் பிரச்சினையிலிருந்து வெளியேற வழியைக் காண்பிக்கத்தக்கதாய் அன்புடனும் மனதுருக்கத்துடனும் ஒருவருக்குள் பாவ மன்னிப்பு நடைபெறத்தக்கதாய் கிரியை செய்கிறது. ஒருவரை திரும்பவும் மனதுருக்கமான பாவ மன்னிப்பின் அன்பிற்குள் கொண்டு வரத்தக்கதாய் இராமல் அவர்களிடமிருந்து நம்பிக்கையும் கிருபையும் அற்றுப் போகத்தக்கதாய் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகவும், சோர்வு என்ற ஆழமான குழிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் ஒருவரையும் விட்டு விடுவதில்லை. அத்தகைய ஆக்கினை தீர்ப்புக்குள்ளாக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தல் பொதுவாக கேட்பவரை நொறுக்கத்தக்கதாயும், கடினமான சத்தமாயும் இருப்பதால் அது கிறிஸ்துவின் ஆவி இல்லை என்பதையும் வேறொரு ஆவியினிடத்திலிருந்து வருகிறது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

D. தீர்க்கதரிசனம் எதன் வழியாக வரும்?

பின்வரும் மூன்றின் ஒரு வழியாக தீர்க்கதரிசனம் வரும் என்பதை வேதம் தெளிவாக போதிக்கிறது:

1. **மனித ஆவி**
   ஒருவன் தன் சொந்த இருதயத்தில் இருக்கிறதைப் பேசுகிறான். (எசே. 13:2,3)
2. **பொய்யின் ஆவி**
   தீய ஆவியினால் வரும். (2 நாளா. 18:21)
3. **பரிசுத்த ஆவி**
   பரிசுத்த ஆவியின் மூலமாக உண்மையான ஆவியினால் தீர்க்கதரிசனம் உண்டாகும்.
4. **மூன்றும் இணைந்து**
   மேலே கூறிய 3ல் எவையாவது இணைந்து தீர்க்கதரிசனம் உண்டாகும்.

அப். பேதுரு ஞானத்தினால் நிறைந்து கூறுவது மிகச் சிறந்த உதாரணம்: ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' (மத். 16:16) மாம்சமும் இரத்தமும் இதை அவனுக்கு வெளிப்படுத்தவில்லை. பிதாவானவரே வெளிப்படுத்தினார் என்று இயேசு சாட்சியாக கூறினார். இந்த வார்த்தை பிதாவினால் பேதுருவிற்கு வெளிப்படுத்தப்பட்டது. சில நிமிடங்கள் கழித்து அதே அப்போஸ்தலன் மூலமாக தவறான ஆவி பேசியதை அவனே அறிந்து கொள்வதற்கு முன்பாக இயேசு எவ்வளவு எளிதாக உடனடியாக கண்டு கொண்டார் என்பதை இது காண்பிக்கிறது. பேதுரு கூறியது காதுக்கு இனிமையான ஒன்றாக இருந்திருக்கலாம். சுய பரிதாபத்தை கிறிஸ்துவுக்குள் செலுத்தி மரணத்துக்குள் இயேசுவை பிடிக்கப்படுவதே அவன் நோக்கமாய் இருந்தது.

E. எப்போது எச்சரிக்கையாய் நடந்து கொள்ள வேண்டும்?

மற்ற 3 உண்மைகள் தீர்க்கதரிசனத்தில் வஞ்சனைக்குள் நடத்துவதாய் இருக்கிறது. அவைகள் மிகவும் இயல்பாய் இருக்கிறபடியால் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அந்த 3 உண்மைகள் எதுவெனில்:

1. **அறிவை உணர்த்தும் வார்த்தை வெளிப்படும் போது**
   ''அவனவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்.'' (1 கொரி. 14:25) - இது ஞானத்தை அறிவிக்கும் வார்த்தையின் கிரியை.
2. **பின்னால் நடப்பதைக் கூறும்போது...**
   வருங்காரியங்களைக் கூறுவது - ஞான வார்த்தையின் கிரியை.
3. **வழி நடத்தப்படும் போது**
   ஞான வார்த்தைக்குரிய கிரியை.

ஏனென்றால் தவறான ''வழி நடத்துதல்'' கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் மோசமான கிரியையை உண்டாக்கக் கூடும். இதனால் உண்மையிலேயே தவறான ஆவிகள் சந்தோஷமாய் உள்ளே நுழையக் கூடும்.

இந்த 3 தீர்க்கதரிசன உண்மைகள் கிரியை செய்வதை 1 சாமு. 10:1-10 தெளிவாக காணலாம்.

சாமுவேல் சவுலின் இருதயத்திலுள்ள இரகசியமான தொலைந்த கழுதைகளைத் தேடுவதை முதலாவது வெளிப்படுத்தினான். பின்பு அவனுடைய வருங்காலத்தைக் குறித்த வார்த்தைகளைக் கூறினான். - அதை உறுதிப்படுத்தும்படி 3 அடையாளங்கள் வழியாய் கடந்து சென்றான்.

சவுல் இரண்டு மனிதரை சந்திப்பான். அவர்கள் கழுதை அகப்பட்டது என்று கூறுவார்கள்.

அவன் மூன்று மனிதரை சந்திப்பான். ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும் மற்றொருவன் மூன்று அப்பங்களையும் வேறொருவன் திராட்சை ரசமுள்ள ஒரு துருத்தியையும் வைத்திருப்பான். அவர்கள் இரண்டு அப்பங்களை அவனுக்கு கொடுப்பார்கள்.

சவுல் மேடையிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தை சந்திப்பான். அவர்களுக்கு முன்பாக தம்புருவும், மேளமும், நாகசுரமும், சுரமண்டலமும் போகும். அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வார்கள். கர்த்தருடைய ஆவி சவுலின் மேல் இறங்கி அவனும் தீர்க்கதரிசனம் சொல்லுவான்.

எல்லா அடையாளங்களும் நிறைவேறின பின்பு சாமுவேல் கொடுத்த போதனைக்கு கீழ்ப்படியத்தக்கதாய் - ''நீ எனக்கு முன்னே கில்காலுக்குப் போ. சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தும்படி நான் உன்னிடத்தில் வருவேன். நான் உன்னிடத்தில் வந்து நீ செய்ய வேண்டியவற்றை அறிவிக்குமளவும் ஏழுநாள் காத்திரு'' என்றான். எல்லா அடையாளங்களும் நிறைவேறின போது சவுல் சாமுவேலுடைய போதனைக்கு கீழ்ப்படிந்தான்.

F. தீர்க்கதரிசனம் எப்போதும் உதவியாய் இருக்குமா?

தீர்க்கதரிசனத்தை தவறாய் உபயோகப்படுத்துவதின் மூலம் அநேகருடைய வாழ்க்கையில காயத்தையும் குழப்பத்தையும் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை நமக்கு தெளிவாய் கூறுவது: ''தீர்க்கதரிசனத்தை அற்பமாய் எண்ணாதிருங்கள்.'' (1 தெச. 5:20) மகிமையான மலையின் சிகரத்திற்கு சரியான பாதையைக் கண்டுபிடிப்பது நம்முடைய கரத்தில் உள்ளது.

விலையேறப் பெற்ற தீர்க்கதரிசனத்தின் மூலமாக ஏற்பட்ட பல ஆச்சரியமான நன்மைகளுக்கு நான் சாட்சியாக இருக்கிறேன். சத்துருவானவன் இதை வஞ்சிக்க விரும்பி கர்த்தருடைய அழகான கிரியையை தள்ளி அதைத் தீமையாக மாற்றுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

G. தீர்க்கதரிசனம் வெளிப்படும் போது நம்முடைய பதில் வினை என்ன?

நம்முடைய இருதயத்திலுள்ள தவறான பெருமையை விலக்கி மிக முக்கியமான எதிர் கால ஊழியத்திற்குரிய நமக்குரிய தனிப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கு பெருமை இருக்கும். ''அழிவுக்கு முன்னானது அகந்தை.'' இதிலிருந்து விடுதலை பெற நாம் கர்த்தரிடம் செல்ல வேண்டும். எதிர்கால மிகச் சிறப்பான ஊழியத்திற்குரிய தனிப்பட்ட தீர்க்கதரிசனம் வெளிப்படும் போது நாம் மிகத் தாழ்மையுடன் கர்த்தருடைய பாதத்தில் விழ வேண்டும் - அந்த தீர்க்கதரிசனம் நமக்கு உதவி செய்வதாயும், ஆசீர்வதிப்பதாயும் இருக்கக் கூடும். தமஸ்கு வீதியிலே சவுல் கர்த்தர் பேசின தீர்க்கதரிசன வார்த்தையைக் கேட்ட போது மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்தான். (அப். 9:3-11; 26:13-18) நம் இருதயத்தைத் தாழ்த்தும் நிலையே எப்போதும் பாதுகாப்பானது ஆகும். ''நான் வானத்திற்கு ஏறுவேன்'' என்று சாத்தான் கூறினான். (ஏசா. 14:13,14) எப்போதும் சாத்தான் எடுத்துக் கொள்ளும் போதனை ஏற்றம் ஆகும்.

இயேசு பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார். (எபே. 4:9) அவர் தேவனுடைய ரூபமாய் இருந்தும், எப்போதும் தம்மை தாழ்த்தினார். (பிலி. 2:7,8) ''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்.'' (மத். 11:29) ''துஷ்ட மிருகங்களின் கால் அதிலே படவுமில்லை. சிங்கம் அதைக் கடந்ததுமில்லை.'' (யோபு 28:8)

H. தீர்க்கதரிசனத்தை யார் உறுதிப்படுத்துவது?

"சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்." (2 கொரி. 13:1) தீர்க்கதரிசன வார்த்தையை நிரூபித்தல் மற்றும் நியாயந்தீர்ப்பதைக் காட்டிலும் முக்கியமானது அதை உறுதிப்படுத்துவதாகும். அடையாளங்களினாலும், ஆச்சரியங்களினாலும் கர்த்தர் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்த எப்போதும் ஆயத்தமாய் இருந்தார்.

தீர்க்கதரிசன வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடாது - சிறப்பாக நம் வாழ்க்கையை பாதிக்கக் கூடிய அல்லது நம்மை வழி நடத்தக் கூடியது - முழு உறுதிப்பாடு இல்லாமல் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

1. தீர்க்கதரிசியின் சொந்த ஞானத்தினால் தெரிவிக்கப்படக் கூடாது.
2. வேத வார்த்தை
3. கர்த்தரிடமிருந்து வேறொரு வார்த்தை

தீர்க்கதரிசன உறுதிப்பாட்டைக் குறித்து கர்த்தர் என்ன கூறுகிறார் என்பதை வேதம் நமக்குத் தெரிவிக்கும் உதாரணம் "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்கென்று (ஏற்கனவே அவர் தெரிவித்த) பிரித்து விடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். ஏற்கனவே தேவன் அவர்களிடம் பேசி இருக்கிறார் என்பதை இது குறிக்கிறது. (அப். 13:2)

I. தீர்க்கதரிசனத்தை யார் நியாயம் தீர்ப்பது?

கர்த்தருடைய மனிதர் மற்றும் தீர்க்கதரிசி என்று நியமிக்கப்பட்டவர்கள் தீர்க்கதரிசன வார்த்தை நியாயம் தீர்க்கப்படுவதற்கு திறந்த மனதுடையவர்களாய் இருக்க வேண்டும். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றி இருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள்." (1 யோ. 4:1) "தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள;" என்று வேதம் நமக்கு கூறுகிறது. (1 கொரி. 14:29) இதற்கு காரணம் கர்த்தருடைய தீர்க்கதரிசன வரத்தை தவறாய் ஏற்றுக் கொள்ளாமல் அதை நிதானிக்கும் தகுதி உடையவராய் கர்த்தருடைய வேதத்தில் எழுதி இருக்கிறபடி சோதித்து அறிய வேண்டும். தீர்க்கதரிசனத்தை உரைக்கும் ஆவியை உடையவர் அதற்கென்று தகுதி உடையவரா என்பதையும் நிதானிக்க வேண்டும்.

J. எப்பொழுது தீர்க்கதரிசனம் நிராகரிக்கப்பட வேண்டும்?

கர்த்தருடைய வார்த்தை எழுதி இருக்கிறபடி உறுதி செய்ய அல்லது நிதானிக்க மறுக்கிற தீர்க்கதரிசனம் அல்லது வெளிப்பாடே எப்போதும் எச்சரிப்பின் அடையாளமாய் இருக்கும். அதனை உடனடியாக நிராகரிப்பது நல்லது. அந்த தீர்க்கதரிசனம் மிகவும் நன்மையானதும், ஆச்சரியமானதும், ஆரோக்கியமானதாய் இருந்தாலும் அது கர்த்தருடைய வார்த்தைக்கு மாறுபட்டதாய் இருந்தால் எந்த சூழ்நிலையாய் இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாதிருங்கள்.

உண்மையான கர்த்தருடைய மனிதன், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை வரவேற்கிறவனாய் இருக்கிறான். கிறிஸ்துவின் ஆவி அவனுக்குள் இருந்தால் "இணக்கம் உள்ளதாக அவனை மாற்றும்" அவன் மாம்சத்தில் தான் பூரணம் அடைந்தவன் இல்லையென்றும், எப்பொழுதும் தன்னால் விழாமல் காத்துக் கொள்ள முடியாது என்பதையும் அறிந்திருக்கிறான். நாம் ஒரு பகுதியை மட்டும் அறிந்தவர்களாய் இருப்பதால் தீர்க்கதரிசனத்தையும் ஒரு பகுதி ஏற்றுக் கொள்வதே சிறந்தது.

K. முடிவுரை

நாம் ஆவியானவருடைய ஆச்சரியமான கிரியையை அற்பமாய் எண்ணாமல் "பாம்பைப் போல் வினாவுள்ளவர்களாய் இருக்கக் கடவோம்." முரண்பாடான அல்லது எதிர்மறையான காரியங்களுக்குள் நுழையாமல் இருப்போம்; மாறாத கர்த்தருடைய வார்த்தையின் சரியான உறுதிப்பாடு இல்லாமல் கூறிய எந்த தீர்க்கதரிசனத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம்.

“ஆமாம்.. ஆமாம் .. கர்த்தர் இவ்வாறு கூறினார்” என்று ஒருவரும் உங்கள் மேல் அதிகாரம் எடுத்துக் கொள்ள வேண்டாம். ஒரு வேளை கர்த்தர் பேசினால் திரும்பவும் அவர் பேசுவார். அதை நிரூபிக்க நாம் போராட வேண்டியதில்லை. ஒரு வேளை கர்த்தர் கூறாது இருந்தால் “அதைக் கர்த்தர் கூறினார் என்று எந்த வகையிலும் யாரையும் வற்புறுத்த வேண்டியதில்லை.”

ஆகையால் சகோதரரே கர்த்தருடைய நாம மகிமைக்காக ஞானமுள்ளவர்களாய் உங்கள் இருதயத்தை தாழ்த்தினவர்களாய் தீர்க்கதரிசனத்தை அற்பமாய் எண்ணாமலும் அசட்டை செய்யாமலும் இருங்கள். பரிசுத்த ஆவியானவரின் எல்லா ஞானத்திற்குரிய வல்லமையிலும் மகிமைக்குரிய ஆசீர்வாதத்திலும் களி கூருங்கள். நாம் “பூரணராகும்படி” நம் சிந்தையைத் தாழ்த்தக் கடவோம். (எபி. 6:2)

நம்முடைய நாட்களில் நிறைவேறப் போகிற கர்த்தருடைய வார்த்தை

<u>வாசிக்கவும்</u>: எசே. 12:21-28 மற்றும் எண். 23:19.

தீர்க்கதரிசனம் நம்மை பயமுறுத்துவதற்காக அல்ல நம்மை ஆயத்தப்படுத்தவே உள்ளது. ''விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான். பேதைகளோ நெடுக போய் தண்டிக்கப்படுகிறார்கள்'' என்று நீதி. 27:12 கூறுகிறது. கர்த்தர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறிந்து நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதையே கர்த்தர் விரும்புகிறார். ஆகவே நாம் துணிந்து நின்று இதை மேற்கொள்வோமாக.

இப்பாட திட்டத்தில் நாம் 1990க்கு மேல் நடப்பவற்றை தீர்க்கதரிசனமாக கூறிய உலகில் தலை சிறந்த தீர்க்கதரிசிகளில் ஒருவர் ஆவியானவரின் 5 அசைவாடுதலையும், 5 மிகப் பெரிய நெருக்கடிகளையும் நாம் இங்கு தியானிப்போம்.

<u>பூமியை பாதிக்கக் கூடிய 5 நெருக்கங்கள்</u>

1) மாறுதல் என்ற நெருக்கம்
2) குடும்பங்களில் நெருக்கம்
3) சபைகளில் நெருக்கம்
4) உலக அளவில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கம்
5) சாத்தானின் நேரடியான மிகப் பெரிய போராட்டம்.

<u>இதற்கு பதிலளிக்கும்படி கர்த்தர் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் அனுப்பின 5 அசைவாடுதல்கள்:</u>

1) உண்மையான பரிசுத்தத்தின் அலை.
2) அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் அடையாளங்களின் மூலம் அசைவாடுதல்.
3) உண்மையான ஒற்றுமையின் அலை.
4) ஞானம் மற்றும் வேற்றுமையின் அலை.
5) மனந்திரும்புதல் மற்றும் புதுப்பித்தலுக்கான அலை.

<u>ஐந்து நெருக்கங்கள்:</u>

1) **<u>மாறுதல்களினால் ஏற்படும் நெருக்கம்:</u>** லூக். 21:25-27; மத். 24:6-8.
முழுவதும் மாறுதலடையும் நேரத்திற்குள்ளாக நாம் நுழைந்து இருக்கிறோம். அரசியல், பொருளாதாரம், சமுதாயம், தத்துவம் முதலியன அனைத்திலும் விடுதலையையே விரும்புகின்றனர். பழைய வடிவ அமைப்பை உடைத்து சுதந்திரமாய் இருக்க விரும்புகின்றனர். (பல நாடுகள் போரில் ஈடுபட்டிருப்பதைக் கவனிக்கவும்) பழைய கலாச்சாரங்களை உடைத்து நிபந்தனை இன்றி வாழ விரும்புகின்றனர். இதற்கு உதாரணம் ஒழுக்கத்தில் கட்டுப்பாடு இன்மை, ஓரினச் சேர்க்கை, கருணைக் கொலை முதலியன. தட்ப வெப்ப நிலையில் அதிகமான பூகோள மாற்றத்தின் விளைவினால் அநேக இயற்கையின் அழிவுகள், கேடுகள், பூமியதிர்ச்சி மற்றும் கொடூரமான புயல் ஆகியவற்றைக் காண்கிறோம். இத்தகைய மாற்றங்களும் நெருக்கங்களும் மக்களுக்கு பயத்தை உண்டாக்கி அவர்களை நிலை குலையச் செய்கின்றன.

விசுவாசிகளுக்கு: ஜெபத்தின் மூலமாக நாம் பெற்ற ஆவிக்குரிய வல்லமையினாலும் இயேசு கிறிஸ்துவின் மேலான சமாதானத்தினாலும் இதை மேற்கொள்ளத்தக்க கர்த்தருடைய வழியை இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாடி ஆயத்தமாவது அவசியமாகும்.

2) **<u>குடும்பங்களில் நெருக்கம்:</u>** 2 தீமோத். 3:1,2
சுய நலம், இதன் அடிப்படை வேர் பாவம். இது குடும்ப உறவை பிரிக்கத் தூண்டுகிறதாய் இருக்கிறது. உலக அளவில் கடந்த 20 வருடங்களாக குடும்பங்களில் ஏற்படும் மிகப் பெரிய

தாக்கம் இதற்கு சாட்சியாய் இருக்கிறது. குடும்பப் பிரிவினை, சிறுவர்கள் தவறாய் நடத்தப்படுதல், கருக்கலைப்பு, இளம் வாலிபர் தற்கொலை, இளம் வாலிபர் - பாலியல் கலப்பு, போதை மற்றும் ஆல்கஹால் உபயோகப்படுத்துவது, சரீரத்தைத் தவறாக உபயோகப்படுத்துவது போன்றவை அதிக அளவில் காணப்படுகிறது. சாத்தான் சிறுவர்களுடைய மனதைத் தாக்கி மன்னிக்காமை என்ற விதையை விதைத்து, இதனால் குடும்ப உறவுகள் மற்றும் திருமண உறவை அழிக்கிறான்.

விசுவாசிகளுக்கு: சிலர் இரட்சிக்கப்பட்டும் மற்றவர் இரட்சிக்கப்படாமல் இருப்பதுமே குடும்பத்தின் பிரச்சினைகளுக்கு மிக முக்கிய காரணம் ஆகும். இதன் வேர்: ஆவிக்குரிய பிரிவினை. இந்த நெருக்கத்தில் நாம் விசுவாசத்தில் எழும்பி நின்று நம்முடைய இரட்சிக்கப்படாத அன்புக்குரியவர்கள் இரட்சிப்படைய வேண்டிக் கொள்வது அவசியமாய் இருக்கிறது. (ஏரே. 31:16,17; மல்கி. 4:6)

3) **சபைக்குள் நெருக்கம்:** மாற்கு 7:6-9,13.
உலக அளவில் சபையின் பழமையான வடிவமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு கிறிஸ்துவின் உண்மை சரீரத்தில் (எல்லா தேசங்களிலுள்ள விசுவாசிகள்) முதிர்ச்சி அடையத் துவங்கவும் கர்த்தர் விரும்புகிறபடி வல்லமையுடையவர்களாகவும் மாறி வருகின்றனர். கிறிஸ்துவின் உண்மையான சரீரம் 5 விதமான ஊழியத்தின் தலைமைத்துவத்தின் கீழ் செயல்படத் துவங்கும் மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்கள் கலாச்சாரம் மற்றும் மனிதனால் உண்டாக்கப்பட்ட தடைச் சுவர்கள் உடைக்கப்படும். புதிய எற்பாட்டுத் திருச்சபையின் கொள்கையின்படி வடிவமைக்கப்படாத அநேக பழமைவாதத் திருச்சபைகள் அசைக்கப்பட்டு அதன் தலைமைத்துவத்தில் நெருக்கங்கள் உண்டாகும்.

விசுவாசிகளுக்கு: அநேக வித்தியாசமான உறுப்பினர்கள் இணைந்து நாமே ஜீவனுள்ள சரீரமும், திருச்சபையுமாய் இருக்கிறோம். நமது தலையாகிய கிறிஸ்து நாம் எல்லோரும் முதிர்ச்சி அடையத்தக்கதாக செயல்திறன் உடையவர்களாயும் கனி கொடுக்கிறவர்களாயும் இருக்க தமது தெய்வீக வடிவமைப்பின் படி தமது 5 விதமான ஊழியத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்துவார். (எபே. 4:11-16) தம்மை ஒப்படைக்காத உலகத்தோடு ஒத்துப்போகிற ''பெயரளவில் மட்டும்'' - கிறிஸ்தவர்களிடமிருந்து உண்மைத் திருச்சபை பிரிக்கப்படும்.

4) **உலகளவில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கம்:** வெளி. 13:5-7.
உலகளவிய பொருளாதார மேம்பாடு நம்முடைய பண நிலையை குழப்பத்திற்குள்ளாய் மாற்றும் இந்த பொருளாதார நெருக்கம் திடீரென்று ஏற்பட்டு உலகளவில் அதிர்ச்சி அலைகளை எழுப்பும். புதிய ஒரே உலக அரசாங்கத்தின் கீழ் ஒரே உலகளாவிய பணமுறை திட்டத்தை நிலைநிறுத்த இது துவங்குகிறதாய் இருக்கும். இதனால் பொருளாதார சீர்கேடு ஏற்படும்.

விசுவாசிகளாகிய நமக்கு: கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அவருடைய இயற்கைக்கு மேற்பட்ட வழி நடத்துதலைக் காண்போம். (கேரீது: ஆற்றண்டையில் இருந்த எலியாவைப் போல்) நாம் கடன்களையும் (அடிமைத்தனம்) தரித்திரத்தையும் விட்டு வெளி வர கர்த்தர் விரும்புகிறார். (ஆகாய் 2:7,8) உன் வருமானத்திற்குள் ஆளுகை செய்ய உன் செலவுகளை எல்லைக்குள் வைத்திரு. மேலும் உங்களுடைய தசமபாகங்களால் கர்த்தரை கனப்படுத்தி உங்கள் முதற்பலனையும், காணிக்கையும் செலுத்துங்கள். அப்பொழுது நீங்கள் விதைக்கும் போது அதை அறுப்பீர்கள். (நீதி. 3:9,10; மல்கி. 3:8-12)

5) **சாத்தானுடைய மிகப் பெரிய பங்கினால் நேருக்கு நேர் ஏற்படும் நெருக்கம்:**
வெளி. 12:7-12; 1 தீமோத். 4:1.
தன் நாட்கள் முடிவடையப் போவதை சாத்தான் அறிந்திருக்கிறான். தன்னால் முடிந்தவரை பாவம் செய்யத் தூண்டவும், வஞ்சிக்கவும் கர்த்தருடைய மக்களை அழிக்கவும், எதிர்க்கவும் செய்வான். பிசாசின் காரியங்களும், மந்திரங்களும் பெரிய அளவில் ஏற்படும். (உதாரணம். ரஷியா) மந்திரம் செய்தல் மிகவும் பிரசித்தமாகி மக்கள் அதை "விளையாட்டாய்'' செய்யத் துவங்குவர். ஆனால் அந்த மந்திர ஆவிக்குள் கட்டப்படுவர். வன்முறை, குற்றம், ஒழுக்கக் கேடு போன்ற பாவங்கள் அதிகரிக்கும் வெளியே இருந்து வரும். ("கெர்ச்சிக்கிற சிங்கம் போல்'') தாக்குதல் மட்டுமல்லாமல் நம்முள்ளிலிருந்து வரும் ''ஒளியின் தூதனும்'' (வஞ்சனை) தாக்கக் கூடும்.

விசுவாசிகளாகிய நாம்: வேற்றுமையின் ஆவியாகிய பிசாசின் தாக்குதலை நாம் அறிந்து கொள்ள நாம் அதிகம் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொண்டு அவற்றின் மேல் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இயேசுவின் நாமத்தில் அவற்றைத் துரத்தக் கடவோம். (லூக். 10:18,19)

<u>பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான ஐந்து அலைகள்:</u>

<u>1) உண்மையான பரிசுத்தத்தின் அலை:</u>
(மல். 3:3; 2 கொரி. 6:17; 7:1)

நாம் பரிசுத்தம் உள்ளவர்களாயும் கர்த்தருக்கென்று முழுமையான ஒப்படைப்புள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நாம் அவரைப் போலவும் பரிசுத்தம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். நம்முடைய வாழ்க்கையில் பாவத்தோடு ஒப்புரவாகாமல் தொடர்ந்து அவற்றை உடைத்து கர்த்தருடைய பயத்தில் நடக்க வேண்டும். உங்களுடைய பாவம் வெளியரங்கமாகும் என்பதை ஞாபகத்தில் கொள்க. (எண். 32:23)

<u>2) அற்புதங்கள், ஆச்சரியங்கள் மற்றும் அடையாளங்களாகிய அலை:</u>
(மாற்கு 16:17-20. அப். 14:3)

கர்த்தர் உலகத்தில் அவருடைய மகிமையையும் அவருடைய வல்லமையின் மகத்துவத்தையும் காண்பிக்க விரும்புகிறார். ஆனால் அவருடைய வல்லமை மிகவும் பரிசுத்தமாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட பாத்திரத்தின் வழியாகவே பாய்ந்து வரும் என்பதை நினைவில் கொள்க. நாம் கர்த்தருடைய வார்த்தையின் படியும் அவருக்கென்று மிகப் பெரிய அளவில் ஒப்படைப்போடு வாழ்வதாலும் அவருடைய வல்லமையின் மிகப் பெரிய அதிகாரத்தை பெற்று யோவான் 14:12-14ல் இயேசு கூறியபடி மிகப் பெரிய காரியங்களைச் செய்வோம். இதனால் உலகம் நம்மைப் பார்த்து இயேசுவே கர்த்தர் என்று நம்பத் துவங்கும். நம்முடைய விசுவாசம் வார்த்தையில் மட்டுமல்ல. கர்த்தருடைய வல்லமையில் உள்ளது என்ற வேத வார்த்தை நிறைவேறத் துவங்கும். (1 கொரி. 2:4,5)

<u>3) உண்மையான ஒற்றுமை அலை.</u>
(லூக். 8:21; யோவான் 17:11; 20:23)

நெருங்கிய உடன்படிக்கை உறவுகள் மூலமாக உண்மையான மிகச் சிறந்த ஒற்றுமை நடைமுறைக்கு வரத் துவங்கும். ஆவியில் ஒருமைப்பட்டவர்களாய் உண்மையான ஒரே குடும்பம் என்பதை உணரத் துவங்குவோம். கர்த்தருடைய அன்பினால் புதிய நட்பு உறவுகள் உண்டாகும். தலைவரான இயேசு கிறிஸ்துவோடு தொடர்பு கொள்வதாலும் நாம் ஒவ்வொருவரும் அவருக்குள் ஒன்றாகி ஒருவராய் மாறுவதாலும் ஒற்றுமை உண்டாகும். தியாகத்தோடு கூடிய அன்பினால் நாம் ஒப்புரவாவதினால் நம்முடைய வாழ்க்கை நம் சகோதருக்கென்றே வாழ விரும்புவோம்.

<u>4) ஞானம் மற்றும் வேற்றுமையின் அலை.</u>
(எபே. 3:9-11; 2 கொரி. 1:9-12)

விசுவாசிகளாகிய நாம் நம் மனதில் அபிஷேகிக்கப்பட்டவர்களாய் எல்லா சூழ்நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் கர்த்தருடைய பரிபூரண சித்தத்தை அனுபவம் உள்ளவர்களாக மாறத் துவங்குவோம். இந்த அறுவடையின் கடைசிக் காலத்தில் கர்த்தருடைய திட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றத்தக்கவர்களாயும் வரும் நெருக்கடி காலத்தை நேருக்கு நேராய் சந்திக்கக் கூடியவர்களாயும் இருக்க கர்த்தருடைய ஞானத்தினால் அபிஷேகிக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியம். தூய்மை உள்ளதாயும், சமாதானம் உள்ளதாயும், சாந்தம் உள்ளதாயும், இரக்கம் உள்ளதாயும் உண்மையுள்ளதுமான பரத்திலிருந்து வரும் கர்த்தருடைய ஞானமாகிய அறிவின் வெளிப்பாட்டிற்குள் நாம் கடந்து செல்வது அவசியம். (யாக். 3:17). லூக். 21:15ல் இயேசு கூறும்போது "உங்களைப் போதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர் பேசவும் எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்." எதிர்ப்புகள் வரும் போது கர்த்தர் மிகச் சிறந்த ஞானத்தைக் கொடுப்பார். சாத்தானின் அதிகரிக்கும் வஞ்சனையையும், பொய்யையும் வெளிப்படுத்தத் தேவையான பகுத்தறியும் ஆவியையும் தருவார்.

5) மனந்திரும்புதல் மற்றும் புதுப்பித்தலுக்கான இறுதி அலை:
(அப். 3:19-21; யோவேல் 2:23-27)

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்த்தர் நம்மைப் புதுப்பிக்கவும். நம்மை முழுமைக்குள் கொண்டு வரத்தக்க கிறிஸ்துவின் குண நலனை / சாயலை நமக்குள் உறுதிப்படுத்தவும் விரும்புகிறார். (ரோமர் 8:29,30) சர்வ வல்லமையுள்ள தேவனின் வல்லமையாகிய பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும் போது அவருடைய ஆவியின் முழுமையினால் நாம் கிறிஸ்துவின் மாதிரியாய் மாறத்தக்கதாய் நம்மை உருக்கி வடிவமைப்பார்.

கர்த்தர் விரும்புவது -
- கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள வல்லமையிலும் அதிகாரத்திலும் நமது நிலை புதுப்பிக்கப்பட.
- நமது மனம் புதுப்பிக்கப்பட்டு நாம் முழு ஆவியோடும், ஆத்துமாவோடும், சரீரத்தோடும் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொள்.
- எல்லாருக்குள்ளும் இரட்சிப்பைக் கொண்டு வரத்தக்கதாக நம்முடைய குடும்பங்கள் புதுப்பிக்கப்பட.
- பிசாசின் எதிர்ப்பை உடைக்கத்தக்கதாக நமது சரீரம் புதுப்பிக்கப்பட.
- செழிப்பிற்கும், நிறைவிற்கும் இடமளிக்கத்தக்கதாக நாம் புதுப்பிக்கப்பட.

ஆகவே, கிறிஸ்துவும் அவர் இராஜ்யமும், என்றென்றைக்கும் ஆளுகை செய்யத்தக்கதாகவும், அவருடைய தெய்வீக செயல்திறனினால் பூமியில் அவர் நோக்கம் நிறைவேறத்தக்கதாய் புது அதிகாரத்தோடும் பயமில்லாமல் தைரியத்தோடே விசுவாசத்தில் அவரை நெருங்கக் கடவோம்.

ஆத்தும ஆதாயம்: மக்கள் எங்கேயோ அங்கு செல்

அத்தியாயம் 1 - மிகப்பெரிய அழைப்பு - ஆத்தும ஆதாயம்

நானும் என் மனைவியும் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம். ஏனென்றால் இயேசுவும் அவ்வாறே இருந்தார். 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' இதில் முக்கியமாக கூற விரும்பியது என்ன? 'இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது...' (1தீமோ.1:15). லூக்.19:10 கூறுகிறது, 'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் பூமிக்கு வந்தார்' இயேசு மக்களை இரட்சிக்கவே வந்தார். அதுவே அவருடைய ஊழியம்.

முதலில் இருந்து இறுதி வரை இயேசுகிறஸ்து ஆத்தும ஆதாயம் செய்கிறவராய் இருந்தார். எவரும் அறிந்திராத உலகத்தின் மிகப்பெரிய ஆத்துமஆதாயர்!. இயேசுவை பின் தொடர அவர் தெரிந்துகொண்ட முதலாம் குழு பெற்ற சவால் இது. 'என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' (மத்.4:19). அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டப் போது அவரைப் பின்தொடர்ந்த கடைசி குழு பெற்ற கட்டளை: 'நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, நீங்கள் உலகத்திற்கு சாட்சியாய் இருங்கள' (மத்.28:19,20).

முதன் முதலில் இயேசுவே ஆத்தும ஆதாயராய் இருந்தார். ஆகையால் அவர் உலகத்திற்கு வந்தது: மக்களை இரட்சிக்கவே. அதற்காகவே அவர் வாழ்ந்தார், மரித்தார், உயிரோடு எழுந்தார், தம்மை பின்பற்றுகிறவர்களுக்காக பரிசுத்த ஆவியினை அனுப்பினார். அவர்களை திறமையான ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக உருவாக்க. கிறிஸ்தவன் என்ற வார்த்தையின் அர்த்தம்: 'கிறிஸ்துவைப் போல்'. கிறிஸ்து இழந்து போனதைத் தேடவும் மக்களை இரட்சிக்கவும் வந்தார். ஆகவே கிறிஸ்தவர்கள், நாமும் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்து நமக்குள் பிறந்திருக்கிறார். மற்றும் அவருடைய அதே விருப்பம் நமக்குள்ளும், நம் மூலமாகவும் நடைபெற்று பூமியில் அவர் வாழ்ந்தபோது நடந்தது போலவே நாமும் நடக்க வேண்டும். நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அவர்கள் மூலமாக ஒரு ஆத்துமாவையும் கிறிஸ்து ஆதாயம் பண்ணும் சந்தோஷத்தை அறிந்ததில்லை. போதகர் மற்றும் வேதாகம ஆசிரியர்களும் ஆநேகர் கிறிஸ்துவுக்காக ஒரு ஆத்துமாவையும் ஆதாயம் பண்ணுவதில்லை.

திரும்பவும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கிறிஸ்தவர்களாய் இருப்பதின் அர்த்தம் கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டும் மற்றும் கிறிஸ்துவைப் போல் ஆத்தும ஆதாயகர்களாய் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு சிருஷ்டிக்கும் நற்செய்தியை அளிப்பது திருச்சபை வெற்றி அடையாதிருப்பதற்கு இதுவும் காரணமாய் இருக்கக் கூடுமோ? பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் இந்த உண்மையை இன்னும் அறியாதவர்களாய் இருக்கிறார்களா? நீங்களே சபையாய் இருப்பதால், பூமியில் நீங்களே கிறிஸ்துவின் சரீரமாய் இருப்பதால் உங்கள் மூலமாக அவரால் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யக்கூடும். உங்கள் சந்ததியில் ஆவிக்குரிய தேவையை சந்திக்கும் மிகப்பெரிய கருவியாக நீங்கள் இருக்கக் கூடும்.

இயேசு தமது செய்தியை மக்களிடம் கொண்டு சென்றார். மக்கள் எங்கெல்லாம் இருந்தார்களோ அங்கெல்லாம் அவர் சென்றார். சந்தைவெளிகள், தெருமுனைகள், மலையடிவாரம், கடற்கரையோரம், வீடுகள். அவர் எங்கு இருந்தாரோ, அந்த மக்களை அடையாளம் காட்டி மதத்தலைவர்கள் அவரை விமர்சனம் செய்தார்கள். 'இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்' என்றார்கள் (லூக்.15:2) இயேசு மக்களோடு கலந்திருந்தார். அவர் அவர்களுக்கு சாட்சி கொடுத்தார். அவர்களை சம்மதிக்க வைத்தார் மற்றும் அவர்களை ஆதாயம் செய்தார். பரிசுத்தமாக்கப்பட்டு தனிமையில் இருக்கும் மதவாதிகளைக் காட்டிலும் அவர் பரிசுத்தமானவர். அவர் மக்களோடு நடந்து சென்றார். அவர்களைப் போல உலகத்தானாய் இருப்பதே இதற்கு காரணம். அவ்வாறே எல்லா கிறிஸ்தவர்களாலும் இருக்க முடியும். கிறிஸ்துவைப் போல இருப்பதின் அர்த்தம், மக்களை ஆதாயம் செய்ய. அவருடைய நோக்கமே நம்முடைய நோக்கம். அவருடைய ஊழியமே நம்முடைய ஊழியம். அவருடைய திட்டமே நம்முடைய திட்டம். அவர் மக்களை இரட்சிக்க வந்தார். நாமும் இந்த உலகத்தில் இருப்பதால் அதே நோக்கத்தோடு இருக்க வேண்டும்.

யோவான் 18:37ல் அவர் கூறியது, 'சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகிற்கு வந்தேன்' ஆகவே நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம்: இயேசு கிறிஸ்து என்ற சத்தியத்தை சாட்சி பகரவே. (யோவான் 14:6 -யை பார்க்கவும்). 'நீ பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய் என் வீடும் நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்தி கூட்டிக்கொண்டு வா' (லூக்.14:23) என்று அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். 'ஆலயத்திற்குள் சென்று மணியடித்து மக்கள் உள்ளே வரும்படி ஜெபி' என்று அவர் ஒருபோதும் நம்மிடம் கூறவில்லை. 'நீ போய் அவர்களை வருந்தி அழைத்து வா', அவர்களை அழைத்துக்கொண்டு வந்து ஆதாயம் செய். என் வீடு நிறையும்படி நீ வெளியே போய் அழைத்து வா என்று கூறுகிறார். அவரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது இது மட்டுந்தான். இயேசு எடுத்துக் கொள்ளப்பட்டபின் அவரைப் பின்பற்றியவர்கள் அவரைப் போலவே செயலாற்றினர். அவர்கள் சந்தைகளிலும், தெருக்களிலும், வீடுகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும், சாட்சியாய் இருப்பதில் எப்போதும் அலுவலாய் இருந்தனர்: சுவிசேஷத்தை மக்கள் நம்புவதற்கென்று அவர்களை வற்புறுத்த போதித்தனர். சாட்சி இட்டனர். ஆத்தும ஆதாயம் செய்தனர். பேசினர். காரணத்தைக் கூறினர், இயேசு செய்தது போலவே. உண்மையில் இயேசுவை நினைவு கூரும்படி அவர்கள் செய்ததை கண்டித்து விமர்சித்து அவர்களை கிறிஸ்து அவன் என்று அழைத்தனர். அவ்வாறு விமர்சித்தவர்கள் கிறிஸ்து உண்மையிலேயே அவரைப் பின்பற்றுகிறவர்களிடம் அவர் பிறந்திருக்கிறார் என்பதை அறியவில்லை. அவருடைய வாழ்க்கை முறையை அவர்கள் பிரதிபலித்தனர். கிறிஸ்துவைப் போலவே வாழ்ந்து, போதித்து செயலாற்றினர். அவரைப் போலவே அவர்கள் ஆத்தும ஆதாயம் செய்தனர். அவர்கள் ஆத்தும ஆதாயர்களாய் இருந்தனர். ஏனென்றால் இயேசுவும் அவ்வாறே இருந்ததால் வேதம் கூறுகிறது (அப்.5:42) 'தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். என்னுடைய புதிய ஏற்பாட்டில் அனுதினம் என்ற வார்த்தையை வட்டமிட்டு இருக்கின்றேன். இன்றைய தினம் விளையாட்டு, திரை அரங்கங்கள், குதிரைப் பந்தயங்கள், மதுபானக் கடைகள், சிற்றின்பப் பூங்காக்கள் மற்றும் டிஸ்கோ, தினமும் வியாபாரம் செய்து கொண்டிருக்கும் போது அநேக திருச்சபைகள் வாரத்தில் 2 அல்லது 3 தினங்களில் மட்டுமே திறந்து இருக்கின்றன. அநேக திருச்சபை கட்டிடங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே திறந்திருக்கின்றன. ஆனால் உண்மையான சபை நீயும் நானும், நாமே கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிறோம். திருச்சபையின் கட்டிடங்கள் திறந்திருந்தாலும், திறந்திருக்காவிட்டாலும் அனுதினமும் நம்மூலமாய் அவர் சாட்சியாய் ஊழியம் செய்யக்கூடும். ஆதி கிறிஸ்தவர்கள் அனுதினமும் ஆலயத்திலும், வீடுகள் தோறும் கிறிஸ்துவை போதித்து கற்பித்தனர்.

அதே சாட்சி

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதில் ஆதித் திருச்சபைக்கு இருந்த மனதுருக்கம், ஜாக்கிரதையும் திரும்பப் பெற்றுக்கொள்வதில் கிறிஸ்தவர்களாகிய நாம் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். யெகோவா சாட்சிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா (இது தவறானது, ஆகவே 'கிறிஸ்தவனின் விக்கிரக ஆராதனை என்று அழைக்கின்றனர்'). அவர்கள் இந்த நூற்றாண்டின் மற்ற எந்த மதங்களைக் காட்டிலும் அதிகமான உறுப்பினர்களை தங்கள் பக்கமாய் மாற்றி சேர்த்துக் கொண்டனர்? ஏன்? பழமைவாய்ந்த திருச்சபைகள் தங்கள் உறுப்பினரை இழந்திருக்கும்போது இவர்கள் எப்படி ஆதாயம் பண்ணிக்கொண்டார்கள்? ஒரு எளிய காரணம். ஆதித் திருச்சபையின் பரம இரகசியத்தை அவர்கள் அறிந்து வீடுவீடாக தங்கள் சாட்சியைக் கொண்டு சென்று ஒவ்வொருவரையும் தங்கள் பக்கமாய் மாற உற்சாகப் படுத்தினர்.

பழமை கிறிஸ்தவர்கள் தங்கள் திருச்சபையின் நாற்கலிகளை உபயோகப்படுத்தும் போது இந்த யெகோவா சாட்சியினர் தங்கள் பாதரட்சைகளை உபயோகப்படுத்தினர். திருச்சபை உறுப்பினர்கள் தங்கள் திருச்சபை பாதைகளிலே வாசமாய் இருக்கும்போது யெகோவா சாட்சியினர் மக்களுக்கு பாதை அமைத்து அவர்களை தங்கள் பக்கமாக மாற்றிக்கொண்டனர்.

யெகோவா சாட்சிகள் ராஜாங்க அரங்குகளில் சந்தித்திருப்பார்களாகில் ஒருவரையும் ஆதாயம் செய்திருக்க முடியாது. ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களை சந்தித்தார்கள். அவர்களை இரட்சிக்கப்பட்டவர்களை சந்தித்தார்கள். அவர்களை ஒன்று சேர்த்து தங்கள் சாட்சிகளை போதித்தனர். அவர்களுடைய உபதேசங்களில் அவர்கள் தேறினவர்களாய் இருந்தனர். அப்படி சாட்சி உள்ளவர்களாய் இருக்க அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்கள் மற்றவர்களை மாற்றத்

தயாரானபோது அவர்கள் வெளியே போய் தெருக்களில் ஒலி நாடாக்கள் அல்லது ஒலிப்பெருக்கிகளைக் கொண்டு சென்று இலக்கியங்கள் மூலமாய் அவர்களைக் கவர்ந்தனர். தெருத் தெருவாய் நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் கதவுகளைத் தட்டி வீடுகள் தோறும் நுழைந்து சாட்சியிட்டு ஒரு ஒழுங்காய் வேலை செய்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்தனர். மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு செல்கின்றனர். ஒரு மிகப் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ நாளிதழின் எழுத்தாளர் ஒருவர் 'நாம் யெகோவா சாட்சிகளையோ அல்லது அவர்கள் ஆராதனையையோ ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம்'. ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பையும, ஊழிய உணர்வையும் தெரியாதவர்களிடத்திலும் வீடு வீடாக அவர்கள் செல்வதை நாம் பாராட்டத்தான் வேண்டும்: அவர்கள் நிலைத்து இருப்பதால் யெகோவா சாட்சிகள் ஆத்தும ஆதாயம் செய்வதில் வெற்றி பெறுகின்றனர்.

பசியாயுள்ள உலகம்

ஆவிக்குரிய மதிப்பீடுகளில் மக்கள் குழப்பம் அடைந்திருக்கின்றனர். அவர்கள் தொலைக்கப் பட்டவர்களாய் சபையில் தாங்கள் வழிநடத்தப்படுவதை நம்பாமல், தாங்கள் போகும் திசை தேடி அலைகின்றனர். உண்மையான சுவிசேஷத்தின் சாட்சியை அவர்கள் பெறாமல் இருக்கின்றனர். அவர்கள் மனோதத்துவ நிபுணரையும், மனநிலை மருத்துவரையும் தேடி ஓடுகின்றனர். மனோதத்துவ நிபுணர்கள் வளர்ச்சி அலைகளுக்கேற்ப அவர்களுடைய ஒவ்வொரு புதுத் தத்துவத்தையும் பரிசோதிக்கப்படும் மனித 'பரிசோதனை விலங்குகளாய்' கருதப்படுகின்றனர். குழந்தைகள் குழப்பம் அடைந்திருக்கின்றனர். இளம் வாலிபர் நோக்கம் இல்லாது அலைகின்றனர். பெற்றோர்களும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். குடும்பங்களை பாதுகாப்பின்மை மேற்கொண்டுள்ளது. குடும்ப வாழ்க்கையின் நிலைத்தன்மைக்கு புசிப்பதும், குடிப்பதும் மட்டுமே பதிலீடாய் இருக்கிறது. வியாதி, நோய், மனஅழுத்தம் மற்றும் ஆவிக்குரிய வெறுமை நிறைந்திருக்கிறது. அநேக குடும்பங்களில் பழமையான நிலையான வாழ்க்கை முறை கதவுக்கு பின்பாக தூக்கி எறியப்பட்டு காணப்படுகிறது. கிறிஸ்தவர்கள் ஊழியம் செய்வதற்கு என்று உலகம் திறந்த வாசல் உடையதாய் இருக்கிறது. ஆனால் இலட்சக்கணக்கான சபை உறுப்பினர்கள் அவர்களை சந்திப்பதில்லை.

மக்கள் இரட்சிக்கப்பட நாம் ஜெபிக்கிறோம். 'வெளியே போய் அவர்களை அழைத்து வா' என்று இயேசு கூறுகிறார். நாம் ஜெபித்துக்கொண்டிருக்கிற வேளையில் அவர்களை இழந்து போகிறோம். நம் மூலமாக மாத்திரமே கிறிஸ்து அவர்களோடு பேச முடியும். நாம் அவர் கால்களாய், அவர் சத்தமாய், அவர் கரங்களாய், அவர் சரீரமாய் இருக்கிறோம். இன்றைய நாளே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு சிறப்புதன்மை உடைய ஆத்தும ஆதாயராய் வாழ வாய்ப்பு உள்ளது. சுவிசேஷர்கள் மட்டுமே ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் என பழமைவாதம் நமக்கு கற்பித்து இருந்தது. ஆனால் ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஊழியக்காரர்கள் தாம்.

முதலாவது கிறிஸ்தவன்

'நான் ஆத்தும ஆதாயம் செய்பவன் அல்ல, கிறிஸ்தவன் அல்லாதவனை ஒருபோதும் என்னால் கையாள முடியாது. மந்தைகளை மேய்க்கின்ற மேய்ப்பனாய் இருப்பதே என்னுடைய அழைப்பு' என்று ஒரு சபையின் மேய்ப்பர் கூறுகிறார். மிகச் சிறந்த மேய்ப்பர் யார்? இயேசு கிறிஸ்து! அவர் மிகச் சிறந்த ஆத்தும ஆதாயகராகவும் இருந்தார். நான் சபையின் மேய்ப்பனாய் இருந்தால் அவர் மாதிரியைப் பின்பற்ற வேண்டும். மற்றொருவர் என்னிடம் இவ்வாறு கூறினார், 'கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள என்னால் பொதுமக்களிடம் அழைப்பு விடுக்க முடியாது. அது என்னுடைய அழைப்பு இல்லை. எனக்கு கொடுக்கப்பட்ட வரம் போதிப்பதே'. மிகச் சிறந்த ஆசிரியர் யார்? இயேசுவே. உலகின் மிகச் சிறந்த ஆத்தும ஆதாயரும் அவரே. நான் ஒரு ஆசிரியனாய் இருந்தால் நான் கற்பிப்பதின் வழியாகவே அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள சம்மதிக்கச் செய்ய இயேசுவின் மாதிரியை பின்பற்றவேண்டும். நான் ஆத்தும ஆதாயம் செய்பவன் ஏனென்றால் இயேசு அவ்வாறே செய்ததால். ஒரு போதகர் என்னிடம் கூறினார், 'இரட்சிக்கப்படாதவர்களிடம் செல்வது என்னுடைய அழைப்பு அல்ல, என்னுடைய தாலந்து தீர்க்கதரிசனம் உரைப்பதே' யார் மிகச் சிறந்த தீர்க்கதரிசி? இயேசுவே. அவர் ஆத்தும ஆதாயகராகவும் இருந்தார். 'பழைய ஏற்பாட்டின் சாயலையும், வகைகளையும் நான் போதிக்கிறேன். நான் ஆத்தும ஆதாயம் செய்கிறவன் அல்ல. நான் சபையில் ஊழியம் செய்கிறேன்' என்று என் ஊழிய நண்பன் ஒருவன் என்னிடம் வெளிப்படையாய் கூறினான். இயேசுவைக் காட்டிலும் இதை மிக நேர்த்தியாய் செய்பவர் யார்? இருந்தாலும் அவருடைய போதனையில் அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார்.

நான் என்ன கூறுகிறேனென்றால்: நீங்கள் போதகர் ஆவதற்கு முன்பு நீங்கள் ஒரு கிறிஸ்தவர் - கிறிஸ்துவைப் போன்றவர்.

முதலாவது நீங்கள் ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவே கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட்டீர்கள்.

பின்பு நீங்கள் ஒரு போதகர் அல்லது மந்தையின் மேய்ப்பர் என்று அழைக்கப்படலாம். ஒவ்வொரு போதகரும் ஆத்தும ஆதாயம் செய்யக் கூடும். ஏனென்றால் கிறிஸ்து ஆத்தும ஆதாயம் செய்யக் கூடியவராய் இருந்தார். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் - கிறிஸ்துவைப் போலவே இருப்பதால். நீங்கள் போதிப்பவராய் மாறுவதற்கு முன்பு நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருந்தீர்கள். ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவே நீங்கள் கிறிஸ்தவன் என்று சாட்சியாய் அழைக்கப்பட்டீர்கள். பின்பு நீங்கள் ஆசிரியர் அல்லது கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிற போதகன் என்ற வரம் பெற்றீர்கள். சபையில் நீங்கள் தீர்க்கதரிசனம், கற்றுக் கொடுப்பது அல்லது போதிக்கும் வரத்தைப் பெறுமுன் நீங்கள் முதலாவது ஆத்தும ஆதாயம் செய்யவே அழைக்கப்பட்டீர்கள். பின்பு உங்களது இரண்டாவது அழைப்பு தீர்க்கதரிசனம் உரைத்தல்.
முதலாவது, கிறிஸ்தவன் - ஆத்தும ஆதாயம் செய்பவன், பின்பு ஒரு போதகன்.
முதலாவது, கிறிஸ்தவன் - ஆத்தும ஆதாயம் செய்பவன், பின்பு தலைவன்
முதலாவது, கிறிஸ்தவன் - ஆத்தும ஆதாயம் செய்பவன், பின்பு இசைக் கலைஞன், பாடகன், தீர்க்கதரிசி, நீங்கள் எந்த வரத்தைப் பெற்றவர்களோ.
எப்போதுமே முதலாவது, கிறிஸ்தவன் - ஆத்தும ஆதாயம் செய்பவன்.

மூன்று சாட்சிகள்: முதலாவது ஆத்தும ஆதாயம்

இதுவே கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் கோட்பாடு மூன்று நிரூபணங்கள் - மூன்று சாட்சிகள் - லூக்.15:1-10ல் உள்ளவற்றின் மூலமாக உங்களோடு நான் பகிர்ந்து கொள்கிறேன்.

சாட்சி எண்:1, 'மனந்திரும்ப அவசியமில்லாத 99 நீதிமான்களைக் குறித்து சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்' (வச.7). காணமற்போன ஒருவர் கண்டுபிடிக்கப்படுவதின் நிமித்தம் பரலோகம் மகிழ்ந்து களிகூரும். இரட்சிக்கப்பட்ட 99 பேரைக் காட்டிலும் ஒருவரை நாம் ஆத்தும ஆதாயம் செய்யும்போது மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் காணாமற்போனவருக்கே முதலிடம்.

சாட்சி எண்:2, ஒருவன் நல்ல மேய்ப்பனை பரலோக இராஜ்ஜியத்தில் படமாக காண்பிக்கிறனர். அவள் தன் மந்தையில் உள்ள '99 ஆடுகளை தனியே விட்டு' காணாமற்போன ஆட்டைத் தேடி மலைகளிலும் ஆபத்தான இடங்களிலும், உலகமெங்கும் தேடி கண்டுபிடித்தான். (வச.4). நல்ல மேய்ப்பன் மந்தையிலே தங்கி, தன் மந்தையை கவனித்துக் கொண்டிருந்தான் என்று கூறாமல் காணமற்போன ஒன்றைத் தேடி வெளியே சென்றான். இன்றைய நாட்களில் அவர் நம் மூலமாக இதைச் செய்கிறார். இதுவே கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் கோட்பாடு என்று நான் கூறுகிறேன். ஆத்தும ஆதாயம் செய்யுங்கள் - முதலாவது காணாமற்போனவைகளை தேடுங்கள்!.

சாட்சி எண்: 3, நாற்காலியில் எஜமாட்டியாய் அமர்ந்து இராமல் தன்பையில் உள்ள காசுகளை கவனமாய் எண்ணிய பெண்ணையை நல்ல ஸ்தீரி என்று படம்பிடித்துக் காட்டுகிறது. 'காணமற்போன காசை கண்டுபிடிக்கும்வரை' இரவும் பகலும் அதை ஜாக்கிரதையாய் தேடினாள்' (வச.8). காணாமற்போனதைக் கண்டுபிடிக்கும் வரை அவள் விளக்கைக் கொளுத்தி இருளான மூலைகளிலெல்லாம் பொறுமையாய் தேடினாள். பின்பு அதை கண்டுபிடித்து மகிழ்ந்து களிகூர்ந்தாள். காணாமற்போன காசை இரட்சிக்கப்படாதவர்களுக்கு ஒப்புமைப் படுத்தினாள். இன்றைய நாளின் காட்சி மிகவும் வித்தியாசமானது. ஞாயிறு காலை, போதகர் தன் பையில் பத்திரமாய் உள்ள 'காசுகளை' மெருகேற்றுவார் - சபையின் உறுப்பினரை. அந்த வார நாட்களில் அவர்கள் திரும்பவும் மெருகேற்ற படுவார்கள். தொலைந்து போன 'காசுகளை' அவர்கள் ஒருபோதும் தேடுவதில்லை. ஒவ்வொரு ஞாயிறும் ஏற்கனவே பையிலுள்ள 'காசுகள்' திரும்பவும் திரும்பவும் மெருகேற்றப்படுவர். ஒவ்வொரு வாரமும் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களிடம் திரும்பவும் திரும்பவும் ஊழியம் செய்வார். கர்த்தருடைய வார்த்தையை போதிக்கும் வரம் பெற்றோர், கிறிஸ்தவர்களையே நாடி செல்வர்.

கூட்டங்களின் மூலமாக ஒவ்வொரு நாட்களின் இரவிலும் திரும்பவும இவர்கள் இன்னமும் மெருகேற்றப்படுவார்கள். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மத்தியில் எந்த ஊழியமும் இல்லை. பின்பு தீர்க்கதரிசனப் போதகர் வருவார். இரட்சிக்கப்படாதவர் மேல் எந்த ஊழியமும் இல்லை. இரட்சிக்கப்படாதவர் மேல் எந்த கவனமும் செலுத்தமாட்டார். யாரோ ஒருவர் ஒழுங்குபடுத்தின சிறப்பு கூடுகையில் ஆவிக்குரிய வரங்கள் அல்லது பழைய ஏற்பாட்டின் சாயல் மற்றும் வகைகளைப் போதிப்பார். இன்னமும் கிறிஸ்தவர்களை அறியாதவர்களைத் தேடி யாரும் செல்வதில்லை. கிறிஸ்தவர்களை மேலும் மெருகேற்றுவதற்கென்று பாடகர் குழு பாடி மகிழ்விக்கும். தொலைந்து போன காசை யாரும் தேடுவதில்லை. காணாமற்போன ஆட்டின் பின்னே ஒருவரும் செல்வதில்லை. மந்தையில் பத்திரமாய் உள்ளவற்றின் மேலேயே நிலையான கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கு இடையில் இரட்சிக்கப்படாதவர் தொடர்ந்து கிறிஸ்தவர்களால் தொடப்பட்டாலும், ஆத்தும ஆதாயரால் சந்திக்கப்படாமலும் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் அவர்களைத் தேடி செல்லாததால் கிறிஸ்தவரால் அவர்களை அடைய முடிவதில்லை. கிறிஸ்துவையும் அவர்களுடைய அன்பையும் நம் மூலமாக மட்டுமே அவர்களால் காண முடியும். அவர்களை இரட்சிக்க அவர் விரும்பியும் நம் மூலம் மட்டுமே அவர் செய்யக் கூடும்.

ஆத்தும ஆதாயம் செய்யும் ஊழியத்தைத் தவிர எந்த ஊழியத்திற்கென்றும் கர்த்தர் எவரையும் அழைக்கவில்லை. கிறிஸ்து உங்களோடு வாழும் கிறிஸ்தவர்களாய் நீங்கள் இருப்பதின் சாராம்சம் - உங்கள் மூலமாக சாட்சியின் ஊழியம் செய்யவே. ஆதித் திருச்சபையினர் ஆத்துமாக்களின் மேல் கரிசனை உடையவராய் இருந்தனர். அவர்கள் கிறிஸ்துவைப் போலவே இருந்தனர். உங்களுக்கு சபையில் என்ன தாலந்துகள் இருந்தாலும் முதலாவது நீங்கள் ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் - எல்லாவற்றிற்கும் முதல், சாட்சியாய் இருத்தல் - பின்பு எழுத்தாளர். ஆசிரியர், போதகர், தீர்க்கதரிசி அல்லது எந்த சிறப்பான வரம் உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதோ அதுவாகவே இருப்பீர்கள்.

உண்மையான 'கிறிஸ்து - அவன்' - ஆத்தும ஆதாயராய் இருக்க முடியும் ! ஏனென்றால் கிறிஸ்து அவ்வாறே இருந்தார்.

அத்தியாயம் 2 - மக்கள் எங்கேயோ அங்கே செல்.

அறுவடை அதிகமாய் இருப்பதால் நாம் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம்

ஆத்தும ஆதாயம் செய்யாமல் மூடநம்பிக்கை நிறைந்துள்ள மதத்தின் மக்களுடைய முகங்களிலுள்ள குழப்பங்களை நம்மில் ஒருவராலும் அறிய முடியாமல் இருக்கிறது. 30 ஆண்டுகளாக சிறுமைப்படுத்தப்பட்ட மக்கள், குஷ்டரோகிகள், பிசாசு பிடித்தோர், மந்திரவாதிகள் மற்றும் நம்பிக்கை இழந்த வியாதியஸ்தர் முன்பாக நாம் திறந்த வெளியில் நிற்கிறோம். மனித உணர்வுகளில் ஒன்றாகிய கண்ணீர் மிகுந்த மக்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் போதிக்க வேண்டியதிருக்கிறது. உலக அளவில் பல இலட்ச மக்களுக்கு இன்னும் கிறிஸ்துவின் செய்தி சென்றடையவில்லை. அவர்கள் வெறுமையாய், அவர்கள் ஆத்துமா ஆத்தும அறுவடைக்கென்று காத்திருக்கிறது.

நாம் ஏன் ஆத்தும ஆதாயராய் இருக்க வேண்டும் என்பதற்கு இது இரண்டாவது காரணம்: ஏனென்றால் அறுவடையோ மிகுதி.

வேதம் கூறுகிறது, 'அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல தொய்ந்து போகிறவர்களும், சிதறப்பட்டவர்களுமாயிருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகினார். (மத்.9:36). தேவை நிறைந்த இந்த திரளான மக்களைக் குறித்து சிந்தித்தார். 'அறுப்பு மிகுதி' (வச.37) என்று கூறினார். இதற்காக அவர் என்ன செய்தார்? 12 சீஷர்களை அவர் அழைத்து பிசாசின் மேல் அதிகாரத்தைக் கொடுத்து வியாதியஸ்தரைக் குணமாக்கவும், இத்தகைய அறுவடைக்கு உதவி செய்ய அவர்களை அனுப்பி வைத்தார். பின்பு அவர் மேலும் 70பேரை அழைத்தார். அவர் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, எல்லா விசுவாசிகளுக்கும் அவர் நாமத்தினால் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்தார். இதன் உண்மை: அறுவடைக்கு என்று சில காரியங்களை அவர் செய்தார். அவர் வீணாய் அமர்ந்து இருக்காமல் அதற்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டார். அறுவடைக்குள்ள நிலங்களுக்கு வேலையாட்களை அனுப்பும்படி ஏற்பாடு செய்தார்.

திரளான ஜனங்களைக் கண்டபோது இயேசு மனதுருகினார். நாமும் கிறிஸ்துவைப் போல் இருப்பதால், சுவிசேஷத்தால் தொடப்படாத மனிதர்களைக் காணும்போது மனதுருக்கத்துக்குள் கடந்துபோக முடியும். நான் கிறிஸ்துவைப் போல் இருந்தால், சுவிசேஷத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொள்ளும்படியாக ஏதாவது ஒரு காரியத்தில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம். 'காணாமல் போனவர்களுக்காக நாங்கள் மனதுருகிறோம். ஒவ்வொரு வாரமும் சிறப்பு ஜெபக்கூட்டங்கள் வைத்து பாவிகள் இரட்சிக்கப்பட பாடுபடுகிறோம். உண்மையாய் அத்தகைய மக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று எங்கள் சபைகளில் ஜெபிக்கிறோம். இதைத் தவிர மேலும் கூட்டங்கள் நடத்தி, சிறப்பு செய்தியாளரை அழைத்து, இரட்சிக்கப்படாதவர்களுக்காக போதிக்கிறோம்' என்று ஒரு போதகர் அல்லது கிறிஸ்தவன் கூறலாம்.

சபைக்கு போய் ஆலயமணி அடித்து சிறப்பு பேச்சாளரை வரவழைத்து பாவிகள் இரட்சிக்ப்பட, நமது சபைக்கு வர வேண்டுமென்று ஜெபியுங்கள் என்று நம்மிடம் கூறியிருக்கிறாரா? அல்லது 'நீ பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய் என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்தி கூட்டிக்கொண்டு வா' என்று இயேசு கூறியிருக்கிறாரா? (லூக். 14:23).

நாம் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்று நினைக்கும்போது நம் நினைவுக்கு வரவேண்டியது: கிறிஸ்தவரல்லாதோர் திருச்சபை கட்டிடத்திற்குள் போக மாட்டார். திருச்சபை கட்டிடத்திற்குள் சென்று நாம் அவர்களை அடைய முடியாது. அவர்களோடு சுவிசேஷ தொடர்பு கொள்ள நாம் திருச்சபையை விட்டு வெளியே செல்ல வேண்டும் - அவர்கள் வாழும், வேலை செய்யும் மற்றும் விளையாடும் இடத்திற்கு நாம் செல்ல வேண்டும். ஒரு சிலரை திருச்சபை கூட்டங்களில் சென்று அடைய முடியும். ஆனால் திரளான இரட்சிக்கப்படாதோர் சபை கூட்டங்களுக்குப் போக மாட்டார்கள் சபை வளாகத்திற்குள் நாம் அவர்களை தொடர்புகொள்ள முடியாது. நம் மூலமாக கேள்விப்பட அல்லது கிறிஸ்துவைப் பார்க்க முடியாவிட்டால் அவர்கள் கிறிஸ்துவை சந்திக்கவோ அவர்கள் அவருடைய அன்பை அறிந்துகொள்ளவும் முடியாது - மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு சென்று கிறிஸ்துவை சாட்சியாய் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த உண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதில்லை. நாம் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிறோம். அவர் நம்மூலமாய் மட்டுமே அவர்களை சென்றடைய முடியும். விசுவாசிகள் அவர்கள் இடத்திற்குச் செல்ல வேண்டும். இதுவே கிறிஸ்து தன்னைப் பின்பற்றுகிறவர்களைச் செய்யச் சொன்ன காரியம். இதையே ஆதித் திருச்சபை கிறிஸ்தவர்கள் செய்தனர். இத்தகைய ஆதி கிறிஸ்தவர்கள் ஆத்தும ஆதாயம் செய்யவும், சாட்சியிடவும் சென்ற இடங்கள் - கூட்டம் நிறைந்த சந்தைவெளிகள், தெருமுனைகள், கிராமங்கள், கடற்கரையோரமுள்ள வீடுகள்.

சுவிசேஷத்திற்குரிய கோட்பாடு

சுவிசேஷம் அல்லது ஆத்தும ஆதாயம் சபை கட்டிடத்திற்குள் செய்ய வேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம் அல்ல. மக்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே செல்வது மட்டுமே சுவசேஷம் திறன் வாய்ந்ததாய் இருக்க முடியும். சபை கட்டிடம் என்பது கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றாக சேர்ந்து விசுவாச வார்த்தையில் வளரவும், கிறிஸ்தவ உபதேசங்களைப் போதிக்கவும், கிறிஸ்தவர்கள் பலப்படவும், எப்படி சாட்சியாய் இருப்பது என்பதை கற்பிக்கிற இடம் ஆகும். மக்கள் எங்கே வாழ்கிறார்களோ அங்கு சென்று செய்வதே ஆத்தும ஆதாயமாகும். 'அனுதினம் ஆலயத்திலும், வீடுகள் தோறும் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் போதித்து கற்பித்தனர்' (அப்.5:42). ஆதி அப்போஸ்தலர் அங்கேயே தங்கி அலுவலாய் இருந்தனர். ஆத்தும ஆதாயத்தின் அடிப்படை கோட்பாடை திரும்பவும் நாம் முக்கியப்படுத்துவது சிறந்தது. நம்முடைய குளியலறை தொட்டிகளில் மீன் பிடிக்கக்கூடாது. மீன்பிடிக்க நாம் விரும்பினால் வலைகளை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி, ஆறுகள், ஓடைகள், குளங்கள் மற்றும் வனாந்திரத்திலுள்ள நீர் நிலைகளுக்குச் செல்ல வேண்டும் - எங்கு மீன் இருக்கிறதோ அங்கு செல்ல வேண்டும். நம்முடைய சாப்பாட்டு அறைக்குள்ளே பயிர்களை அறுவடை செய்ய முடியாது. பயிர்களை அறுவடை செய்ய நம் வீட்டை விட்டு கதிர்அறுக்கும் அரிவாளை எடுத்துக்கொண்டு பகலின் உஷ்ண வேளையில் விளைந்த நிலத்திற்குச் செல்ல வேண்டும் - எங்கு பயிர் வளர்ந்து அறுவடைக்கு ஆயத்தமாய் இருக்கிறதோ அங்கு செல்ல வேண்டும். சபையின் கட்டிடத்திற்குள் தங்கி இருப்பதின் மூலம் ஆத்தும ஆதாயம் செய்ய முடியாது. இரட்சிக்கப் படாதவர்களை அறுவடை செய்ய நம்முடைய வாசஸ்தலங்களை

விட்டு, நம்முடைய சாட்சிகளை எடுத்துக் கொண்டு சந்தைவெளிக்குக்கும், தெருக்களுக்கும், சிறைச்சாலைக்கும், மருத்துவமனைக்கும், விபசார விடுதிகளுக்கும், மக்களின் வீடுகளுக்கும் செல்ல வேண்டும். 30 ஆண்டுகள் நமது வாழ்க்கையை மக்கள் எங்கு வாழ்கிறார்களோ அங்கு செல்ல வேண்டுமென்று அர்ப்பணிக்க வேண்டும். ஆகவே நமது பிரசங்க மேடைகளை பூங்காக்களிலும், விளையாட்டு அரங்கங்கள் அல்லது பந்தய சாலைகள் அல்லது வெளியிடங்களில் அமைக்க வேண்டும். இந்துக்கள் திருச்சபையில் நடைபெறும் கூட்டங்களுக்குச் செல்வதில்லை. முகமதியர் கிறிஸ்தவ ஆலயங்களுக்குள் நுழைவது இல்லை. சீக்கயரும், புத்த மதத்தினரும் கிறிஸ்தவ ஆராதனைகளில் கலந்து கொள்வதில்லை. சபையில் இல்லாதவர் சபையில் நடைபெறும் கூட்டங்களுக்கு செல்வதில்லை. ஆனால் நாம் பொது இடங்களுக்கு - கடற்கரையோரம், பூங்கா, விளையாட்டு அரங்கம், பந்தய சாலை அல்லது திறந்தவெளி இடங்களுக்கு பல ஆயிரம் இரட்சிக்கப்படாத மக்கள் - முகமதியர், இந்துக்கள், புத்தமதத்தினர், புறமதத்தினர் வரும் இடங்களுக்கு நாம் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் வாழும், வேலை செய்யும் இடங்களுக்கு நாம் செல்ல வேண்டும்.

அவர்கள் வாழும் இடங்களுக்குச் சென்று அவர்களை ஆதாயப்படுத்தின பின்பு அவர்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவ ஆலயங்களுக்கு வரவும், விசுவாசத்திலும், அவருடைய வார்த்தையில் பெலப்படவும கற்றுக் கொள்வார்கள். ஆதித் திருச்சபையில் மக்கள் எங்கேயோ அங்கு அவர்கள் சென்ற முறை இவ்வாறு தான். பேதுருவும், யோவானும் தெருவிலே சென்று சப்பாணியிடம் தங்கள் சாட்சியைப் பகிர்ந்து கொண்டு அவனை சுகமாக்கினர். எருசலேமில் பேதுருவிற்கென்று மிகப் பெரிய கூட்டம் வந்த இடம்- தெருக்களும், கூட்டம் நிறைந்த சாலையோரமும் ஆகும். சமாரியா முழுவதும் பிலிப்பு போதித்த இடம் - வெளியே பொது இடங்களில். இதனாலேயே பிலிப்பு எத்தியோப்பிய ராஜஸ்தீரியாகிய கந்தாகே என்பவளுடைய மந்திரியும், அவளுடைய பொக்கிஷம் எல்லாவற்றிற்கும் தலைவனாயிருந்த எத்தியோப்பியன் ஆகிய ஒருவனை - அவன் இரதத்தில் சென்று கொண்டிருக்கும்போது சாலையிலே கிறிஸ்துவைப் பற்றிக் கூறினான். பவுல் புறஜாதியாரை சம்மதிக்க செய்ய - வெளியே தீவுகளுக்கும் மக்கள் வாழும் இடங்களுக்கும் சென்றான்.

ஒரு விவசாயி வயலில் அறுவடை செய்கிறான்

பதிமூன்று குழந்தைகளில் ஒருவனாக நானும் விளைந்த அறுவடைக்கு ஆயத்தமாய் இருக்கும் நிலத்தை நேரில் காணச் சென்றேன். அந்த நிலம் அவசரமாக அறுவடை செய்ய வேண்டிய அவசியத்தை நான் அறிந்தேன். அது விளைந்திருந்த நிலத்தணன்டைச் சென்று - காலை துவங்கி இரவு வரை ஓய்வின்றி அறுவடை செய்ய வேண்டியதாய் இருந்தது. பகல் முழுவதும் அங்கிருந்து விட்டு எங்கள் சோர்ந்து போயிருந்த சரீரத்தைத் தேற்றும்படி உணவு தயாரிக்க எங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டியதாய் இருந்தது. சாப்பிட்டு முடித்த பின்பு திரும்பவும் நாங்கள் வயல்வெளிக்குச் சென்று இரவுவரை அறுவடைக்குச் சென்றோம். அந்த மிகப் பெரிய வயல்வெளி அறுவடை செய்து முடிக்கும் வரை அனுதினமும் நாங்கள் இவ்வாறு சென்று வந்தோம்.

கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்ய நாம் கற்றுக்கொடுப்பதில்லை. ஆத்தும ஆதாயம் செய்யும் திட்டத்தை நாம் வகுத்தால் பொதுவாக சபையிலே சிறப்பு ஜெபக் கூட்டங்கள் வைத்து இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட வழி செய்கின்றனர். பின்பு அங்கு வருகை தரும் போதகர் இரட்சிக்கப்படாதவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்காக சில இரவுகள் போதக்கிறார். ஆனால் இரட்சிக்கப்படாதவர் அந்த சபையில் இராவிட்டால் நாம் எப்படி அவர்களுக்கு உதவி செய்ய முடியும்? ஆனால் அங்கு வரும் ஒரு சிலர் மட்டும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதால், இந்த யோசனை கொஞ்சம் சரியானது.

உலகம் முழுவதையும் இந்த வழியில் நம்மால் சந்திக்க முடியாது. இரட்சிக்கப்படாத பெரும்பான்மையோர் நம்முடைய சபைக்கு வரமாட்டார்கள் என்பதால் மிகப்பெரிய அறுவடையை நாம் சபைக்குள் இருந்தே செய்யமுடியாது. உண்மையிலேயே நம்முடைய சந்ததியில் மிகப்பெரிய அறுவடையைக் காண விரும்பினோமாகில் ஆதித் திருச்சபையில் இருந்த எழுச்சியையும், மனதுருக்கத்தின் இரகசியத்தையும் கண்டு கொள்ள வேண்டும். ஆதித் திருச்சபையினர், அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆபத்து நேரிடும் இடத்திற்கும் - நகரங்களுக்குள்ளும், கிராமங்களுக்கும் இழந்துபோன

ஆத்துமாக்களைத் தேடிச் சென்றனர். இதுவே கிறிஸ்துவைப் போல கிறிஸ்தவன் செயல்பட வேண்டியதாகும். சிறு பிள்ளைகளாய் இருக்கும்போது நாம் வயல்வெளியில் நம்முடைய சரீரம் பெலப்படவும், வளர்ச்சி அடையவும் விளைவின் பலனைச் சாப்பிட்டு நிறைவடைய வேண்டியதாய் இருக்கிறது. ஆனால் வளர்ச்சி அடைந்தவுடன் நம்முடைய ஜன்னலைத் திறந்து விளைந்திருக்கும் வயல்வெளியைக் காண வேண்டும். ஒருவேளை இருண்ட மேகங்கள் ஒன்று சேர்ந்து இடிமுழக்கங்கள் அதிகரிக்கலாம். அந்த நீண்ட பகல்வேளையில் நாம் முழங்காற்படியிட்டு ஜெபத்தில் ஆண்டவரிடம் அறுவடைக்காகவும், அந்த பயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் ஜெபிக்கலாம் அல்லவா? ஒருவேளை நாம் 'ஆ! ஆண்டவரே இந்த பயிர்களைக் காப்பாற்றும். இந்த பயிர்களை அறுவடை செய்து அவைகளை என் சாப்பாட்டு அறைக்குள் அனுப்பும்' என்று நாம் ஜெபிக்கலாம் இவ்வாறு நாம் கேட்பது புதுமையாய் இருக்கிறது அல்லவா? இன்றுவரை அநேக திருச்சபைகள் இதைதான் செய்து வருகின்றன. இந்த சந்ததியில் ஆத்துமாக்களை அறுவடை செய்ய அவைகள் தங்கள் சபை கட்டிடத்தைத் தாண்டிச் செல்வதில்லை. அதற்கு பதிலாக 'ஆ! ஆண்டவரே இந்த ஆத்துமாக்களை இரட்சியும். அவர்களை எங்களுடைய நேசமான சபை ஆராதனைக்கு கொண்டுவருவீரானால் அங்கிருந்தே அவர்களை எங்களால் இரட்சிப்புக்குள் நடத்த முடியும் என்று ஜெபிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் ஜெபிப்பது 'ஆண்டவரே இந்த பரிசுத்தமில்லாத மக்களிடம் எப்படி எங்கள் மேன்மையை இழந்து செல்லமுடியும் என்று கேட்பதைப் போல் உள்ளது. விபசாரம் செய்வோர், ஓரின சேர்க்கையாளர், போதைக்கு அல்லது சாராயத்திற்கு அடிமையானோரிடம் நாம் சாட்சியைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் நரகத்தின் பாதி ஏக்கர் இடத்தை நிறைந்துள்ள நிலையில் நமது மேன்மையும், நமது உறுப்பினரின் கௌரவத்தையும் விட்டு அங்கு செல்ல விரும்புவதில்லை. நமது மேன்மை காக்கப்படும் பரிசுத்தமான இடங்களிலேயே நாம் இருக்க விரும்புகிறோம். அவ்வாறு இரட்சிக்கப்படாதவர்களிடம் அனுப்பப்படுவோமேயானால் அங்கு ஒரு பரிசுத்த சூழல் ஏற்படவும், நம்மைப்போல் அவர்களும் சுத்தரிக்கப்பட வேண்டுமென்றும் ஜெபிப்போம்.

வசதி அல்லது மனதுருக்கம்

நமக்கென்று சந்தோஷமான சபைகளும், அழகான பாடகர் குழுவும் வசதியான இருக்கைகளும் உள்ளது. நமக்குத் தேவையான அனைத்தையும் நாம் பெற்றிருக்கிறோம். இரட்சிக்கப்படாதவர் நம்மிடம் வருவதைத் தவிர மற்றவை எல்லாம் நமக்கு போதுமானதாய் இருக்கிறது அல்லவா? நம்மில் அநேகர் அவர்களைத் தேடி அவர்கள் இருக்கும் இடத்திற்கு போவதில்லை அல்லவா? அநேக கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படாதவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கின்றனர். ஆனால் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று கிறிஸ்துவின் அன்போடு அவர்களுக்காக எதுவும் செய்வதும் இல்லை. கிறிஸ்துவின் நற்செய்தியை அளிப்பதும் இல்லை. இத்தகைய அழைப்பையே இழந்துபோனவர்கள் மேலான மனதுருக்கம் என்கின்றனர். இந்த தத்துவத்தை பல நூற்றாண்டுகளாக வல்லமையாய் நீருபிக்கப்பட முடியவில்லை. இத்தகைய யோசனை ஏன் போதிக்கப்படவில்லை? என்பது எனக்கு ஆச்சரிமாய் இருக்கிறது. ஆதித் திருச்சபையில் ஒவ்வொரு விசுவாசியும் சாட்சிகளாயும், ஆத்தும ஆதாயம் செய்பவர்களாயும் இருந்தனர். இன்று ஆயிரக்கணக்கான ஆதாயம் செய்யும்படி உற்சாகப்படுத்துவதில்லை. இந்த யோசனை அவர்களுக்குத் தோன்றுவதுமில்லை. அநேகருக்கு அவிசுவாசிகளை அவர்கள் இருக்கும் இடம் சென்று கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்பட வேண்டும் என்ற முதல்படியை அறிந்திருக்கவும் இல்லை.

ஆதித் திருச்சபையின் முறை - கர்த்தருடைய ஆலோசனை, ஒவ்வொரு விசுவாசியும் சாட்சியாயும் ஆத்தும ஆதாயம் செய்பவர்களாயும் இருப்பது 'பின்பு அவருடைய வீடு நிரம்பி வழியும்படி' பெருவழிகளிலும், வேலியருகிலும் சென்று ஜனங்களை உள்ளே வரும்படி வருந்தி அழைத்து வந்தனர். பின்பு அவர்கள் கர்த்தருடைய வீட்டிற்கு வந்து போதகர் மற்றும் ஆசிரியர்களால் விசுவாசத்திற்குள் வளர்ச்சி அடைவார்கள். ஏன்? ஒரு காரணம்: பின்பு அவர்களும் திரும்பி வயல்வெளிக்கு சென்று அறுவடை செய்பவர்களோடே இணைந்து காணாமல் போனவர்களை இரட்சிப்படையச் செய்வார்கள்.

ஒரு சபையால் என்ன செய்ய முடியும்

நீங்கள் சபைப் போதகராகவோ, ஆசிரியர்களாகவோ அல்லது சபையில் வேலை செய்கிறவராகவோ இருக்கலாம். நான் உங்களுக்கு சிபாரிசு செய்வது நீங்கள் மட்டுமே ஆத்தும ஆதாயம் செய்ய கற்றுக் கொள்ளாமல் உங்களைச் சுற்றியுள்ள மற்ற கிறிஸ்தவர்களும் அவ்வாறே செய்ய ஊக்குவித்து பகிர்ந்து கொள்ளுங்கள். உனக்கு கீழ் உள்ள உன் அன்புக்குரியோர்களோடு இணைந்து கண்டுபிடிக்கக் கூடும். எல்லா நடைமுறை யோசனைகளையும் யோசித்து வெளியே சென்று கிறிஸ்துவை பகிர்ந்து கொள்ள உன் கிறிஸ்தவ நண்பர்களையும், உனக்கு அருமையானவர்களையும் உற்சாகப்படுத்து. வெளியே சென்று ஊழியம் செய்வதினால் ஏற்படும் சந்தோஷத்தையும் சுயமதிப்பீடு உயர்வதையும் கூறி மற்றவர்கள் இவ்வழியில் உயர்த்துவதற்கு உற்சாகப்படுத்தி மக்களை வெற்றிக்கு நேராய் வழிநடத்த உன்னால் முடியும்.

கிறிஸ்துவை அவர்களுக்குள் பகிர்ந்துகொள்வதற்கும், அவர்களைச் சந்திப்பதற்கும் அநேக நடைமுறை வல்லமையான யோசனைகள் உண்டு. இரண்டு அல்லது மூன்று கூடாரங்களை விலைக்கு வாங்கி, அல்லது சில வரவேற்பரைகள், கடைகள் அல்லது அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்: பின்பு சில கிறிஸ்தவ நண்பர்களை தங்கள் பகுதிக்கு அழைத்து செயல்படுங்கள். அவர்களுக்குத் தேவையான இலக்கியப் பிரதிகள், மற்ற கருவிகள், ஒளி நாடாக்கள், திரைப்படங்கள், ஒலி நாடாக்களை அவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். ஒலி, ஒளி நாடாக்கள் அல்லது இசைத்தட்டுகளுக்கென்று பத்துபாகத்தை முதலீடு செய்யுங்கள். பத்து தகுதியான கிறிஸ்தவர்களை அழைத்து போதுமான கருவிகளைக் கொடுத்து ஆராதனைகளையும், இசைநிகழ்ச்சிகளையும் மற்றும் நல்ல சுவிசேஷ இலக்கியங்களையும் பதிவு செய்ய சொல்லுங்கள். 'இயேசு' திரைப்படம் அல்லது ஒளிப்பதிவுகளை தெருக்களிலும், வீடுகளிலும், விளையாடும் இடங்களிலும் மதுபான அரங்குகளிலும், கடற்கரையோரங்களிலும், வியாபாரஸ்தலங்களிலும் உங்கள் நகரை பத்து வித்தியாசமான பிரிவுகளாகப் பிரித்து திரையிடுங்கள்.

பத்து நகரங்கள்

வஸ்திரங்களற்று பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்தவனை கிறிஸ்து பிசாசினிடமிருந்து விடுதலையாக்கினவுடனே அவன் கிறிஸ்துவை விசுவாசித்து வஸ்திரம் தரித்து பின்பு தெக்கப்போலி என்று அழைக்கப்பட்ட பத்து நகரங்களுக்கு சாட்சியாய் இயேசுவால் அனுப்பப்பட்டான். (மாற்கு 5:19,20 பார்க்கவும்). 'இயேசு அவனுக்கு செய்த அற்புதங்களை எல்லாம் அவன் எல்லோருக்கும் சொல்லத் துவங்கினான். அவன் புதிய விசுவாசியாய் இருந்தாலும் கிறிஸ்துவுக்கென்று வல்லமையான சாட்சியாய் இருந்தான். நீ சந்திப்பதற்கென்று கர்த்தர் பத்து சந்தைவெளிகள் அல்லது பத்து மருத்துவமனைகளுக்கு, பத்து நாடுகளுக்கு, பத்து கிராமங்களுக்கு, பத்து சமுதாயத்தினண்டைக்கு அல்லது பத்து வீடுகளுக்கு அல்லது பத்து பகுதிகளுக்கு உன்னை அனுப்பலாம். ஆகவே உனக்கான யோசனையை ஏற்றுக்கொள். உனக்கான தரிசனத்தைக் குறித்து கனவு காண். நிறைவடைந்து பின்பு புறப்பட்டுச் செல். உன்னுடைய ஒவ்வொரு கைப்பிரதி அல்லது புத்தகங்களில் உன் சபையின் பெயரையும், முகவரியையும் முத்திரையிட்டுக் கொண்டு ஒவ்வொரு ஊழியக்காரரும் மக்களை ஆதாயம் செய்யும்படி வெளியே செல்ல உற்சாகப்படுத்து. உங்கள் சாட்சியாய் அவர்களை கவர்ந்து இழுத்து அந்த இடத்திலேயே வியாதியஸ்தருக்காக ஜெபித்து ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கு நேராய் வழிநடத்து. அந்த நாட்களில் ஒவ்வொரு பகுதியையும் சந்தித்து அநேகரை கிறிஸ்துவுக்கு நேராய் அவர்களுடைய சொந்த வீடுகளிலேயே வழி நடத்த கூடும். இரவுகளிலே ஒலி அல்லது ஒளிநாடா அல்லது திரைப்படங்களின் மூலம் பொது இடங்களில் போதித்து ஆத்தும ஆதாயம் செய்யக்கூடும். புதிதாய் ஆதாயம் செய்தவர்களை இந்த கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் அந்த ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் ஆலயத்திற்கு அழைத்துக் கொண்டு வரவேண்டும். அவர்களுக்கு வேத வார்த்தையை அளித்து போதகர்கள் வளர்ச்சிக்கு நேராய் வழிநடத்த முடியும். பின்பு அவர்கள் ஆத்துமா ஆதாயம் செய்பவர்களாய் மாறும் வரை அவர்களுக்கு போதகர் பயிற்சி அளிப்பார்.

சில கிறிஸ்தவர்கள் சிறைச்சாலைகளுக்கும், மற்றவர்கள் மருத்துவமனைகளுக்கும் (மற்ற நோயாளிகள் தொந்தரவடையாதபடி காதில் பொருந்திக்கொள்ளும் ஒலிநாடாக்கருவிகளைக் கொண்டு செல்லவும்) மற்றவர்கள் சுகாதார விடுதிகளுக்கும் மற்றும் சிறப்பு பகுதிக்கும் செல்ல விரும்புவார்கள். மக்கள்

எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, எங்கு எல்லாம் வேலை செய்கிறார்களோ மற்றும் அவர்கள் விளையாடும் இடங்களுக்கும் - வாலிப குழுக்கள் சென்று கைப்பிரதிகள், புத்தகங்கள், ஒலிநாடாக்கள், இசைக்கருவிகளை உபயோகித்து தெருமுனைகளிலும், மக்கள் வாழும் பகுதிகளிலும், கடைகளிலும், சந்தைவெளிகளிலும் சாட்சியிட முடியும். கிறிஸ்தவர்கள் மூலமாக மட்டுமே கிறிஸ்து தமது அன்பை மக்களுக்கு காண்பிக்க முடியும். விசுவாசிகளாகிய நம்மால் மட்டுமே இழந்து போனவர்களைத் தேடிச் செல்ல முடியும் என்று சரீரமாகிய ஒவ்வொருவரும் நினைவு கூறவேண்டும். உங்களுடைய கிறிஸ்தவ நண்பர்களிடம் இந்த தரிசனத்தின் முழுமையும் சீக்கிரமாய் நிலைகொள்ள வேண்டும். ஆத்தும ஆதாயம் செய்யும் எழுச்சியும் ஆத்துமாக்களின் மேல் கரிசனையும், புத்துணர்ச்சியும் அவர்கள் அடைய வேண்டும். எல்லோரும் பார்க்கும்படியான மிகப்பெரிய அறிவிப்புகளை எழுதி உங்கள் சபைக்குள்ளும் அல்லது படிக்கும் அறையிலும் தொங்கவிட வேண்டும். நமது நோக்கம்: ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சாட்சி! நமது ஊழியம்: மக்கள் எங்கேயோ அங்கு செல்வது! இத்தகைய அறிவுப்புகள் வல்லமை உள்ளது இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் இந்த வார்த்தையினால் கவரப்படுவர். இது ஒரு பழமையான முறை. இருந்தாலும் இது எப்போதும் மக்களுக்குள் கிரியை செய்கிறதாய் இருக்கிறது. ஊர்வலங்களில் செல்பவர் தங்கள் அறிக்கைகளை எழுதி தங்கள் கரங்களில் ஏந்திச் செல்வதை பார்த்திருக்கிறீர்களா?

வாரம் முழுவதும் ஆத்துமஆதாயம் செய்யும் திட்டத்தை ஒழுங்கு செய்வதற்கென்று உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் மற்றும் வாரநாட்களின் சாயங்கால வேளைகளில், ஆத்தும ஆதாயம் செய்வோர் எல்லோரும் கர்த்தருடைய வீட்டில் ஒன்று கூடி கர்த்தருடைய வார்த்தையின் மூலம் தங்களை போஷித்து உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு புது பெலனோடு திரும்பி ஆத்தும ஆதாயம் செய்யும்படி மக்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லுங்கள். இதுவே சந்தோஷமான விசுவாசியின் தரிசனமாய் இருக்கிறது. இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையில் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையை உண்மையான பொருள் நிறைந்ததாக மாற்றுகிறது. இது தனிமையையும், சோர்வையும் மாற்றுகிறது. இது உங்கள் சபைக்கு புத்துணர்வூட்டுகிறதாய் இருக்கிறது. ஆதித் திருச்சபையின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சுவிசேஷ முறை இதுவே ஆகும்.

ஒவ்வொரு நகரங்களிலும், ஒவ்வொரு தேசத்திலும் நமது சந்ததியில் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத மக்கள் நம்மைச் சுற்றி அநேகர் உண்டு - பல மதத்திற்குரிய காரியங்கள் காணப்பட்டாலும் இயேசு கிறிஸ்துவின் உண்மைத்துவத்தைக் குறித்த விழிப்புணர்வில்லை. இதுவே அறுவடைக்கு ஏற்ற காலம். நாம் நாமே அவருடைய சரீரம். நாம் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருப்பதற்கு இதுவே இரண்டாவது காரணம்: உண்மையாகவே அறுவடை மிகுதி.

அத்தியாயம் 3 - இங்கே நான் இருக்கிறேன்.

வேலையாட்கள் கொஞ்சமாய் இருப்பதினால் நாம் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருக்கிறோமா?

'பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான், இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றேன்' (ஏசாயா 6:8). ஒரு வருடத்தில் உலகத்தின் மக்கள் தொகை 70 மில்லயனைக் காட்டிலும் அதிகமாய் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதில் சுவிசேஷத்தினால் தொடப்படுகிறவர்களின் எண்ணிக்கை 3 மில்லியன்களுக்கும் குறைவாகவே அதிகரிக்கிறதை நீங்கள் அறிந்து இருக்கிறீர்களா? தோராயமாக கணக்கீட்டால் இன்று பூமியில் 6 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இதில் 3 பில்லியன் மக்கள் சுவிசேஷத்தை ஒருமுறை கூட கேள்விப்படவில்லை. இது 3000 வித்தியாசமான மொழி பேசுகின்ற மலைவாழ் மக்களும் அடங்குவர். இந்த இறுதி காலத்தில் உலகம் நித்தியத்தை நோக்கி பயங்கர வேகத்தில் செல்கிறது.

ஒவ்வொரு வருடமும் சராசரியாக முகமதியர், 4000 ஆசிரியர்களை தெற்கு சகாரா பாலைவனத்திற்கு அனுப்புகின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதைக் காட்டிலும்

அதிவேகமாக அவர்கள் ஆப்பிரிக்கர்களை இஸ்லாமுக்கு மாற்றுகின்றனர். அறிவியல் பூர்வமும், ஆன்மிகமும் எங்கும் கிறிஸ்தவ செய்தியை எதிர்க்கிறது. கிறிஸ்தவர்கள் புத்துணர்ச்சியோடும், அர்ப்பணிப்போடும் மிகப்பெரிய விளைவை அறுவடை செய்யும் பொன்னான வாய்ப்பாகும்.

வயல்நிலங்களை ஏறெடுத்துப் பாருங்கள்

'இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு காத்திருக்கிறது என்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்' என்று இயேசு (யோவான 4:35) கூறினார். திரும்பவும் அவர் 'தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்' என்றார் (மத்.9:37,38). நாம் அறுப்புக்குரிய நிலங்களைப் பார்க்கிறவர்களாய் இருக்கலாம். அதிக வேலையாட்களை அனுப்பும்படி ஜெபிக்கலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இந்த விளைநிலங்களை அறுவடை செய்ய நம் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்க வேண்டும். அதற்காகவே நாம் ஆத்தும ஆதாயகராய் இருக்கிறோம். ஏனென்றால வேலையாட்களோ மிகவும் குறைவு. உலகத்தில் உள்ள ஊழியக்காரர்களில் 94% பேர் 9மூ ஆங்கிலம் பேசும் மக்களிடம் மட்டுமே சுவிசேஷம் அறிவிக்கின்றனர். மீதமுள்ள 6% ஊழியக்காரர்கள் உலகிலுள்ள 91% மக்களின் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்கப் போராடுகின்றனர்.

எங்கு தேவை அதிகம் உண்டோ, எங்கு வேலையாட்கள் மிகவும் குறைவாய் உள்ளனரோ, அங்கு நம் வாழ்க்கையில் உள்ள சிறந்ததைத் தெரிந்தெடுத்து நம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு பகிர்ந்தளிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். உலகம் முழுவதும் உள்ள இந்த சந்ததியில் சுவிசேஷத்தை அறிவிக்கும் கருவியாய் சபை உருவாகவும், அதற்குத் தேவையான எல்லா வழிகளையும் கண்டுபிடிக்க நம் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். நமது சுவிசேஷ செய்தியை ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் திரைப்படம் (தேசிய அளவில் அபிஷேகிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களுடைய உதவியோடு) பதிவு செய்து பல வித்தியாசமான மொழி பேசும் நூற்றுக்கணக்கான மக்களுக்கான சுவிசேஷத்தை ஒரே நேரத்தில் கொண்டு செல்ல முடியும். ஒரு தேசிய அளவு கிறிஸ்தவன் - இன்னும் சரியாக போதனை செய்ய பயிற்சியைப் பெறவில்லை என்றால் மற்றுமொரு சிறந்த ஆத்தும ஆதாயருடைய செய்தியை ஒலி நாடாக்களில் போட்டு அவரை பயிற்சிவிக்கலாம். சில வாரங்கள் கழித்து அந்த ஊழியர் நமது செய்தியை நன்கு ஊன்ற கவனித்து பின்பு நம்முடைய சுவிசேஷம் அறிவிக்கும் முறையை கற்றுக் கொள்வார். இதே செயல்முறை தொடர்ந்து மற்றுமொரு பயிற்சி பெறாத ஊழியரைப் பயிற்சிவிக்கும் குழுவினால் பயிற்றுவிக்க முடியும். இது உலக அளவில் வல்லமை உடையதாய் இருக்கிறது.

ஒவ்வொரு முறை சுவிசேஷ பிரதியை அளிக்கும் போதும் ஜீவனுள்ள செய்தியை திரும்பவும் புதுப்பிக்கிறோம். நாம் ஏன் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம்? ஏனென்றால் வேலையாட்களோ மிகவும் குறைவு.

அத்தியாயம் 4 வெற்றிக்கான தெரிந்தெடுப்பு

நாம் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருக்கிறோம். ஏனென்றால் அது மிகப்பெரிய கட்டளை

'பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்' (மாற்கு 16:15) என்பது இயேசு கடைசியாக பரத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக நாம் செய்ய வேண்டியதாக அதிகாரப்பூர்வமாக கூறியதாகும் இது அவரை பின்தொடரும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய அவருடைய அதிகாரப்பூர்வமான ஒன்றாகும். இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனின் அழைப்பு, நோக்கம், ஊழியம் மற்றும் கடமை ஆகும். 'தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமல் நித்திய ஜீவனை (உலகம் முழுவதும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட) அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்' (யோவான் 3:16).

ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பதைக் காட்டிலும் மிகப்பெரிய கடமை எதையும் கிறிஸ்து நமக்கு விட்டுச் செல்லவில்லை.

இதுவே கிறிஸ்தவ விசுவாசியின் மகிழ்ச்சிக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். இதையே ஆதிகிறிஸ்தவர்கள் இரவும் பகலும் செய்து வந்தனர். வீடுகள் தோறும், சந்தைகளிலும், கிராமங்களில், தெரு ஓரங்களில், பெரு வீதிகளில், மக்கள் சந்திக்கும் இடங்களில், காவற் சாலைகளில், கிடங்குகளில் எங்கும் அவர்கள் சாட்சி இட்டனர். அவர்களுடைய அழைப்பை அவர்கள் உணர்ந்து இருந்தனர். கிறிஸ்துவைப் போலவே செயலாற்றினர். சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக அவர் என்ன செய்தாரோ அதே காரியங்களை இவர்கள் மூலமாக இவர்களோடு வாழ்ந்து செயலாற்றுகிறார் என்பதை அறிந்திருந்தனர். அதனாலேயே அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தனர்.

இந்த தத்துவத்தை அநேக சபைகள் உற்சாகப்படுத்துவதில்லை. அநேக கிறிஸ்தவர்கள் சபை உறுப்பினர்களாய் இருக்கிறார்கள், ஆனால் சாட்சிகளாய் இருப்பதில்லை. அவர்கள் தங்கள் சரணாலயங்களுக்குச் செல்கின்றனர். ஆனால் கிறிஸ்துவைக் குறித்து மக்களிடம் கூறச் செல்வதில்லை. இந்த போதனையை நாம் நினைவில் கொள்வோம். கிறிஸ்தவர் அல்லாதவர் திருச்சபைக்கு பொதுவாக வருவதில்லை. ஆகையால் சபை கட்டிடத்திற்குள் இருந்து அவர்களை நாம் சந்திக்க முடியாது. இயேசு அதிகாரப்பூர்வமாய் நமக்குச் செய்யக் கூடிய காரியத்தை அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களுக்குப் பின்பாகப் போய் செய்ய வேண்டும். அவர் நமக்குள் இருக்கிறார். நாம் அவரின் சரீரமாய் இருக்கிறோம். நம் மூலமாக மட்டுமே அவரால் மக்களை சந்திக்க முடியும்.

நம்முடைய ஊழியமும் அதன் முழு வடிவமைப்பும் கிறிஸ்து நமக்கு கூறிய மிகப்பெரிய கட்டளையை சார்ந்தே இருக்கிறது. நமது நோக்கம் ஒரே வழி: ஒரே வேலை. கிறிஸ்து இயேசுவே அந்த ஒரே வழி. சுவிசேஷம் அறிவிப்பதே ஒரே வேலை.

ஒவ்வொருவரின் ஒவ்வொரு செயலின் நோக்கம் இரட்சிக்கப்படாதவர், சபை இல்லாதோர், சுவிசேஷத்தின் மூலம் சந்திப்பதே. அவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு செல்வதே ஆகும். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பணியை தெரிந்தெடுக்கிறவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார். நாம் அவர் சரீரமாய் இருக்கிறோம். நம் மூலமாக அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதை விரும்ப வேண்டும்.

ஒரே ஒரு நோக்கம்

ஒரே நோக்கத்திற்காக நாம் வாழ்கிறவர்களாயும், **சுவாசிக்கிறவர்களாயும் இருக்கிறோம், நம்மால் கூடுமான வழியில் அதிக எண்ணிக்கை உள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.**

நம்முடைய சொந்த வார்த்தையை மட்டும் பயன்படுத்தி கிறிஸ்து நம் மூலம் பேசாமல் நாம் பல தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி, அதை மறு உற்பத்தி செய்து, மறுஒலிபரப்பு செய்து எந்த வழியிலெல்லாம் அதை உபயோகப்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த வழியிலெல்லாம் அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மிகப்பெரிய கட்டளைக்குக் கீழ்ப்படிவதையே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நம் வாழ்வின் பணியாக அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முழுமையில் நம்மை அவருக்காய் முதலீடாய் அளித்து நம்மால் கூடுமானவரை எல்லா மக்களிடமும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். பொது மக்களுக்கு சுவிசேஷ கூட்டங்களை ஏற்பாடு செய்து அநேக மில்லியன் மக்களுக்கு முகமுகமாய் போதிக்க வேண்டும். ஆனால் இது மட்டும் போதுமானதல்ல. இத்தகைய கூட்டங்கள் ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் மாத்திரமே எடுத்துக் கொள்ளும் மீதி நேரங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் போதித்த அதே செய்தியை நாம் உட்கார்ந்து எழுதலாம். மிகப்பெரிய அச்சகங்கள் அதைப் பல மில்லியன் மக்களுக்கு பல டன்களில் பூமியிலுள்ள எல்லா மொழிகளிலும் அதை மொழிபெயர்த்து விடும். இவ்வாறு நம்முடைய சத்தத்தையே கேட்டிராத பல நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களை இதன் மூலம் நாம் சந்திக்க முடியும்.

நம்மில் அநேகர் நமது கரங்களையும், மூளையையும் பயன்படுத்தி வேலை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் வாய்ப்பு வரும்போது நம் முழு இருதயத்தோடும் நாம் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்.

உலகம் இலக்கியமயமாய் மாறிக்கொண்டிருக்கிற வேளையில் வாரத்திற்கு 3 மில்லியன் (ஒரு வருடத்திற்கு 150 மில்லியனுக்கும் அதிகமான) இலக்கிய இதழ்கள் வெளிஇடப்படுகிறது. புத்தகங்களை வாசிப்பதில் அவர்கள் தாகம் உள்ளவர்களாய் இருக்கிறபடியால் விசுவாச இலக்கியப் பிரதிகளை அச்சிட்டு வீடுகள் தோறும் கொண்டு செல்வதால் சுவிசேஷ செய்தியை படித்த ஒவ்வொருவரிடமும் கொண்டு செல்ல முடியும். இதோடு நம்முடைய இலக்கிய ஊழியங்கள் மற்றும் சுவிசேஷ கூட்டடங்கள் மூலமாக இன்னும் அதிகம் செய்யலாம். படிப்பறிவில்லாத மில்லியன் அளவு மக்களுக்கு நாம் என்ன செய்யலாம்? தாழ்மையில் உள்ள அநேகம் மக்களுக்கு எழுதவும், படிக்கவும் தெரியாது. இவர்களை சந்திக்க, நவீன கால ஒலி அமைப்புகளை அசையும் திரைப்படங்கள் மற்றும் வட்டப் பேழைகள். சபைக்கு வராதவர்களை நேரடியாக சந்தித்து சுவிசேஷம் சொல்வதின் மூலமாகவும், தொலைகாட்சி மற்றும் வானொலி செய்திகள் மூலமாகவும் சந்திக்கலாம். நாம் திரைப்படங்கள் மற்றும் ஒலி நாடாக்களில் நற்செய்தி அறிவிக்கத் துவங்குவதின் மூலம் அநேக மில்லியன் நேயர்களை சந்திக்கவும், தகவல் தொடர்பு சாதனத்தை ஆத்தும அறுவடை செய்யும் கருவியாகவும் மாற்றலாம். சீக்கிரத்தில் மேலும் 2 கூடுதல் சுவிசேஷ சந்திப்பு சக்கரங்களைச் சுழலச் செய்யலாம். அபிஷேகிக்கப்பட்ட சுவிசேஷ கூட்டங்களைப் பார்க்கவும், பல மொழி சுவிசேஷ செய்திகளை கேட்கவும் கூடுதல் வாய்ப்பை உருவாக்குமாறு நமது ஒலி உருவாக்கும் குழு ஏற்கனவே நடைபெற்ற சுவிசேஷ கூட்டங்களை மறுவெளியீடு செய்யலாம். 'சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்' என்று இயேசு கூறினார்.

ஒரு தேசத்தில் 95சதவீதம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அதே நேரத்தில் மற்றொரு தேசத்தில் 95 சதவீதம் கிறிஸ்தவர் அல்லாதவர் இருக்கின்றனர். நமது தெரிந்தெடுப்பு கிறிஸ்தவரல்லாத தேசத்திற்குச் செல்வதை தெரிந்தெடுப்பதே. ஒரு சிறு வயல் நிலத்தை அறுவடை செய்ய நூற்றுக்கணக்கான அறுவடையாளர்கள் அங்கு வேலை செய்கின்றனர். அதே நேரத்தில் ஒரு மிகப்பெரிய வயல்நிலத்தில் ஒரே ஒருவர் வேலை செய்கிறார். உடனடியாக அறுவடை செய்து பயிரைக் காக்க நீங்கள் எந்த வயல்நிலத்தைத் தேர்ந்தெடுப்பீர்கள்? எங்கு தேவை அதிகமோ, எங்கு வேலையாட்கள் கொஞ்சமோ அதையே நீங்கள் தேர்ந்தெடுங்கள். ஒரு மரக்கட்டையைத் தூக்க பத்து ஆட்கள் இருக்கும்போது, 9 சிறு மரத்துண்டுகளும், ஒரு பெரிய மரக்கட்டையும் இருந்தால், உங்கள் ஒருவரால் தூக்க முடியாததையே தெரிந்தெடுத்து பத்துபேரும் சேர்ந்து தூக்குவீர்கள் அல்லவா?

உலகளாவிய வாய்ப்புகள்

நீங்கள் ஆத்தும ஆதாயகராக இருப்பதற்கென்று சிறப்பான அழைப்பு உங்களுக்கு அவசியமில்லை. உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கவும், சாட்சியாய் இருக்கவும், விசுவாசம் இல்லாத மக்களிடத்தில் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும், நீங்கள் கிறிஸ்தவராய் இருப்பதே உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொன்னான வாய்ப்பாகும். ஆகவே தொழில்துறை வல்லுநர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் சுவிசேஷம் மறுக்கப்பட்ட தேசத்திற்குச் சென்று தங்கள் வியாபாரத்தையோ அல்லது தொழிலையோ ஆரம்பித்து அங்கு சாட்சியின் ஊழியத்தையும், ஆத்தும ஆதாயத்தையும் செய்ய நினைக்கும் நல்ல தீர்மானத்தை எடுக்க வேண்டும். நீங்கள் கலைஞராகவோ, பழுதுபார்க்கும் நிபுரணராகவோ, மருந்தியல் நிபுணராகவோ, பல் மருத்துவராகவோ, புகைப்பட கலைஞராகவோ, குழாய் செப்பனிடுபவர், தச்சர், பொறியியல் வல்லுநர் அல்லது மற்ற எந்த தொழில்துறை வல்லுநர் அல்லது திறமைசாலியாக நீங்கள் இருந்தால், நீங்களும் உங்கள் குடும்பமும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத தேசத்திற்கு குடிபெயருங்கள். அங்கு உங்கள் தொழில் மிக அவசியமானதாயும் இதயப்பூர்வமாய் வரவேற்கத்தக்கதாயும் இருக்கும். நீங்கள் அங்கு வியாபாரம் அல்லது தொழில் செய்யலாம். அதே நேரத்தில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு சாட்சியின் ஊழியத்தையும் செய்யலாம். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் மதகுருவாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. இது ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்பட்ட வாய்ப்பாகும்.

இந்த தேசங்கள், மலை ஜாதியினர் மற்றும் இந்த பகுதிகளில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து அவர்கள் நடுவில் சாட்சியாய் இருப்பதன் மூலமே அவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும், அவரின் அன்பு மற்றும் மனதுருக்கத்தைக் காணவும் முடியும். நாம் கிறிஸ்:துவின் சரீரமாய் இருக்கிறபடியால் சரீரம் இன்றி கிறிஸ்துவால் அவர்களை சந்திக்க முடியாது. நம் மூலமாகவே அவர் அவர்களுக்குக் காணப்பட முடியும். நம் மூலமாக மட்டுமே அவருடைய நற்செய்தியை அவர்கள் கேட்க முடியும். அநேக காலங்களாக இரட்சிக்கப்டாதவர்கள் மட்டுமே கடல் கடந்து வியாபாரம் செய்யும் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர். கிறிஸ்தவரல்லாதவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தங்கள் கதவைத் திறந்து கொண்டு, வெளிநாடுகளில் தங்கள் கிறிஸ்தவர் அல்லாத வாழ்க்கை முறையையும், வியாபாரம் அல்லது வியாபார ஸ்தாபனங்களையும் ஸ்தாபித்து விடுகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் சிறந்த ஒழுக்கங்களையும், உயர்ந்து பண்புகளையும் கொண்டிருக்கும் வீட்டிலேயே இருந்து விடுகின்றனர். சிறந்த அழைப்பு இருந்தால் மட்டுமே கிறிஸ்துவையும் தங்கள் சாட்சியையும் வெளிநாடுகளில் சென்று பகிர்ந்து கொள்ள நினைக்கின்றனர். அவர்கள் கிறிஸ்:துவின் சரீரம் என்பதை அறியாது இருக்கின்றனர். கிறிஸ்து யாருக்குள் வாழ்ந்து வருகிறாரோ அந்த மனிதர்கள் மூலமாக மட்டுமே வளர்ந்து வரும் தேசத்தில் உள்ளவர்களை சந்திக்க முடியும் என்பதை அறியாது இருக்கின்றனர். சபை இந்த வேலையை செய்யட்டும் என்று காத்திருக்கின்றனர். தாங்களே கிறிஸ்துவின் சபை என்பதை மறந்து போயிருக்கின்றனர்.

கிறிஸ்தவ தொழில்துறை வல்லுநர்கள் இத்தகைய கடல்கடந்த வியாபாரம் மற்றும் தொழில்துறை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பணி கிறிஸ்துவின் கட்டளையை கொண்டு செல்லும் கருவியாகவும் ஆத்தும ஆதாய ஊழியத்தில் மிகவும் கனி தருவதாயும் இருக்கும். 'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான்?' என்ற நமது எஜமானின் கேள்விக்கு ஏசாயாவைப் போல நீங்களும் பதிலளிக்கக் கூடும்: ஆண்டவரே, இதோ நான் இங்கு இருக்கிறேன், என்னை அனுப்பும். உங்களால் எவ்வளவு மக்களை சந்திக்கக் கூடுமோ அவ்வளவு மக்களிடம் போய் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளக் கூடும். அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. வாய்ப்புகள் நிறைந்து இருக்கிறது. தேவை மிக அவசரமாய் இருக்கிறது. வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவின் தூதுவராய், அதிகாரப்பூர்வமாய் ஈடுபடுங்கள். இதற்கு மேலான அழைப்பு உங்களுக்கு அவசியமில்லை. உங்கள் உலகத்தை நீங்கள் சிந்திக்கவும், பூமியில் உள்ள பலவிதமான பகுதிகளின் நிலைமையை நீங்கள் அறிந்திருக்கவும் துவங்குங்கள். உங்களுக்குள்ளிலிருந்து ஆவியானவர், எங்கு வாய்ப்புகள் அதிகம் மற்றும எங்கு கிறிஸ்துவின் செய்தியாளர்கள் அவசரத்தேவை என்பதை அறிந்து அவர் உங்களை வழிநடத்துவார். ஒரு சூழ்நிலையில் பவுல் ஆசியாவுக்குச் செல்ல நினைத்த பொழுது ஆவியானவர் தடை செய்தார். பின்பு அவர் பெத்தானியாவுக்குப் போக முயற்சிக்கும் போது: பவுல் இரவில் ஒரு தரிசனத்தின் மூலமாக ஆவியானவரால் தடுத்து நிறுத்தப்பட்டார். அந்த தரிசனத்தில் மக்கதோனியாவைச் சோந்த ஒரு மனிதன் பவுலிடம் 'மக்கதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று வேண்டிக்கொண்டான்.(அப்.16:6-9). இத்தகைய வழிநடத்துதலை நீங்களும் பெறலாம். நீங்கள் உங்கள் ஆவியில் உணர்வுள்ளவர்களாயும், ஜாக்கிரதையாயும் இருக்கும்போது இவ்வாறு வழிநடத்தப்படலாம். பவுல் ஏற்கனவே அப்போஸ்தலராயும், சுவிசேஷகராயும், உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவிக்கிறவராயும் இருந்தார். இவர் வேறு மாநிலத்திற்குச் செல்வதாய் இருந்தபோது அவர் மக்கதோனியாவுக்குச் செல்லும்படியான வழிநடத்துதலைப் பெற்றார். அடிக்கடி நாமும் இவ்வாறு வழிநடத்தப்படுவோம்.

பொதுவாக நாம் ஒரு செயலில் இறங்கும் போது இவை நமக்கு ஏற்படும். நம்முடைய பிதாவோடு நமக்குள்ள நிலையான புரிந்துகொள்ளுதல் இதுவே: 'ஆண்டவரே நாங்கள் எந்த வயல் நிலத்திற்கு அல்லது பகுதிக்கு அல்லது தேசத்திற்கு செல்வது உமது விருப்பமோ அதை எங்களுக்கு காண்பியும், அங்கு நாங்கள் செல்வோம். இல்லையெனில் உமது வழிநடத்துதல் வரும் வரை அதிக கனி நிறைந்த அறுவடையைச் செய்யும் சிறந்த வாய்ப்பை தெரிந்தெடுத்து காத்திருப்போம். 'ஆண்டவரே நான் உங்களுடனே கூடு இருக்கிறேன்' என்று இயேசு கூறினார் (மத்.28:20). அவர் நமக்குள் இருக்கிறார். நாம் அவர் சரீரமாய் இருக்கிறோம் நாம் போகும்போது அவர் மக்களைச் சென்றடைய முடியும். அவர் நம் மூலமாகப் பேசி சாட்சியிட்டு, ஊழியம் செய்ய முடியும். அவர் முழு உலகத்தின் மேலும் கரிசனை உள்ளவராய் இருக்கிறார்.

நமக்கு கொடுக்கப்பட்ட கட்டளை: முழு உலகத்திற்கும் கர்த்தரை அறிவியுங்கள். சகல சிருஷ்டிக்ககும் போதியுங்கள், இதுவே நமது ஊழியம். கிறிஸ்துவின் வார்த்தை செயல்முறைப்படுத்தப்பட வேண்டும். ஆராய்ந்து கொண்டிராமல், வாக்குவாதம் செய்யாமல் அல்லது வெறும் வார்த்தையாய் இராமல்.

நமக்கு திறக்கப்பட்ட கதவுகள்

இரட்சிக்கப்படாத உலகம் காயப்பட்டிருக்கிறது. அவர்கள் விடையறியாத பிரச்சனையில் இருக்கின்றனர், தீர்வில்லாத வியாதியில் இருக்கின்றனர், விசுவாசம் இல்லாமல் பயத்தில் இருக்கின்றனர், மன்னிப்பு இல்லாமல் குற்ற மனப்பான்மையில் இருக்கின்றனர். கிறிஸ்து தம்மைப் பின் தொடருகிறவர்களுக்கு இறுதியாய் கொடுத்த அதிகாரப்பூர்வமான கட்டளை நீங்கள் போய், உதவி செய்து, குணமாக்கி, அவர்களை உயர்த்தி அவர்களில் அன்பு கூருங்கள். மற்றும் அவர்களை ஆதாயம் செய்யுங்கள். அவர்கள் நமக்கு ஒரு பொன்னான வாய்ப்பை அளித்திருக்கின்றனர். மற்றும் நமது வெற்றிக்கு, சுய உயர்விற்கு நமது வாழ்வின் முழு சந்தோஷத்திற்கு அவர்கள் உத்தரவாதம் அளிக்கின்றனர். அவர்களை உயர்த்தும்போது நாம் உயர்த்தப்படுவோம். அவர்களைக் குணமாக்கும்போது நாம் குணமாக்கப்படுவோம். அவர்களில் அன்பு கூரும்போது நாம் அன்பு கூறப்படுவோம். அவர்களுக்கு ஊழியம் செய்யும்போது உண்மையிலேயே நாம் நமது ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறவ்காளாய் இருப்போம். அவருக்கு முன்பாக நாம் நிற்கும்போது, அவர் நம்மிடம் கூறுவது: 'நான் பசியாய் இருந்தேன். நீங்கள் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாய் இருந்தேன் என்னை சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திரம் கொடுத்தீர்கள். வியாதியாய் இருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்... இந்த சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' (மத். 25:35-40).

இவைகள் நமக்கு திறக்கப்பட்ட கதவுகள்

இயேசு கிறிஸ்து முழு உலகத்திற்காகவும் மரிந்திருக்கிறார். அவருடைய இரத்தம் பூமியில் உள்ள எல்லா மனிதருக்காகவும் சிந்தப்பட்டிருக்கிறது. (மத்.26:28). 'அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள எப்படி விசுவாசிப்பார்கள்?... விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்' (ரோமர் 10:14-17). நீங்களும் நானும் சாட்சியாய் இருப்பதினால் அறிக்கை இடுபவர்களாய், அவருடைய சத்தமாய், போதகராய், கருவியாய் இருப்பதின் மூலம் இந்த உலகம் சுவிசேஷத்தைக் கேட்க முடியும். கிறிஸ்து நம் மூலமாக வாழவும், ஊழியம் செய்யவும் முடியும். இதுவே இயேசு கடைசியாய், அதிகாரப்பூர்வமாய் நம்மைச் செய்யக் கூறிய காரியம். இதுவே மிகச் சிறந்த சட்ட அமைப்பும் நமது வாழ்க்கை முறையை மிகச் சிறந்த முறையில் உருவாக்குவதாகும்.

அத்தியாயம் 5 மறக்கப்பட்டவர்கள்

இயேசுவின் வருகைக்கான தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படாமையால் நாம் ஆத்தும ஆதாயகராய் இருக்கிறோம்.

கிறிஸ்து திரும்ப வருவதைக் குறித்து அறிக்கை வெளியிடும் போதெல்லாம் நமது ஆசிரியர்கள் குறிப்பிடுவது 'எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும்போது அவரது இரண்டாம் வருகை இருக்கும்' என்பது வழக்கமாய் கூறுகிற ஒன்றாகும். ஆனால் இது உண்மையா? அது உண்மையாய் இருந்தாலும் மிக முக்கியமான அடையாளங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த அடையாளமாக குறிப்பிடப்படுவது உன்னையும், என்னையுமே. இதில் கிறிஸ்தவர்களாகிய நாமும் சாட்சியாகிய நம்முடைய ஊழியத்தையும் ஈடுபடுத்திக் கூறுகிறது. அந்தி கிறிஸ்து, போர்கள், தேசங்களுக்குள்ளே சண்டை, பஞ்சம், பூமியதிர்ச்சி, வஞ்சனை, எதிர்ப்பு, நம்பிக்கையின்மை ஆகிய சில குறிப்பிடத்தக்க 'வருகைக்கான அடையாளங்களை' இயேசு குறிப்பாய் கூறினார். (மத்.24:4-12). அதோடு அவர், 'இராஜ்ஜியத்திற்குரிய சுவிசேஷம் எல்லா தேசங்களுக்குள்ளும் சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும்' (மத்.24:14) என்று கூறினார். கிறிஸ்து பிதாவிடம் திரும்பிப் போவதற்கு முன் கூறிய கடைசி வார்த்தையின் சாராம்சம்

'நீங்கள் புறப்பட்டு எல்லா தேசங்களுக்கும் சென்று சகல சிருஷ்டிக்கும் நற்செய்தியை அறிவியுங்கள். இதை நீங்கள் சீக்கிரமாய் செய்து முடித்தவுடன் நான் திரும்பி வருவேன்' இது சீக்கிரமாய் செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்றா?

நான் இவ்வாறு கற்பனை செய்து பார்க்கிறேன், எதிலும் அவசரப்படும் பேதுரு, யோவானை அவசரப்படுத்தி இவ்வாறு கூறியிருப்பார், 'யோவான் வேகமாக வா, அதிக நேரம் எடுத்துக் கொள்ளாதே. இவ்வாறு வேகமாக செயல்படும்போது அவர் சீக்கிரம் நம்மிடம் திரும்பி வருவார்'. ஆதித் திருச்சபையினர் அவர்களுடைய ஊழியத்தை அறிந்திருந்தனர். அப்போஸ்தலர் மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசியும் சாட்சியாய் இருந்தனர்.

ஒவ்வொரு நாளும், வீடுகள் தோறும் தெருக்களில் கிராமம் மற்றும் சந்தைவெளிகளில், பெருவீதிகளில், அவர்கள் கிறிஸ்துவை பிரசங்கித்து ஆத்தும ஆதாயம் செய்தனர். அவர்களுடைய நோக்கம் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவித்து, 'எல்லா தேசத்திற்கும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, பயங்கரமான எதிர்ப்புகள் இருந்தாலும் சுவிசேஷத்தை அறிவித்து ஏன் என்றால் அவர்கள் சீக்கிரமாய் அதை செய்து முடிக்கும்போது இயேசு சீக்கிரமாய் திரும்ப வருவார் என்று நம்பினர். கிறிஸ்து இறக்கவில்லை அவர்களுக்குள்ளே வாழ்கிறார். அவர் சிலுவையில் அறையப்படும் முன்பு என்ன செய்தாரோ அதை இன்றும் செய்கிறார் என்று அறிந்திருந்தனர். அவர்கள் மூலமாக மட்டுமே கிறிஸ்து பேசி சாட்சியாய் இருக்க முடியும் என்பதை உணர்ந்து இருந்தனர்.

இந்த ஆத்தும ஆதாயம் செய்யும் தன்மையை ஆதி கிறிஸ்தவர்கள் முழு நோக்கத்தோடு அவர்களுக்குத் தெரிந்திருந்த உலகம் முழுவதும் சுவிசேஷ சாட்சியாய் பரப்பினர். இந்த செய்தி மெரிடீரியனைத் தாண்டி வட ஆப்பிரிக்கா வரை கிறிஸ்:துவை ஆராதிக்கும்படி சென்றது.

கடுமையான புயல், ஆபத்தான கடல் அழிவுக்கு ஏதுவான பயணம் எல்லா கடினமான பாதையிலும் நிகரற்ற வல்லமையோடு நற்செய்தியைப் பரப்பினர். தெற்கேயுள்ள சகாரா பாலைவனத்தில் ஒட்டகங்களில் பயணிப்பதற்கு பதிலாக ஆப்பிரிக்க காடுகளில் அல்லது கிழக்கில் கண்டங்களுக்கு இடையே மலைகள் தடுப்புச் சுவராய் இருந்தாலும் அல்லது வடக்கே பாகாலை வழிபடும் மலைஜாதி மக்களிடமும் ஆர்வமாய் அவர்கள் மேற்கொண்ட பணியைச் செய்தனர். **அவர்கள் மிக முக்கியமான பகுதிகளை அழுத்தம் கொள்ள தவறி விட்டனர்.**

சுவிசேஷ கூட்டங்கள் கன்வென்ஷன் (ஒன்று சேர்க்கும்) கூட்டங்களாக மாறத் துவங்கியது. தனிப்பட்ட சாட்சிகள் உபதேச வாக்குவாதங்களாக மாறியது. சீக்கிரத்திலேயே சபை தனது வல்லமையை இழக்கத் துவங்கி, இருளின் காலங்களுக்குள் மூழ்கியது. இந்த வீழ்ச்சியினால் கிறிஸ்தவர்கள் தங்கள் அடிப்படை உண்மையாகிய கிறிஸ்து அவர்களுக்குள் இருக்கிறார் என்ற உணர்வை இழந்து போயினர். அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவின் சரீரம் மற்றும் அவர்களுடைய வாய்மொழி என்பதை கருத்தில் கொள்ளமால் இருந்தனர். அவர்கள் மத நிறுவனங்களை உருவாக்கி அவைகளையே 'சபை' என்று அழைக்கத் துவங்கினர். எங்கும் இருள் சூழ்ந்து விசுவாசம் விசுவாசம் இல்லாதவர்களுக்கு கிறிஸ்துவை பகிர்ந்தளிக்கப்படவில்லை.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு மார்ட்டின் லூதர் எழும்பி, 'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்' என்று கூறினார் (எபி.10:38). இதனால் மறுமலர்ச்சி துவங்கியது. சபை மிகவும் மெதுவாக ஆதித் திருச்சபையிக்குரிய சுவிசேஷ மயமாக்குதலை திரும்பவும் கண்டுபிடிக்கத் துவங்கியது. வெஸ்லியுடைய சுத்திகரிக்கப் படுவதற்கான போதனையும் தொடர்ந்து 20ம் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறும் எழுப்புதலைக் கொண்டு வந்தது. மேலும் பல முயற்சியினால் கிறிஸ்தவம் மெதுவாக எழுப்புதலின் வல்லமை அடைந்தது.

கர்த்தருடைய பார்வையில் இந்த உண்மை புத்துணர்வோடு வெளியரங்கமாக்கப்பட்டு கிறிஸ்தவர்கள் வல்லமையின் சாட்சியாய் 'உலகமெங்கிலும்' எல்லா தேசங்களுக்குள்ளும்' 'சகல சிருஷ்டிக்கும்' சாட்சியாய் அறிவிக்கப்பட்டு, ராஜாவைத் திரும்பவும் அழைத்து வருவதாய் இருந்தது.

மறக்கப்பட்டவைகளை அவர்கள் விட்டுவிட்டார்கள்

ஆனால் கர்த்தருடைய நோக்கத்தை சபை பற்றிக் கொள்ளவில்லை. பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை குருடாக்கி, கிறிஸ்துவின் வருகையை பழங்கதையாய் மாற்றினார்.

இரட்சிக்கப்படாதவர்களிடம் வல்லமையாய் சாட்சியாய் வீடுகளிலும், தெருக்களிலும், சந்தைகளிலும், மக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு செல்லாமல் தங்களுக்குள்ளாகவே எண்ணிக்கையில் அடங்காத பெயர்களை உண்டாக்கிக் கொண்டு பிரிவினையின் தடுப்புச் சுவர்களை ஏற்படுத்திக் கொண்டனர். மறக்கப்பட்ட ஆத்துமாக்களை அவர்கள் விட்டுவிட்டு தங்கள் சொந்த பரிதாபமான நிலைமையில் மத சம்பந்தமான சமூகத்தையும், சந்திக்கப்படாதவர்களுடைய கூக்குரல்களை அசட்டை செய்து, தங்கள் உபதேசங்களில் நிலை கொண்டு, தங்கள் உறுப்பினர்களையே மாற்றிக் கொண்டு, தங்கள் சொந்த மத வழிபாடுகளிலேயே ஈடுபட்டனர். மொத்தத்தில் சபை உறுப்பினர்கள் இரட்சிக்கப்படாத உலக மக்களை கடந்து செல்வதில் திறமையற்றவர் ஆயினர்.

நாம் வாழும் இடத்தில் இருந்து கொண்டே உலகத்திற்கு நாம் ஒருபோதும் சாட்சியாக இருக்க முடியாது. கிறிஸ்தவர் அல்லாதோர் சபைக்குள் செல்வதில்லை. சபை மக்களிடையே செல்வதற்கான கட்டளையை பெற்றிருக்கிறது. 'நீங்கள் தெருக்களுக்கும், நகரத்தின் வீதிகளுக்கும் புறப்பட்டுச் செல்லுங்கள். நீங்கள் புறப்பட்டு பெருவழிகளுக்கும், வேலிகளண்டைக்கும் செல்லுங்கள். உலகம் முழுவதும் புறப்பட்டுச் செல்லுங்கள். சகல ஜாதிகளண்டையிலும் புறப்பட்டுச் செல்லுங்கள். மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு சென்று அவரைப் போலவே ஆத்தும ஆதாயம் செய்யுங்கள் என்று இயேசு நம்மிடம் கூறுகிறார். மத சரணாலயங்களில் அல்ல. மக்கள் எங்கு வாழ்கிறார்களோ. விளையாடுகிறார்களோ, வேலை செய்கிறார்களோ அங்கு செல்லுங்கள்.

இவ்வாறு செய்ய முடியுமா? இந்த சுவிசேஷம் 'எல்லா தேசங்களிலும் சாட்சியாய் ' போதிக்கப்டுமா கிறிஸ்து திரும்பி வருவதற்கு முன்பாக அவர் கூறியபடி செய்ய முடியுமா? நம்முடைய சந்ததியில் ஒரு பாதிக்கும் அதிகமான மக்கள் இன்னும் சுவிசேஷத்தை அறிய முடியவில்லை. ஒருமுறை கூட கேள்விப்படவில்லை. நமது காலத்தில் அவர்களே மறக்கப்பட்டவர்கள்.

ஒரு முறை கூட சுவிசேஷத்தை கேள்விப்படாதவர்கள் இருக்கும்போது மற்றவர்கள் இரண்டாம் முறை கேள்விப்படுவது ஏன்?

இரண்டாயிரத்திற்கும் அதிகமான மலைஜாதியினர் சுவிசேஷ சாட்சியை அறிந்திருக்கவில்லை. கிறிஸ்து ஏற்கனவே சொன்ன அடையாளம் இதனால் இன்னும் ஏற்படவில்லை. இந்த அடையாளம் உங்களையும், என்னையும் கருத்தில் கொண்டே உள்ளது. கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடத்திற்குச் செல்ல நாம் அதிகாரம் பெற்றிருக்கிறோம். ஆகவே ஆத்தும ஆதாயம் செய்வதற்கான எல்லா காரியங்கள் மற்றும் மற்ற கிறிஸ்தவர்களும் ஆத்தும ஆதாயம் செய்யும்படி உற்சாகப்படுத்தவும் முடியும். இதனாலேயே சுவிசேஷம் அறிவிப்பதற்கான எல்லா கருவிகளையும் நாம் மேம்படுத்த வேண்டும். இவற்றைக் கொண்டு உலகம் முழுவதிலும் ஆத்தும ஆதாயம் செய்யும் அறுவடையாளர்களை அதிகரித்து மறக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களை புறப்பட்டுச் செல்ல செய்ய வேண்டும். இதுவே கிறிஸ்து நம்மிடம் கூறிய கடைசி வார்த்தை ஆகும். இந்த காரியம் ஒன்றே அவர் நாம் செய்யும்படி சொல்லி சென்ற ஒன்றாகும். நாம் செய்யும்படி அவர் திட்டமிட்டதை செய்ய அவர் ஒருபோதும் தேவதூதர்களை அனுமதிப்பதில்லை. சபை இதைச் செய்து முடிக்குமா?

மறுமலர்ச்சியாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை

அரசியல் மறுமலர்ச்சியாளர்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? இதைப்பற்றி நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? அவர்கள் நாடுகளை கைப்பற்றி அதை மேம்படுத்திகின்றனர். அவர்களுடைய தலைவர்கள் மலைகளையும், காடுகளையும் மாற்றியமைத்து அங்குள்ள உள்ளூர் மலை ஜாதியினரையும், தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றனர். நோயிலும், பஞ்சத்திலும் உள்ள இந்த மறக்கப்பட்ட மக்களை மீட்டு, கொரில்லா படைகளாக மாற்றி அங்கிருந்து தாக்கவும், எதிர்க்கவும் துவங்குகின்றனர். முதலாவது கிராமங்கள், பின்பு நகரங்கள் மற்றும் மாநிலங்கள் அவர்களுடைய நோக்கம் எப்போதும் தேசத்தைக் கைப்பற்றுவதே. இத்தகைய அரசியல்வாதிகள் மற்றும் சுயமேன்மை அடையும் தலைவர்கள் சபை நிராகரித்த மக்களைத் தேடிச் செல்கின்றனர். இந்த கடினமான பகுதிகளில் தியாகத்தோடு வாழவும். அவர்களுக்காக எந்த விலைக்கிரையம் செலுத்தவும் ஆயத்தமாய் இருந்தனர்.

நவீன சுவிசேஷர்கள் இந்த மக்களைச் சந்திக்கும்படி ஆயத்தப்படுத்தப்படுவதும் ஊக்குவிக்கப்படுவதும் இல்லை. பொதுவாக இந்த பகுதிகளுக்கு அவர்கள் அரிதாக போவதால் இத்தகைய மலைஜாதியினர் கிறிஸ்து இல்லாமல் தனித்து விடப்படுகின்றனர். இந்த கலகக்காரர்கள் தங்கள் ஆசிரியர்களை அவர்களோடு வாழும்படி அனுப்பி எவ்வளவு தியாகம் செய்ய முடியுமோ, அவர்கள் வாழ்க்கையை தியாகமாக்கி, இத்தகைய மலைவாழ் மக்களை தங்கள் நோக்கத்திற்கென்று வல்லமையான கருவியாய் மாற்றுகின்றனர். சபை செய்யாததை இவர்கள் செய்கின்றனர். சபை நிராகரித்த மக்களை, எதிரியானவன் தன் விதையை விதைக்கும் நல்ல நிலமாகத் தெரிந்து கொள்கிறான். கிறிஸ்தவ சபைக்கு அவர்கள் எப்படிப்பட்ட மாதிரியாய் இருக்கிறார்கள். சபை செல்லாத இடத்திற்கு இந்த கலகக்காரர்கள் சென்று தேசத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு இவர்களை பயங்கரமான கூட்டமாக மாற்றுகின்றனர். இந்த பணியை கிறிஸ்தவ ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். 'எல்லா அடையாளங்களும் நிறைவேற்றப்படுகின்றன. ஆண்டவர் இயேசுவே சீக்கிரம் வாரும்' கிறிஸ்தவர்கள் இந்த பணியை செய்ய முடியுமா?

செய்து முடிக்கப்படாத நம்முடைய பணி

மாற்கு 13:10ல் 'சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்தி பிரசங்கிக்கப்பட வேண்டும்' என்று இயேசு கூறுகிறார். 3000 மொழி பேசும் மக்களிடையே 3ல் 1 பகுதியினருக்கு சுவிசேஷத்தின் ஒரு பகுதி கூட இன்னும் மொழிபெயர்க்கப்படவில்லை. கிறிஸ்து முதலாவது செய்ய வேண்டும் என்று கூறிய காரியத்தை சபை செய்கிறதா? சில நேரங்களில் சபை கூறும் வாக்குவாதம்: 'எல்லா தேசங்களும் ஒருமுறை அல்லது அதற்கு மேல் சுவிசேஷத்தை அறிந்து இருக்கிறது' இவ்வாறு எழும்பும் சத்தங்களை நமது ஆண்டவர் அறிந்திருக்கக் கூடும். வெளிப்படுத்தின விசேஷத்தில் கர்த்தர் வருங்காரியங்களை யோவானுக்குக் காண்பித்தார். ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களுக்கு யோவானுடைய வார்த்தை மிகவும் பிரயோஜனமுள்ளது. அவர்'இவைகளுக்கு பின்பு நான் பார்த்த போது சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டிக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு, இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டிக் குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்' (வெளி.7:9,10). மீட்கப்பட்ட அநேகர் கர்த்தருடைய சிங்கானத்திற்கு முன்பாக ஆராதித்தனர். எல்லா தேசங்களிலுமிருந்து வந்த மக்கள் இதில் இருந்தனர். இதில் முதலாவது குறிப்பிடப்படுவது 'தேசங்கள்' சிலர் 'எல்லா தேசங்களும், சுவிசேஷத்தைக் கேட்டு இருக்கும் என்று உறுதியாய் கூறுகிறேன்' என்று கூறுகின்றனர். ஆனால் தரிசனம் மிகவும் குறிப்பாய் கூறப்பட்டுள்ளது. ஆவியானவர் மிக விளக்கமாக 'சகல கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலும்' என்று கூறுகிறார். கிறிஸ்து இன்று மறுபடியும் வருவாராகில் யோவான் பார்த்தபடி காட்சியைக் காண முடியாது. இந்த கூட்டத்தினர் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, ஆட்டிக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்க வேண்டும்.

யோவான் 'பின்பு வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன். அவன் பூமியில் வாசம் பண்ணுகிற எல்லா கோத்திரத்துக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்திற்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை அறிவிக்கிறவராய் இருந்து (வெளி.14:6) என்று யோவான் கூறுகிறார். ஆனால் பவுல் கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள் என்று ரோமர் 10:14ல் கேட்கிறார். மேலும் கிறிஸ்து நம்மூலமாகப் பேசாவிட்டால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்கள் எப்படிக் கேள்விப்பட முடியும்? இன்று நாம் அவருடைய சரீரமாய் இருக்கிறோம், அவருடைய உதடுகள், அவருடைய வாய்மொழி. நாம் புறப்பட்டுப் போகும்போது கிறிஸ்து நம்மூலமாக அவர்களிடம் பேசுவார். இவ்வழியாகவே அவர்கள் கேள்விப்படவும் விசுவாசிக்கவும் முடியும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், கூட்டங்கள் அல்லது பாஷைக்காரர்கள், ஒருமுறை கூட சுவிசேஷத்தை கேள்விப்படவில்லை. கிறிஸ்தவர்கள் அவர்கள் உள்ள இடத்திற்குச் செல்லாததால் கிறிஸ்துவால் அவர்களை சென்றடைய முடியவில்லை. நம் மூலமாக அவர் என்ன செய்ய விரும்பினாரோ அதை செய்து முடிக்க தேவ தூதர்களை அனுப்ப அவர் விரும்ப மாட்டார். 'உலகத்தின் பாஷைகளில்' மூன்றில் ஒரு பகுதியில் சுவிசேஷம் இன்னும் அச்சிடப்பட்டு வெளியிடப்படவில்லை. கிறிஸ்து இன்று வருவாராகில் நூற்றுக்கணக்கான பாஷைக்காரர் 'ஆட்டிக்குட்டியானவரின் இரத்தத்தினால் எங்களை இரட்சியும் ஆண்டவரே' என்று கதறுவர்.

கர்த்தருடைய முதல் பணி

நாம் தேசத்தின் நூற்றுக்கணக்கான மண்ணின் மைந்தர்களையும், குமாரத்திகளையும் தேசங்களில் சுவிசேஷ ஊழியம் செய்ய அழைத்து, கிறிஸ்துவின் சுவிசேஷம் சந்திக்கப்படாத பகுதிகளுக்கும், மலைவாழ் மக்களிடத்திற்கும், சுவிசேஷத்தை அறிவிக்க புறப்பட்டுச் செல்லும்படி உற்சாகப்படுத்த வேண்டியுள்ளது. இதுவே ஆத்தும ஆதாயம் செய்வது. இதுவே சுவிசேஷம் அறிவிப்பது, கிறிஸ்து அதிகாரப்பூர்வமாய் நம்மை செய்ய சொல்லியவற்றைச் செய்வது. இதுவே மறக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஊழியம் செய்வது.

கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்துக் கேள்விப்படாத மில்லியன் அளவு மக்கள் இருக்கும் போது, இரண்டாம் வருகையைக் குறித்து நாம் பேசுகிறோம். மறக்கப்பட்ட மக்கள் முதலாவது ஆசீர்வாதத்தை ருசித்திராதபோது இரண்டாவது ஆசீர்வாதத்தை நாம் வற்புறுத்துகிறோம். அநேகர் முதலாவது நிரப்பப்படுதலை அனுபவமாய் அறியாதபோது நாம் மறுபடி நிரப்பப்படுவதைக் குறித்து வாக்குவாதம் செய்கிறோம். இது வேடிக்கையாய் இருக்கிறதா? இரண்டவாது வரிசையில் உள்ளவர்களுக்கு இன்னும் ஆகாரம் அளிக்கப்படாது பசியாய் இருக்கையில் முதலாம் வரிசையில் இருப்பவர்கள் திரும்பவும் இரண்டாம் முறையாக ஆகாரத்தைப் பெறலாமா? மறக்கப்பட்டவர்கள் நினைவு கூறப்படும்போது தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டு இயேசு கிறிஸ்துவே சபைக்காக திரும்பவும் வருவார். ராஜாவை திரும்ப அழைத்து வரும்படியாக, இதற்காகவே நாம் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருக்கிறோம்.

அத்தியாயம் 6: மேலான முக்கியத்துவம்.

இரட்சிக்கப்படாதவர்களின் இரத்தபழிகள் நம் கைகளில் சுமருவதை நாம் விரும்பாததால் நாம் ஆத்தும ஆதாயகராய் இருக்கிறோம்.

வாலிப கிறிஸ்தவனாய் இருந்த என்னை வேதத்தின் ஒரு பகுதி மிகவும் பாதித்தது. அது எசே.3:7-10. கர்த்தர் குறிப்பாக தம் ஊழியக்காரரிடம் மக்களிடம் சுவிசேஷம் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தையும் அதனால் அவர்கள் ஆசீர்வாதம் அடையக்கூடும் என்றும் கூறினார். 'நான் உன்னை காவற்காரனாக வைத்தேன்... நான் எச்சரிப்பேன்' 'நான் துன்மார்க்கனை நோக்கி, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில் நீ துன்மார்க்கனை தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், துன்மார்க்கன் தன் அக்கிரமத்தில் சாவான்: ஆனாலும் அவன் இரத்தப்பழியை உன் கையில் கேட்பேன்'.

திரும்பவும் எசே. 33:6 ல் கர்த்தர் திரும்பவும் இந்த செய்தியைக் கூறுகிறார். 'காவற்காரன் பட்டயம் வருவதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்களை எச்சரிக்கை பண்ணாமலும் பட்டயம் வந்து, அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்வது உண்டானால் அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப்படுவான்' 'ஆனாலும் அவன் இரத்தப்பழியை காவற்காரன் கையிலே கேட்பேன்.

எசே. 33:8ல் இதே யோசனை திரும்பவும் வலியுறுத்தப்படுகிறது. இங்கு 3 சாட்சிகளைக் கொண்டு இரட்சிக்கப்படாதவர்களுக்கு அவர்களை இழந்து போவதற்கு பதிலாக ஏதாகிலும் செய்து அவர்களை இரட்சித்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். நடைமுறை வழிகளிலும், தனிப்பட்ட முறைகளிலும் வேதாகம வார்த்தையை நடைமுறைப் படுத்துவதில் நான் மிகச் சிறந்த விசுவாசி. இன்று ஆத்தும ஆதாயம் செய்வதை நடைமுறைப்படுத்துவதற்கு என்று நாம் வாசித்த இந்த வார்த்தைகளில் ஒன்றை எடுத்துக் கொள்வோம். 'நான் உன்னை காவற்காரனாக வைத்தேன். ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தைகளைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக'. 'நான் பாவியை நோக்கி, நீ சாகவே சாவாய் என்று கூறும்போது, நீ அவர்களை எச்சரிக்காமலும் அவர்கள் பாவத்தை விட்டுத் திரும்பும்படி நான் கூறிய எச்சரிப்பைக் கூறாமலும் இருந்தால் அந்த பாவிகள் தங்கள் அக்கிரமத்தினால் சாவார்கள், ஆனாலும் அந்த இரத்தபழியை நான் உன் கையில் கேட்பேன்'. 'ஒருவேளை நீ அவர்களை எச்சரித்து அவர்கள் தங்கள் பாவத்தை விட்டுத் திரும்பாமல் தங்கள் பாவ வழியிலேயே இருப்பார்களானால் அவர்கள் தங்கள் அக்கிரமத்திலே சாவார்கள். ஆனால் நீ உன் ஆத்துமாவை விடுவிப்பாய்.

இது என் வாழ்க்கையை உந்தித் தள்ளியது

'அவர்களுடைய இரத்தபழியை உன் கையில் கேட்பேன்' ஒவ்வொரு முறை இந்த வார்த்தையை வாசிக்கும்போதும் நமது முக்கியத்துவத்தை மறுபடி நோக்கிப் பார்ப்போம். நான் இளம் வாலிபனாய் இருந்த போது இந்த வார்த்தை என்னை உந்தி தள்ளியது. இரட்சிக்கப்படாதவர்களின் இரத்தபழி நம் கையில் கேட்கப்படுவதை நாம் விரும்புவதில்லை. நாம் ஆத்தும ஆதாயராய் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஆகவே நாம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்கிறோம். அப்.பவுல் கூறும்போது, 'சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ' என்று (1கொரி.9:16) கூறினார். இரட்சிக்கப்படாதவர்களுடைய இரத்தபழியை நம் கையில் கேட்பதை நாம் விரும்புவதில்லை. வீட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ. ஆகவே நாம் ஆத்தும ஆதாயராய் இருப்பதை தெரிந்து கொள்வோம்.

இது நம்மைப் பொருத்தது

நம்மில் சிலரே உலகத்தை கிறிஸ்துவுக்கென்று ஆத்தும ஆதாயம் செய்யக்கூடும் என்று நாம் சொல்ல முடியாது. கர்த்தருடைய திட்டம் நம்மை மட்டுமே சார்ந்து இருந்தாலும், நாம் சுவிசேஷம் அறிவிப்பதில் ஈடுபட வேண்டும். நம்மால் ஒவ்வொருவரையும் ஆதாயம் செய்ய முடியாவிட்டாலும் சிலரையாவது ஆதாயம் செய்யலாம். அறுவடை முழுவதும் நம்மைச் சார்ந்து இருப்பதினாலும் நாம் ஊழியம் செய்ய வேண்டும்.

நாம் கர்த்தருடைய வார்த்தையை மிக அக்கரையாய் பின்பற்றுவதால் நாம் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம். இரட்சிக்கப்படாதவரின் இரத்தபழி நம் கையில் கேட்கப்படுவதை நாம் எப்போதும் விரும்புவது இல்லை. இது ஒரு எளிமையான ஒன்று, எனது கணக்கீடு ஏதோ ஒரு கிறிஸ்தவருக்குரிய முக்கியமான வாய்ப்பு, ஊழியம் அல்ல, ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும், இரட்சிக்கப்படாதவர்களுக்கு சாட்சியாய் இருக்க வேண்டும். கிறிஸ்து தாம் வாழும் மனிதன் அல்லது மனுஷி மூலமாக அவர்களிடம் பேச முடியும். ஆத்தும ஆதாயம் என்பது நேரத்தைக் கடத்துவது அல்லது பொழுதுபோக்கும் காரியம் அல்ல. ஆத்தும ஆதாயம் என்பது கிறிஸ்தவனின் அனுதின செயல்.

நாம் இரட்சிக்கப்பட்ட உடன் கிறிஸ்துவை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும். நாம் கிறிஸ்துவின் சத்தமாயும், அவரின் வாய்மொழியாகவும் இருக்கிறோம். நாம் அமைதியாய் இருந்தால், கிறிஸ்துவும் அமைதியாய் இருப்பார். அவரால் நம் மூலமாய் மட்டுமே பேச முடியும். நமக்கு வசதிப்படும் நேரங்களில் மட்டுமே செய்யக் கூடிய காரியமல்ல ஆத்தும ஆதாயம். ஆத்தும ஆதாயம் என்பது நம் வாழ்க்கையில் முதலிட முன்னுரிமை பெற்றது. நம் வாழ்வின் மிகப்பெரிய வாய்ப்பு.

எல்லா வேதாகம பள்ளியிலும், எல்லா வாலிப குழுக்களிலும், எல்லா ஞாயிறு பள்ளிகளிலும், எல்லா வேதாகம கருத்தரங்கம் மற்றும் கூட்டங்களிலும் ஆத்தும ஆதாயம் முக்கியமான கருத்தாக மாறினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கிறிஸ்தவர்கள் எல்லா நுணுக்கமான கலைகளிலும், வியாபாரங்கள் அல்லது தொழில் துறைகளிலும் வெற்றிகரமாய் செயல்படுகின்றனர். ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் ஆத்தும ஆதாயம் முதலிடம் பெறுவதால் இதிலும் அவர்களால் வெற்றிகரமாய் செயலாற்ற முடியும். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் கிறிஸ்துவின் சரீரம் என்றும், கிறிஸ்துவே அவர்கள் மூலமாய் ஊழியம் செய்து அவர் வாசம்செய்யும் சரீரத்தின் மூலமாய் பேசுகிறார் என்பதை அதிகமாய் போதிக்கும் போது அவர்களால் அநேகரை வெற்றிகரமாக ஆத்தும ஆதாயம் செய்ய முடியும் - விசுவாசிகள்.

தரிசனத்தின் அளவு

அநேக மக்கள் தங்களுக்கான தரிசனம் உடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சமூகத்தினரையே பார்க்கின்றனர். அவர்கள் தங்கள் சபை அல்லது தங்கள் கூட்டத்தைப் பற்றியே சிந்திக்கின்றனர். அதைத் தாண்டி அவர்கள் அக்கரை காட்டுவதில்லை. மற்றவர்கள் தரிசனம் சற்று விரிவடைந்து தங்கள் மாநிலம் அல்லது கூட்டம் அல்லது மலைவாழ் மக்களுக்கு சுவிசேஷம் பரப்புகின்றனர். இந்த பகுதிகளில் சுவிசேஷம் கூற கருத்துள்ளவர்களாய் இருக்கின்றனர். இதைத் தாண்டியும் தங்களுக்கு பொறுப்பு உள்ளதென்பதை அவர்கள் உணரவில்லை. இன்னும் மற்றவர்கள்

தங்கள் முழு தேசத்தையும் பார்த்து தங்கள் சொந்த தேசம் சுவிசேஷம் அடைய வேண்டும் என்று ஒப்புக்கொடுத்து ஜெபிக்கின்றனர். இவர்களுடைய தரிசனமும் உள்ளுரைச் சேர்ந்ததே. தேசிய அளவிலேயே தங்கள் ஆத்தும ஆதாய அழைப்புள்ளவர்களாய் இருக்கின்றனர். மற்றவர்கள் சற்று விரிவான தரிசனம் உடையவர்களாய், தங்கள் கண்டத்தை சந்திக்கின்றனர். அவர்கள் கண்டத்தை சுவிசேஷ மயமாக்குவதில் அக்கரை கொண்டு, தங்கள் கண்டம் சந்திக்கப்படுவதற்கென்று, எந்த தியாகமும் செய்ய ஆயத்தமாய் இருக்கின்றனர். ஆனால் அவர்களும் உள்ளூர் மயமாக்கப்பட்டிருக்கின்றனர். யோவான் 3:16 தரிசனத்தின் படி, கர்த்தருடைய தரிசனத்தை உடைய கிறிஸ்தவர்கள், உலகம் முழுவதற்குமான தரிசனம். அவர்கள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தீவு தேசங்கள் - உலகம் முழுவதும் 'சகல சிருஷ்டிகளையும் பார்க்கின்றனர். அவர்கள் உலகம் முழுவதையும் மாற்றும் தரிசனம் உடையவர்களாய் இருக்கின்றனர்.

ஜெட் விமானங்கள், தொலை காட்சிகள், செயற்கை கோள் தொடர்புகள் மூலம் நாம் கூட்டமாக சிறு கோளில் (பூகோள கிராமத்தில்) வாழ்கிறோம். கிறிஸ்தவர்களாக நம்முடைய தரிசனம் உலக அளவிலான தரிசனமாக இருக்க வேண்டும். போட்டிகளும், அரசியல் தடைகளும் கர்த்தருடைய திட்டங்களுக்கு விரோதமான தடைகளையும், அந்நியப்படுத்தலையும் ஏற்படுத்தி தடுப்புச் சுவராய் இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் இனிமேலும் எந்த சபையைச் சேர்ந்தவர் என்றோ, எந்த பிரிவைச் சேர்ந்தவர் என்றோ கேட்க முடியாது. அவர்கள் நீங்கள் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனை சொந்த இரட்சகராக அறிந்திருக்கிறார்களா? என்று மட்டுமே கேட்க முடியும்.

முன்னுரிமையை நிரூபித்தல்

நாம் எதை முக்கியமாய் நினைக்கிறோமோ அதை நாம் செய்கையில் காண்பிப்போம். உலகம் முழுவதையும் ஆத்தும ஆதாயம் செய்வது நமது முன்னுரிமையாய் இருந்தால் அதற்கே நாம் முதலிடம் கொடுப்போம். உலகத்தை சுவிசேஷமயமாக்குதலே நமது மேலான முன்னிரிமை ஆகும். இதுவே நம் முதல் தெரிந்தெடுப்பு, கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற ஊழியம், ஒவ்வொரு விசுவாசியும் பகிர்ந்து கொள்ள வேண்டிய கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வமான காரியம். இது உங்களுடைய மேலான முக்கியத்துவம் வாய்ந்ததானால் எல்லாவற்றையும் காட்டிலும் இதில் அதிகம் முதலீடு செய்வீர்கள். இது உங்களுடைய மேலான முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கும் போது மற்றவருக்கென அதிக நேரம் செலவழிப்பீர்கள். உங்களுடைய அதிகப்படியான சக்தி, திட்டங்கள், உங்கள் எண்ணங்கள், உங்கள் திறமைகள், உங்கள் பணம், உங்கள் வாழ்க்கை. இரட்சிக்கப்படாதவர்களுடைய இரத்தபழியை நம் கையில் கேட்கப்படாதிருக்க ஒரே வழி உலகம் சுவிசேஷமயாக்குதலை நாம் மேலான முக்கியம் வாய்ந்ததாக கருதுவதாகும்.

கிறிஸ்துவுடன் ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவுக்குள் மறுபடி பிறந்த ஒவ்வொருவனும் கிறிஸ்துவின் கட்டளையை தனிப்பட்ட உணர்வாய் எடுத்துக் கொள்வதால் இது மேலான முக்கியத்துவம் வாய்ந்தது என நான் கூறுகிறேன். இதை நாம் வாழ்க்கை முறையில் தனிப்பட்ட விதமாய் வெளிப்படுத்துவதே அன்றி வேறு சிறந்த உபதேசமோ அல்லது எழுத்து முறையோ அல்லது வேறொரு நன்மையானதும் இல்லை.

சிறந்த வெளி ஊழியத்திட்டம்

ஆத்தும ஆதாயம் செய்வதே மேலான முக்கியத்துவம் வாய்ந்தது. முழு நேரம் ஊழியர்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு ஆத்தும ஆதாயம் முன்பதிவு செய்யவில்லை. நீயும், நானும் கூட இதைச் செய்ய முடியும். இதுவே நமது வாழ்க்கை, நமது மனதுருக்கம் மற்றும் முன்னுரிமை வாய்ந்ததாகும். தொழில்முறை மத குருவானவர்கள் மட்டுமே ஊழியம் செய்யக்கூடும் என்று கிறிஸ்தவர்கள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் கிறிஸ்து ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளும் வாசம் பண்ணுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவருடைய சாட்சி. ஒவ்வொரு விசுவாசியும் அவருடைய வாய்மொழி. பேச, நடக்கக்கூடிய ஒவ்வொரு விசுவாசியின் மூலமும் கிறிஸ்து பேச விரும்புகிறார். நாம் அவருடைய சாட்சியாய் இருக்கிறோம். மதகுருவானவருடைய பேச்சை கவனிக்க விரும்புவதைக் காட்டிலும் அநேக மில்லியன் மக்கள் சாதாரண மனிதனுடைய அல்லது உண்மையான விசுவாசியினுடைய சாட்சியைக் கேட்பதையே விரும்புவர். இன்று நம்மிடையே உள்ள இந்த கருவியைக் கொண்டு எந்த ஒரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவுக்கென்று வெற்றிகரமான சந்தோஷமான சாட்சியாய் இருக்க முடியும்.

வெறும் ஒரு கருவி

ஒரு முதியவர் என் கரங்களைப் பிடித்துக்கொண்டு கதறினார். அவர் தன் ஒலிநாடாக் கருவியை என்னிடம் காட்டி கூறியது, 'டாக்டர், நீங்கள் என்னுடைய போதகர் இந்த ஒலிநாடா கருவியின் மூலம் நான் உங்களை தூக்கிக் கொண்டு வீடு வீடாய், மருத்துவமனைக்குள், சிறைச் சாலைகள் மற்றும் அனாதை விடுதிகளுக்கு உங்களைக் கொண்டு செல்கிறேன். நான் இந்த பழைய இயந்திரத்தை இயக்கும்போதெல்லாம் நீங்கள் எனக்காக போதிக்கிறீர்கள். பின்பு நான் உங்கள் செய்தியை கேட்பவர்களுக்காக ஜெபித்து அவர்கள் இரட்சிப்படையவும், குணமாக்கப்படவும் செய்கிறேன். ஆ! நான் ஆத்தும ஆதாயராய் இருப்பதின் நிமித்தம் மிகழ்ச்சி அடைகிறேன். நன்றி கர்த்தாவே, என் வாழ்வின் இறுதிகாலத்தில் நான் ஆத்தும ஆதாயம் செய்ய கற்றுக் கொண்டேன்.'

ஒவ்வொரு விசுவாசியும் நடைமுறையில் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் மாற என்ன செய்ய வேண்டும் என்று சிந்தியுங்கள். இதை நாம் முன்னுரிமையாக கருதி எல்லாவற்றையும செய்யும்போது நம்மால் ஆத்தும ஆதாயம் செய்ய முடியும். ஆத்தும ஆதாயம் செய்பவர்களைத் தெரிந்து எடுங்கள். ஆத்தும ஆதாயத்தைக் குறித்தே சிந்தியுங்கள். அதைக் குறித்து கற்பனை செய்யுங்கள். இதுவே நம்முடைய மிகச் சிறந்த ஒன்றாயும், நமது மனதுருக்கமாயும் இருக்கட்டும். இது நம்மை உந்திச் செல்லும். நமக்குள் வாழும் யாவற்றையும் கிறிஸ்துவுக்காக அளிக்கும்போது அவருக்காய் சாட்சியாய் இருப்பதின் மிகச் சிறந்த சந்தோஷத்தை நாம் கண்டு கொள்வோம். ஏனென்றால் நமக்குள்ளிருந்து எல்லா கிரியையையும் செய்கிறவர் அவரே. கர்த்தர் நம்மேல் கொண்ட அன்பை நிரூபிப்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்வோம். 'தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே' (ரோமர் 5:5). நமக்குள் இருந்து நம்மை உந்திச் செல்லும் அதே மனதுருக்கத்தினால் நாம் கவரப்படுவோம். நாம் வாலிபராய் இருக்கையில் கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் இருக்கும் வழிகளைக் குறித்து கனவு கண்டோம். தரிசனங்கள் ஜெபத்திற்கு நேராய் நம்மைக் கொண்டு சென்றது. அந்த ஜெபத்தினால் விசுவாசம் கிரியை செய்தது. சீக்கிரத்திலேயே அந்த சொப்பனங்கள் வாழ்க்கையாக மாறி உண்மைத்துவமாயிற்று.

துவக்கத்தில் போதுமான அளவு வேத வசனத்தை விசுவாசித்து கர்த்தருடைய செய்தியை தியானித்து மற்றவரோடு பகிர்ந்து கொண்டோம். இது நம்முடைய சிந்தனையைத் தூண்டி ஆத்தும ஆதாயம் செய்யும் வழிகளை சொப்பனம் காணச் செய்தது. விசுவாசிக்கிற எந்த ஒரு கிறிஸ்தவனும் செய்யக் கூடிய ஆத்தும ஆதாய எண்ணற்ற வழிகளை சிந்தித்தது. எந்த ஒரு உண்மையான கிறிஸ்தவனும் செய்யக் கூடிய காரியங்கள் உண்மையிலேயே இழந்துபோன ஆத்துமாக்களை மீட்கக்கூடிய வல்லமை உடையது என்பதை நான் விசுவாசிக்கிறேன். எல்லா சிந்தனையாளர்களும் உருவாக்குகிறவர்களாய் இருக்கிறார்கள். எல்லா சாதனையாளர்களும் தங்கள் வாழ்க்கையில் சொப்பனம் காண்கிறவர்கள், சிந்தனையாளர்கள், திட்டம் இடுபவர்களாக இருந்து, பின்பு செயலாற்றுகின்றனர்.

சிலர் விமர்சிக்கின்றனர், சிலர் சுவிசேஷம் அறிவிக்கின்றனர்

மக்களுடைய யோசனைகளும், அவர்கள் செய்யும் காரியங்களும் பொதுவாக விமர்சிக்கப்படுகிறது. விமர்சனையோடு இணைந்தது வெற்றி. பொதுவாக சாதனையாளர்களையே விமர்சகர்கள் விமர்சிக்கினறனர். சிலர் விமர்சித்துக் கொண்டிருந்தாலும் மற்றவர்கள் சுவிசேஷம் அறிவித்துக் கொண்டே இருக்கின்றனர். அவர்களுடைய விமர்சனத்திற்கு எதிர்வினை எதுவும் புரியாமல் இருக்க கற்றுக்கொண்டு இருக்கின்றனர். அவர்கள் அதை நேர்மறையாக எடுத்துக் கொள்ள கற்றிருக்கின்றனர். நாம் அதற்கு எதிர்வினைப் புரிய வேண்டுமென்றால் அவர்களோடு போராடி நம்முடைய காரியங்களை நியாயப்படுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு நாம் செய்யும்போது நாம் ஏற்கனவே திட்டமிட்டவைகளை இழக்க வேண்டியிருக்கலாம். இதனால் நாம் தோல்வியுறலாம்.

தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்ற அனைவரும் விமர்சனத்தை உண்மையிலேயே பாராட்டின ஒரு விதமான வடிவம் என்பதனை கற்றிருந்தனர். மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டு முன்வருபவர்களை மட்டுமே மக்கள் பொதுவாக விமர்சிக்கின்றனர். வீழ்ந்து போன, வெற்றி பெறாத, சாதிக்காத மனிதர்கள் மேல் யாரும் எந்த கவனமும் செலுத்துவத்தில்லை. ஆகவே அவர்களுக்கு எதிர்ப்பு இல்லை. வெற்றி பெற்ற முன்னுரிமை அளிக்கப்பட்ட மனிதர்களிடம் மட்டுமே இந்த கிரியை நடப்பிக்கப்படுகிறது. நாம் உயர்ந்த நோக்கம் கொண்டு அதை அடைந்தவர்கள் விமர்சனத்தை

வெளிப்படையாய் பதில் அளிக்காமல், ஆனால் உள்ளே இதைத் தங்களுக்குள்ளே சவாலாய் ஏற்று, பலங்கொண்டு, தங்களுக்குள்ளே அதிக தைரியங்கொள்ள கற்றுக் கொள்கின்றனர்.

விமர்சனம் என்பது எளிதில் கிடைக்கக்கூடியப் பொருள். ஆனால் எப்போதும் அதிகமாய் கிடைக்கும் மற்றும் நமது எதிர்வினைக்கு ஏற்றவாறு அது கருத்தில் கொள்ளப்படும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இரண்டு வகையான மக்கள் உள்ளனர். ஒருவர் பிரச்சனையோடு இருக்கின்றனர். மற்றவர் தீர்வோடு இருக்கின்றனர். நாம் தீர்வோடு இருக்கிற மக்களாய் இருக்க தெரிந்து கொள்ள வேண்டும். தீர்வோடு இருக்கும் மக்களே அதிக தேவை உள்ளவர்களாய் இருக்கின்றனர். யாராவது பிரச்சனையை உருவாக்கினால் அவர்களோடு கலந்து ஆலோசியுங்கள். அவர்களை ஆராய்ந்து பாருங்கள், அவர்களை வகைபடுத்துங்கள், செயல்புரிபவர்கள், சாதனை புரிவோர், இவர்கள் தீர்வை உடையவர்கள்.

சிறந்த அறிவுரைத் துணுக்காகிய இந்த வாசகத்தை நாம் எப்போதாவது வாசித்து இருப்போம். 'பிரச்சனையோடு போராடாதிருங்கள்' தீர்வை கொண்டு வாருங்கள்' நாம் எப்படி ஆத்தும ஆதாயம் செய்வது எனபதைக் குறித்த கருத்தரங்கிற்கு என்று அதிக நேரத்தை செலவழிக்கிறோம். இதற்கான தீர்வை நாம் பெறலாம். சுவிசேஷத்தைப் பரப்புதல், இதற்கான தீர்வையும் நாம் பெறலாம். கூட்டுறவோடு ஆத்தும ஆதாயம் செய்யலாம். கிறிஸ்தவ இலக்கியத்தின் தேவையைக் குறித்து மட்டும் நாம் பேசக்கூடாது. அதற்குத் தேவையானவைகளை நாம் அளிக்கவும் செய்ய வேண்டும். இதுவே தீர்வு. சந்திக்கப்படாதவர்களை சந்திப்பதின் பிரச்சனைகளை ஆராய்வதற்கென்று நேரம் செலவழிக்கக் கூடாது. அதற்கான தீர்வை செயல்முறைப்படுத்த வேண்டும். சுவிசேஷ செய்தியாளர் படை உருவாக்கப்படவும், அவர்களுக்குத் தேவையான ஆத்தும ஆதாயக் கருவிகளை கொடுத்தும் உதவ வேண்டும். சுவிசேஷத்தின் எதிரிகள் மக்கள் மேல் தங்கள் கண்களை வைத்துள்ளனர். ஆனால் நாம் அவர்களுக்கென்று ஏதாகிலும் செய்ய வேண்டும். ஏதாவது கிரியை செய்ய வேண்டும்.

ஆத்தும ஆதாயத்தோடு இணைந்த பிரச்சனைகளோடு போராடுவதற்கென்றே உங்கள் வாழ்க்கையை நீங்கள் செலவழிக்கக் கூடும். உலகத்தின் தேவை என்னவெனில் கிரியை செய்வதே ஆகும். தேசிய சுவிசேஷம் என்பது நாம் ஏற்றுக்கொண்ட கிரியைக்கான தீர்வாகும். இயேசு திரைப்படம், ஒரு தீர்வு. மில்லியன்கணக்கான மக்கள் இதன் மூலம் தொடப்படுகின்றனர். இதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி சுவிசேஷ செய்திகள், நடமாடும் சுவிசேஷ குழுக்கள் மற்றும் டன் கணக்கில் இலக்கியப்பிரதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பிரச்சினைகளை நாம் ஆராய்ந்து கொண்டு இருக்காமல் அதற்கு தீர்வை கொண்டு வரலாம்.

யாருடைய கருத்து மிகவும் கணக்கில் கொள்ளப்படுகிறது

மிகவும் பிரசித்தபெற்ற மனிதன் ஒருமுறை கூறினான். 'ஒரு விமர்சகனால் கணக்கிட முடியாது' ஒரு பலமான மனிதன் எவ்வளவு தத்தளித்தார் என்பதை குறிப்பிட்டுக் கூற முடியாது அல்லது எங்கு இந்த கிரியை மிகச் சிறந்த பலனை உண்டாக்கும் என்பதைக் கணக்கிட முடியாது' 'காரியத்தின் கடைத்தொகை பொதுவாக யார் இதில் முக்கியமாய் இடம் பெற்றிருக்கிறார்களோ, செயலில் ஈடுபடுகிறார்களோ, அவர்களுடைய முகத்தில் மட்டுமே தூசியும், வியர்வையும், இரத்தமும், தவறுகளும், திரும்பவும் திரும்பவும் ஏற்படும். ஆனால் அவர் விலையுயர்ந்த காரியத்திற்காய் தன்னை ஒப்புக்கொடுத்திருப்பதால் தன் மிக உயர்ந்த சாதனையின் வெற்றியை அவர் அறிந்திருக்கிறார். அவர் தோல்வி அடையாமல் மேலும் தைரியசாலியாகிறார்'. ஆம்! விமர்சனம் அதிக பலன் அளிக்கக் கூடியது. விமர்சிப்பவர் வருவார், போவார், வீழ்வர், எழுவர். ஆனால் பிரச்சனையைத் தீர்ப்போர் சமுதாயத்தின் தீர்வாய் இருக்கின்றார். இந்த பாவம் நிறைந்த சந்திக்கு இது போதுமானதல்ல. நீங்களும் நானும் தீர்வை உடையவர்களாய் இருக்கிறோம். நாம் கிறிஸ்தவ சாட்சியாய் இருக்கிறோம். நாம் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம். போதுமான இலக்கிய பிரதிநிதிகளைக் கொண்டு நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும். அதை உங்களோடு கொண்டு சென்று மக்களுக்கு விநியோகிக்கலாம். சில நல்ல சுவிசேஷ ஒலிநாடாக்களை நீங்கள் உங்களோடு வைத்துக் கொள்ளலாம். உங்களுக்கு என்று ஒரு ஒலிநாடாக் கருவியை வாங்குவதற்கென்று உங்கள் பணத்தை சிறிது முதலீடு செய்யலாம். மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு செல்லலாம். கிறிஸ்துவுக்கென்று சாட்சியாய் இருங்கள். பாவிகளின் இரத்தபழியை நம்முடைய கரத்தில் ஏற்றுக்கொள்ள விரும்பாதபடியால் நாம் ஆத்தும ஆதாயராய் இருக்கிறோம்.

உங்கள் பகுதியில் அல்லது தேசத்தில் ஆத்தும ஆதாயம் செய்யும் சந்தோஷத்தைக் கண்டுகொண்ட பின்பு, கர்த்தர் உங்களை நம்பிக்கொடுத்த உங்கள் பணத்தைக் கொண்டு, பல்வேறுபட்ட கலாச்சாரம் உடைய மக்களிடையே சுவிசேஷம் சொல்லும் ஆத்தும ஆதாயருக்கு சில கருவிகளை வாங்கி கொடுக்க வேண்டும். இவ்வழியாக வெளிநாட்டிற்கு சுவிசேஷம் அறிவிப்பதில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு எல்லா ஆத்துமாக்களுக்கும் சுவிசேஷம் பகிர்ந்து கொடுப்பதின் பலனை நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள். நிராகரிக்கப்பட்ட கிராமங்களுக்கு இலக்கிய பிரதிகளை விநியோகிப்பதற்காக உங்களால் முடிந்த அளவு இலக்கிய பிரதிகளை வாங்கிக் கொடுங்கள். அபிஷேகிக்கப்பட்ட செய்திகள் அடங்கிய ஒலி நாடாக்கள், புத்தகங்கள், ஒளி நாடாக்கள், வட்டப் பேழைகள், கைப்பிரதிகள் எப்போதுமே வல்லமை உடையது. அவைகள் எப்பொழுதும் சோர்வடைவது, தங்கள் செய்திகளை மாற்றுவது, வாக்குவாதம் செய்வது, ஒழுக்கக்கேடாய் மாறுவது அல்லது ஒத்துப்போவது இல்லை. அவைகள் உலகின் மிகச் சிறந்த சுவிசேஷ செய்தியாளர்கள். உங்களுக்கு பதிலாக அவைகள் எல்லா இடத்திற்கும் செல்லும். எல்லா ஆசீர்வாதங்களையும், வெளிநாட்டிலுள்ள அநேகரை நீங்கள் ஆசீர்வதிக்கக் கூடும். மற்றும் கிறிஸ்துவுக்கென்று அவர்களை ஆதாயம் செய்வதின் பலனையும நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். இதற்கென்று சிந்திப்பது, பேசுவது அல்லது ஜெபிப்பது மட்டும் போதுமானது அல்ல. உங்களுக்கான செயலில் இறங்குங்கள். அக்கினி பற்றி எரிகின்ற இந்த நாளில் ஏதாவது செய்யுங்கள். இதைத் தாண்டி புறம்பே செல்லாது இருங்கள்.

சுவிசேஷமும் சிறு குழு கூட்டங்களும்

சிறு குழு சுவிசேஷம் வல்லமையாய் இருப்பதற்கு இது ஒரு மிகச் சிறந்த காரணம். இது தனிப்பட்ட முறையில் சந்திக்கப்படும் சுவிசேஷ அமைப்பாகும். தனிப்பட்ட முறையில் ஒருவரை அக்கறையுடன் சந்திப்பது அல்லது நமக்கு ஏற்கனவே தொடர்புடைய நபரிடம் அவர் அறிந்திராத இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கும் அமைப்பாய் இருப்பதால் சிறு குழுவின் வடிவமைப்பு மிகவும் ஏற்றதாய் இருக்கிறது. ஒவ்வொரு குழுவிற்கும் நோக்கம் அல்லது தரிசனம் இருப்பதால் இது மக்களை ஒன்று சேர்க்க உதவியாய் இருக்கிறது. ஒரு கிறிஸ்தவ ஆராதனை வேளையில் அல்லது மிகப் பெரிய கிறிஸ்தவ வெளி ஊழியத்திற்கு பின்பு அழைப்பு விடுவிக்கும் போது ஏற்றுக் கொள்ளும் நூற்றக்கணக்கான மக்களில் ஒரு சிலர் மட்டுமே சபை ஆராதனைகளில் கலந்து கொள்கிறார்கள் என்று நான் கூற முடியும். ஏன் இவ்வளவு குறைந்த எண்ணிக்கை? ஏனென்றால் சபை ஐக்கியத்தில் யாதொருவரையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒரு நபர் சபைக்கு முதல் சில வருகைகளில் எந்த நண்பரையம் உருவாக்கவில்லை என்றால் பொதுவாக அவர் திரும்ப சபைக்கு வருவது இல்லை என்பதை நீங்கள் கவனித்து இருக்கிறீர்களா? கிறிஸ்தவ சபை மற்றும் ஐக்கியம் என்பது ஏதோ ஒரு உறவு முறை அல்லது தொடர்பினைக் கொண்டிருக்கிறது. ஒரு சபையில் அதிக உறவு முறை உள்ள மக்களைக் கொண்ட ஒரு நபர் அந்த சபையிலேயே நிலைத்து இருப்பார். சபையில் அல்லது ஐக்கியத்தில் ஒருவர் தொடர்ந்து நிலைத்திருக்கவும், அவர் ஒழுங்காய் வரவும் குழுவை நடத்துபவர் அவர்களது உறவு முறையை மேம்படுத்த வேண்டும். இதனால் மக்கள் அனுசரணையாய் உணருவர். ஜெபக் குழு இரண்டு திசைகளிலிருந்தும் செயல்பட வேண்டும். தனிப்பட்ட தொடர்பு மற்றும் மற்றவர்கள் மேல் அதே விதமான அக்கறையோடு இவை இரண்டைக் குறித்தும் நாம் பார்ப்போம்.

தனிப்பட்ட தொடர்புகள் மூலமாக சுவிசேஷம் அறிவித்தல்

தனிப்பட்ட தொடர்புகள் என்பது நமது குடும்பம் மற்றும் வேலையின் மூலமாக நம்மோடு தொடர்பு கொண்டுள்ள மக்கள் - இந்த மக்களோடு ஏற்கனவே நாம் ஒழுங்கான முறையோடு தொடர்பு வைத்துள்ளோம். இவர்களோடு நமக்கு ஏற்கனவே தொடர்பு உள்ள படியால் இவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பது மிகவும் எளிதானது. இவர்கள் ஏற்கனவே உங்களைக் குறித்து அறிந்தும் உங்கள் மேல் நம்பிக்கையாயும் இருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் யாரோ ஒருவர் இயேசுவண்டை வரும் போது, அவருடைய இரட்சிப்பினால் அவரைச் சார்ந்துள்ள முழு சிறு சமுதாயமும் அவரால் பாதிப்படைகிறது. ஒரு பாவி இயேசு கிறிஸ்துவிடம் வரும் போது அவருடைய சாட்சி பல நூறு மக்களுக்குள் பாதிப்பை உண்டாக்குகிறது.

இறந்த அடக்க ஆராதனை செய்யப்படும் இடங்களிலும், உணவருந்தும் இடங்களிலும் யாரோ ஒரு நபர் அங்குள்ள திரளான மக்களுக்குள் பாதிப்பை ஏற்படுத்துகிறவராய் இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட தேசத்தின் உணவாக அமைப்பு சொல்லுகிறது 'ஒரு மோசமான உணவு இரண்டாயிரத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்களை பாதிக்கும்!' ஏன்? ஒரு வாடிக்கையாளர் கெட்டுப் போன அல்லது மோசமான உணவைப் பெறும் போது அதை அவர் மற்றவருக்கு அறிவிக்கிறார். அவர் அதை வேறு ஒருவரிடம் சொல்லுகிறார். இவ்வாறு இந்த கதை அந்த சமூகம் முழுவதும் சென்றடைகிறது. அவர்கள் வியாபாரம் வளருவதற்கு பதிலாக இதனால் மோசமடைகிறது. அநேக எண்ணிக்கையிலான மக்களை பாதிக்கும் இந்த சிறு குழுவின் வல்லமையை நீங்கள் அறியத் துவங்கி விட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

'வாயிலிருந்து வரும் வார்த்தை' நல்ல விதமாயும் கிரியை செய்யக் கூடும். மோசமாயும் கிரியை செய்யக் கூடும். ஒரு மனிதன் தன் நண்பன் மூலமாக சிறு குழு கூட்டத்திற்கு அழைக்கப்பட்டார் என்று கற்பனை செய்து கொள்வோம். அந்த கூட்டத்தில் அவர் இயேசுவை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டார். சில வாரங்களுக்குள்ளாக அந்த மனிதரின் வாழ்க்கையில் சில மாற்றங்கள் ஏற்படக் துவங்கியது. தன் சொந்த மனைவி பிள்ளைகளின் தேவைகளைக் காட்டிலும், இவருடைய தேவையே மிகவும் அவசியமானது அல்ல என்பதை அறிந்தார். இவருடைய சுய நல பழக்கவழக்கங்கள் அவரை விட்டு விலகி மற்றவர்களுக்காக இவருக்கு நெருக்கமான மனிதர்கள் இவர் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதனைப் பார்க்கத் துவங்கினர். இவரிடமிருந்து

மாம்சீக விருப்பங்கள் மாறி, சபையின் ஐக்கியத்தில் கலந்து கொள்வதையும், கர்த்தரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பினார். அவர் வாழ்க்கையில் அவசியமற்ற காரியங்களின் மேல் கட்டுப்பாடு கொள்ளத் துவங்கினார். இதனால் அவரிடம் ஏற்பட்டிருந்த நல்ல மாற்றங்களைக் கண்டு ஆச்சரியப்படத் துவங்கினர். இந்த மனிதனின் சாட்சியின் மூலமாக ஒரு நபர் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் போது, இதே செயல்முறை திரும்பவும் துவங்குகிறது.

சாட்சியாய் இருப்பது என்பது சுவிசேஷத்தின் துவக்கப் புள்ளி ஆகும். நாமே ஜீவனுள்ள நிருபங்களும் கிறிஸ்துவுக்காக ஜீவனுள்ள சாட்சிகளுமாய் இருக்கிறோம். நமக்குள் என்ன இருக்கிறது என்பதை மக்கள் கேட்க ஆரம்பித்து அதைப் பெற்றுக் கொள்ள ஆவலாயும் இருக்கின்றனர். சுவிசேஷம் என்பது வேதத்தோடு யாரோ ஒருவரின் தலைக்குள் சென்று தட்டுவதல்ல. அதற்கு மாறாக அவர்கள், தாங்களும் எப்படி இப்படி மாறக்கூடும் என்று உங்களைக் கேட்கும் போது அவர்களிடம் இதைக் குறித்துப் பகிர்ந்து கொள்வதாகும். இது இயல்பானது, எளிமையானது மற்றும் வேடிக்கையானது! ஒரு முறை ஒருவர் தன்னைச் சுற்றி உள்ளவர்களிடம் தன் அனுபவத்தை சாட்சியாய் கூறும் போது பொதுவாகவே அவர்கள் அவர் மேல் நம்பிக்கை கொண்டு தங்கள் வாழ்க்கையில் நடந்துள்ள சாட்சிகளைக் கூறத் துவங்குவர்.

இந்த சாட்சியின் செயல்முறை தொடர்ந்து செல்லும் போது சிறு குழுக்குள் அற்ற சபைகளும், இந்த சிறு குழுக்களினுடைய நுழைவை விரும்பி தங்கள் கடினமான சபைகளுக்குள்ளும் இதைக் கொண்டு வருவர். ஏன்? ஏனென்றால் பழைமை வாய்ந்த திருச்சபைகளும் தங்கள் சபை வாழ்க்கைக்கென்று கடினமான வெளி கூடு அமைத்துள்ளனர். அங்கு ஐக்கியம் கொள்ளுவது மிகவும் கடினமானது. உண்மையில் அந்த பழைமை வாய்ந்த திருச்சபைக் கட்டிடத்திற்குள் செல்வது கடினமல்ல. ஆனால் அந்த திருச்சபையில் உள்ள 'எந்த சமுதாயத்தினரிடையே' நாம் இடம் பிடிப்பது என்பதைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம் ஆகும். சிறப்பு அக்கறையுள்ள குழுக்களைப் போல முகமூடி தரித்து இருப்பர். ஆனால் அவர்களில் அசைவை உண்டாக்குவது என்பது மிகவும் கடினம் ஆகும். இதனால் தான் ஒடுக்கக் கூட்டங்கள், சிறப்பு நிகழ்வுகள், சுவிசேஷ கூடுகைகள், ஜெபப் பண்டிகைகள், விளம்பரங்கள் முதலியனவற்றிற்கு பின்பும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு சிலர் மட்டுமே இணைகின்றனர். மிகப் பெரிய அதிக செலவிலான சிறப்புக் கூட்டங்களுக்குப் பின்பு ஒரு புதிய தம்பதி முதல் முறையாக சபைக்கு வருவார். .... ஒரு மாதத்திற்குப் பின்பு அவரும் வருவதை நிறுத்திக் கொள்வார். ஏனென்றால் அங்கு அவருக்கு ஒரு நண்பரும் கிடைக்காததால் தான். ஆகவே சபையின் அளவு என்ன என்பது ஒரு காரியம் அல்ல என்று நீங்கள் கண்டிருப்பீர்கள். ஆனால் அங்கு எவ்வளவு பேர் திறந்த மனதுடனும் நட்புணர்வுடனும் இருக்கிறார்கள் என்பதே கணக்கில் கொள்ளப்படும். வாசலில் நின்று கை குலுக்கி விட்டு பின்பு தொடர்ந்து வீட்டுக்குள் வரும்படி அழைக்காவிட்டால் துரதிஷ்டவசமாக எவ்வளவு நட்புணர்வுடைய உலகத்திலுள்ள சபையாய் இருந்தாலும் அதின் நோக்கத்தை அது அடைய முடியாது.

சிறு குழு சபை எளிதில் உருவாக்கப்படக் கூடியது. மிகவும் வசதியானது வீடுகளில் கூடுகிற கூட்டங்கள், வீட்டு சூழல் சபை கட்டிடத்தைக் காட்டிலும் எல்லாராலும் கவரக் கூடியதாய் இருக்கும். சபைக்கு புதிதாய் வருவோர் சீக்கிரத்திலே திரும்பி வராமல் இருப்பதற்கு முதல் காரணம் அங்கு அவர்கள் எந்த தொடர்பையும் கண்டுபிடிக்காமல் போனதை நினைவில் கொள்வோம். இங்கு நான் உறவு முறைக்கு போதுமான அளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இவ்வாறு புதியவர்கள் வருவது சபை வளர்ச்சிக்காக மட்டுமல்ல. தொடர்ந்து அவர்கள் சபைக்கு வந்து அதில் பங்கு பெறுவதே ஆகும். எந்த உறவு முறையும் இல்லாவிட்டால், புதிதாய் வருபவர் சீக்கிரத்தில் குளிர்ச்சி அடைந்து சபையை விட்டு விலகி எதிர்மறையாய் மாறிப் போவார் என்று பழைமை வாத சபை வடிவத்தில் சபைக்கு வரும் சமூகத்தினர் அதிகரிப்பதற்கு பதில் அதை விட்டு விலகுபவரின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளது. புள்ளியியல் கணக்குபடி ஒவ்வொரு நூறு பேருக்குள்ளாக தொன்னுற்தொன்பது பேர் வெளியேறுகின்றனர். இந்த பிரச்சனைக்கு சபை அளிக்கும் பதில் பொதுவாக நிர்வாகத்தின் திறனை அதிகரிப்பதைக் காட்டிலும் அதிகப்பணம் செலவழிக்க வேண்டியதே ஆகும். புதிதாய் வந்த அறிக்கையின் படி சபையில் நூறில் ஒருவர் தன் நண்பர்களுக்குள் சாட்சியாய் இருக்கிறார். இவ்வகையான சுவிசேஷ எல்லைகள் மிக மோசமான தீர்ப்பும், மோசமான உக்கிராணத்துவமும் ஆகும்.

ஒரு மிகப் பெரிய வெற்றிகரமான சபைக்கு நான் மார்கெட்டிங் இயக்குனராக இருந்தேன். அத்திருச்சபை விளம்பரத்திற்கு என்று அநேக மில்லியன் பணங்களை செலவழித்தது. தொலைகாட்சி திட்டத்திற்கென்ற பணப்பட்டுவாடா மட்டுமே மிகப் பெரியது. இவையெல்லாவற்றிலிருந்தும் மிகப் பெரிய கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் மற்றும் அதிக செலவில்லாத சபை கட்டிடத்தினாலும் அநேக மக்களை உள்ளே அழைத்து வரமுடியவில்லை. முன் வாசல் வழியே வந்தவர்களில் அநேகர் பின் வாசல் வழியே வெளியேறினர் என்பது ஒரு காரியமல்ல. அதின் இயக்குனராகிய நான் அந்த சபைக்கு புதிதாய் வந்தவர்களிடம் ஒரு சிறிய கணக்கெடுப்பை செய்தேன். முதல் முறை சபைக்கு வந்தவர்களில் 10% பேர் தொலைகாட்சியில் பார்த்து வந்தனர். 5% பேர் வானொலி, விளம்பரம் மற்றும் தபாலில் அழைப்பு மூலம் வந்தனர். அதில் 85மூ பேர் யாரோ ஒருவர் தங்களை வரும்படி அழைத்ததால் வந்தனர். எங்கு நம் பணத்தை முதலீடு செய்வோம்? 10% பலன், 5% பலன் அல்லது 85% பலன்?

மக்களுக்கும் அவர்களின் உறவு முறைகளுக்கும் எங்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே சிறு குழு சபையின் முதன்மையாளர் ஆத்துமாக்களை ஏற்றுக் கொண்டு அவர்கள் மூலமாகவே ஆத்துமாக்களைப் பெருக்க வேண்டும். சிறு குழு சபை உறவு முறைகளை கட்டுவதற்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இத்தகைய நேர்மறையான உறவு முறைகளினால் அதிகப்படியான நேர்மறையான உறவுகள் பெருகி சபை வளரத் துவங்குகிறது. எந்த ஒரு சந்தையிடும் வல்லுநர் அல்லது விளம்பரத் துறை முகவரை நீங்கள் கேட்பீர்களாகில் 'வாய்மொழி வார்த்தை' விளம்பரத்தையே மேன்மையாக கூறுவர். இது ஒரு தனிப்பட்ட வல்லமையான விளம்பரக் கருவியாகும். ஒரு பொருள் வீட்டில் உள்ள எல்லாராலும் அழைக்கப்படும் பெயராக மாறும்பொழுது அது வெற்றியுள்ளதாகிறது. உங்கள் சபையில் உள்ள உறுப்பினர்கள் அல்லது ஐக்கியத்தில் உள்ள உறுப்பினர்களின் வாயிலிருந்து வரும் விளம்பரச் செய்தி என்ன? ஒரு முறை மக்கள் இயேசுவைக் குறித்து தங்கள் நண்பரிடம் பேசத் துவங்கி அவர்களை சபைக்கு அல்லது தங்கள் சிறு குழுவிற்கு அழைக்கத் துவங்கும் போது - அது அதிக பணம் செலவழித்து செய்யப்படும் விளம்பரத்திற்கு நிகரானது. அதன் இறுதி பலன் அதிகப்படியான ஆத்துமாக்கள். நூற்றுக்கணக்கான சுவரொட்டிகளினால் ஒருவர் வருவதைக் காட்டிலும் இரண்டு பேருக்கு நேரடியாக கூறுவதன் மூலம் ஒருவர் வருவது எண்ணிக்கையை அதிகரிக்கும். பழைமை வாதத்தினால் ஒரு சதவீத வளர்ச்சியைக் காட்டிலும் 50% என்பது பலமானது. உங்களது அறுவடை முயற்சியை சிறு குழு சபை வடிவமைப்பின் மூலம் அணுகுங்கள்.

அநேக பழமை வாய்ந்த சபைகள் அதிக பணம் செலவழித்து மிகச் சிறு பலனை மட்டுமே அடைவதை நாம் காண்கிறோம். அவர்கள் ஆத்தும ஆதாயத்திற்காக செல்கின்றனரா அல்லது சுய கௌரவத்திற்காகவா? தங்களுடைய போதகரின் பெயருக்காகவா அல்லது இயேசு கிறிஸ்துவின் நாம மகிமைக்காகவா? அவர்களுடைய நோக்கம் என்ன? தொலைகாட்சி நிகழ்ச்சியா அல்லது சபை வளர்ச்சியா? புகழுக்காகவா அல்லது இழந்து போனவர்களை மீட்கவா? போதகரே இந்த கேள்விகளுக்குரிய பதிலே குழு சுவிசேஷத்திற்கு போகும் ஒரே வழியாகும். தொலைகாட்சி, வானொலி அல்லது தினசரி பத்திரிக்கை மூலமாக வரும் அழைப்பிற்கு பதிலாக நண்பனிடமிருந்து அழைப்பு வர வேண்டும். 'தெரியாத ஒரு நபருக்கு' சுவிசேஷம் அறிவிப்பதென்பது பண செலவு மிகுந்ததாயும் தொடர்ந்து திருச்சபையால் வழி நடத்தப்படுவது கடினமானதாயும் இருக்கிறது. ஆகவே சிறு குழு ஊழியங்கள் எழுப்புதல் நிறைந்ததாய் இருக்கிறது. அது சிறந்தது மட்டும் இன்றி குறைந்த செலவுடையதாயும், மிகுந்த வல்லமை உடையதாயும் ஆத்தும ஆதாயம் செய்வதில் போட்டி உணர்வு குறைந்ததாயும் உள்ளது. இதுவே இயேசு சுவிசேஷம் செய்த முறை.

தன்னார்வத்தின் மூலமாக சுவிசேஷ மயமாக்குதல்

ஒவ்வொரு சிறு குழுவும் பல்வேறு காரணங்களினால் வேறுபட்ட மையக் கருத்து உடையதாய் இருக்கிறது - வழி நடத்துதல், உற்சாகப்படுத்துதல் மற்றும் சுவிசேஷம் அளித்தல், சிறு ஜெபக் குழுவானது திருச்சபைக்கு வெளி வட்டாரத்தில் உள்ள மக்களால் முழுமையாக கவரப்படுகிறது. ஆகவே சுவிசேஷம் அறிவிப்பதற்கு மிகவும் இது உதவியாய் இருக்கிறது - மக்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களிடைய எந்த மத வேறுபாடும் கிடையாது. எந்த முறையாலும் சுவிசேஷம் செல்ல முடியாத திருச்சபைக்கு வராத மக்களையும் கிறிஸ்துவண்டை அழைத்து வரும் திறமை உடையதாய் சிறு ஜெபக் குழுவின் தரிசனம் இருக்க வேண்டும்.

நான் திருச்சபையின் போதகராக இருக்கும் போது, அங்குள்ள தலைவர்கள் வெற்றியின் தரிசனத்தை அடிப்படையாகக் கொண்ட நேர்மறை தரிசனங்களை, எதிர்மறை தரிசனங்களுக்கு பதிலாக தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உதவி செய்ய முயற்சித்தேன். உதாரணமாக மருத்துவமனை ஊழியத்திற்கு விண்ணப்பிக்கும் ஆவியை உடைய குழுவினருக்கு பதிலாக புற்று நோயிலிருந்து மீண்ட மக்களை ஒரு குழுவாக அமைக்க வேண்டும். நடைமுறையில் பேசி, குணமாகுதலை விசுவாசிப்பவர்களை ஒரு குழுவாக அமைத்து மருத்துவமனை ஊழியம் செய்தல் அல்லது வியாதியஸ்தரோடு இடைபடுதல் மிகவும் வல்லமையுள்ளதாக இருக்கும். அவர்கள் சுகமானவுடன் என்ன நடைபெறும்? அவர்கள் தங்கள் நண்பர் மற்றும் தங்கள் குழுவோடு சென்று விடுவார்களா? இல்லை. அவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து ஒரு குழுவாக மாறி ஊழியம் செய்வர். 'ஒரு தாய்' குழுவாய் இருப்பதற்கு பதிலாக நீங்கள் 'பெற்றோர் குழு'வை கொண்டவர்களாக இருப்பீர்கள். இவ்வாறே உங்கள் குழுவில் உள்ள ஒரு பெண்ணுக்கு திருமணமானவுடன் தொடர்ந்து அதே குழுவில் இருக்க முடியும். கூடுமானவரை எப்போதும் குழுவின் தரிசனம் நேர்மறையானதாய் இருக்க வேண்டும். இதில் சில விதிவிலக்கு இருக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால் 'தேவை' நிறைந்த குழுவிற்கு பதிலாக 'நேர்மறைக் குழு' எவ்வளவு வல்லமை நிறைந்தது என்பதை நாம் காண்போம்.

சுவிசேஷ நோக்கில் பார்ப்போமாகில் சிறு குழு தன்னுடைய ஸ்திரத்தன்மையிலும், நீதியிலும் விட்டுக் கொடுக்காமல் இருப்பது மிக முக்கியமானது ஆகும். இதை விரிவாய் பார்ப்போமாகில், குழுவின் தரிசனம் சர்வதேச பீர் அருந்தும் சங்கம் அல்லது சாத்தானுடைய ராக் குழுவினைப் போல் அல்லாமல் வெளியே சென்று தொடப்படாதவர்களை சந்திக்கும் குழுவாய் இருக்க வேண்டும். எப்பொழுதும் இயேசுவின் பார்வையோடு குழுவின் தரிசனம் தடையின்றி மக்களை சந்திப்பதாய் இருக்க வேண்டும். மற்றவர்களை ஏற்றுக் கொள்வதற்கு குறைவான கட்டுப்பாடு என்பது இதற்கு உதவியாய் இருக்கும். மிகப் பெரிய காரணத்திற்காக பொதுவான விருப்பத்தை கொண்டு மற்றவர்களை தொடர்பு கொள்வதை உண்டாக்குவதை குழுவின் தரிசனமாய் இருக்க வேண்டும் - இயேசுவால் இது கூடும்.

என் வாலிப நாட்களில வெறும் 'இயேசு' என்ற வார்த்தையே என்னை முழுமையாய் கவர போதுமானதாய் இருந்தது. கர்த்தருக்கு ஏன் அநேக நாமங்கள் உண்டு என்பதை நான் யோசித்தேன். 'உன்னதத்திலுள்ள மனிதன்' என்பது கர்த்தர் என்ற வார்த்தைக்கு சரியான விளக்கமாய் உண்மையிலேயே இராது. ஆனால் மக்கள் கர்த்தரோடு தனிப்பட்ட உறவு இல்லாமலும் பிதா, குமாரன் அல்லது பரிசுத்த ஆவியானவரோடு நேரடியாய் பேசி அவரோடுள்ள உறவை அதிகப் படுத்துவதைக் கண்டுபிடிக்காவிட்டால் இந்த வார்த்தைக்குரிய அர்த்தம் போதாது. தன் சொந்த ஆர்வத்தின் மூலமாக மக்களிடம் சுவிசேஷத்தைக் கொண்டு செல்வது உங்கள் நண்பன் மற்றும் வேலை செய்யும் இடத்தில் உள்ளவர்களுக்கு பதிலாக வெளி வட்டாரத்தில் உள்ள மக்களை சந்திப்பது கடினமானது. நட்பு என்ற வழி முறையின் மூலமாக நம் சொந்த ஆர்வத்தில் மக்களை சந்திக்க முடியம். பொதுவான விருப்பத்தோடு தெரியாத நபரோடு பேசுவது நட்பை உண்டாக்கும். பின்பு ஐக்கியத்தையும் தொடர்பையும் கொண்டு வரும்.

பின் தொடருதல்

பின் தொடருதலின் நோக்கம் என்பது ஒன்றே - சீஷத்துவம். தொலைந்து போன மனிதரை கிறிஸ்துவினண்டை கொண்டு வருவதில் சுவிசேஷம் ஈடுபட்டுள்ளது. சீஷத்துவம் என்பது அந்த மனிதனை சுவிசேஷத்தின் மூலமாக வெற்றிகரமாக பயிற்சிவித்து மேலும் அவனை பின் தொடர்ந்து ஊழியம் செய்தலாகும். சுவிசேஷம் என்பது ஒரு நபரை ஜெபக் குழுவில் கலந்து கொள்ளச் செய்வது அல்லது சபை ஆராதனைக்கு முதல் முறையாய் அழைத்து வரும் செயல் முறையாகும். பின்பு பின் தொடரும் செயல் முறை ஆரம்பம் ஆகிறது. இது அந்த மனிதன் இரட்சிப்பிற்காக ஜெபிக்கும் ஜெபத்தோடு கலந்தது என்பது அவசியம் அல்ல. நீங்கள் அவர்களை சபை ஆராதனைக்கு அழைத்து வரும் போது கர்த்தருடைய வார்த்தை அவர்களை ஒரு தீர்மானத்திற்குள் கொண்டு வரும். மக்களைப் பின்தொடருவது 3 வகையால் உடைபட்டுப் போகக் கூடும். சபைக்கு வராதோர் (பொதுவாக இதன் அர்த்தம்: தொலைந்து போனவர்) வேறொரு சபைக்கு செல்லும் மக்கள்; மந்திரத்தில் ஈடுபடும் மக்கள்.

பின் தொடரும் செயல்முறை பல்வேறு இடங்களில் துவங்கினாலும், அதே தகவல்களோடு ஆரம்பிக்கப்படுதல் அவசியம் ஆகும். ஒரு நபர் முதல் முறை சபை ஆராதனை அல்லது ஜெபக் குழுவில் கலந்து கொள்ளும் போது அவரிடமிருந்து அவரைக் குறித்த தகவல்களை சேகரித்துக் கொள்ள வேண்டும். ஒரு சாதாரண அட்டையில் தேவையான தகவல்களை சேகரிக்கிறதாய் இருக்க வேண்டும். அதாவது நாம் அவரைத் தொடர்பு கொள்ளலாமா? குறிப்பாக அவர்களுடைய இல்லத்தில் தொடர்பு கொள்ளவது நலமுடையதாக இருக்குமா என்பதை இந்த தகவல் அட்டையின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த 'தகவல் அட்டையை' ஜெபக் குழு தலைவர்களிடம் கொடுத்து அந்த குழுவே மேலும் மேம்படச் செய்ய வேண்டும். முதலாம் முறை ஜெபக் குழுவுக்கு வரும் போது இந்த வழி முறை அவசியம் இல்லை. ஒரு முறை இந்த தகவல் அட்டையை ஜெபக் குழு தலைவரின் கையில் கொடுத்தவுடனேயே இந்த பின் தொடர் ஊழியம் இங்கே துவங்கி விடும். ஒரு முறை வருகை தந்தவுடனேயே அந்த நபரையோ அல்லது அந்த குடும்பத்தாரையோ தொடர்பு கொள்வது என்பது சிறிது கடினமானது. அநேகர் அந்த குறிப்பிட்ட நபர் வருகை தந்த அன்றே அல்லது அடுத்து வரும் நாட்களிலோ அவருக்கு தனிப்பட்ட முறையில் நன்றி கடிதம் அனுப்பி திரும்பவும் அவர் தொடர்ந்து வருமாறு அழைப்பு விடுக்கின்றனர். இதன் மூலம் அவன் / அவள் கர்த்தருக்கு மிகவும் விசேஷித்தமானவர் என்றும் சபைக்கு வருவதில் எந்த தயக்கமோ, அச்சமோ அடைய வேண்டியதில்லை என்பதை அந்த நபர் அறிந்து கொள்ளும்படி செய்வது சவாலான காரியம் ஆகும். ஏனென்றால் அவர் குற்றம் மற்றும் பயம் சுய குற்றவுணர்வு உடையவராக இருப்பதால் கடிதத்தின் மூலமான அன்பான அழைப்பு அல்லது நட்பினிமித்தமான அழைப்பு அதிலிருந்து அவரை மீட்டு ஆலயத்திற்கு வர உற்சாகப்படுத்தும்.

ஒருவரை உற்சாகப்படுத்திக் கொண்டு வருவது எவ்வளவு கடினம் என்பதை அறிவதே பின் தொடர் ஊழியத்தின் திறவுகோல் ஆகும். அதுவே திருச்சபை ஆராதனையைக் காட்டிலும் ஜெபக் குழு மூலமாக ஒருவரை சந்திப்பது மிக நன்மை உண்டாக்கும். ஏனென்றால் ஜெபக் குழு தலைமைத்துவம் அவருடைய குணம் மற்றும் தனித்துவத்தை நன்கு உள்நோக்கோடு அறிந்திருப்பதால் அவரோடு தொடர்ந்து ஊழியம் செய்வது எளிதாகும்.

பின் தொடருதல் அல்லது புதிய விசுவாசியை வழி நடத்துவது நண்பர் மற்றும் அவருடைய குடும்பத்தை வழி நடத்துவதைக் காட்டிலும் சிறிது கடினமானது. ஏனென்றால் இவர்களோடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வது நம்முடைய சொந்த ஆர்வத்தினாலேயே ஆகும். நமது நண்பர்கள் அல்லது உறவினர்களே தொடர்ந்து ஆலயத்திற்கு அழைத்து வருவது இயல்பாகவே பின்தொடர் ஊழியம் நடைபெற உதவிடும். ஏற்கனவே நம்முடைய நண்பர்களிடம் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டு இருப்பதால் பின்தொடருதல் என்பது - தகவல்களை பகிர்ந்து கொள்வது, உற்சாகப்படுத்துதல் மற்றும் ஒரு இலக்கை நோக்கி உந்தித் தள்ளுதல் ஆகும். புதிதாய் வருபவர்களுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்ளுதல் நமது பொதுவான விருப்பத்தை அடிப்படையாய்க் கொண்டிருப்பதால் அதற்கு அதிக அர்ப்பணிப்பும் சக்தியும் தேவை. பொதுவான விருப்பமாய் இருப்பதால் அதிசயமான விடுப்புகள் கேட்க நேரிடும். இயேசுவின் தொடர்பு குறிப்பாக சபைக்கு வராதவர்களோடு இருந்ததால், அது அநேக நேரங்களில் அநேகரை அவரிடம் அழைத்து வந்தது. கணிணி அல்லது குழந்தைகளைப் பற்றிய உரையாடலோடு தொடர்ந்து அந்த வாரத்திற்கான கூட்டங்களை சாந்தமாய் நினைவுபடுத்துவது அநேக மக்களுக்கு வசதியானதாய் இருக்கும்.

மற்றுமொரு சாதகமான தொடர்பு என்பது ஒரு நபர் ஒரு கூட்டத்திற்கு வருகை தருவேன் என்று ஒப்புக் கொண்ட பின் குறிப்பாக ஜெபக்குழுவிற்கு வருகை தரும் போது அதை நாம் பரபரப்பாக மாற்றக் கூடாது. பொதுவாக எப்போதும் அவரை சந்திக்கச் செல்லும் போது தனிப்பட்ட முறையில் சந்திப்பதே நல்லது. மிகவும் பொதுவான கேள்விகளை கேட்பதே சிறந்தது. சில நேரங்களில் அவன் / அவள் கூட்டத்திற்கு வருகை தந்தபின் ஏன் வருகை தந்தோம் என்று நினைக்கக் கூடும். நீங்கள் அவரை கடிந்துக் கொள்ளும்படி அல்லது குற்றமனப்பான்மை உண்டாக்கும் கடினமாக கேள்விகளை அவர்களிடம் கேட்கக்கூடாது.

ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும். கூட்டம் எப்படி இருந்தது, தனிப்பட்ட முறையில் எவ்வாறு உணர்ந்தீர்கள் என்ற மிகச் சாதாரண உரைநடைகளையே முதலாவது அவர்களோடு நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டும். இது அவரைக் கடிந்துகொள்வதைக்

காட்டிலும் மிகச் சிறந்ததாய் இருக்கும். தனிப்பட்ட முறையில் அவரை சந்திப்பது உங்கள் மேல் நம்பிக்கையையும், நட்பையும் வளர்ப்பதாயும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நட்பு கொள்வதாயும் இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்கள் காயப்பட்டவர்களாயும், அவர்களுக்கு உதவி அவசியமானதாயும் இருக்கும். அநேகர் தங்கள் பிரச்சனையை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதை அறியாதவர்களாக இருப்பர். புதிய கிறிஸ்தவ நண்பரானவர் புதிய நம்பிக்கை என்ற உலகுக்குள் நுழைகிறவராய் இருக்கிறார். பயமும், தயக்கமும் அவர்களுடைய ஒப்படைப்பை நிறைவு செய்ய முடியாதபடி அவர்களை தடைசெய்யும் அந்த காரணத்தினாலேயே அவர்கள் சபையின் முதலாம் இருக்கைக்குச் செல்வதில்லை.

அநேக காரணங்களால் மக்கள் மற்றொரு சபையைத் தேடுகின்றனர். என் அனுபவத்தில் 'நிகழ்ச்சியின் அடிப்படையில்' சபைக்கு செல்வோர் பொதுவாக ஜெபக்குழுவின் மூலமாக பரிசோதிக்கப்படுவார்கள். ஏனென்றால் அவர்கள் அதிக ஐக்கியத்தையும், கிறிஸ்தவ நடக்கையில் அதிகப்படியான நிறைவை ஜெபக்குழுவின் மூலமாக பெறுவர். இந்த குழு அதிக தனித்துவம் வாய்ந்தாயும், அதிக வேறுபாடு கொண்டதாயும் இருக்கும். பல்வேறு காரணங்களால் இவர்களுக்கென்று நிச்சயமான இலக்கு இல்லாத குழுவினராய் இருக்கின்றனர். இவர்களுக்கு அதிகப்படியான அன்பும், ஆலோசனையும் தேவையாய் இருப்பதால் எந்தவிதமான குறைபாடு ஏற்படும்போது அவர்கள் சபையை விட்டு வெளியேறுகின்றனர். இத்தகைய மக்கள் எல்லாவற்றாலும் அக்கறையோடு கவனிக்கப்படும்போது அவர்கள் சபையை விட்டு வெளியேறுவது இல்லை. காயப்படுத்தப்பட்டு, குற்றப்படுத்தப்பட்ட மக்களே வேறொரு சபையை தேடுகின்றனர். புதிய விசுவாசிகளைப் போலல்லாமல் இவர்கள் உதவியை நாடி சென்றார்களோ அவர்களாலேயே காயப்படுத்தப்படுகிறார்கள். 'மற்றொரு சபையில் இருந்து' வந்த குழுவினருக்கு பின் தொடருதல் ஊழியம் செய்வது எளிதானது. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே அர்ப்பணிப்புடையவர்களாய் இருக்கின்றானர். இந்த பிரிவினருக்குச் செய்யும் உண்மையான பணி என்பது சீஷத்துவத்துடனேயே ஜெபக்குழுவின் பணி எப்படி பலமுள்ளதாய் செயல்படுகிறது என்பதைக் கொண்டும் திருச்சபையின் தரிசனத்தைக் கொண்டும் மற்ற சபையிலிருந்து வரும் மக்களை வெற்றிகரமாக மறுரூபம் அடையச் செய்தல் சிறிது கடினமானதே.

இறுதியாக, மற்ற வழிபாடுகளிலிருந்து வரும் மக்கள் மூன்றாவது குழுவை உருவாக்குகிறவர்களாக இருக்கின்றனர். அநேக நேரங்களில் மற்ற வழிபாடுகளிலிருந்து வரும் மக்கள் தங்கள் கடவுள்களுக்கு செய்யும் ஆராதனையில் உண்மை உள்ளவர்களாய் இருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றானர். உண்மையிலேயே அவர்கள் தங்கள் சுயத்தை மீறி ஏதாவது ஒரு கூட்டத்திலோ அல்லது ஒரு ஆராதனையிலோ கலந்து கொள்வார்களாகில் அதன் அர்த்தம் மிகவும் குறிப்பிடத்தக்க கட்டுகளிலிருந்து விடுதலை ஆகிறதேயாகும். அவர்களுடைய வழிபாடுகளை விட்டு அவர்கள் வெளியேறிய நேரம் மிகவும் பயப்படத்தக்க நேரம் ஆகும். அதாவது, யெகோவா சாட்சி, சாத்தானிசம், மார்மேன்ஸ், பாக்யா மற்றும் இதைப்போன்று சில பெயர்களை உடைய மந்திரவாதங்கள். இத்தகைய வழிபாடு மற்றும் மந்திரத்தை விட்டு பிரிதெடுக்கப்பட்டவர்களைக் குறித் தகவல்களைக் கொண்டு அவர்களை நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். இவர்கள் சிறப்பான கவனமும் தொடர்ச்சியான தொடர்பு கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளனர்.

இந்த பின் தொடரும் செயல்முறை ஒருமுறை தொடங்கப்பட்ட பின் அவர்கள் நிறைவடையும் வரை தொடர்ந்து அவர்களோடு தொடர்பு வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். பின் தொடர் செயல்முறையில் நிறைவு என்பதின் அர்த்தம் அந்த நபர் அந்த ஜெபக்குழுவின் சீஷனாய் மாறுவது அல்லது சபை ஆராதனையில் தொடர்ந்து கலந்து கொள்ளும் வரை தொடர்ந்து தொடர்பு கொள்வது ஆகும். இந்த இரண்டில் ஒன்று நடைபெறும் வரை தொடர்ந்து அவர்களோடு தொடர்பு வைத்து இருக்க வேண்டும். ஒருவரை இரண்டு மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து தொடர்பு கொண்டு இருந்தும் எந்த வெற்றியும் கிடைக்காவிட்டால் இதன் பொதுவான அர்த்தம் 'என்னைக் குறித்து மேலும் அக்கறை கொள்ளாதீர்' என்பதாகும். மற்ற வழிபாடுகளிலிருந்து வருபவரை அதிக நாட்கள் தொடர்ந்து தொடர்பு வைத்திருக்க வேண்டும். அதே நேரம் மற்ற சபைகளிலிருந்து வருபவருக்கு குறுகிய காலமே போதுமானது. இதன் நோக்கம் காணாமற்போனதை கண்டுபிடிப்பதே அல்லாமல் ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு மந்தையை இடம்பெயரச் செய்வதல்ல.

தொகுப்புரை

ஜெபக்குழு மூலமாக சுவிசேஷம் அறிவித்தல், அதிக பண செலவும், திறமையும் செலவழித்து மிகப் பெரிய தகவல் தொடர்பு சாதனம் மூலமாக செய்யப்படும் ஊழியங்களைக் காட்டிலும் அநேக நேரங்களில் வெற்றி நிறைந்ததாய் இருக்கிறது. ஜெபக்குழுவின் தலைமைத்துவத்தின் பின்பாக திருச்சபை இருக்குமாகிலும் மேலும் அவர்களுடைய சுவிசேஷ முயற்சிக்கு பண உதவி செய்யுமாறு அந்த திருச்சபை வளர்ந்து நிலைந்தும் அதிக மக்கள் அந்த திருச்சபைக்கு வரவும் முடியும் என்று என்னால் வாக்கு கொடுக்க முடியும்.

குழுவுக்குள் நல்லுறவை எவ்வாறு மேம்படுத்துவது

நம் வாழ்க்கைத் தரத்தின் சாராம்சம் உறவுகளே ஆகும். நாம் திருமணமானவராய் அல்லது தனித்து இருப்பவராய், விதவையாய் அல்லது இதற்கு இடைப்பட்டவராய் இருந்தாலும் நமது உறவுகளும், நட்புமே முதுகெலும்பாய் நம் வாழ்க்கைக்கு அர்த்தமூட்டுகிறதாய் இருக்கிறது. தாய் தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள், உடன் ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முதலாளிகள், அறை நண்பர்கள், தொழிலாளிகள், குழுவில் உள்ளோர் - நம்முடைய உறவில் உள்ள மக்கள் இவரே ஆவர். இந்த எல்லா உறவுகளுக்கு மத்தியிலும் பிரச்சனைகள் உண்டு. இவைகள் இல்லாவிட்டால், எப்போதுமே இவைகள் இராவிட்டால் நம் உறவுகள் சவால் நிறைந்ததாய் இருக்க முடியாது.

உறவில் உள்ள பிரச்சனைகளை நாம் எப்படி மேற்கொள்வது? இவைகளைக் குறித்து எழுதுவோமாயின் அநேக பதிப்புகள் தேவைப்படும். ஆதாம், ஏவாள் காலம் துவங்கி நம்முடைய உறவை எப்படி மேம்படுத்துவது என்ற உள்ளார்ந்த பார்வையை தெரிந்துக்கொள்ள மனிதகுலம் முயற்சித்து வருகிறது. ஆதாம், ஏவாள் காலத்திலிருந்தே இது மிகக் கடினமான ஒன்றாக இருந்து வருகிறது. நீங்கள் திருமணமாகி குழந்தைகள் உடையவராய் அல்லது நல்ல வேலை உடையவராய் இருக்கலாம். இதிலுள்ள உறவுகளே உங்களுக்கு சவாலாய் இருக்கும்.

மனித குலத்தில் உறவுகளிடையே உள்ள பிரச்சனை எல்லையற்றது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் பாவம் செய்த பின்பு அவர்களுக்கு கர்த்தரோடுள்ள உறவே மிகப்பெரிய பிரச்சனையாய் இருந்தது. ஆதி.3:9ல் கர்த்தர் மனிதனிடம் கேட்ட முதல் கேள்வி, 'ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?' ஆதாம் கர்த்தர் புசிக்க வேண்டாம் என்று கூறிய கனியை புசித்த போது கர்த்தர் இந்த கடினமான கேள்வியை ஆதாமிடம் கேட்டார். ஆதாமோ மனைவியை குற்றம் சாட்டினார். ஏவாளும் இந்த கனியை சாப்பிட்டதற்கான பொறுப்பை ஏற்கவில்லை. அந்த நாளிலிருந்து மனிதர்களுக்கிடையேயான உறவிலும், மனிதனுக்கும் கர்த்தருக்குமான உறவிலும் பிரச்சனை துவங்கியது.

உறவுகளில் ஏன் இத்தனை பிரச்சனைகள்? இந்த பிரச்சனையின் ஒரு பகுதி மனிதன் அதிசயமான கலவையாக இருப்பதே ஆகும். மூன்று மில்லியன் செல் உடற்கூறுகளினால் மாம்சம் என்று அழைக்கப்படுவதினால் மாத்திரம் அல்ல, ஆவியிலும் கர்த்தரை போலவே கலவையாய் உருவாக்கப்பட்டதினாலேயே ஆகும். எந்த துறவியும் நேர்த்தியான வாழ்க்கை உடையவர் அல்ல. அப்போஸ்தலர்கள் பேதுருவுக்கும் பவுலுக்கும் இடையே பிரச்சனைகள் இருந்தது. இதேபோல் இன்னும் அநேகரை வேதத்தில் காணலாம். ஒவ்வொருவருக்கும் நலமான உறவுக்கான உதவி அவசியமாய் இருந்தது.

இந்த பாடதிட்டத்தில் சிறு ஜெபக்குழு அமைப்பின் உறவுகளுக்கிடையே இது எப்போது தோன்றும் என்ற அடிப்படிடையில் ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன். குழுவுக்குள் தோன்றும் உறவு போராட்டத்தைக் கருத்தில் கொண்டு இங்கு நான்கு எளிமையாக ஆலோசனைகளைப் பார்ப்போம்.

முதலாவது, நம்மில் அநேகர் அநேக நேரங்களில் உறவுகளில் உள்ள பிரச்சனைகளுக்கு ஆக்கப்பூர்வமாய் தீர்வு காண்பதைக் காட்டிலும், அந்த பிரச்சனைக்கு நாம் எப்படி பதில் அளிக்கலாம். அல்லது அதற்கு பழி வாங்கும்படி எப்படி செயல்படலாம் என்று யோசிக்கிறோம். இந்த பிரச்சனையை கையாளும்படி இதைக் குறித்தே பேசுவது அல்லது இந்த பிரச்சனைக்கு அன்போடு தீர்வு காண்பதற்கு பதிலாக புறங்கூறி குற்றம் சாட்டுகிறவர்களாய் இருக்கிறோம்.

இரண்டாவது, உறவுகளின் பிரச்சனையை விவரிக்கும் போது, பெயரளவில் உள்ள பிரச்சனையை செயல்வடிவில் மாற்றுகிறோம். வேறு வார்த்தையில் கூறுவோமாகில், அவன்.˙. அவள் முட்டாள் என்று எளிதாய் கூறிவிடுவோம். இவ்வாறு அந்தநபரை முத்திரை இடுவதாலே அந்த பிரச்சினை தீர்ப்பதற்கு மேலும் கடினமானதாக மாறி விடுகிறது. அந்த நபரின் செய்கையை ஆராய்வதற்கு பதிலாக அது நம்மை எப்படி பாதிக்கிறது என்று கூறுகிறது.

மூன்றாவதாக, இது/அது என்று தரம் பிரிப்பதில் ஜாக்கிரதையாய் இருப்போம். இன்னாள் முட்டாள் அல்லது மூடன் என்று கூறுவது எந்த நன்மையையும் ஏற்படுத்தாது. நாம் நமக்கு சரி என்று படுவதையே கூற விரும்புவோமாயின் அந்த பிரச்சனையைத் தீர்க்கும் தகுதியை இழந்து விடுகிறோம். வெற்றி ∴ தோல்வி என்ற சூழ்நிலை பொதுவாக பிரச்சனைக்கு உரிய இரண்டு நபர்களுமே இழப்பை ஏற்க நேரிடும் என்ற அர்த்தம் ஆகும்.

நான்காவதாக, நம்முடைய எல்லா உறவு பிரச்சனைக்கும் நாம் ஒவ்வொருவருமே நூறு சதவீதம் பொறுப்பாகும். இவ்வாறு கூறுவது அதிர்ச்சிக்குரிய காரியமாய் உங்களுக்கு தோன்றலாம். ஆனால் இதுவே உண்மை. முதலாவது முறை இந்த காரியத்தை நான் கேள்விப்படும்போது நான் அதிர்ச்சி அடைந்தவனாய் காணப்பட்டேன். என்னுடைய நண்பனும், அவனது மனைவியும் மிகக் கடினமான பிரச்சினையின் வழியாக கடந்து சென்றனர். நான் என் நண்பனோடு இருந்து அவன் கூறுவதை கவனமாய் கேட்டு உதவி செய்ய முயற்சித்து அதிக நேரம் அவனோடு செலவழித்தேன். 'அந்த மனிதன் அந்த பிரச்சனைக்கு நூறு சதவீதம் பொறுப்பு ஏற்கத் துவங்காதவரை அவன் மனைவியோடு உள்ள பிரச்சனையை தீர்க்க முடியாது' என்று என் மனைவி கூறியபோது அதிர்ச்சி அடைந்தேன். உடனே நான் என் நண்பனை காக்கும் விதமாய் அவனுடைய மனைவியின் பிரச்சனைக்குரிய பகுதிகளை வேகமாய் கூறத் துவங்கினேன். அந்த உறவு பிரச்சனைக்கு அவன் மனைவியும் நூறு சதவீதம் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று என் மனைவி கூறினாள்.

நம்முடைய உறவில் உள்ள பிரச்சனைகளை 50 / 50, அல்லது 60 / 40 அல்லது 70 / 30 என்று நாம் பிரித்து ஒவ்வொரு முறையில் இதற்கான பொறுப்பை வகையறுக்கிறோம். உண்மையில் உறவு கணக்கு என்பது பொதுவாக, 100 / 100. கர்த்தர் கூறிய ஆலோசனையில் படி பாதி வழி மட்டும் செல்வது உறவு பிரச்சனையை தீர்க்காது. நம்மில் ஒவ்வொருவரும் பிரச்சனைக்கான முழு பொறுப்பை ஏற்க வேண்டும். ஏனென்றால் நம்மை நாமே மாற்ற நம்மால் மட்டுமே முடியும். நம்முடைய துணைவர், குழந்தைகள், நண்பர், அல்லது யாருக்காவது உதவி செய்ய விரும்பினால் பிரச்சனையுள்ள இடத்தில் சென்று கிரியை செய்ய வேண்டுமே ஒழிய பிரச்சனைக்கான அடையாளத்தை தேடிச் செல்லக் கூடாது. உங்களை மாற்றிக்கொள்ளும் உண்மையான வல்லமை உங்களிடம் மாத்திரமே உள்ளது என்பதை நீங்கள் திரும்பத்திரும்ப உணர வேண்டும். நம்மிடம் குறையை வைத்துக்கொண்டு மற்றவர்களிடம் நல்ல உறவை எதிர்பார்க்க முடியாது. உங்கள் வாழ்க்கையில் அதிக அன்பை எதிர்பார்ப்பீர்களாகில் கர்த்தரோடுள்ள உறவிலும், உங்களுடைய குணத்தையும் மேன்படுத்த வேண்டும். மற்றவர்களோடு உள்ள அன்பில் குறைவுபடுவீர்களாகில் பொதுவாகவே உங்கள் வாழ்வு சோர்வில் முடியும்.

சுய விருப்பம் என்ற கோட்பாடு பெருமை மற்றும் வெறுமை என்பதோடு அடிக்கடி குழப்பத்தை உண்டுபண்ணும். நம்மையே நேசிப்பது சுயநலம் என்பதை நாம் சிந்திப்போம். உண்மையில் இது சுயநலமல்ல. நம்முடைய வெறுமையை மற்றவர்கள் நிறைவாக்க வேண்டும் என்று எண்ணி நம்மை நாம் நேசிப்பது இல்லை. உங்கள் உறவுகளைக் குறித்து சிறப்பாய் சிந்திப்பதைக் காட்டிலும் முதலாவது உங்களை நீங்கள் சிறந்தவராய் சிந்திப்பது மிகவும் முக்கியமானதாகும். நாம் கர்த்தரோடுள்ள உறவிலேயே மற்றவரோடு உள்ள உறவு துவங்குகிறது. நம் மூலமாகவே கிறிஸ்து வெளிப்படுகிறார். நமக்குள்ளேயே கிறிஸ்து வாசம் செய்கிறார். ஒருவரோடொருவர் உள்ள அன்பு இதனாலேயே விடுதலையோடு உணர முடிகிறது. துரதிஷ்டவசமாக நாம் உலகம் அல்லது மற்றவரிடமிருந்து சமாதானம், பாதுகாப்பு, அன்பு ஆகியவற்றை எதிர்பார்க்கிறோம். நமக்குள் வாசம் செய்யும் கர்த்தரின் ராஜ்ஜியத்தில் இருந்து மட்டுமே அது வருகிறது.

உறவுகளின் முக்கியத்துவத்தை உணருவோம்

சீன மொழியில் குறிகளாலேயே முழு வார்த்தைகளும் எழுதப்படும். இரண்டு தனி குறிகளைக் காட்டிலும் இரண்டு குறிகள் இணைந்து வேறொரு வித்தியாசமான அர்த்தத்தை உண்டுபண்ணும். உதாரணமாக, 'மனிதன்' மற்றும் 'மனுஷி' என்பதற்கான இரண்டு குறிகள் இணைந்து 'நன்மை' என்ற அர்த்தமுள்ள வார்த்தையை உண்டு பண்ணும். அதேபோல 'பிரச்சனை'மற்றும் 'நெருக்கம்' என்ற இரண்டு குறிகளை எடுத்துக் கொள்வோம். அவை இணைந்து 'வாய்ப்பு' என்ற அர்த்தத்தை உண்டு பண்ணும். நம் வாழ்க்கைக்குரிய பதில் கேள்வியிலேயே அடங்கி இருப்பது போல பிரச்சனையிலேயே அதற்குரிய வாய்ப்பும் அடங்கி இருக்கும்.

சிலமக்கள் தங்களை சுற்றியுள்ள மக்களிடையே உள்ள உறவில் அன்பும் பலமும் உள்ளவர்களாய் இருப்பார்கள். அதுவே அவர்களுடைய வாழ்க்கையை ஆதரிப்பதாயும், மேம்படுத்துவதாயும் இருக்கும். ஏற்கனவே அவர்கள் கொண்டிருக்கும் உறவை மேம்படுத்த ஏற்ற சந்தர்ப்பத்தை கண்டு பிடிப்பதில் ஆர்வம் உடையவராய் இருப்பர். மற்றவர்கள் தங்களுடைய தொடர்புகளில் வீழ்ச்சி உருவாகும் சூழ்நிலையில் தங்கள் வாழ்க்கையின் முக்கியமான உறவுகளினால் உடைக்கப்படுகின்றனர். அதாவது அவர்களது குடும்பங்களில், உறவுகளில் பிரச்சனை வரும் நேரங்களில் உடனே நான் உணர்வடைந்து என்னை நானே அறிக்கை செய்கிறேன். நாம் நேர்மையாய் இருந்தால் நாம் எல்லா உறவையும் உடையவர்களாய் இருப்போம். உறவுகள் நம் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த உயர்வைத் தருகிறதாய் இருக்கிறது. அதோடு அது மிகவும் வேதனை தருவதாயும் இருக்கிறது. உறவுகளுக்கிடையே பிரச்சனை வரும்போது அது நம் வாழ்க்கையில் குழப்பத்தையும், வேதனையையும் உண்டாக்ககுகிறதாய் இருக்கிறது.

ஆதியாகமத்தில், தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். அது அப்படியே ஆயிற்று. தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன் நீந்தும் ஜீவஜந்துகளையும், பறவைகளையும் ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். கர்த்தருடைய பார்வைக்கு அது நன்மையாக காணப்பட்டது. பின்பு கர்த்தர் பூமியிலே ஜீவராசிகளை உண்டுபண்ணினார். அதுவும் அவர் பார்வைக்கு நன்மையாய் இருந்தது. இறுதியாக கர்த்தர் தம் சாயலாகவே மனிதனை உண்டு பண்ணினார். ஆனால் அது கர்த்தரின் பார்வைக்கு விசனமாய் இருந்தது. இது உங்களில் சிந்தனையை தூண்டலாம். கர்த்தர் எல்லாவற்றையும் நன்மையாய் செய்தவர் ஏன் இதை இவ்வாறு செய்தார்? என்று நினைக்கலாம். ஆதி. 2:18ல் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

நாம் உறவுகளுக்காகவே உருவாக்கப்பட்டோம் என்பதை நான் இதிலிருந்து உங்களுக்கு கூற முடியும். நாம் ஒருவருக்காக ஒருவர் உருவாகக்கப்பட்டு, ஒருவருக்காக ஒருவர் வளர்க்கப்பட்டு, ஒருவருக்காக ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டு ஒருவரையொருவர் நேசிக்கிறவராய் இருக்கிறோம். ஆனால் இது எளிய காரியம் அல்ல. நம் உறவுகளோடு இணைந்து இருக்க நம்மை வற்புறுத்த வேண்டும். நல்உறவை ஏற்படுத்தி மகிழ நாம் சிறந்த முயற்சி ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு நமக்குள் நல்உறவு ஏற்பட நம் ஒவ்வொருவரிடையே உள்ள பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். இந்த நோக்கில் நான் சில ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

குற்றப்படுத்தாதே

மற்றவர்களை குற்றப்படுத்தும் மனிதர்களுக்கு மாத்திரம் என்னால் எந்த உதவியும் செய்ய முடியாது. மற்றவர்களை நாம் குற்றப்படுத்தும்போது அந்த பிரச்சனையை மிகவும் கடினமாக்கி அதற்கு தீர்வு காண முடியாதபடி செய்கிறோம். நம் வாழ்க்கையில் பிரச்சனை என்பது தவிர்க்க முடியாதது. அவ்வாறு பிரச்சனை ஏற்படும்போது நாம் மற்றவர்களையும் நம்மை நாமே அல்லது கடவுளை குற்றப்படுத்தும் சோதனையை விட்டு விலக வேண்டும். பிரச்சனையில் கவனம் செலுத்த வேண்டுமே ஒழிய பிரச்சனைக்குரிய நபரின் மீது கவனம் செலுத்தக்கூடாது. பிரச்சனையை ஆராய்ந்து பார்ப்போம். தோல்விகளை ஒப்பிடும்போது மற்றவர்களை மன்னித்து நம்மை நாமே அறிக்கை செய்வோம். பிரச்சனையை நேர்மையாய் எதிர்கொண்டு அதை மேற்கொள்வோம்.

தடுப்போம் அல்லது கற்றுக்கொள்வோம்

உறவுகளிலுள்ள பிரச்சனைகளினால் சண்டை உருவாகாது. பிரச்சனையை தீர்ப்பதற்கு பதிலாக அதை எப்படி நாம் எதிர்கொள்கிறோம் என்பதை பொறுத்தே சண்டை உருவாகும். நாம் சண்டை சச்சரவுகளை எதிர்கொள்ளும்போது அதற்கு பதில்வினை செய்வதை நாம் இரண்டு வழிகளில் தெரிந்துக் கொள்ளலாம். ஒன்று அந்த பிரச்சனையை தடுக்கலாம். அல்லது அதிலிருந்து கற்றுக்

கொள்ளலாம். அந்த பிரச்சனையை தடுக்க முயற்சிக்கலாமா அல்லது எதையும் கற்றுக் கொள்ளலாமா என்பதை நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். பிரச்சனையை கலகத்தைப் போல் பார்க்காமல் அதைப் புது வெளிச்சத்திற்குள் கொண்டு வந்து ஒரு வாய்ப்பைப் போல் கருதுவோமா. இது மிகவும் மோசமான தீர்க்கமுடியாத ஒன்றாக சிந்திக்காமல் உணர்வுகளில் ஏற்படும் காயங்களை விருப்பமாய் ஏற்றுக்கொள்வோம். ஆம், இது நமக்கு ஒரு உணர்வை உண்டாக்கும். மற்றவர்கள் மேல் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி விட்டு நாமே அதற்கு பொறுப்பேற்கும் போது மாற்றங்கள் ஏற்பட முடியும். அந்த பிரச்சனையை பெரிதாக்கமால் தடுக்கும் வரை நம் உறவுகளில் ஏற்படும் பிரச்சனையை தீர்ப்பது என்பது எப்போதும் தோல்வியில் முடியும் நம்மை நாம் கற்றுக்கொள்ளக் கூடியவர்களாய் திறந்த மனதுடையவர்களாய் ஒப்புக்கொடுக்கும்போது பிரச்சனைகளும் தீர்க்கப்படும் நமது வாழ்வும் மாற்றமடையும்.

உண்மையான பிரச்சனையை கையாளுதல்

மேற்கத்திய உலகம் மிகவும் குறுகிய வட்டத்திற்குள் வரையப்பட்டுள்ளது. பிரச்சனையை ஆராய்வது, தீர்வு காண்பது, இலக்கை நிர்ணயிப்பது, தீர்மானம் எடுப்பது, காரியங்களை ஒழுங்கு செய்வது ஆகியவனவாகும். நமது துணை, குழந்தைகள் ஆகியவற்றை நம்மை நாமே நிர்ணயிப்பது, இவற்றில் ஏதோ ஒன்று நமக்கு விருப்பமாய்க் காணப்படாதபோது அதை நாம் நியாயம் தீர்த்து அவற்றைப் புரிந்து கொள்வதற்கு பதிலாக அவற்றை மாற்ற விரும்புகிறோம். அந்த பிரச்சனை ஏன் எப்படி உருவாயிற்று என்பதை அறிந்துகொள்வதற்கு பதிலாக அதற்கு உடனடி தீர்வுகாண விரும்புகிறோம். இதனாலே அநேக பிரச்சனைகளுக்கு நம்மால் தீர்வுகாண முடியவில்லை. அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதும் இல்லை. பிரச்சனையை எதிர்கொள்வதைக் காட்டிலும் அதற்கு ஒளிந்து கொள்வது எளிதாய் இருக்கிறது. பிரச்சனையை தவிர்ப்பதினால் அதற்கு தீர்வு எப்போதும் ஏற்படப்போவதில்லை. உறவுகளின் பிரச்சனையை தீர்ப்பதற்கென்று 'குறிப்பிடத்தக்க நேரம்' என்று எதுவும் இல்லை. இப்போதே உங்கள் பிரச்சனையை கையாளுங்கள். அதற்கென்று காத்து இருக்க வேண்டாம். வேதம் கூறுகிறது, சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாக உங்கள் கோபம் தணியக்கடவது. நமக்கு பிரச்சனைகள் வரும்போது, அதற்கென்று நேரம் ஒதுக்கி, அதை சரியான விகிதத்தில் கலந்தாலோசிக்க வேண்டுமென்று உணர்ந்து கொள்ளுங்கள். பிரச்சனை பெரிதாகுவதற்கு முன்பாக அந்த பிரச்சனைக்குரிய நபரோடு நேரம் செலவழிந்து உங்களுடைய உணர்வுகள் தற்சமயம் உண்டான பிரச்சனை என்ன என்பதைப் பேசி சரிசெய்து கொள்வதே சிறந்த வழியாக நான் கருதுகிறேன்.

கவனித்தல்

நே - ர - ம் என்ற மூன்று எழுத்தை உச்சரிப்பதிலேயே அன்பு அடங்கி இருக்கிறது. நீங்கள் ஒருவர்மேல் அக்கரையாய் இருப்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தும் வழி அவர்களோடு நேரம் செலவழித்து, அவர்கள் கூறுவதை கவனிப்பதே ஆகும். கர்த்தடைய அன்பை வெளிப்படுத்தும் சிறந்த வழிகளில் ஒன்று மக்கள் கூறுவதை கவனித்து கேட்பதாகும். ஜெபக்குழு தலைமைத்துவத்தின் தரத்திற்குரிய திறவுகோல் கவனித்து கேட்பதாகும். மக்கள் தாங்கள் கூறுவதை ஒருவர் கவனித்துக் கேட்கும்போது அவர்கள் சந்தோஷ உணர்வு அடைகின்றனர். அவர்கள் தாங்கள் கூறியதை கவனித்து கேட்டதில் திருப்தியாய் உணரும்போது அந்த ஜெபக்குழுவிற்கு வரும் நாட்களிலும் கலந்துக் கொள்ள விரும்புவார்கள் என்பதை நாம் வாக்களிக்க முடியும். இதை மிகச் சரியாய் கூறுவோமாகில் ஜெபக்குழு கூட்டம் என்பது வேதாகம வகுப்பு அல்ல, இது தலைவர்கள் பேசுவதற்குரிய நேரமும் அல்ல. கவனித்துக் கேட்பதற்குரிய நேரம் ஆகும். ஒரு சிறந்த தலைவர் மற்றவர்கள் பேசுவதை உற்சாகப்படுத்தி அவர்களை திருப்தியாகவும் நிறைவாகவும் உணரச் செய்வார்.

<u>தொடர்பு கொள்வதே வெற்றிக்கான வழியாகும்.</u>

தொடர்பு என்ற வார்த்தை லத்தின் மொழியில் 'கம்யூனஸ்' என்ற மூலப்பெயரிலிருந்து வந்தது. இதன் அர்த்தம் ஏதோ ஒன்றை பொதுவாக கொண்டிருப்பது என்பதாகும். ஒருவர் கூறுவதை கவனித்து கேட்கமுடியாத நிலையை உடைத்து வருவதே தொடர்பு கொள்ளுதலாகும். மிக நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்பாக அறிந்து கொண்டது, தம்பதிகள் பிரிவினைக்குரிய மிகப்பெரிய காரணம் ஒருவருக்கொருவர் நேர்மையாய் இருக்க முடியாததும், அவர்களுடைய ஆத்துமாவில் உள்ளதை பெற்றுக்கொள்ளாததும், அவர்களை ஒருவரையொருவர் சிறந்த நண்பர்களாய் கருதாததுமே ஆகும்.

ஆச்சரியமாக, தொடர்பு கொள்வதில் மிக முக்கியமான காரியம் **கவனித்து கேட்பதாகும்**. தம்பதிகள் தங்கள் திருமண வாழ்க்கையில் முதல் வருடத்தில் ஒரு நாளில் 70 நிமிடங்கள் ஒருவரோடொருவர் பேசி கருத்தை பகிர்ந்து கொள்கின்றனர். 2ம் வருடத்தில் அது 30 நிமிடங்களாக குறைக்கப்படுகின்றது. 4ம் வருடத்தில் அது 15 நிமிடங்களாக மாத்திரம் மாறி விடுகிறது. 8ம் வருடத்தில் கணவனும், மனைவியும் மிக அரிதாக சிறு வார்த்தைகளை மட்டும் பேசி மற்ற நேரங்களில் கிட்டத்தட்ட அமைதி நிலைக்கே மாறி விடுகின்றனர் என்று அந்த துறையிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தகவல் பரிமாற்றம் என்பது வார்த்தையைக் காட்டிலும் அதிகமானது. அதிகாரத்திலுள்ள ஒருவர் கூறுகிறார் ஒருவரோடு நாம் தொடர்புக் கொள்ளும்போது ஏழு சதவீதம் வார்த்தை மாத்திரமே அதில் அடங்கி உள்ளது மேலும் 38 சதவீதம் நாம் சரீர அசைவுகளினாலும், முகபாவனைகளாலும் மற்ற 55 சதவீதம் நம்முடைய சத்தத்தின் ஏற்ற இறக்கங்களினாலும் பரிமாறிக்கொள்கிறோம்.

நீங்கள் ஒருவரை நேசிக்கிறீர்கள் என்பதை அவருக்கு விளங்கச்செய்ய மிகவும் தெரிந்துக்கொள்ளப்பட்ட வழி அவர்கள் கூறுவதை கவனித்து கேட்பதாகும். மற்றவர்கள் வாழ்க்கையில் நாம் ஒரு மாற்றத்தை உண்டுபண்ண கவனித்து கேட்பது மட்டுமே மிகவும் போதுமானது என்பது ஆச்சரியத்துக்குரிய ஒன்றாகும். மற்றொரு மனிதருடைய பிரச்சனையை உண்மையாக கவனித்து கேட்பது அதன்மேல் அக்கறை கொள்வது மற்றும் அவர்களை புரிந்து கொள்வதென்பது கடினமான ஒன்றாகும். எந்த மனிதனும் இந்த உலகத்தில் விடுதலையோடு தாங்கள் குறைந்தது ஒருவராலே மட்டும் புரிந்து கொள்ளப்பட்டோம் என்று கூறுவது அரிதானது. நம்முடைய உலகத்திலுள்ள எல்லா உரையாடல்களையும் கணிக்கும்போது அவைகள் தேசங்களைக் குறித்தும், தம்பதிகளைக் குறித்துமே இருக்கிறது. அநேக நேரங்களில் இதன் உரையாடல்கள் செவிகொடுத்து கேட்கப்படாமலே இருக்கிறது.

நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம் நாம் இந்த பிரச்சனையை புரிந்துக் கொண்டு இதைத் தீர்க்கமுடியும் என்பதே ஆகும். துரதிஷ்டவசமாக உண்மையிலேயே பிரச்சனை என்ன என்பதை நாம் போதுமான அளவு கவனித்து கேட்காததாலே நம்மால் அந்த பிரச்சனையை தீர்க்க முடியவில்லை. கவனித்து கேட்பதற்கு பதிலாக நாம் எளிதில் வேறு பேச்சிற்கு கவனத்தை செலுத்தி விடுகிறோம். நாம் கூர்ந்து கவனிப்பதில் வல்லமையாய் இருக்க அந்த காரியத்திற்கு எதிர்பலன் அளிப்பது அல்லது அதற்கு மறுஉத்தரவு அளிப்பதை சற்றுநேரம் தள்ளிப்போட வேண்டும். கவனித்து கேட்பதின் நோக்கம் முதலாவது நீங்கள் இருவரும் அந்த சூழ்நிலையை மிகச் சரியாக புரிந்து கொள்ள அனுமதிப்பதாகும். கவனித்து கேட்பதாலேயே அந்த மக்கள் தங்களை விசேஷத்தவர்களாக உணருவார்கள்.

மக்களோடு நான் பணிபுரிந்து அவர்கள் நிலைவரப்பட உதவிசெய்யும்படியாக நான் கண்டுபிடித்த இந்த மூன்று கேள்விகளும் அவர்கள் பெற்றோரிடமிருந்து விடை பெறத்தக்க மூன்று கேள்விகளாகும்.

1. நேசிக்கப்படுதல் என்றால் என்ன என்று நீங்கள் அர்த்தம் கொள்ளுகிறீர்கள்?
2. நேசிக்கப்படுதல் என்றால் என்ன என்று நீங்கள் உணருகினறீர்கள்?
3. நீங்கள் என்னிடம் கேட்பது என்ன?

மக்கள் அன்புகூறப்பட்டு வேண்டியதின் அவசியத்தின் வழிமுறைகளை 7 நிலைகளில் இது பிரதிபலிக்கச் செய்தது.

1. பாதுகாப்பு உணர்வு
2. சாதகமான உணர்வு
3. ஆதரவான உணர்வு
4. யாரோ ஒருவருக்கு உரியவராய் இருத்தல்
5. தங்கள் மேல் அக்கறை கொள்ளப்படும் உணர்வு
6. ஏற்றுக் கொள்ளப்பட்ட உணர்வு
7. விசேஷித்தவர்கள் என்ற உணர்வு

இது உங்கள் துணைவரிடம் கிரியை செய்யுமாயின் இது உங்கள் ஜெபக்குழு அமைப்பிலும் நீங்கள் உதவி செய்கிறவர்களாய் இருப்பீர்கள். ஒவ்வொருவரும் தாங்கள் அன்பு கூறப்படுவதையே

விரும்புவர். அவர்கள் கூறுவதை கவனித்துக் கேட்பதன் மூலம் மட்டுமே அவர்கள் ஆதரிக்கப்பட்டவர்களாய், அக்கறை கொள்ளப்பட்டவர்களாய், ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாய் மிகவும் விசேஷமானவர்களாய் உணர்வார்கள் என்பதை நான் நம்புகிறேன். கவனிக்கும் செயல்முறை என்பது மிகவும் கருத்தாய், பொறுப்பாய், நிலையாய் கூர்ந்து அவர்கள் கூறுவதை கவனிப்பதாகும். இதன் அர்த்தம் வெறும் காதுகளால் மாத்திரம் கேட்பதல்ல. நமது சிந்தனையிலும் கேட்பதே கவனித்துக் கேட்பதாகும். நாம் கூறுவதை ஒருவர் கவனித்து கேட்கும்போது, அது நமக்கு தொடர்ந்து அவர்களிடம் சுதந்திரமாக நமது காரியங்களை வெளிப்படுத்தவும், ஆழமாக நாம் யார் என்றும் நமது பிரச்சனை என்ன என்பதையும் பகிர்ந்து கொள்ளவும் உதவும். கவனமாக கவனித்துக் கேட்பதே அன்பின் வெளிப்படாகும்.

ஆக்கப்பூர்வமான கேள்விகளை வரைதல்

நமது கவனிக்கும் திறனை சில கேள்விகள் கேட்பதன் மூலம் பெருக்கிக் கொள்ள முடியும். உதாரணமாக:

- உங்கள் கனவு என்ன அல்லது நீங்கள் இரகசியமாக வைத்திருப்பது என்ன?, உங்களை யாரும் உற்சாகப்படுத்தாததால் நீங்கள் அதை வெளிப்படுத்த வில்லையா அல்லது பயத்தினாலா?
- இந்த உலகில் வெற்றிக்கு ஏதுவாய் உங்களால் ஏதாகிலும் செய்ய முடியுமாகில் உங்களால் என்ன செய்ய முடியும்?
- நம்முடைய அனுதின தொடர்பை மேம்படுத்தும்படி செய்ய வேண்டிய 3 குறிப்பிடத்தக்க வழிகள் என்ன? நம்முடைய தொடர்பில் எங்கு நாம் பலப்பட முடியும்? எங்கு நாம் கடினமாய் உணருகிறோம்?.

நம் குழு அமைப்பில் இத்தகைய கேள்விகளுக்கு ''பணி உடைப்பாளர்கள்'' என்று பெயர். கேள்வி யாருக்காக கேட்கப்பட்டதோ அவர்கள் பேச ஆரம்பித்த உடன் மற்றவர்கள் அதை கூர்ந்து கவனிக்க வேண்டும். நல்ல கேள்விகளின் வரிசை என்பது முடிவற்றது. நம்முடைய உறவுகளை ஆழப்படுத்த இவ்வாறு கேள்வி கேட்பது அவசியமாய் இருக்கிறது உண்மையிலேயே நல்ல கேள்விகள் மக்களை தங்களை தாங்களே அறிந்து கொள் உதவியாய் இருக்கும்.

உறவுகளின் பிரச்சனை மேற்கொள்ள ஏழு படிகள்

1. <u>பிரச்சனைகளிள் காரணராய் ஏற்றுக்கொள்ளுங்கள்.</u>
   பிரச்சனைக்குரிய காரணர் மற்றவர் என்று நீங்கள் நம்பி இருந்தாலும், உறவுகளின் மேல் அக்கறை கொண்டு பிரச்சனையின் காரணராய் நீங்கள் மாறி விடுங்கள். பிரச்சனைகளின் காரணராய் உங்களை ஏற்றுக்கொள்ளும்போது உங்கள் நேரத்தை அதற்கென்று விருப்பமாய் ஒதுக்கி, அதை திறமையாய் உங்கள் பிரச்சனைக்கு தீர்வை காண்பீர்கள்.

2. <u>பிரச்சனையை ஆராய்ந்து பாருங்கள்</u>
   பிரச்சனையை தவிர்த்து அதிலுள்ள மற்ற காரியங்களை ஆராய்ந்து பாருங்கள். இவ்வாறு செய்வதின் அர்த்தம் அதற்குள் மறைந்துள்ள எண்ணிக்கைக்கு அடங்காத குழப்பங்களில் அதே நேரத்தில் உங்களால் கவனம் செலுத்த முடியும். உணர்வுப்பூர்வமாவதை தவிர்த்து, தாராள மனப்பான்மையோடு உங்கள் கற்பனைக்கு சவால் விடும் துணை கேள்விகளை கேட்டுக்கொள்ள இதுவே சரியான நேரம்.

3. <u>நீங்கள் அறிந்த சிறந்த வார்த்தையின் மூலமாக பிரச்சனைக்கு விளக்கம் அளியுங்கள்.</u>
   அனைவரும் ஏற்று, குறிப்பெடுத்துக் கொள்ளதக்கதான நன்கு கிரியை செய்யும் விளக்க உரைகளை மேம்படுத்துங்கள். உண்மையான பிரச்சனையிலிருந்து அதன் அடையாளங்களை பிரித்து எடுப்பது மிகவும் கடினமானது. சாதாரண விமர்சனத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அடையாளங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு போராடுபவர் அந்த பிரச்சனையோடு மல்லுகட்ட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இதனால் அவர் உண்மையான பிரச்சனையை மறைக்கிறவராய் இருக்கிறார். அவர் கற்பனையான அடையாளத்தோடு போராடுவதை நிறுத்த நீங்கள் முயற்சிக்காமல் அவர் உண்மையான பிரச்சனையை உணர்ந்து கொள்ள நீங்கள் உதவிசெய்யுங்கள். இதுவே பிரச்சனையை தீர்ப்பதற்கான வழியாகும். கோபமும், சுய பச்சாதாபமும் சோர்வுக்கான

வெளிப்படாகும். சோர்வினால் கோபம் உண்டாகிறது. கோபத்தினால் சுய பச்சாதாபம் உண்டாகும். நாமும் கோபம் அல்லது சுய பச்சாதாபமாய் செயல்படாமல் அவன் ∴ அவளுடைய சோர்வுக்கான காரணத்தை கவனித்துக் கேட்க வேண்டும்.

4. மனக்குழப்பம்

தீர்வுக்கான இத்தகைய நேரத்தில் தீர்வுக்கான நேர்மறையான காரணங்கள் என்னென்ன உண்டு? எந்த நேரத்திலும் உங்களால் வேடிக்கையாய் பேசக்கூடுமாகில் நீங்கள் உங்கள் யோசனையில் அளவை மாத்திரம் அல்ல தரத்தையும் மேம்படுத்துகிறவர்களாய் இருக்கிறீர்கள். மற்றவர்களை கூர்ந்து கவனிக்கத்தக்க வாய்ப்பாய் இதை எடுத்துக் கொள்ளுங்கள். சில வித்தியாசமான ஆலோசனையை அளிப்பதின் மூலம் சில நேரங்களில் நாம் பிரச்சனைக்கு பொறுப்பேற்க வேண்டிய அபாயத்திற்குள்ளாகிறோம். மாற்றங்கள் ஏற்படுவதை நீங்கள் விரும்புவீர்களாகில் நீங்கள் பக்க வழிகளில், பின் வழிகளில், சுற்று வழிகளில் மற்றும் மேலும், கீழும் விருப்பத்தோடு சிந்திக்க வேண்டும். நீங்கள் எப்போதும் சிந்திக்கும் முறையை நீங்கள் எல்லைக்குட்படுத்தி சிறு சவாலோடு சிறு மாற்றங்களை ஏற்படுத்துவதின் மூலம் பிரச்சனைக்கான தீர்வுகளை மேம்படுத்த முடியும்.

5. சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளதக்க செயல்பாடுகளைத் தேர்ந்தெடுங்கள்.

நீங்கள் ஏன் இந்த தீர்வை சிறந்ததாக நம்புகிறீர்கள் என்பதை தெளிவாக விவரிக்கும் திறமை என்பது இதில் முக்கியமாகும். இந்த திட்டம் சிறந்தது என்று நீங்கள் அறிந்திருந்தால், எப்போது, எதனால் இந்த திட்டம் கடினமாக்கப்படக்கூடும் என்பதையும் விளக்கிக் கூறவேண்டும்.

6. செயல்படுத்துதல்

உங்கள் செயலை நீங்கள் திட்டமிட்ட பின் உங்களுடைய திட்டத்திற்கென்று இப்பொழுது நீங்கள் செயல்பட வேண்டும். நன்கு கட்டப்பட்ட உறவில் மிகச்சிறந்த சந்தோஷம் என்னவெனில் அன்போடு செயல்புரிவதாகும். நம் எஜமானிடமிருந்து வரும் கிருபையின் வழிகளை நாம் ஞாபகத்தில் கொள்வோம். உங்கள் செயலை ஜெபத்தில் குளிப்பாட்டி இதை செயல்படுத்த வேண்டும்.

7. மதிப்பீடு

உங்கள் பிரச்சனையிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய வாய்ப்பு இதுவாகும். ஒருவேளை இந்த தீர்வு தோல்வியாய் இருந்தாலும் நீங்கள் அதிலிருந்து ஒன்றை கற்றுக்கொள்ள முடியும். என்ன கற்றுக்கொண்டீர்கள், எப்படி கற்றுக்கொண்டீர்கள் என்பதின் மூலம் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளுதலிலும், உற்சாகப்படுத்தலிலும் இன்னும் ஆழமான நிலைக்கு நகர்ந்து செல்ல உங்களை அனுமதிக்க முடியும்.

உணர்வுகளில் ஏற்ப்டும் பிரச்சனை செயல்முறை வடிவானது. இதற்காக எப்போதும் நாம் ஏதோ செயல்படுவதாய் இருந்தாலும் இத்தகைய தொழில்முறையின் மூலம் உங்கள் பிரச்சனையை மேலும் ஆராய்ந்து அதற்கு ஆரோக்கியமான அன்பான தீர்வுகளை உங்களால் ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும். உங்கள் ஜெபக்குழு வடிவமைப்புக்கென்று இந்த எல்லா தொழில்முறைகளையும் நான் பரிந்தளிக்கவில்லை. குழுக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு தனிப்பட்ட முறையில் இந்த செயல்முறைகளில் சில பிரச்சனையை தீர்க்க சிறந்ததாய் இருக்கும். மாறுபட்ட பாலினரிடையே நட்பைக் கொண்டு வருவது அவசியம் என்பதை மாத்திரம் நினைவில் கொள்ளுங்கள்.

பிரச்சனையின் வெப்பத்தில் நாம் எளிதில் நாம் உறவின் குறிக்கோளை மறந்து விடுவோம். புரிந்து கொள்ளப்படவேண்டும் அல்லது புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதைக் காட்டிலும் எது சரி என்பதற்காய் நடந்து கொள்வது எளிதாய் இருக்கும். இத்தகைய கோட்பாடு உறவுகளின் பிரச்சனையை கட்டுவதற்கு உதவியாய் இராமல் பிரச்சனையை எதிர்ப்பதற்கும் உதவியாய் இருக்கும். அளவற்ற அன்பின் வல்லமையை நம்மால் அசட்டை செய்ய முடியாது. கர்த்தர் அன்புடையவர், அவர் அன்போடு நம்மோடு வாசம் பண்ணுகிறார், நாம் கர்த்தரோடு இருக்கும்போது அவர் நமக்குள் வாசம் செய்கிறார். இந்த அன்பு நம்மை பயமற்றவர்களாய் மாற்றுகிறது. எங்கு பயம் இல்லையோ அங்கு உண்மையான புரிந்து கொள்ளுதல் இருக்கும்.

கர்த்தருடைய அன்பின் வல்லலைமை நாம் புரிந்துகொள்ளாமலோ நம்மால் தவிர்க்கவோ முடியாது. இது நம் உறவுகளில் வெளிப்படையான அர்த்தத்தை உண்டாக்கும்படி எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் தேவையான மிக முக்கியமானது அன்பாகும். இந்த அன்பு பயத்தை புறம்பே தள்ளும், அநேக பாவங்களை மூடும். அன்பு மேற்கொள்வதில் எந்த கடினமும் இல்லை. போதுமான அன்பினால் குணப்படுத்த முடியாத வியாதி ஒன்றும் இல்லை. அன்பு முழுவதும் வெளியரங்கமானது. போதுமான அன்பினால் திறக்கப்படாத கதவுகள் ஒன்றும் இருக்காது. போதுமான அன்பினால் பாலம் இடமுடியாத வளைகுடாக்கள் ஒன்றும் இருக்காது. போதுமான அன்பினால் தகர்க்கப்படமுடியாத சுவர் ஒன்றும் இருக்காது. போதுமான அன்பினால் விடுவிக்க முடியாத பாவம் ஒன்றும் கிடையாது. பிரச்சனை எவ்வளவு ஆழமாய் இருந்தாலும் அல்லது எவ்வளவு சிக்கலில் இருந்தாலும் அல்லது மிகப்பெரிய தவறாய் இருப்பினும் போதுமான அன்பினால் எல்லாவற்றையும் தீர்க்கமுடியாதபடி கடினமானது ஒன்றுமில்லை. நம்முடைய உறவுகளின் மையமாய் அன்பு நிறைந்த கர்த்தரைக் கொண்டு வரும்போது நம்மால் மறுரூபமடைய முடியும் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மாற்றத்தை உண்டுபண்ணும் வல்லமையை அவர் நமக்குத் தருவார்.

நம்முடைய ஜெபக்குழுவை இந்த செயல்முறையில் கொண்டு வருவதன் காரணம் நம் சபையை பெரிதாக்குவது அல்ல. கர்த்தருடைய அன்பை சிறப்பாய் வெளிப்படுத்துவதாகும். வல்லமை வாய்ந்த சபை அமைப்பைக் காட்டிலும் சிறு ஜெபக்குழு சிறப்பாய் கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்த முடியும். ஏன் என்றால் யாரோ ஒருவர் பேசுவதை எல்லோரும் கேட்பதற்கு பதிலாக ஒவ்வொருவரும் பேசுவதற்கும், அதைக் கருத்தாய் கவனிப்பதற்குரிய வாய்ப்பை இக்குழு அமைப்பு அளிக்கிறதாய் இருக்கிறது.

தனி வாழ்வில் பண நிர்வாகம்

வேதாகமம் கூறுவது என்ன?
தனிப்பட்ட பொருளாதாரத்தை கையாளுவதைப் பற்றி ஒரு கிறிஸ்தவனுக்கு வேதம் என்ன கூறுகிறது என்று பார்க்கும் போது, வேதாகமத்தினுள் மூன்று பண்புகளைக் காணலாம். முதலாவது, ஒரு கிறிஸ்தவன் தனக்கு வரும் வருமானமும், செழிப்பும் தன்னுடையது அல்ல, தேவனுடையது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, பணத்தைக் குறித்த கிறிஸ்தவனுடைய நடவடிக்கை எந்த வழியிலும் எப்போதும் பணத்தை நேசிக்கிறவனாக மாற்றக் கூடாது. மூன்றாவதாக, ஒரு கிறிஸ்தவன் தனது பணத்தின் மூலம் கர்த்தரை பிரியப் படுத்தவும், ஊழியம் செய்யவும் வேண்டும்.

இந்த மூன்று முக்கியமான கோட்பாடுகளை பார்ப்போம்:

(1) பணத்தைப் பற்றி புரிந்து கொள்ளுதல்
பூமியெல்லாம் கர்த்தருடையது என்று வேதம் கூறுகிறது. (யாத்.19:5) வானமும் பூமியும் கர்த்தருக்குரியது என்பதை தாவீது ராஜா அறிந்திருந்தார். அதோடு எல்லாம் கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது என்பதை அறிந்திருந்தார். (1 நாளா. 29:11-14) நாம் நமக்கு சொந்தமல்ல, கிரயத்துக்கு வாங்கப்பட்டோம் என்று பவுல் விவாதிக்கிறார். (1 கொரி. 6:19,20) இதிலிருந்து நமது வருமானமும், சொத்தும் கர்த்தருடையது. கர்த்தருக்கு மட்டுமே உரியது நமக்குரியதல்ல என்பதை தெளிவாக அறிந்து கொள்கிறோம். ஒரு வேளை அவைகளை நாம் பெற்றுக் கொண்டிருந்தோமானால் அதற்கு நாம் மேலாளர் மட்டுமே. அதற்கு கணக்கொப்புவிப்போராய் இருந்திருக்க வேண்டும். உக்கிராணக்காரன் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதனை தெளிவாக நாம் வேதத்தில் உவமானமாக காண்கிறோம். (லூக். 16,1,2)

ஒரு முறை கிறிஸ்தவனால் இந்த கோட்பாடுகள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டால், ஊழல், சுயநல வாழ்க்கை இது போன்ற பிரச்சனைகளுக்கு சரியான பதில் அளிக்க முடியும்.

(2) பண நடவடிக்கைகள்
அப்.பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, 'பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது' என்று தெளிவாக கூறினார். (1 தீமோத். 6:10) அவர் கண்காணியானவனின் தகுதியாக கூறும் போது கண்காணியானவன் பண ஆசை இல்லாதிருக்க வேண்டுமென்று கூறுகிறார். (1 தீமோத். 3:3) கடைசி நாட்களில் மக்கள் பண ஆசை உடையவர்களாய் இருப்பார்கள் என்று தீமோத்தேயு எச்சரிக்கிறார்.

விதைக்கிறவனுடைய உவமானத்தைக் கூறும் போது கர்த்தர், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் என்பவன் வசனத்தைக் கேட்கிறவனாய் இருந்தும், உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவனும் பலனற்றுப் போவான் என்று கூறுகிறது. மேலும் ஒருவன் கர்த்தருக்கும் பொருளாசைக்கும் ஊழியம் செய்யக் கூடாது என்பதை தயக்கமின்றி வெளிப்படையாய்க் கூறினார். (லூக். 16:13) ஒரு மதிகேடனாகிய ஐசுவரியவானுடைய உவமையைக் கூறும்போது, இயேசு பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் என்று கூறினார். (லூக். 15:12) இதன் மூலம் கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் பண ஆசைக்கு விலகி தனக்குள்ளதே போதும் என்று இருக்கக் கடவன். 'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லி இருக்கிறாரே. அதனாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர் நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று சொல்லலாமே. (எபி. 13:5,6)

பணத்தை சம்பாதிக்க விரும்புகிறவன் கர்த்தருடைய காரியத்திற்கு உபயோகப்படுத்துகிறேன் என்று வெளியரங்கமாய் கூறினாலும் அதில் மறைந்திருப்பது பண ஆசையே. ஆம்! கிறிஸ்தவன் கர்த்தருடைய உதவியோடு பண நடவடிக்கைகளில் சரியாய் இருக்கவும், பண ஆசை இல்லாதவனாய் இருக்கவும் அவனால் முடியும்.

(3) பணத்துடைய நோக்கம்

'நீங்கள் மாளும் போது உங்களை நித்தியமான வீடுகளில் ஏற்றுக் கொள்வார் உண்டாகும் படி அநீதியான உலகப் பொருளினால் உங்களுக்கு சிநேகிதரை சம்பாதியுங்கள்' என்று இயேசு கூறினார். (லூக். 16:9) மேலும் அவர், 'பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை.' (மத். 6:19,20) சாலோமோன் ராஜா தன் ஞானத்தினால் அறிவுரையாக, உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு' என்று கூறுகிறார். (நீதி. 3:9) ஆதி திருச்சபை தாராளமாக கொடுத்ததாக, தங்களால் கூடுமானவரையிலும், தங்கள் திராணிக்கும் அதிகமாக கொடுத்ததாக பவுல் கூறுவது ஆச்சரியமில்லை. (2 கொரி. 8:3) விதவையானவள் தன்னிடமிருந்து சிறிய செப்பு காசுகளையும் காணிக்கையாக அளித்ததின் மூலம் நாம் நம்முடைய பணத்தை சொந்தம் கொண்டாடும் முறையில் சரியான முன் மாதிரியாய் இருந்தாள். (லூக். 21:13) புதிய ஏற்பாடு தெளிவாக கூறுவது, கிறிஸ்தவனானவன் கொடுப்பதினால் கர்த்தரை பிரியப்படுத்த முடியும். இதில் நாம் கவனிக்க வேண்டியது, நாம் தசமபாகம் கொடுப்பதில் தவறினால் மட்டுமல்ல, தசமபாகத்தோடு காணிக்கையையும் கொடுக்கத் தவறினால் கர்த்தருடையதை வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம். (மல்கி. 3:8)

ஆகவே கிறிஸ்தவன் தன்னுடைய வருமானத்தில் 1.⁄.10 பாகம் மட்டும் கொடுக்கக்கூடியவன் அல்ல. அவன் தாராளமாய் கொடுப்பதினால் கர்த்தரைப் பிரியபடுத்தவும், தன்னால் முடிந்த அளவும், தன் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கும் நோக்கம் உடையவனாய் இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள தனி வாழ்வில் பண நிர்வாகத்தில் மூன்று முக்கியமான கோட்பாடுகளில் தன்னுடைய வருமானத்தை ஒரு கிறிஸ்தவன் எவற்றிற்கெல்லாம் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பதை கீழே காண்போம்:

- தசமபாகம் மற்றும் காணிக்கை
- வரிகள்
- செலவுகள்
- சேமிப்புகள்

இந்த முதன்மைத்துவ வழி முறையை விவரமாய் பார்ப்போம்!

(1) காணிக்கை மற்றும் தசமபாகம்

கிறிஸ்தவன் தன்னுடைய வருமானத்தில் கிரமமாக கர்த்தருடைய ஊழியத்திற்கென்று முதலாவது எடுத்து வைக்க வேண்டும். மற்ற எந்த செலவுகள் அல்லது வேறு பண முடக்கம் கர்த்தருக்குரிய பகுதியை பாதிக்க அனுமதிக்கக் கூடாது. (மல்கி. 3:8-12)

(2) வரிகள்

கிறிஸ்தவன் தன் வரிகளை நேர்மையாய் செலுத்தி இந்த பகுதியில் முழுவதும் வெளியரங்கமானவனாக இருக்க வேண்டும். (மாற்கு 12:7; ரோமர் 13:5-7) நம் எல்லா சட்ட திட்டங்களையும் மதித்து சட்டம் எதை எல்லாம் அனுமதிக்கிறதோ அவ்வழியே குறைந்த அளவு வரி செலுத்தி அதிக பணத்தை மற்ற காரியங்களுக்கும், கர்த்தருக்கு கொடுக்கிறதற்கும் செலவழிக்க வேண்டும். சம்பளத்திற்கு பணிபுரிபவரும் தன்னுடைய சம்பளத்தை திட்டம் இட்டு (முதலாளியின் உதவியோடு) வரி சுமையைக் குறைக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். சம்பளம் வாங்குவோர் வரி விலக்கு அளிக்க கூடிய சலுகைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

- இலவச வாடகை குடியிருப்பு / வீட்டு வாடகை உதவி பணம்.
- அலுவலக மற்றும் தனிப்பட்ட உபயோகத்திற்கான மோட்டார் கார்/ அலுவலக மற்றும் வீட்டிற்கு இடையே உள்ள பயணப் படி.
- தனக்கு மற்றும் குடும்பத்திற்கான மருத்துவ செலவுகளை திரும்பப் பெறுதல்
- சீருடைக்கான உதவித் தொகை.
- குழந்தைகள் படிப்பிற்கான உதவித் தொகை.

(3) செலவுகள்

தன்னிடம் இருப்பதை எல்லாம் செலவழிப்பவனே மூடன் என்று ஞானியான சாலோமோன் ராஜா கூறுகிறார். (நீதி. 21:20) கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தை சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்கு தானியத்தை சம்பாதிக்கும் எறும்பின் இயல்பை ராஜா இங்கு குறிப்பிடுகிறார். (நீதி. 6:6-8) ஒரு கிறிஸ்தவன் கவனமாகவும், கிரமமாகவும் சேமிக்க வேண்டிய ஒழுங்கு முறை, அவன்:

- தன்னுடைய வரியை குறைக்க வேண்டும். (வரி சேமிப்புத் திட்டங்களின் மூலம் பணத்தை சேமித்தல்)
- தன்னுடைய எதிர்கால வருமானத்தைக் கூட்டும்படி தன்னுடைய பணத்தை நல்ல வட்டி வரும் இடத்தில் எதிர்காலத்திற்காக சேமித்து வைத்தல்.
- சொத்துக்களை வாங்கலாம். (வீடு, கார், குளிர் சாதன பெட்டி முதலியன)
- சுதந்தரத்தை விட்டு செல்லுதல் (வாழ்க்கையில் நம்முடைய குழந்தைகள் நன்கு வாழ்வதற்கு உதவியாக)

அவன் தன்னுடைய சேமிப்பை முதலீடு செய்யும் போது அவன் நன்கு அறிந்திருக்க வேண்டியது:

- முதலீடுக்கான திரும்பப் பெறும் தொகை.
- முதலீட்டின் நெகிழ்வு

அவனுடைய முதலீட்டில் அவனுடைய தெரிந்தெடுப்பும், அவன் கவனிக்க வேண்டிய சில காரணிகள்:

- வரி சேமிப்பு திட்டங்கள்.
- மற்ற பொருளாதார சொத்துக்கள்.
- அசையா சொத்துக்கள்.
- தங்கம்

கர்த்தருக்கு தசமபாகம் மற்றும் காணிக்கையைக் கொடுக்கும் போது நாம் வரி செலுத்தவும் மற்ற செலவுகளை சந்திக்கவும் நம் எதிர்காலத்திற்கென்று சேமித்து வைக்கவும் வேண்டும். ஒரு கிறிஸ்தவன் நினைவில் கொண்டு காத்துக் கொள்ள வேண்டிய வேதாகம அடிப்படைக் கோட்பாடுகள்:

- எல்லா வருமானமும் சொத்துக்களும் கர்த்தருக்குரியது. நமக்குரியதல்ல.
- பண ஆசை எல்லா தீங்கிற்கும் வேராயிருக்கிறது.
- நமக்கு சொந்தமான பணம் முழுவதும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவும், அவரைப் பிரியப்படுத்தவும் செலவழிக்கப்பட வேண்டும்.

நம் தனி வாழ்வில் பண நிர்வாகத்தை வேதம் போதித்தபடி நாம் நிர்வகிக்க கர்த்தர் தாமே உதவி செய்வாராக.

உன்னுடைய பண நிர்வாகம்

முகவுரை

பணம் கர்த்தருக்கு முக்கியமானதா? அநேக கிறிஸ்தவர்கள் பணத்தை எப்படி கையாள வேண்டுமோ அப்படி கையாளுவதில்லை. கிறிஸ்தவனின் உக்கிராணத்துவம் என்பது வாழ்க்கையில் மற்ற பொறுப்புகளை மட்டும் கருத்தில் கொண்டது என்று இந்த முக்கியமான பகுதியை தவிர்த்து விடுகின்றனர். கர்த்தர் ஆவிக்குரியவர் என்றும் பணம் இயற்கையான செலவுகளுக்கு மட்டுமே என்றும் ஒரு முடிவுக்குள் வந்து விடுகின்றனர். ஆகவே கர்த்தர் அந்த பகுதியில் ஆர்வம் காட்டுவதில்லை என்று நினைக்கின்றனர். வேதத்தில் பணத்தைக் குறித்த அநேக குறிப்புகளை நாம் கூர்ந்து பரிசீலிக்கும் போது கர்த்தர் தம்முடைய போதனைகளில் எவ்வளவு முறை அதைக் குறிப்பிடுகிறார் என்று எண்ணும் போது பணத்தைக் குறித்த நம்முடைய எண்ணம் மாறுவது நிச்சயம். சுவிசேஷங்களில் மட்டும், பத்து வசனத்திற்கு ஒரு வசனம் நேரடியாக பணத்தைக் குறிக்கிறது. 38 உவமானங்களில் 16 உவமானங்களில் பணம் மற்றும் நம்முடைய உடைமைகளைக் கையாளுவதைக் குறிப்பிடுகிறது.

கர்த்தர் பண நிர்வாகத்தைக் குறித்த அக்கறை உள்ளவராய் தம்முடைய வார்த்தைகள் மூலம் நம்முடைய சரியான உக்கிராணத்துவத்தை வகையறுக்கிறார். இதை நாம் படிப்பதின் நோக்கம் அடிப்படை வேதாகமத்தைப் போதிப்பது ஆகும்! நம்முடைய பணம் மற்றும் உடைமைகளை நிர்வகிப்பதற்கான கோட்பாடுகள்.

சரியான அஸ்திபாரம்

'கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே ராஜ்ஜியம் உம்முடையவைகள்; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.' (1 நாளா. 29:11)

கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கர்த்தரின் அதிகாரத்தையும், மகிமையையும் சவாலாய் வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறோம். இது குறிப்பாக முக்கியப்படுத்துவது பணத்தோடு நமக்குள்ள தொடர்பை ஆகும். பணத்தோடு தொடர்புடைய வேதாகம கோட்பாடுகளையும் நம்முடைய சரியான நடத்தையை மேம்படுத்துவது மூலமாகவும் கர்த்தர் நமக்குள் கிரியை செய்கிறார் என்கிற நம்பிக்கையையும் நம்முடைய வாழ்க்கையின் சூழ்நிலைகள் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்ற உறுதியையும் பெற முடியும். இந்த நம்பிக்கையின் பெலன் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சமாதானமும் திருப்தியும் ஆகும்.

பின்வருவன 4 முக்கியமான பணத்தோடு தொடர்புடைய வேதாகம கட்டிடத்தின் 4 அடிகற்கள் ஆகும்:

1. **கர்த்தருக்கு சொந்தமானது** - 'வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்.' (1 நாளா. 29:11) கிறிஸ்தவர்கள் கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் மாத்திரமல்ல நம்முடைய உடைமைகள் அனைத்திற்கும் சொந்தகாரர் என்ற உணர்வுடையவர்களாய் இருக்க வேண்டும். இந்த அறிவு அவர்களை சுய நலமான சொந்தம் பாராட்டும் நடவடிக்கையில் இருந்து அவர்களை விடுதலையாக்கும். கர்த்தரே நம்முடைய பணம் மற்றும் உடைமைகளை உருவாக்க பெலன் தருகிறார் என்பதை உணரச் செய்யும்.

2. **கர்த்தர் கட்டுபடுத்துகிறார்** - 'எல்லாம் உம்மால் உண்டானது.' (1 நாளா. 29:14) மனிதனுடைய காரியங்கள் அத்தனையும் கர்த்தர் ஆளுகிறார் என்பதை வேதாகமம் முழுவதும் உள்ள குறிப்புகள் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இந்த நம்பிக்கை, பணக் காரியங்களில் நாம் பயப்படத்தக்க சூழ்நிலைகளைக் கடந்து செல்லும் பொழுது நம்மை விடுதலையாய் உணரச் செய்யும்.

3. **கர்த்தர் கொடுக்கிறார்** - 'இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.' (மத். 6:32) நம்முடைய தேவைகள் அனைத்தையும்

சந்திப்பதாய் கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் நமக்கு வேண்டியதைக் கொடுத்து நம்மை பாதுகாக்கிற நம்முடைய சிருஷ்டிகர் நம்முடைய எதிர்காலத்தை அறிந்து இருக்கிறார் என்கிற உறுதியோடு அவரிடம் தொடர்பு கொள்ளவும், அவருக்கு பணி செய்யவும் முடியும்.

4. **நம்முடைய அர்ப்பணிப்பு** - கர்த்தருக்கு சொந்தமானது, அவர் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது, அவரே எல்லாவற்றையும் அருளுகிறார் என்ற கோட்பாடுகளுக்கு கீழ்ப்படிய நம்மை அர்ப்பணிப்பதே இறுதி அடிக்கல்லாகும். நம்முடைய உரிமைத்துவத்தை நாம் சுதந்திரமான வழிகளில் பயன்படுத்தினாலும் கர்த்தர் நம்மை நம்பி என்ன கொடுத்திருக்கிறாரோ அதற்கு நல்ல உக்கிராணக்காரனாக மாற நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

உண்மையான உக்கிராணத்துவம்

'மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.' (1 கொரி. 4:2) உக்கிராணக்காரன் எனற் வார்த்தையின் அர்த்தம்: மேலாளர், மேற்பார்வையாளர் அல்லது எல்லாவற்றையும் கவனித்துக் கொள்பவர் ஆகும். உக்கிராணக்காரன் என்பவன், தன்னுடைய எஜமானுடைய வியாபாரம் மற்றும் சொத்துக்களை நிர்வகிப்பவனும், நம்பிக்கைக்குரியவனாயும், பொறுப்பாய் அதை கையாளுபவனாகவும் இருக்கிறான்.

உண்மையான உக்கிராணக்காரன் அவனுக்குக் கொடுத்திருக்கும் பொறுப்புகளைக் காட்டிலும் அதிகமாய் நிர்வாகிக்கிறவனாய் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மிடம் நம்பிக் கொடுத்த தம்முடைய பணம் மற்றும் எல்லாவற்றையும் சரியாய் நிர்வாகிக்கிறவனாய் இருக்க வேண்டும். இந்த உக்கிராணத்துவம் அதிகமானதோ அல்லது குறைவானதோ எல்லாவற்றிற்கும் பொருத்தமானதே. மத். 25ம் அதிகாரத்தில் ஐந்து, இரண்டு மற்றும் ஒரு தாலந்தைப் பெற்றவர்கள் தனித்தனியே தங்களுடையதில் நல்ல உக்கிராணத்துவமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

நாம் பணத்தை எப்படி கையாளுகிறோமோ அதை வைத்தே நம்முடைய முதன்மைத்துவமும் மதிப்பும் வெளிப்படும். மத். 6:22ல் நாம் காண்பது, நாம் கர்த்தருக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது. உண்மையுள்ள உக்கிராணக்காரன் கர்த்தருடைய வார்த்தையின் படியே பொருளாதார தீர்மானங்களைத் தேர்ந்தெடுக்கிறான்.

பொருளாதார அறநெறி

'அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?' (லூக். 16:11) நம்முடைய உண்மையையும் பொருளாதார விவகாரத்தில் நிலைத்துவத்தையும் கொண்டு தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், சாதகமான காரியங்களையும் அளிக்கிறார். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி வந்த சிறிது காலத்திற்குள்ளாகவே கர்த்தர் பத்து கட்டளைகளைக் கொடுத்து, அவர்களுடைய தேசம் ஒழுக்கத்தினால் அஸ்திபாரப்பட்டிருக்க அதை நிறுவினார். அதன் மூலம் அவர் நீதியையும் மனந்திரும்புதலையும் கற்பனைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் உறுதிபடுத்தினார். அவர் நேர்மையையும் நியாயத்தையும் முன் நிறுத்தவும். திருட்டுத்தனம், மற்றவருக்குரியதைக் களவாடக் கூடாது என்பதையும் வெளிப்படுத்தினார்.

கர்த்தருக்கு முன்பாகவும், மற்ற எல்லா மனிதருக்கு முன்பாகவும் நம்முடைய எல்லா வியாபார மற்றும் பண நிர்வாகங்களில் நல் மனசாட்சியைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் சுய நலம், உலக ஆசை தவறான வழிகளில் நம்முடைய பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளுதல் மற்றும் அநியாய வழியில் சம்பாதித்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். எல்லா வடிவத்திலும் உள்ள ஏமாற்றல், வஞ்சனை, பொய் மற்றும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளும் இதில் அடங்கும். நாம் மற்றவர்களை முட்டாள்களாக்கலாம். ஆனால் கர்த்தரை ஏமாற்ற முடியாது. 'மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.' (கலா. 6:7)யை நினைவில் கொள்ளவும்.

கடனாகிய படுகுழி

'ஐசுவரியவான் தரித்திரனை ஆளுகிறான்; கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.' (நீதி. 22:7) நம்முடைய நவீன சமூகத்தில் சில விதிவிலக்குகளைத் தவிர பொருளாதாரக் கடன் என்பது சாதாரணமாக மாறி விட்டது. கடனுக்குரிய எல்லா தன்மைகளும் அப்படியே இருந்தாலும் அவைகள் கண்ணுக்கு மறைவாய் இருக்கிறது. தொலைகாட்சி, வானொலி, செய்தித் தாள், கணினி மற்றும் பத்திரிக்கைகள் தங்களுடைய வணிக விளம்பரங்களினால் வாடிக்கையாளர்களை அப்போது வாங்கிக் கொள்ளவும் பின்பு பணம் செலுத்தவும் வற்புறுத்துவதால் அதை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

வேதாகமம், நல்ல காரணத்தோடு கடனுக்கு விரோதமாய் எச்சரிக்கிறது. இதன் பின் விளைவுகள் மன அழுத்தம், திருமண வாழ்வில் பிரச்சனை, வறுமை ஆகியவற்றில் கொண்டு விடும். வேதம் குறிப்பாக கடனை விவரிக்க வில்லை. நாம் இங்கு கடனையும் விவரித்து பின்வரும் 2 விதிகளுக்குட்பட்டு அதைக் குறித்து விவாதிப்போம்.

1. <u>பணத்தைக் கடனாகப் பெற்று அதைத் தவணை முறையில் செலுத்துதல் -</u> பொருளை வாங்கிக் கொண்டு அந்த மாத இறுதியில் அதற்குரிய பணத்தை செலுத்துவோமாகில் அது கடனாக அவசியமில்லை. பணம் செலுத்த முடியாமற்போகுமாகில் நீங்கள் கடனாளிகளாய் இருப்பீர்கள்.

2. <u>சொத்துக்களின் மதிப்பைக் காட்டிலும் உங்களுடைய கடன் அதிகமாக இருத்தல் -</u> கார், மரசாமான்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள், துணி முதலிய அநேக தேய்மானம் ஆகும் பொருட்கள் வாங்கின உடனே திரும்ப விற்கும் மதிப்பை இழந்து விடுகிறது. இத்தகைய தேய்மானமாகும் பொருட்கள் விதிப்படி கடனிலே வாங்கக் கூடாது. ஒரு வேளை அதனுடைய மறு விற்பனை மதிப்பைக் காட்டிலும் கடனுடைய மதிப்பு குறைவாய் இருந்தால் மட்டும் பெறலாம்.

அவசியப்பட்டால் பணத்தை பின்வரும் 4 காரணங்களுக்காக மட்டும் கடனாக பெறலாம். வீடு, வியாபாரம், படிப்பு மற்றும் இது போன்ற முதலீடுகளுக்கு கடனாக வாங்கும் பணம் ஒரு சொத்தாக மாறி அதனால் நமக்கு வருமானம் கிடைக்கிறதாய் இருக்க வேண்டும். நீங்கள் வாங்கிய பணம் உங்கள் தகுதிக்கு உட்பட்டதாயும் மன அழுத்தமின்றி திரும்ப செலுத்தத்தக்கதாயும் இருக்க வேண்டும். அவசியம் அல்லது நெருக்கடி ஏற்படும் போது மட்டுமே அத்தகைய பொருளையோ அல்லது அந்த பணியையோ பெறுவதற்கு கடன் வாங்கலாம். கடனின் சுழற்சியை தவிர்க்க கூடுமானவரை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பணத்தைத் திரும்ப செலுத்த வேண்டும்.

தவணை முறைகளினால் கடன் என்பது எளிதாக மாறி விட்டது. 'இப்பொழுது வாங்கி, பின்பு செலுத்தலாம' என்ற திட்டத்தினால் அநேகர் இந்த பிடிமானத்திற்குள் சிக்குகின்றனர். தவணை என்பது விலையோடு வட்டியும் சேர்ந்ததாகும். இது எவ்வளவு விலையுயர்ந்தது என்பதை சிலர் மட்டுமே உணருகின்றனர். தொடர்ந்து உன்னுடைய வருமானத்திற்கு அதிகமாய் செலவழிப்பதினால் உன்னுடைய ஒவ்வொரு மாத வருமானமும் துண்டாடப்பட்டு அநேக ஆண்டுகளுக்கு வட்டி செலுத்துவதாய் முடியும். அதே வட்டியைத் தொடர்ந்து செலுத்துவதால், உன்னுடைய செலவழிக்கும் திறன் அதிகமாகாது. கடனிலே வாழ்வதின் பலனாய் உன்னால் சொந்தமாக சொத்துக்கள் வாங்கக் கூடுவது குறையும்.

ஒருவருடைய கடனுக்கு உடனாளியாய் கையொப்பமிடுவதைக் குறித்து என்ன? மற்றவர்களுடைய கடனுக்கு சாட்சியாய் கையொப்பமிடுவது என்பது அவருடைய கடனுக்கு பொறுப்பாயும், பொருளாதார சீர்கேடுக்கு ஏதுவான ஆபத்தான வழியாகும். அவ்வாறு நீ கையொப்பமிடும் போது அந்த கடனுக்கு நீ பொறுப்பாளி ஆகிறாய். அந்த நபர் வாங்கின கடன் திரும்ப செலுத்துவது கடினமாகும் போது அந்த நிறுவனம் கையொப்பமிட்ட உன்னிடம் கேட்கும். அநேக நேரங்களில் இவ்வாறு சாட்சியாய் கையொப்பமிடும்போது உன்னுடைய தயவையும், உன்னுடைய பொருளாதார நிலைத்துவத்தையும், அவரோடுள்ள உறவையும் அவர் பணம் செலுத்தத் தவறும் போது இழக்க நேரிடும். சாதகமான சூழ்நிலையை நீ சந்திக்கும் போது குறிப்பாக மற்றொரு விசுவாசிக்காக மட்டுமே நீ சாட்சியாக கையொப்பம் இட வேண்டும்.

கடனிலிருந்து வெளி வருவது

'ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறுகிற கடனே அல்லாமல் மற்றொன்றிலும் ஒருவருக்கும் கடன்படாதிருங்கள்.' (ரோமர் 13:8) கடனிலிருந்து வெளி வருவதைக் காட்டிலும் கடனுக்குள் செல்வது எளிதாய் இருக்கிறது. ஒரு நிலையான தீர்மானத்தோடும், ஒழுக்கத்தோடும், சரியான திட்டத்தோடும், கடன் என்கிற வலையிலிருந்து வெளி வர வேண்டும்.

நீ அதில் அகப்படும் போது உன்னை விடுவித்துக் கொள்ள சில படிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **தொடர்ந்து கர்த்தருக்குக் கொடு** - கடன் கொடுத்தவர்களுக்குச் செலுத்த வேண்டுமென்று கர்த்தருடைய பணத்திலிருந்து கொடுக்காதே. (மல். 3:10) கர்த்தருக்குக் கொடுப்பவர்களை ஆசீர்வதிக்கிறார். (லூக். 6:38).

2. **உங்கள் கடன் மற்றும் சொத்துக்கள் இரண்டையும் வரிசைப்படுத்துங்கள்** - உன் கடன் என்ன என்பதை தெளிவாக குறித்துக் கொள். உன் கடனை அடைக்க எதை விற்கலாம் என்பதைக் கருத்தில் கொள்.

3. **உன்னால் முடிந்ததை விற்று விடு**. - உனக்குரியதை கொடுப்பதில் தாராளமாய் இரு. உன்னுடைய தரமான வாழ்க்கைக்கு குறைவாய் உள்ளதையும், உனக்கு அவசியம் இல்லாததையும் விற்று விடு. இதனால் நீ பெறும் பணம உன்னுடைய கடனை அடைப்பதற்கு உதவியாய் இருக்கும்.

4. **பணம் செலுத்தும் முறையை நிறுவு** - எவ்வளவு சீக்கிரம் எவ்வளவு செலுத்த முடியுமோ அதைச் செலுத்த திட்டமிடு. வட்டி கூடிக் கொண்டே வரும் என்பதை நினைவில் கொள்.

5. **உனக்கு கடன் கொடுத்தவர்களோடு கலந்து பேசு** - உங்கள் திட்டத்தை ஒவ்வொருவரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். (கடன் கொடுத்தவர்களிடம்)

6. **பற்றிக் கொள்** - உன் கடனைக் குறைக்க நீ எடுத்துக் கொண்ட அர்ப்பணிப்பு நிலையாய் இருக்க கர்த்தரிடம் கேள்.

7. **புதிய கடனை சேர்க்காதே** - திரும்பவும் கடன் என்கிற சுழற்சி வலைக்குள் திரும்புவதைத் தவிர்.

திட்டமிடுகைக்குள் வாழ்

'வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலை நிறுத்தப்படும்.' (நீதி. 24:3) நீ செழிப்புக்குள் செல்வதானால் உன் வீடு ஆரோக்கியமான பொருளாதார கோட்பாட்டிற்குள் நிறுவப்பட வேண்டும் - உன் உடைமையைக் குறித்து திட்டமிட்டு உன் பணத்தை திட்டமிடுகைக்குள் செய்து முடிப்பதே சிறந்த வழி. நமது மாதாந்திர மற்றும் வருடாந்திர செலவுகளைக் குறித்த விவரமான குறிப்புகளே நல்ல திட்டமிடுதலுக்கு அவசியமானது. திட்டமிடுகை என்பது நமது செலவை திட்டமிட்டுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாகும். வெற்றிகரமான திட்டமிடுகை நமது வருமானத்தை மட்டுமே அடிப்படையாய்க் கொண்டதாய் இருக்க வேண்டும். நாம் எவ்வளவு கடனாக பெறலாம் என்பதைக் கொண்டதல்ல! இது உண்மையும் ஒழுக்கமுள்ளதாயும் இருக்க வேண்டும்.

கீழே வருவன மாதாந்திர திட்ட அறிக்கைக்கான உதாரணம்:

மாதாந்திர வருமானம்

சம்பளம் :.....
வட்டி :.....
வாடகை வருமானம்:.....
மற்ற வருமானம் :.....
மற்ற வருமானம் :.....
மொத்தம் =_____

மாதாந்திர செலவுகள்

1. தசமபாகம் :.....
2. சேமிப்பு :.....
3. வாடகை :.....
4. உணவு :.....
5. துணிமணி :.....
6. மற்றவை :.....
7. மொத்தம் =_____

தேவைக்கேற்ப பணத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். கணவன் மனைவி இருவரும் வேலை செய்யும் போது அவர்கள் நிதி நிலைமை வெற்றிகரமாய் இருக்கும். உணவு மற்றும் இதர செலவுகளை வாராந்திர முறையில் ஒதுக்கிக் கொள்வதின் மூலம் சில வாரங்களுக்க அதிகமாய் செலவழிப்பதும் மற்ற வாரங்களுக்கு குறைவாய் செலவழிப்பதையும் உடைக்கும். இது ஞானமான காரியம். வெற்றிகரமான நிதிநிலை அறிக்கைக்கு பொருள் வாங்கியது அல்லது மற்ற ஒதுக்கிய பணங்களைக் குறித்த நிதிநிலை அறிக்கை பதிவேடுகளை பதிவு செய்வது நன்மையானதாகும். இதைத் தவிர அடிக்கடி நீங்கள் என்ன செய்கிறீர்கள், உங்கள் மாதாந்திர வங்கி புத்தகத்தின் மீதித் தொகை எவ்வளவு என்பதையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் வருமானம் உங்களுடைய செலவுகளை சந்திக்கக் கூடாதிருந்தால் உங்கள் கூடுதலான வருமானத்திற்கு வழி உண்டாக்க வேண்டும் அல்லது உங்கள் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

போதுமென்ற மனதுடையவர்களாயிருங்கள்

'நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்.' (எபி. 13:5) நமக்கு என்ன இருக்கிறதோ அதற்குள் வாழ்வதே கடன் என்ற வலையிலிருந்து தப்புவிப்பதற்கான திறவு கோலாகும். இது பொதுவாக நமக்குத் தேவையில்லாததை வாங்க சொல்லி உந்திச் செல்லும் பொருளாசையாகும். நீதிமொழிகள் 15:27 நமக்கு கூறுகிறது, 'பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்.'

திருப்தியாய் வாழ்வது இயற்கையிலேயே நமக்கு என்ன சொந்தமோ அதைச் சார்ந்து வாழ்வதல்ல. இந்த உண்மையை பவுல் பிலிப்பியர் 4:11ல் இவ்வாறு கூறுகிறார். 'நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்.' நாம் அனுதினமும் தேவனிடம் நமக்கு என்ன குறைவு என்று சிந்திப்பதைக் குற்றம் சாட்டுவதைக் காட்டிலும் நன்றி சொல்லும் பழக்கத்தை நாம் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். 'தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக் கடவது ..... ஒவ்வொரு நாளின் தேவையையும் சந்திப்பதாய் ஆண்டவர் வாக்கு பண்ணியிருக்கிறாரே. (மத். 6:32)

தசமபாகம்

'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டக சாலையிலே கொண்டு வாருங்கள்.' (மல். 3:10) கர்த்தருக்கென்று கிரமமாய் கொடுப்பது தசமபாகம் ஆகும். இது தெய்வீக கோட்பாடாகும். சாதாரணமாக விளக்க, தசமபாகம் என்பது: 'பத்தில் ஒன்று' கர்த்தருடைய ராஜ்ஜிய பணிக்கென்று ஒரு பகுதியை கொடுப்பது ஆவிக்குரிய வழிமுறை ஆகும்.

அநேகர் தவறாக, எதிர்மறையாக தசமபாகம் என்பது மோசேக்கு அருளப்பட்ட கட்டளைகளில் இணைந்தது அல்ல என்கிறார்கள். மோசேயுடைய கற்பனைக்கு பின்பாக தசமபாகம் கொடுக்க வேண்டும் என்றல்ல. மோசேக்கு முன்பாக வாழ்ந்த தேவ மனிதர்களும் இந்த பொருளாதார கோட்பாட்டை கைக் கொண்டிருந்தனர். (ஆதி. 4:3; 14:20; 28:22)

பெந்தேகோஸ்தே சபைகளில் இப்பொழுதும் தசமபாகத்தைக் குறித்து போதித்து அவர்கள் 'உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு' என்று போதித்து வருகின்றனர். (நீதி. 3:9)

நல்ல உக்கிராணக்காரனுக்குத் தேவையானது, தசமபாகத்தைக் கர்த்தருக்குச் செலுத்துவதாகும். இதை அருகிலுள்ள உள்ளூர் திருச்சபைக்கோ அல்லது உங்கள் உறுப்பினர்களின் கூடுகைக்கோ

கொடுக்கலாம். சபைத் தலைவர்கள் தங்கள் தசமபாகத்தை தங்கள் தலைமை அலுவலகத்திற்கோ அல்லது அனாதைகள் மற்றும் விதவைகளுக்கு கொடுக்கலாம். நாம் உண்மையாக இதை கனம் பண்ணும் போது தெய்வீக பாதுகாப்பு, உலகப் பிரகாரமான ஆசீர்வாதம் மற்றும் நித்திய பலன் அளிப்பதாக வாக்களித்திருக்கிறார். (மல். 3:10-12)

கொடுப்பது

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.' (அப். 20:35) கர்த்தருடைய ராஜ்ஜியத்தை பூமியில் நிறுவ அநேக தேவைகள் உள்ளது. தசமபாகத்தைக் காட்டிலும் அதிகமாக கொடுக்க வேண்டுமென்ற பொருளாதார நிலைத்துவம் கொண்டவனாய் கிறிஸ்தவன் இருக்க வேண்டும். கொடுப்பதினால் கிடைக்கும் நன்மைகள் இங்கே கீழே தரப்பட்டுள்ளன:

1. கொடுப்பவரின் ஆவிக்குரிய ஆசீர்வாதம் - தனக்குரியதை பகிர்ந்து கொடுக்கிறவன் இயற்கையாய் தனக்குக் கிடைத்ததை கொடுக்கிறவனும், கர்த்தருடைய இயல்பான குணநலனை உடையவனாய் இருக்கிறான். 'அவர் ஐசுவரியவானாயிருந்தும் .... தரித்திரானார்.' (2 கொரி. 8:9) ஆகையால் அவரால் மற்றவர்களை ஐசுவரியவானாக்க முடியும். 'உற்சாகமாய் கொடுக்கிறவனுக்கு' கர்த்தர் கிருபை அளிக்கிறார். (2 கொரி. 9:7,8).

2. கொடுப்பது நம்முடைய நம்பிக்கையை விளக்குவதாய் இருக்கிறது - கர்த்தரே நம்முடைய உடைமைகள் அனைத்திற்கும் சொந்தக்காரர் என்பதை கொடுப்பதின் மூலமாய் நாம் வெளிப்படுத்துகிறோம்.

3. கொடுப்பது என்பது அவருடைய ராஜ்ஜியத்திற்காய் முதலீடு செய்வதாகும் - கொடுப்பதின் மூலமாய் பூமி அவருடைய ராஜ்ஜியத்தை விரிவுபடுத்துவதற்கென்று நாம் முதலீடு செய்கிறோம்.

கொடுப்பதின் மற்ற பகுதிகளில் மிஷன்கள், மற்ற மிஷனரி ஊழியங்கள், ஏழைகள், சபையில் தேவையிலுள்ளோர் முதலியோர் அடங்குவர்.

சேமிப்பு

'வேண்டிய திரவியமும் எண்ணெயும் ஞானவானுடைய வாசஸ்தலத்திலுண்டு. மூடனோ அதை செலவழித்துப் போடுகிறான்.' (நீதி. 2:20) பணத்தை சேர்த்து வைப்பது அல்லது முதலீடு செய்வது ஆவிக்குரியதாய் இராமல் எதிர்காலத்திற்கென்று ஆண்டவர் தேவையானதை அளிப்பார் என்ற நம்பிக்கையில் குறைவுபடுவதுமாய் இருப்பதால் அது வேதத்திற்கு புறம்பானது. கர்த்தர் சேமிப்புக்கான கோட்பாடுகளை கூறி இருக்கிறார். நீதி. 30:25ல் எறும்பு கோடையிலே தன் ஆகாரத்திற்கென்று சம்பாதித்து வைக்கும் பழக்கத்தை உடையது என்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது.

கர்த்தருக்கென்று ஒரு பகுதியை கொடுத்து விட்ட பின் உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை சேர்த்து வைப்பது உங்களுக்கு கடன் கொடுத்த ஒருவரைப் போல உங்களை மாற்றும் என்பதே வெற்றிகரமான சேமிப்பு ஆகும். ஒரு குடும்பம் தன்னுடைய வருமானத்தில் 5% தை 8% வட்டி வரும் ஓரிடத்தில் 20 முதல் 25 வருடங்கள் தொடர்ந்து சேமித்து வைத்தால் அதுவே ஒரு மிகப் பெரிய தொகையாக மாறி விடும்.

நீங்கள் எவ்வளவு சேமித்தீர்கள் என்ற தொகை பெரிதல்ல. சேமிப்பது என்ற பழக்கமே முக்கியமானது. இதற்குள்ள மிகப் பெரிய எதிரி நாட்களை கடத்துவதே ஆகும். கூடுமானால் இன்றைக்கே ஆரம்பியுங்கள்!

முதலீடுகள்

'ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும் பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்.' (நீதி. 21:5) முதலீடுகள் போன்ற சேமிப்புகள் எதிர்காலத்திற்கென்று ஆயத்தப்படுத்துகிற ஞானமுள்ள வழிகள் ஆகும். ஒவ்வொரு முதலீடுகளுக்கும் அதன் அளவுக்கேற்ற ஆபத்துகளும் உண்டு.

கீழே குறிப்பிட்டுள்ள 3 வகைகள் சாதகமான முதலீடுகளின் பகுதிகள் ஆகும்:

1. படிப்பு ∴ தொழில் - நீ வேலை செய்யும் பணிக்கேற்ற படிப்பு மற்றும் பயிற்சிக்கென்று முதலீடு செய்வது மிகவும் சிறந்த முதலீடாகும்.

2. வீடு - வீடு வாங்குதல் என்பது அடுத்து வரும் சில காலங்களுக்கேற்ற சிறந்த முதலீடாகும். சந்தையில் நல்ல மதிப்பும், நல்ல விலையும், வட்டி விகிதமும் உள்ள இடத்தை கவனித்து வாங்கிட வேண்டும்.

3. வயல் நிலம் - நீ தொடர்ந்து அதில் விதைத்து அறுவடை செய்வாயாகில் உன் வீட்டிற்கு வேண்டிய சாப்பாடும், பணமும் அதிலிருந்து கிடைத்து விடும்.

சேர்த்து வைப்பதும் கடன் தருவதும்

சேர்த்து வைத்தல் - 'பண ஆசை எல்லாத் தீங்குக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.' (1 தீமோத். 6:10) நமக்கென்று உடைமைகளையும், பணத்தையும் குவித்து வைக்கத் துவங்கும் போது உண்மையான உக்கிராணத்துவம் பொருளாசையாக மாறுகிறது. கர்த்தருடைய ராஜ்யத்தைக் கட்டும் நம்முடைய ஆசை நீங்கி, நம்முடைய சொந்த வாழ்வைக் கட்டுவதாய் மாறி விடும். பணம் என்பது சுய திருப்தியையும் பெருமையையும் அளிக்கும் வழியாகும். ஐசுவரியம் பெருகும் போது எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை நாம காத்துக் கொள்ள வேண்டும்.

கடன் தருதல் - 'இரங்கி கடன் கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.' (சங். 112:5) தேவையிலுள்ளோர் மேல் இரக்கமும், மனதுருக்கமும் தாராளமாய் இருக்க வேண்டும் என்று வேதம் நமக்கு கற்பிக்கிறது. இவ்வாறு ஏழைகளின் அடிப்படைத் தேவையாகிய உணவு, உடை, இருப்பிடத்தை அளிக்கும் போது பரிசாய் அளிக்க வேண்டுமே தவிர திருப்பி செலுத்த எதிர்பார்க்கக் கூடாது. இவ்வாறு செய்யும் போது 'நாம் கர்த்தருக்கு' கடன் கொடுக்கிறவர்களாய் இருக்கிறோம். (நீதி. 19:17) அவர் திரும்ப செலுத்துவதாய் வாக்களித்திருக்கிறார். 'மனிதருடைய விருப்பத்திற்கென்று' கடனாய் செலுத்தும் போது அந்த பணத்தை திரும்ப எதிர்பார்க்கலாம். நாம எதெல்லாம் கடனாய் யாருக்கெல்லாம் கடனாய் கொடுக்கலாம் என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

வேலைக்கான அறநெறி

பொருளாதாரம் பெருகும் போது மறுபக்கம் வேலையும் பெருகும். நம்முடைய பொருளாதார முறை உற்பத்தியை அடிப்படையாய் கொண்டது. இந்த பகுதியில் நம் பணியோடு தொடர்புடைய 7 உண்மைகளை நாம் கருத்தில் கொள்ளலாம்:

1. **வேலை என்பது அவசியமானது** - 'ஆறு நாட்கள் நீ வேலை செய்யலாம்.' (யாத். 34:21) வேதத்தில் கர்த்தர் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்கு பணியைக் குறித்த நேரடியான ஆலோசனையைக் கொடுக்கிறார். நம்முடைய செழிப்பு மற்றும் குணநலனின் வளர்ச்சி இரண்டிற்கும் பணி செய்ய வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

2. **எல்லா நேர்மையான உழைப்பும் கனம்பண்ணப்படும்** - 'சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு.' (நீதி. 14:23) கர்த்தருக்கு முன்பாக எல்லாரும் சமம். ஆகையால் நம்முடைய தகுதியும், நம்முடைய உழைப்பையும் உயர்த்திக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. ஒரு மனிதனின் மதிப்பு அவன் எப்படி வாழ்கிறான் என்பதல்ல. அவன் கர்த்தருக்கு முன்பாக எப்படியிருக்கிறான் மற்றும் அவனுடைய வேலையிலுள்ள உண்மையையும் பொருந்தது.

3. **பணி ஒருவனுடைய குணத்தை உயர்த்துவதாய் இருக்கிறது** - 'ஜாக்கிரதையுள்ளவர்-களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.' (நீதி. 13:4) பணியால் தன்னுடைய பொறுப்பையும் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வையும் வளர்ப்பவனாயிருக்கிறான். இதனால்

அவனுக்குள் இருக்கும் கர்த்தருடைய இயல்பாகிய உருவாக்குதல் மற்றும் காப்பது ஆகிய குணத்தை வெளிப்படுத்துகிறான்.

4. தொழிலாளி / தொழில் உறவு முறை - 'எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.' (கொலோ. 3:24) கிறிஸ்தவ தொழிலாளி என்பவன் தன் மரியாதையைக் காத்துக் கொள்பவனும், தன் எஜமானுக்குக் கீழ்ப்படிகிறவனுமாய் இருப்பான். கிறிஸ்தவ எஜமானானவன் நேர்மையானவனாயும், தன் தொழிலாளியின் தேவைகளில் உணர்வுள்ளவனாயும், சரியான கூலி அளிப்பவனாயும் இருக்க வேண்டும்.

5. சிறப்பை நாடுதல் - 'எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.' (கொலோ. 3:24) கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பில் சிறந்த தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு நாம் பூரணராயிராவிட்டால், நம்மால் எந்த பணியை சிறப்பாக செய்ய முடியுமோ அதை மட்டுமே செய்ய வேண்டும்.

6. சுறுசுறுப்பு செழிப்பைக் கொண்டு வரும் - 'சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.' (நீதி. 10:4) உண்மையுள்ள கடின உழைப்புள்ள தொழிலாளி சம்பள உயர்வு மற்றும் பணி உயர்வினால் கனம் பண்ணப்படுவான்.

7. இளைப்பாறுகின்ற நேரம் - 'ஏழாம் நாள் நீ ஓய்ந்திருப்பாயாக.' (யாத். 34:21) உற்பத்தி மற்றும் பணியை முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிலர் அதிகமாய் வேலை செய்வர். நேரத்திற்கான உக்கிராணத்துவத்தில் ஓய்வு என்பதும் நமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பாகும். அது நமக்கு புத்துணர்ச்சியையும் நமது உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதாயும் இருக்கிறது.

சுதந்திரத்தை வைத்துச் செல்லுதல்

'பிள்ளைகளுக்கு பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்.' (2 கொரி. 12:16) பிள்ளைகளுடைய எதிர்காலத்திற்கென்று பெற்றோர் விட்டுச் செல்வதற்கான 3 முக்கியமான பகுதிகள்.

1. பயிற்சி - நல்ல பண நிர்வாகத்தை நாம் அவர்களுக்குக் கற்றுத் தர வேண்டியதாய் இருக்கிறது. பணத்தை எவ்வாறு நிர்வாகிக்க வேண்டு என்ற பயிற்சி, சிறு வயது படிப்பின் ஒரு பகுதியாய் இருக்க வேண்டும். அவர்களுக்கு நாம் கொடுக்கும் சிறு பணம் துவங்கி அவர்கள் எப்படி திட்டமிட வேண்டும்? தசம பாகம், கொடுத்தல், சேமித்தல் என்பதை பயிற்சிவிக்க வேண்டும். நல்ல வேலை செய்யும் பழக்கமும் கற்றுத் தர வேண்டும்.

2. எதிர்கால படிப்பு - பெற்றோர் தங்களின் படிப்பிற்கென்றும் அவர்களுடைய தொழில் முறை பயிற்சிக் கென்றும் பணத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். சேமிப்பது குறைவான பணமாய் இருந்தாலும் அந்த செலவுக்கென்று எடுத்து வைக்கத் துவங்க வேண்டும்.

3. உயிலை ஆயத்தம் செய்ய வேண்டும் - உங்களுடைய சொத்தை யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற தெளிவான எண்ணம் இருந்தால் உடனே உயிலை ஆயத்தம் செய்வது அவசியம் ஆகும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தங்கள் திருச்சபை, மிஷனெரி அமைப்புகள் போன்றவற்றை தங்கள் உயில் மூலம் தங்கள் பணமும் சொத்தும் யாருக்கு எவ்வளவு அளிக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக எழுதி ஆசீர்வதிக்க முடியும்.

முடிவுரை

நமது பண நிர்வாகத் தொடர்பான தலைப்புகளின் கீழ் மிகவும் விரிவாக பரிசோதித்துப் பார்த்தோம். இந்த படிப்பினையை நீ வாசிக்கும் பொழுது உன்னுடைய பொருளாதார பழக்க வழக்கங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவது அவசியம் என்பதை அறிந்து கொள்வாய். மாற்றம் ஒரு ஒழுங்கைக் கொண்டு வரும். ஆனால் கர்த்தருடைய வார்த்தை மூலம் அதை சரியாய் அமைத்துக் கொள்வதினால் அது கனி நிறைந்ததாய் மாறும். எவ்வளவு கடினமான சவால் நிறைந்ததாய் நம்முடைய சூழ்நிலைகள் காணப்பட்டாலும் வேதாகமக் கோட்பாடுகளின் படி வழிநடத்தப்பட துவங்க வேண்டும் என்று நம்மை உற்சாகப்படுத்திக் கொள்வோம்.

தசமபாகத்தின் வேதாகம புரிந்து கொள்ளுதல்

துவக்கவுரை:

நமது வாழ்க்கையின் எல்லா பாகத்தையும் மாற்றத்தைக் கொண்டு வருவதே இரட்சிப்பின் அர்த்தம் ஆகும். இதில் நமது பொருளாதார மற்றும் உடைமைக்குரிய ஈடுபாடும் அடங்கும். அநேகர் கிறிஸ்தவம் என்பதில் பண நிர்வாகம் அடங்காது என்று கருதினாலும் வேதாகமத்தில் சொத்தைக் குறித்த தகவல்களும் அதை எப்படி உபயோகிக்க வேண்டும், உபயோகிக்கக் கூடாது என்ற போதனைகளும் அடங்கியிருக்கிறது. நமது பொருளாதார முதன்மைத்துவம், உக்கிராணத்துவம் மற்றும் பொறுப்புகளை எப்படி கையாளுவது என்று வேதம் நமக்கு தெளிவாக கூறுகிறது.

பண ஆசை, பொருளாசை, மாம்சத்தைச் சார்ந்திருப்பதைக் குறித்து வேதாகமம் நம்மை எச்சரித்தாலும் பணத்தின் மதிப்பையும் அதன் பயன்பாட்டையும் கண்மூடித்தனமாக எதிர்க்கவில்லை. பணத்தைக் கையாளுவதின் நோக்கத்தையும் அதன் செயல்பாட்டையும் அநேக வேதாகமக் கோட்பாட்டிற்குள் அடக்கியுள்ளது.

அநேக கோட்பாடுகளில் ஒன்றாக அடங்கியிருப்பது தசமபாகம் செலுத்துதலாகும். இந்த படிப்பினையின் மூலம் மிக முக்கியமான பொருளாதாரக் கோட்பாடாகிய தசம பாகத்தை இங்கு தெளிவாக பார்ப்போம். இந்த காரியத்தில் நமது பொறுப்பும், பண நிர்வாகத்தில் நாம் எவ்வாறு தொடர்புடையவர்களாய் இருக்கிறோம் என்பதையும் கருத்தில் கொண்டு படிப்போம்.

உக்கிராணத்துவத்தின் கருத்து

கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தின் விளக்கம் என்னவெனில்: 'கர்த்தர் அவன் ∴ அவளின் பொறுப்பில் நம்பி ஒப்படைத்துள்ள எல்லாவற்றையும் பொறுப்போடு சிறப்பாக நிர்வகிக்கும் மனிதனே உக்கிராணக்காரன்.' இந்த பகுதியின் பொறுப்பாக நம்மிடம் எதிர்பார்ப்பது உண்மைத்துவமே என்று வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது. 'உக்கிராணக்காரன் உண்மையுள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.' (1 கொரி. 4:2)

நமது நேரம், தாலந்து, தகுதிகள், உடைமைகள், பணம் ஆகியவற்றை சரியான விதத்தில் பயன்படுத்துவது உக்கிராணத்துவத்தின் முக்கியமான பரிமாணத்தில் அடங்கும். உக்கிராணத்துவம் என்ற அர்த்தத்திற்குள் அடங்குவது, பணத்தைக் கொடுப்பதற்கான கோட்பாடாகிய தசமபாகம் ஆகும்.

நமக்குரிய யாவும் கர்த்தருக்குரியது என்பதை உணர்ந்து கொள்வது உக்கிராணத்துவத்தில் அடங்கும். 'பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது.' (சங். 24:1) நமக்கென்று அவர்கள் கொடுத்த எல்லாவற்றையும் சரியாக உபயோகப்படுத்தினோம் என்று அவருக்கு முன்பாக நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். வேதாகமம் கூறியுள்ள படி நமது வருமானத்தின் ஒரு பகுதியை கர்த்தருடைய மகிமைக்கென்றும், அவருடைய ராஜ்ஜியத்தின் நன்மைக்கென்றும், பூமியிலே அவருடைய சுவிசேஷம் பரவுவதற்கென்றும் பயன்படுத்துவது இதில் அடங்கும்.

பொருளாதார சவால்

பொருளாதார உக்கிராணத்துவத்தின் படிப்பினை என்பது ஒன்றைக் கொண்டு அநேக காரியங்களை சாதிக்கும் சவால் நிறைந்தாகும். பணத்தை சரியாக கையாளுவது அல்லது கர்த்தருடைய கோட்பாட்டின் படி தங்கள் பொருளாதார வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளுவது என்பது அநேக கிறிஸ்தவர்களுக்கு கடினமாய் தோன்றும். சிலர் இந்த பகுதியில் தங்கள் பொறுப்பை சந்திக்கும் போது குழப்பமாயும், கடினமாயும் உணருகின்றனர். உண்மையிலேயே இது அவர்களுடைய விசுவாசத்திற்கு கடும் சோதனையாக இருக்கக் கூடும்.

நம் வாழ்க்கையின் முழு பகுதியும் கர்த்தருக்குரியது. அதில் நமது உலகப் பிரகாரமான உடைமைகள், பணம் ஆகியவை இதில் அடங்கும். இது சிலரை தொந்தரவு செய்வதாய் இருந்தாலும் இதில் நாம்

விழிப்புணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்தவத்திற்குரிய வெளிப்பாடு ஆவிக்குரிய பரிமாணத்தை மட்டும் பாதிக்கிறதாய் இராமல் நமது சட்டையை மற்றும் பணப் பையை அசைப்பதாய் இருக்கிறது. பிரச்சனை எப்படி எழும்புகிறது என்றால் போதுமான வேதாகம படிப்பினை அல்லது அந்த நபர் தன்னுடைய உடைமை மற்றும் பணம் முழுமையும் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கென்று ஒப்படைக்காமல் இருப்பதே ஆகும். ஒருவர் கூறினார்: 'ஒருவருடைய இருதயம் முழுவதுமாக மாறும்போது மட்டுமே. அவருடைய பணப்பையிலும் மாறுதல் ஏற்படும். தசமபாகம் என்ற படிப்பினையை குறித்தும் அதை ஏன் அவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற காரணத்தையும், அதனால் ஏற்படக்கூடிய ஆசீர்வாதத்தையும், நன்மையையும் நாம் இங்கு ஆராய்வோம்.

தசமபாகம் என்பது என்ன?

கொடுப்பதைக் குறித்து கர்த்தர் வெளிப்படுத்தின தெய்வீக கோட்பாடே தசமபாகம். எளிமையாகக் கூறுவோமாகில் தசமபாகம் என்பது பத்தில் ஒன்று. கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கென்று கர்த்தருக்குக் கொடுக்கக் கூடிய ஒரு ஆவிக்குரிய முறை ஆகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் முழுவதும் சமமாக செயல்படுத்தக் கூடிய முறை தசமபாகம் ஆகும். இதில் ஒருவரும் விதிவிலக்கல்ல. ஒருவருடைய முழு வருமானம் மற்றும் உற்பத்தியில் அவர் செலுத்தக் கூடியது, 'உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு.' (நீதி. 3:9) கர்த்தர் தசமபாகத்தை தூய்மையானதாகவும், பரிசுத்தமாகவும் கருதுகிறார். 'தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்குரியது; அது கர்த்தருக்கு பரிசுத்தமானது.' (லேவி. 27:30)

தசமபாகம் எங்கு துவங்கினது?

மோசேயினுடைய பிரமாணங்களுக்கு முன்பாக தசமபாகம் வற்புறுத்தப்பட்டதாக நாம் காணவில்லை. தசமபாகம் செலுத்துவது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு பின்பாக செயல்படுத்தப்பட்டாலும் கர்த்தருடைய மனிதர்களின் வாழ்க்கையை கூர்ந்து பார்க்கும் போது மோசேயின் காலத்திற்கு முன்பே இது பழக்கத்தில் இருந்திருக்கிறது. இதிலிருந்து வரலாற்றின் துவக்கத்திலிருந்தே இது இருந்ததாக நாம் காண்கிறோம். இந்த தசமபாக கோட்பாட்டை முதலில் செயல்படுத்தினதாக நாம் காயீன் ஆபேல் தங்கள் 'முதல் கனியை' கர்த்தருக்கென்று கொண்டு வந்த போது காண்கிறோம். கர்த்தர் தம்முடைய தெய்வீக கோட்பாட்டை ஆதியிலே ஏற்படுத்தி அதை ஆதாம் மூலம் நம்மிடையே கொண்டு வந்தார் என்பதை ஆதாரமாகக் காணலாம்.

நியாயப்பிரமாணத்திற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே பழைமையான இஸ்ரவேலர்கள் இதை செயல்படுத்தினதை நாம் காணலாம். ஆபிரகாம் சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். (ஆதி. 14:20) 'தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் தருவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணிக் கொண்டான்.' (ஆதி. 28:22) இவ்வாறு யாக்கோபு கர்த்தரோடு பொருத்தனை பண்ணினான்.

மோசேயின் பிரமாணங்களுக்கு முன்பாகவே இந்த தசமபாகத்தின் கோட்பாடுகள் இருந்தது என்பதை இவைகள் நிரூபிக்கின்றன.

தசமபாகம் செலுத்துவதின் நோக்கம் என்ன?

நடைமுறையில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்கென்றே தேவன் இந்த தசமபாக கோட்பாட்டை நியமித்தார். இது பல முக்கியமான காரணங்களுக்கென்று நிறுவப்பட்ட ஆவிக்குரிய ஒழுங்காகும்.

மிக முக்கியமான ஒன்றை நாம் விரிவாக கீழே காணலாம்:

1. **தசமபாகம் என்பது ஆராதிக்கும் முறையாகும்** - 'உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு.' (நீதி. 3:9) என்று வேதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது.

முதலும், மிக முக்கியமானதுமாக கருதுவது, நாம் கர்த்தரை நடைமுறையில் ஆராதிப்பதை வெளிப்படுத்துவதே தசமபாகம் ஆகும். நமக்குரியவற்றில் கர்த்தரை ஆராதிக்கும் செயல் இதுவாகும். இது அர்த்தமற்ற மதச் சடங்கல்ல. நம் இருதயப்பூர்வமான கனத்தை உண்மையாய் கர்த்தருக்கு வெளிப்படுத்துவது, கர்த்தருடைய அன்பான அக்கறைக்கு நன்றி செலுத்துவது அவர் நமக்குக் கொடுத்ததையும், நம்மேல் வைத்த மனதுருக்கத்திற்கு துதி செலுத்துவதும் ஆகும்.

2. **நம்முடைய விசுவாசத்தைக் கட்டுவதற்குரிய வழிமுறை** - தசமபாகம் என்பதின் அர்த்தம், நமக்கு கொடுப்பேன் மற்றும் ஆதரிப்பேன் என்று கூறிய கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பது அதில் குழு நம்பிக்கையாய் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது. இந்த காரணத்தினால் தசமபாகத்திற்குரிய பொறுப்பை நாம் கூறும் போது வேதாகமம் நமக்கு சவாலாய் கூறுவது, 'அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்றும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' (மல். 3:10)

3. **இது ஊழியத்திற்கு பொருளாதார ஆதரவளிக்கிறது** - கர்த்தருடைய முழு நேர ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டவர்களுக்கு பொருளாதார ஆதரவளிப்பதாய் கர்த்தருடைய திட்டம் அமைந்தது தசமபாகம் ஆகும். 'இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்கு சுதந்திரமாக கொடுத்தேன்.' (எண். 18:24) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர்களுக்கு கொடுக்கப்பட்ட பொருளாதார ஆதரவாக கொடுக்கப்பட்ட தசமபாகம் இன்று சுவிசேஷத்தைச் சொல்லி வரும் ஊழியருக்கென்று அளிக்கப்படுகிறது.

4. **இது திருச்சபைக்கு பொருளாதார ஆதரவளிப்பதாய் இருக்கிறது** - சபைகளுடைய பொருளாதார தேவையை சந்திக்கும் படி கர்த்தர் ஏற்படுத்தின திட்டம் தசமபாகம் ஆகும். சபைகளுடைய நடைமுறைத் தேவையை சந்திக்கும்படியும், தொடர்ந்து சபையின் நிர்வாகத்திற்கு வேண்டிய பல தேவைகளுக்காகவும், சுவிசேஷ புறப்படுதலுக்கும், ஊழியத்திற்கும் என்று தசமபாகம் உபயோகப்படுத்தப்படுகிறது. இதனாலேயே கர்த்தர் இதைக் கூறும் போது, 'என் ஆலயத்திலே ஆகாரம் உண்டாயிருக்கும் படி தசம பாகங்களை எல்லாம் பண்டக சாலையிலே கொண்டு வாருங்கள்.' (மல்கி. 3:10)

கிறிஸ்துவின் மூலம் தசமபாகம் மேற்கொள்ளப்பட்டதா?

நியாயப்பிரமாணத்தின் சாபங்களை கிறிஸ்து முடிவுக்குள் கொண்டு வந்தாலும், எல்லா வித மத சடங்குகள், பலிகள், உணவு, ஒழுங்கு முறை, சுத்திகரிக்கப்படுதல், விருத்தசேதனம், பரிசுத்த நாள் போன்றவற்றை நீக்கினாலும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படை ஒழுங்கு முறையை மாற்றவில்லை.

நியாயப்பிரமாணத்தில் சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு நாம் இன்னும் கட்டப்பட்டவர்களாய் இருந்தாலும் (கலா. 4:5) அல்லது நியாயப் பிரமாண கிரியைகளின் படி தீர்க்கப்படாததாய் இருந்தாலும் சுவிசேஷத்திற்குரிய கிருபையினால் நீதிக்குரியவைகளிலும், ஆவிக்குரியவைகளில் வாழும் கிறிஸ்தவ பொறுப்புகளிலிருந்து நாம் நீக்கப்படவில்லை. 'நியாயப்பிரமாணத்தின் நீதி'யை நிறைவேற்றும்படி, நாம் ஆவிக்குரியபடி நடக்கவும் (மாம்சத்துக்குரியபடி அல்ல) அழைக்கப்பட்டிருக்கிறோம்.' (ரோமர் 8:4) இது ஒரு மிக முக்கியமான கருத்தில் கொள்ள வேண்டிய தசமபாகத்துக்குரிய உபதேசம் ஆகும். இது ஒரு மரித்துப் போனதல்ல, முழு இருதயத்தோடும் கர்த்தருக்கென்று ஆவிக்கேற்ற சட்டபூர்வமான செயலாகும். நம்முடைய ஆவிக்குரிய உக்கிராணத்துவத்தின் பொறுப்பை உணர்த்துவதாகவும், நேர்மை, உண்மை, நன்றி, இருதயப்பூர்வமான அர்ப்பணிப்பாகவும் இருக்கிறது. மாம்சத்துக்குரிய பொருளாசை, பேராசை, சுயநலம் போன்றவற்றிற்கு இது சவாலிடுகிறதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் இயல்புகளை நம் இருதயத்திலிருந்து வெளிப்படுத்துகிற வெளியரங்கமான செயலாய் தசமபாகம் இருக்கிறது.

இயேசு என்ன கூறினார்?

அநேகருடைய நம்பிக்கைக்கு முரணாக தசமபாக கோட்பாடுகளுக்கு மாறாக இயேசு எதையும் கூறவில்லை. அவர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தையம் அங்கிகாரத்தையும் பதியப்பண்ணும்படி மத்தேயு சுவிசேஷத்தில் தம் வாய்மொழியாகக் கூறும் போது: தசமபாகத்தைத் தவறாக பயன்படுத்திய வேதபாரகரையும் பரிசேயரையும் நோக்கி, 'மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள். இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்.' (மத். 23:23) பரிசேயர் மற்றும் வேதபாரகருடைய ஆவிக்குரிய பொய் பித்தலாட்டத்தை கடுமையாக கிறிஸ்து கண்டித்து உணர்த்தினாலும், ஆண்டவருக்குக் கொடுக்கிற காரியத்தில் உண்மையும், ஜாக்கிரதையுமாயிருக்கக் கூறியதிலிருந்து அதை அவர் நிறுத்தவோ அல்லது ஒழிக்கவோ செய்யவில்லை என்பது தெளிவாக விளங்கும்.

ஆபிரகாமுடைய மாதிரி

வேதாகமம் ஆபிரகாமை 'விசுவாசிகளின் தகப்பன்' என்று (ரோமர் 4:11) அழைக்கிறது. மேலும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் 'ஆபிரகாமின் பிள்ளைகள்' (கலா. 3:7) என்றும் கூறுகிறது. நாம் அவருடைய ஆவிக்குரிய விதையாய் இருக்கிறோம்.

ஆபிரகாம் ஆவிக்குரிய முன் மாதிரியை நமக்கு முன் வைத்து மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்ததின் மூலம் கொடுத்தலின் முக்கியத்துவத்தை நமக்கு முன் வைக்கிறார். (ஆதி. 14:20) இயேசு கிறிஸ்துவின் தெளிவான மாதிரியாய் மெல்கிசேதேக்கை வேதாகமம் நமக்கு காண்பிக்கிறது. அவர் 'சமாதானத்தின் ராஜா, தாய் தகப்பன் அற்றவர், வம்ச வரலாறு இல்லாதவர், அவருடைய வாழ்க்கையின் துவக்கம் மற்றும் இறுதியை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. தேவ குமாரனைப் போல தொடர்ந்து ஆசாரியத்துவம் உள்ளவராய் இருந்தார்' என்று கூறப்படுகிறது. 'கிறிஸ்துவும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றும் ஆசாரியராய் இருக்கிறார்' என்று கருதப்படுகிறார்.

தசமபாகத்திற்குரிய கர்த்தருடைய எச்சரிக்கை

தசமபாகம் செலுத்தாதற்கு விரோதமாய் வேதம் நம்மை கடுமையாக எச்சரிக்கிறது: 'மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.' (மல். 3:8,9)

கர்த்தர் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை செலுத்தாமல் இருக்கிறவர்களுடைய குணத்தை கடுமையாக கண்டித்து அவர்களை திருடர் என்று கூறுகிறார். தசமபாகத்தை நாம் முதலாவது இடத்தில் வைக்காவிட்டால், கர்த்தரை சரியாய் கனம்பண்ணுவதை மறுத்து, பின்பு அவருடைய ஆவிக்குரிய போதகத்தைக் கருத்தில் கொண்டு இருந்தாலும் நம்முடைய செயல் ஆவிக்குரிய காரியங்களைத் திருடுகிறதாய் இருக்கிறது. நம்முடைய சுயநல விருப்பத்தினால் தசமபாகத்தை தற்காலிக சந்தோஷத்திற்கென்று செலவழிப்பதின் மூலம் நம் இருதயத்தின் ஆழத்தில் உள்ள பொருளாசை, பேராசை, அநீதி, அநியாயம், இச்சை, சுயத்தை சார்ந்திருத்தலை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

மக்கள் ஏன் தசமபாகம் செலுத்தாதிருக்கின்றனர்?

<u>பலவித காரணங்களால் தசமபாகத்தின் உக்கிராணத்துவத்தில் மோசமான நிலையில் இருக்கின்றனர்:</u>

1. **அறியாமை** - சிலர் போதுமான வேதாகம போதனைகள் கூறும் ஆவிக்குரிய உணர்த்துதல் இல்லாததினால் தசமபாகக் கோட்பாட்டிற்கு ஏற்றபடி தங்கள் வாழ்க்கை முறையை சரி செய்து கொள்ளாது இருக்கின்றனர்.

2. **சுய நலம், மாம்சீகம் மற்றும் பேராசை** - மாம்ச ஆவியின் பலனால் தசமபாகம் செலுத்த தவறுகின்றனர். கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்றபடி நம்முடைய பணத்தை முழுவதும் கர்த்தருக்கு அர்ப்பணிக்கத் தவறுவதின் மூலம் நாம் இச்சை மற்றும் மாம்சத்திற்கு அடிமைபட்டவர்களாய் இருக்கிறோம்.

3. **அவ நம்பிக்கை மற்றும் அவிசுவாசம்** - சில கிறிஸ்தவர்கள், நம்முடைய தேவைகள் அனைத்தும் கர்த்தரால் சந்திக்கப்படும் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பாதுகாப்பு உணர்வுக்குள் வராததால் தசமபாகம் செலுத்தாது இருக்கின்றனர். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதற்கு பதிலாக தங்களுடைய பணம், உலக சொத்துக்கள், இயற்கையான தகுதிகள் ஆகியவற்றை சார்ந்து இருக்கின்றனர்.

4. **நன்றியறிதல் இல்லாத ஆவி** - இருதயத்தின் ஆழத்தில் கிறிஸ்து அவர்களுக்காக செய்தவற்றிற்கு நன்றி செலுத்தத் தவறி வஞ்சிக்கிற ஆவி உடையவர்களாயும், சுய நலமாய் கஞ்சத்தனம் உடையவர்களாய், நன்றியோடு சபைக்கும், கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கும், சுவிசேஷ பணிக்கும் ஆதரவு அளிக்காதவர்களாய் இருக்கின்றனர்.

தசமபாகம் செலுத்தாததின் பலன் என்ன?

தசமபாகத்தின் மூலம் கர்த்தரை கனம் பண்ணாது இருப்பதின் மூலம் அநேக பின்விளைவுகள் ஏற்படும். ஒருவர் தன் வாழ்க்கை முழுவதும் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணிக்க துணிகரமாய் மறுக்கும் போது, அவர் பலமடைந்தவராகவோ, வெற்றியுள்ள கிறிஸ்தவராகவோ மாற முடியாது. தம்முடைய பணம் மற்றும் உடைமைகளை கிறிஸ்துவுக்கு செலுத்த விருப்பம் இல்லாதிருப்பது நம் ஆவியில் உள்ள சுய நலத்தையும், அவ நம்பிக்கையையும், அநீதியையும், பேராசையையும், குறிக்கிறதாய் இருக்கும். ஆரோக்கியமான ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாய் கஞ்சத்தனம், மாம்சத்துக்குரிய மனநிலை இருக்கும். 'வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடையவாரும் உண்டு.' (நீதி. 11:24) என்று வேதம் இவர்களைக் குறித்து கூறுகிறது.

கர்த்தர் நமக்கு அளிக்கும் பொருளாதார வசதியைக் குறித்து நம்ப மறுக்கும் கிறிஸ்தவன் தன் கிறிஸ்தவ விசுவாசத்தின் அனுபவத்தில் சோகை நிறைந்தவனாய் இருப்பான். தன்னுடைய உடைமை மற்றும் வருமானத்தை பயன்படுத்துவதில் கர்த்தருக்கு தமது அன்பையும், தமது நன்றியையும் வெளிப்படுத்தாத மனிதன் அவருடைய ஐசுவரியமான சந்தோஷம், உற்சாகப்படுத்துதல், நன்றியறிதல், கர்த்தருக்கு தமது வாழ்க்கையை ஒப்புக் கொடுப்பதின் மூலமாக கனம் பெறுதல் ஆகியவற்றை அறியாதிருப்பான்.

தசமபாக பங்காளருக்கான (தசமபாகம் செலுத்துபவர்) வாக்குத்தத்தங்கள்

வியாபார நோக்கத்தோடு (அர்த்தம்:போராசையினால்) நாம் தசமபாகம் செலுத்தாமல் இருந்தாலும் கர்த்தர் கிருபையாய் உண்மையாய் நம்மை ஆசீர்வதிப்பதாயும், உண்மையான தசமபாக பங்காளருக்கென்று (தன்னுடைய எல்லா வருமானத்திலும் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்துபவர்) ஆசீர்வாதமான வாக்குதத்தங்களைக் கூறியிருக்கிறார்.

1. **மாம்ச மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்** - தசமபாகம் செலுத்துபவருக்கு தம்முடைய அபரீதமான ஆசீர்வாதங்களைத் திரும்ப அளிப்பதாக கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார்: "நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல். 3:10) "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. (நீதி. 3:9,10) ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்." (2 கொரி. 9:6. மேலும் நீதி. 11:25; லூக். 6:38 பார்க்கவும்)

2. **தெய்வீக பாதுகாப்பு** - 100% தில் 90% தை (கர்த்தருக்கு கொடுத்தது போக மீதியான மற்ற ஊழியத்திற்கு உரியது)யும் உண்மையாய் தசமபாகம் செலுத்துவோருக்கு கர்த்தர்

நம் உடைமை மற்றும் எல்லாவற்றையும் இறுதிவரை காத்துக் கொள்வதாய் வாக்களித்திருக்கிறார்.

'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள் ..... பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக் கொடி பலமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' (மல். 3:10,11)

3. **வெளியரங்கமான கனம் பெறுதல்** - உண்மையிலேயே நம்முடைய தசமபாகம் என்பது கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கென்று முதலீடு செய்வதில் அதன் பலனை நித்தியத்திற்கென்றும் பரலோக வெகுமதியாகவும் பெறுகிறோம். 'பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.' (மத். 6:19-21)

நமது தசமபாகத்தை எங்கு செலுத்த வேண்டும்?

'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி உங்கள் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்' என்று வேதாகமம் தெளிவாக நம்மை உற்சாகப்படுத்துகிறது. (மல். 3:10) பண்டகசாலை என்பது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய காரியங்களை அளிக்கும் கர்த்தருடைய வீடே ஆகும். இங்கு பண்டசாலையாக குறிப்பிடுவது நாம் எங்கு மேய்ச்சலையும், அக்கறையையும், ஆதரவையும், போதனையும், ஐக்கியத்தையும் பெறுகிறோமோ அந்த உள்ளூர் சபையே ஆகும். நாம் எந்த சபையில் கலந்து கொள்கிறோமோ, எங்கு ஐக்கியம் வைத்திருக்கிறோமோ? எங்கு உறுப்பினராய் இருக்கிறோமோ, எங்கு அர்ப்பணித்திருக்கிறோமோ அங்கு தசமபாகம் செலுத்தும்படி கர்த்தர் கூறுகிறார். மற்ற தகுதி வாய்ந்த அல்லது தர்ம ஸ்தாபனங்களுக்கோ, நிறுவனங்களுக்கோ, உள்ளூர் சபைக்கு புறம்பாக தசமபாகம் செலுத்தக் கூடாது. தொலைக் காட்சி மற்றும் வானொலி ஊழியர்கள், ஊழியங்கள், அனாதை இல்லங்கள் அல்லுத மற்ற ஆவிக்குரிய திட்டங்களுக்காக உங்கள் பணத்தை அனுப்பக் கூடாது. இந்த வகையான ஆதரவுகள் உங்கள் தசமபாக பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாய் சொந்த விருப்பக் காணிக்கையாய் அனுப்ப வேண்டும்.

தசமபாகம் என்பது கர்த்தருக்குரியது. (லேவி. 27:30) அது நமக்குரியதல்ல. ஆகையால் அதை நம் விருப்பப்படி செலுத்தக் கூடாது. நாம் எங்கு விரும்புகிறோமோ அங்கு அனுப்புவதற்கு நமக்கு உரிமை இல்லை. கர்த்தர் தெளிவாக பண்டசாலைக்கு கொண்டு வரும்படிக் கூறுகிறார் - நீங்கள் கூடி வருகிற உள்ளூர் சபைக்கு, உண்மை எதுவெனில் கர்த்தருக்கு நாம் தசமபாகம் செலுத்தும் போது (நம் வருமானத்தில் 10%) நாம் கர்த்தருக்கென்று ஒன்றும் செலுத்துவதில்லை; அவருக்குரியதை மட்டுமே அவருக்குத் திரும்ப கொடுக்கிறோம். உண்மையான கர்த்தருக்கு கொடுத்தல் என்பது 10% தசமபாகம் கொடுப்பதற்கு பின்பு கொடுக்கிற மற்ற காணிக்கைகளே ஆகும்.

தசமபாகத்தை குறித்த 10 பொதுவான கேள்விகள்

பொதுவாக தசமபாகத்தை குறித்து பலவித கேள்விகள் எழும்பும். மிகவும் அடிக்கடி எழும்பும் சிலவற்றை இங்கு காணலாம்.

1. **என்னுடைய மொத்த வருமானம் அல்லது நிகர வருமானம் எதில் நான் தசமபாகம் செலுத்த வேண்டும்?** தசமபாகம் நமது மொத்த வருமானத்தை அடிப்படையாய் கொண்டது. (நம்முடைய சம்பளம் மற்றுமன்றி பொருளாதார வெகுமதிகள், நிலை வைப்புகளிலிருந்து பெறும் வட்டிகள், நமது சொத்திலிருந்து கிடைக்கும் வாடகை வருமானம் முதலியன) நம்முடைய பிடிப்புகளும் வேறொரு வடிவத்தில் நமக்கு நன்மை தருகிற வருமானம் ஆகும். ஒருவர் சுய தொழில் செய்பவராயிருந்தால் அவருடைய நிகர வருமானத்தில் தசமபாகம் செலுத்த வேண்டும்.

2. என்னுடைய கடன்களுக்கு முதலில் நான் செலுத்த வேண்டாமா? முதல் பாகம் கர்த்தருக்குரியது, கடனீந்தோனுக்கு அல்ல. பொதுவாக அநேக கடன்கள் உன்னுடைய மோசமான உக்கிராணத்துவம் மற்றும் தவறான முதன்மைக்கு உரிய அடையாளமாகும். பண அளிப்பு மற்றும் பொறுப்புக்கு உரிய முதலாம் வழி தசமபாகம் செலுத்துவதாகும்.

3. தசமபாகம் என்னால் செலுத்த முடியாதிருக்கும் போது என்ன? உண்மையிலேயே கிறிஸ்தவனால் தசமபாகம் செலுத்த முடியாமல் இருக்க முடியாது. ஏழைகள் கொடுப்பது அல்லது தசமபாகம் செலுத்துவதற்கான விதி விலக்கு வேதத்தில் எங்கும் கூறவில்லை. 2 காசு வைத்திருந்த ஏழை விதவையின் தாராளத்தை இயேசு குறிப்பிடுகிறார். (லூக். 21:4) தசமபாகம் செலுத்தாது இருப்பதைக் காட்டிலும், ஏழைகள் தசமபாகம் செலுத்துவது சிறந்ததாகும். நம்முடைய வறுமை மற்றும் கடன்களிலிருந்து வெளியே வரும் வழி தசமபாகம் செலுத்துவதாகும். இது ஒரு தெய்வீக சட்டமாகும். (லூக். 6:38; மல். 3:10) நம்முடைய வறுமையை விட்ட வெளியேறுவதற்கான சரியான வழி இதுவாகும். நாம் ஏழையாகவோ பணக்காரனாகவோ இருந்து தசமபாகம் செலுத்தாமல் 100% செலவழிப்பதைக் காட்டிலும் அதிகமாக 90% ல் (கர்த்தருக்கென்று காணிக்கையாய் அதிகமாக கூடிய பாகம்) நன்றாக வாழலாம். தசமபாகம் செலுத்தாமல் இருப்பதே வறுமையைக் கொண்டு வரும்.

4. முன்பு நான் தசமபாகம் செலுத்தவில்லையே அவற்றை நான் திரும்ப செலுத்த வேண்டுமா? இன்று உங்களை உண்மையாய் ஒப்புக் கொடுத்து தசமபாகம் செலுத்துவதே முக்கியமான காரியமாகும். கர்த்தர் உங்களை அதிகமாய் ஆசீர்வதிக்கும்போது நீங்கள் அதிகமாய் கர்த்தருக்குக் கொடுத்து அவரை கனப்படுத்தலாம். முன் நாட்களில் நீங்கள் செலுத்தாத தசமபாகத்திற்காக உண்மையாய் மனந்திரும்பி புதிதாய் உற்சாகமாய்க் கொடுக்கத் தொடங்கும் போது கர்த்தர் உங்களை மன்னித்தார் என்ற ஆறுதலை அடைய முடியும். பின்னான காரியத்தைத் திரும்பிப் பார்க்காமல், உங்களுக்கு முன்னாக உள்ள காரியத்தில் உண்மையோடும், அர்ப்பணிப்போடும் உறுதியாய் இருங்கள்.

5. கர்த்தர் உற்சாகமாய் கொடுப்பதை விரும்புவதால் எனக்கு பிரியமான நேரத்தில் கொடுக்கலாமா? முடியாது. சோதனையை எதிர்ப்பது, மனிதர்களை நேசிப்பது, கடன்களை செலுத்துவது, கர்த்தரை விசுவாசிப்பது, கர்த்தருக்கு ஊழியம் செய்வது அல்லது தசமபாகம் கொடுப்பது முதலியவற்றில் நமக்கு விருப்பமானபடி செய்ய முடியாது. நம்முடைய கொடுக்கும் பழக்கம் கடினமானதாய் இருக்கலாம் அல்லது கொடுப்பது நமக்கு சந்தோஷமில்லாததாய் இருக்கலாம். ஆனால் கொடுப்பதை நிறுத்த முடியாது. இதற்குத் தீர்வு நம்முடைய தவறான இருதயத்தின் எண்ணங்களை - (தசமபாகம் கொடுக்காமல் இருப்பது) விட்டு மனந்திரும்ப வேண்டும். நாம் கர்த்தரை நோக்கி நம்மை மன்னிக்கும்படியாகவும், நன்றியறிதலுள்ள ஆவியைத் தரும்படியாகவும், நமது சந்தோஷத்தைப் புதுப்பிக்கும்படி உற்சாகத்தோடு, உதாரகுணத்தோடு புதுப்பிக்கும் மனநிலையை கேட்க வேண்டும்.

6. நான் தசமபாகம் கொடுப்பதை கணக்கில் வைத்துக் கொள்ளலாமா? ஆம்! உக்கிராணத்துவத்துக்கு தேவையானது உண்மை. ஒழுக்கம் மற்றும் உறுதி. நம்முடைய தசமபாகத்தைக் குறித்த சரியான பதிவேடு வைத்துக் கொள்ளும் போது நம்முடைய உக்கிராணத்துவ பொறுப்பை மேம்படுத்துவதாய் இருக்கும். கர்த்தருக்கு முன்பாக நமக்குள்ள பொருளாதார பொறுப்பை சமநிலையில் காத்துக் கொள்ள உதவியாய் இருக்கும். நம்முடைய வரவு செலவுகளை தசமபாகம் மற்றும் காணிக்கை கொடுக்கும் கோட்பாட்டின்படி வடிவமைக்கப்படவும், நாம் தசமபாகம் கொடுப்பதில் வளர்ந்து கொண்டே இருக்கவும் இது உதவியாய் இருக்கும்.

7. எப்பொழுது தசமபாகம் கொடுக்க வேண்டும்? எப்பொழுதெல்லாம் வருமானம் கிடைக்கிறதோ, உடனடியாக ரொக்கமாகவோ அல்லது காசோலையாகவோ கொடுத்து விடுவது உறுதியான மற்றும் நிலையான தசமபாகம் செலுத்துவதற்கு பாதுகாப்பான ஒன்றாகும். இல்லையெனில், செலவழித்து விடலாம் அல்லது மறந்து போகக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம்.

8. நான் அவிசுவாசியை திருமணம் புரிந்திருக்கும் போது தசமபாகம் கொடுக்க வேண்டுமா? ஆம்! உங்கள் கணவன் அல்லது மனைவியினுடைய வருமானத்திற்கு நீங்கள் பொறுப்பாளியாய் இல்லாவிட்டாலும் உங்களுடைய தனிப்பட்ட பணியினால் ஏற்படும் வருமானம் அல்லது மற்ற வருமானங்களுக்கு தசமபாகம் கொடுக்க நீங்கள் பொறுப்பாளியாயிருக்கிறீர்கள்.

9. ஏற்கனவே அதிகமாய் கொடுத்துக் கொண்டிருக்கும் போது தசமபாகம் என்ற ஒன்றை வற்புறுத்தலாமா? பொதுவான ஆவிக்குரிய விவாதமாய் இது காணப்பட்டாலும், உண்மையிலேயே கொடுப்பதில் உள்ள அவருடைய கஞ்சத்தனத்தை புத்திசாலித்தனமாக நிரூபிக்கிறதாய் இருக்கிறது. சில விலக்குகளைத் தவிர தசமபாகம் தருவதை தவிர்ப்பதற்கு அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் சாக்கு போக்காகும். பத்தில் ஒரு பாகமாகிய குறைந்த ஒன்றையே அவர்களிடம் எதிர்பார்க்கிறது. தசமபாகம் என்பது ஆவிக்குரிய சட்டமும் கொடுப்பதில் அடிப்படை பகுதியை கருத்தில் கொண்ட பொருளாதார ஒழுங்குமாகும்.

10. யார் தசமபாகம் கொடுக்க வேண்டும்? ஒவ்வொருவரும் ஊழியர்களும் தங்களுடைய சம்பளம் மற்றும் பண வெகுமதிகளில் தசமபாகம் செலுத்த வேண்டும். (எண். 18:25-28) இந்த பழக்கம் மற்றும் ஒழுக்கத்தை சிறு வயதிலிருந்தே நம் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

முடிவுரை

மனிதன் உருவாகின நாளிலிருந்தே கைக் கொள்ளப்பட்டு வந்த கொடுத்தலின் கோட்பாடாகிய தசமபாகத்தை இந்த பகுதியில் நாம் கவனமாய் ஆராய்ந்து வந்தோம். மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே கர்த்தருடைய மனிதர்களின் பழக்கத்தில் தசமபாகம் கொடுத்து வந்ததைக் கண்டோம். மேலும், இயேசு கிறிஸ்து தசமபாகம் கொடுப்பதை விமர்சித்தார்.

கிறிஸ்தவர்கள் தசமபாகத்தை எளிதான ஒன்றாக எடுத்துக் கொள்வது அல்லது மேற்கொள்வது அல்லது செய்யத் தவறுவது கூடாது. இதற்கு உண்மையாய் கீழ்ப்படியும் போது இதன் பலனாக நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெறலாம். இது தெய்வீக சட்டமாய் இருப்பதால் இதைச் செய்யாமல் அசட்டை செய்யும்போது இதன் பின் விளைவுகளையும் சந்திப்போம். ஒரு கிறிஸ்தவன் இந்த கோட்பாட்டின்படி அவன் ∴ அவள் செலுத்தாமல் இருந்தால் இதுவே செலுத்தத்தக்க சரியான நேரம். கர்த்தருடைய வார்த்தையின் ஆலோசனைப்படி அவருடைய வாக்குதத்தத்தையும் விசுவாசித்து நாம் எடுக்க வேண்டிய முக்கியமான தீர்மானம் வாழ்நாள் முழுவதும் செய்யக் கூடிய அர்ப்பணிப்புமாகும் தசமபாகம்.

உன் வாழ்க்கையில் முதன்மைத்துவத்தை நிறுவுதல்

கர்த்தருடைய முதன்மைத்துவத்தையே நாம் நம் வாழ்க்கையில் நாட வேண்டும். அவருடைய திட்டத்தை நாம் பின்பற்றும் போது நம் குடும்பம் மற்றும் ஊழிய பொறுப்புகளில் சரியான சமநிலை உடையவர்களாய் இருப்போம். 'நாங்கள் ஞான இருதயம் உள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை (நமது வாழ்நாளை) எண்ணும் (நிதானிக்கும்) அறிவை எங்களுக்கு போதித்தருளும்.' நமது வாழ்க்கையில் முதன்மைத்துவத்தை வடிவமைப்பதற்கு இது முக்கியமானதாகும். எது முக்கியமானது என்பதை நீங்கள் தீர்மானிக்கும் போது எல்லாம் சரியான இடத்திற்கு வந்து விடும்.

கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் என் வாழ்விற்கு உதவியாய் இருந்தது. கர்த்தரிடத்திலிருந்தும், அவருடைய வாழ்க்கையிலிருந்தும் உங்களுக்கான சொந்த வழிமுறைகளைக் கண்டுபிடிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

முதன்மை எண். 1:- கர்த்தருக்கான நேரம்.
முதன்மை எண். 2:- குடும்பத்திற்கான நேரம்.
முதன்மை எண். 3:- ஊழியத்திற்கான நேரம்.

கர்த்தரோடுள்ள நேரம்

கர்த்தரோடுள்ள நேரம் என்பது மிகவும் விரிவானது. அவரோடு நாம் நேரம் செலவழிக்காவிட்டால் அந்த நாளை கையாள கிருபையை கண்டுபிடிக்க முடியாது. இது உங்கள் காருக்கு நீங்கள் பெட்ரோல் நிரப்புவது போன்றது. பெட்ரோல் எவ்வளவு இருக்கிறது என்று அடையாளம் காட்டும் கருவி "E" (வெறுமை) என்று குறிப்பிடும் போது நீங்கள் பெட்ரோலை நிரப்பாவிட்டால் நீங்கள் அதிக தூரம் காரை ஓட்ட முடியாது. ஆவிக்குரிய விதமாக இதைக் கூறும்போது உங்கள் வாழ்வின் பல பகுதிகளில் கர்த்தருடைய வழி நடத்துதலைப் பெறத் தவறும் போது பொறுமை, சந்தோஷம், சமாதானம், சுய கட்டுப்பாடு ஆகியவற்றை இழக்க நேரிடும். உங்கள் நாளை ஜெபத்தோடும் கர்த்தருடைய வார்த்தையோடும் துவங்கும் போது நீங்கள் சர்வாயுத வர்க்கத்தைத் தரித்தவர்களாயும் உங்கள் ஆவியும் பரிசுத்த ஆவியின் கனிகளால் நிரப்பப்பட்டதாயும் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு உங்கள் இருதயம் விழிப்புள்ளதாயிருக்கும். நான் வைத்திருக்கிற ஜெப கையேட்டின்படி அனுதினமும் ஜெபிப்பதால் என் வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும் அது நிரப்புகிறதாய் இருக்கிறது.

அனுதினமும் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் நீங்கள் ஜெபிக்கும் போது - கர்த்தருடைய ஞானத்தால் நிரப்பப்பட்டவர்களாயும் அவருடைய ஆவியினால் பெலப்பட்டவர்களாயும் வாழ்க்கையிலுள்ள பெருமை, கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சைகளிலிருந்து உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ளப்பட்டவர்களாயும் இருப்பீர்கள். உங்களுக்காகவும், உங்கள் துணைவருக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தருடைய வார்த்தையின் படி உங்கள் ஊழியத்திற்காகவும், உங்கள் சபையின் உறுப்பினர்களுக்காகவும் ஜெபியுங்கள். அதைப் போல் உங்கள் நகரம், தேசம் மற்றும் தலைவர்களுக்காகவும் ஜெபியுங்கள். அதன் பலனைக் காண்பீர்கள்!

கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கவும் அதில் கற்றுக் கொள்ளவும் தவறாமல் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இதில் பிசாசு கூறுவதை கேட்காதீர்கள். உன்னை அதிக வேலையினால் நெருக்கி, உன்னை ஜெபிக்க முடியாதபடி செய்வான். இதனால் நீ பெலவீனமாகி அவனை எதிர்த்து போராட உன்னால் முடியாது. உன்னுடைய ஆவிக்குரிய போராட்டத்தில் வசனம் என்ற பட்டயத்தை காத்துக் கொள்ள கவனமாயிரு.

அநேக நேரங்களில் நான் ஒரு மணி நேரத்தை ஜெப வேளையாய் வைத்துக் கொண்டேன். (மத். 26:40-41). இந்த வேளைகளில் நான் தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளில் அல்லது வேதத்தின்படி ஜெபித்தேன். பின்பு என்னுடைய வேத வாசிப்பு மற்றும் படிப்பினையை சாயங்காலங்களில் அல்லது எனக்கு வசதியான நேரங்களில் வைத்துக் கொண்டேன். இயேசு தன் பிதாவோடு தனிமையில் இருக்கும் போது நாம் அவ்வாறு செய்வதும் எத்தனை அவசியம்!

நேரம் உங்களுக்குத் தடையாய் இருந்தால் சோர்ந்து போகாதிருங்கள். சில நேரங்களில் சிறு குழந்தைகளினால் உங்களுக்கு அவ்வாறு நேரிடும். அவர்கள் புறப்பட்டுச் சென்ற பின் கர்த்தரோடே தனித்திருங்கள். நீங்கள் வேறு காரியங்களை செய்து கொண்டே கூட ஜெபிக்க முடியும். நீங்கள் அமர்ந்து இருந்து கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால் சில வேளைகளில் இந்த அமர்ந்திருக்கும் நேரங்களில் இடையூறுகள் ஏற்படலாம். ஆனால் அவரோடு நேரம் செலவழிப்பதில் உணர்வுள்ளவர்களாய் இருங்கள். அதிகாலையில் அவரோடு நேரம் செலவழிப்பதில் எப்போதாவது நான் தவறும்போது உடனே நான் மனந்திரும்பி அவரிடம் மன்னிப்பைக் கேட்டு மறுநாளில் அதிகாலையில் எழும்ப உதவி செய்யுமாறு கேட்பேன். இதுவே முக்கியமானது குற்ற உணர்வை அனுமதிக்காதே. அந்த நான் முழுவதும் நாம் தோல்வியாய் உணரச் செய்வது பிசாசுக்கு விருப்பமான ஒன்று. அவனுக்கு இடம் கொடாது இருங்கள். பிசாசை எதிர்த்து கர்த்தருக்கு அருகில் வரும் போது, அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.

கர்த்தர் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் உங்களை புரிந்து கொண்டு உங்களை நேசிக்கிறார். 4 குழந்தைகளை வைத்துக் கொண்டு நான் கர்த்தரைத் தேடுவதை ஒரு தாயினுடைய வாழ்க்கையிலிருந்து அவளுடைய திறனை கர்த்தர் புரிந்து கொள்கிறார். நீங்கள் நாள் முழுவதும் கர்த்தரைத் தேடுங்கள். அவர் கவனித்துக் கேட்கிறார். ஒரு முறை என்னுடைய பாரங்களின் பொறுப்புகளினால் சோர்வாய் உணர்ந்த போது கர்த்தர் என் இருதயத்தோடு பேசியது என் நினைவில் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய சீஷரோடு பேசின வேத வார்த்தைக்கு நேராக கர்த்தர் என் கவனத்தைத் திருப்பினார். 'வனாந்திரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும் படி போவோம் வாருங்கள் என்றார் ....' (மாற்கு 6:31) இயேசுவும் அவருடைய சீஷர்களும் தொடர்ந்து அந்த மக்களுக்கு ஊழியம் செய்த படியால் மறுபடியும் தங்களை நிரப்பிக் கொள்ளும்படி 'அவர்களை விட்டுப் பிரிந்து' செல்ல வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். 'நீ பிரிந்து செல்வதற்கு முன்பாக சற்றே தனித்து இளைப்பாறு என்று என்னோடு பேசினார். நான் கட்டப்படத்தக்க, புதுப்பிக்க, மறுபடியும் நிரப்பப்பட, அவரோடு தனிமையில் நேரம் செலவிடும் தன்மை அவசியம் என்பதை உணர்ந்து கொண்டேன். சில நேரங்களில் நம் கணவரோடு நேரம் செலவிட வேண்டும் என்றாலும் கர்த்தருடைய நேரத்தை அது எடுத்துக் கொள்ளக் கூடாது. அது கர்த்தரோடு தனிமையில் நேரம் செலவிடத்தக்க இடம் ஒன்று தேவை என்பதை என் வாழ்வில் ஒருமுறை அறிந்து கொண்டேன். ஆ, அவருடைய பிரசன்னத்தின் இனிமையை உணரவும், என் இருதயத்தின் உணர்வுகளை அவரிடம் கொட்டும் போது சிரிக்கவும் அழவும் இருதயத்தோடு அவர் பேசும் ஆறுதலான உற்சாகமான வார்த்தையை கேட்பது மிகவும் இனிமையானது. கர்த்தரோடு நீங்கள் செலவழிக்கும் நேரம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்க பலத்தைத் தருவதாகும். 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்' (நெகே. 8:10) என்று வேதமும் கூறுகிறது. நான் கடினமான சூழ்நிலையைக் கடந்து சென்ற போது, என் தியான நேரத்தில் சோர்வாய் உணர்ந்தது எனக்கு நினைவில் இருக்கிறது. ஊழியத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியதிலிருந்து என் சரீரத்தில் பிரச்சனைகள் வரத் தொடங்கியது. அதிகாலையில் தொடக்கத்திலே என் பாரத்தை அவர் மேல் சுமத்தினாலும் சாயங்காலத்தில் அது திரும்பவும் என்னை கஷ்டப்படுத்தினதை கர்த்தர் எனக்கு உணர்த்தினார். ஆகவே தினமும் சாயங்காலம் தியானம் செய்ய ஆரம்பித்தேன். இந்த கவலையினால் எனக்கு சிறிய இருதய பிரச்சனை உண்டாயிற்று. என் இருதயத்தில் அவர் நடனம் செய்து மகிழக் கூறினாலும் அவ்வாறு செய்ய எனக்கு விருப்பமில்லை. மேலும் அவர் என் இருதயத்தில் சங்கீதக்காரன் தாவீதைப் போல 'கர்த்தருக்குள் என்னை திடப்படுத்திக்' கூறினார். (1 சாமு. 30:6) ஆகவே நான் 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே என் பெலன்' என்று பாடி நடனமாடத் துவங்கினேன். இதனால் எனக்குள் விடுதலையை உணர்ந்தேன். சங். 40:3-யை ஆண்டவர் என்னோடு பேசி கர்த்தருக்கென்று புதுப்பாட்டை பாடும்படிச் செய்தார். 'நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். ...'

இரு வாரங்களுக்குள்ளாக என் சரீரப் பிரச்சனைகளிலிருந்து நான் குணமானதை உணர்ந்தேன். அதிக பொறுப்பை சுமக்கும் பாரம் உங்கள் சரீரத்தைத் தாக்குவதை நீங்கள் காணலாம். அதிக பொறுப்பு, பயம், மன்னியாமை அல்லது மற்ற சாத்தானின் சூழ்ச்சிக்கு உங்களைத் திறந்து கொடுக்கும் போது மற்ற பிரச்சனைக்கு உங்களை நீங்களே திறந்து கொடுக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். நான் துன்பத்தின் நடுவிலே நடந்து சென்றாலும் கர்த்தருக்குள் சமாதானத்தையும் காரியங்கள் சரியாய் முடியும் என்று நம்பினேன். இதற்கு சில காலங்கள் எடுத்துக் கொள்ளலாம். (சங். 138:8) அவ்வாறே

கர்த்தர் செய்தார்! வேத வார்த்தையின் படி அவர் எனக்கு பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். என்னால் மறுபடியும் சந்தோஷமாய் இருக்க முடிந்ததைக் கண்டு கொண்டேன். (பிலி. 3:1; 4:4) சிறைச் சாலையில் இருக்கும் சூழ்நிலையிலும் மற்ற சோதனையான நேரத்திலும் பவுல் தொடர்ந்து களிகூர்ந்தார். கர்த்தர் எப்பொழுதும் அவரை விடுதலையாக்கினார்.

நாம் சந்தோஷமாய் இருந்தால் பலமுள்ளவர்களாய் இருப்போம் என்று இது கூறுகிறது. அவ்வாறு செய்ய உணர்வில்லாதிருக்கும் போது மகிழ்ச்சியாய் இருக்க துவங்குவது அநேக நேரங்களில் பலியாய் ஒப்புக் கொடுப்பதைப் போல் இருக்கும். சங்கீதக்காரன் தாவீது, ஆனந்த பலிகளை செலுத்தியதாகக் கூறுகிறார். (சங். 27:6) கர்த்தருடைய கிருபையை உங்களுக்காக நீங்கள் உயர்த்தும் பொழுது நீங்கள் சந்தோஷமாய் இருக்கவும், அதினால் பெலனடையவும் முடியும்.

உங்கள் குடும்பத்தோடு நேரம்

மற்ற மனிதர்களைப் போலல்லாமல் தம்பதிகள் ஒருவருக்காய் ஒருவர் நேரம் எடுத்துக் கொள்வதும், தன் குடும்பத்திற்கென்று நாளின் இறுதியை செலவழிப்பது இளைப்பாறி நம்மை புதுப்பித்துக் கொள்ள வேண்டிய நாள் ஆகியவை அவசியமானது. அதிக மின்சாரத்தைத் தொடர்ந்து செலுத்துவதின் மூலம் அது வெடித்து விடக் கூடும் என்று மின்துறை வல்லுநர் கூறுவர். வேதாகமம் மற்றும் இயற்கையின் வழிமுறையைப் பின்பற்றுவது மற்றும் ஊழியத்தில் நாம் 'வெடித்து விடுவதைத்' தவிர்க்க முடியும். ஒவ்வொரு வாரத்திலும் சில மணி நேரம் நம்முடைய ஓய்வுக்கென்றும், புத்துணர்வுக்கென்றும் எடுத்துக் கொள்ள வேண்டும். அனைவரும் ஒன்று சேர்ந்து செலவிட முடியவில்லை என்ற குற்றவுணர்வு அடைய வேண்டாம். சேர்ந்து சாப்பிடவும் அல்லது சேர்ந்து நடக்கவும் இரண்டு பேர் போதும். சில நேரங்களில் படுக்கைக்குச் செல்வதற்க முன் இரவில் சில மணி நேரம் கிடைக்கலாம். எப்பொழுது உங்களால் முடியுமோ அப்பொழுது உங்களை நீங்கள் பகிர்ந்து கொள்ளுங்கள். வார நாட்களில் சேர்ந்து ஜெபிக்க நேரத்தைக் கண்டுபிடியுங்கள். கூடுமானால் உங்கள் அதிகாலை ஜெபத்தை ஜெப நேரமாக வைத்துக் கொள்ளுங்கள். சில நேரங்களில் இரவில் படுக்கைக்குப் போகும் முன்பாக நாம் சேர்ந்து ஜெபிக்கலாம். 'ஜெபம் நெருக்கத்தை உண்டாக்கும்' என்று இதனாலேயே கூறினார். உங்கள் இருதயத்தில் உள்ளதை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளுங்கள். கணவன் மனைவிக்குள் ஜெப உடன்பாடு ஏற்படுவது அதிக வல்லமை உண்டாக்கும். (மத். 18:19,20) கணவனும் மனைவியும் ஒருவருக்காக ஒருவர் நேரம் செலவழிக்கும் முன்பு சேர்ந்து ஜெபிக்கும் ஜெபம் என்பது கடினமாய் இருக்கும். பழைய கடினங்களை விட்டு விட்டு புதிய வல்லமைக்குள் வரும்படி உங்களை வற்புறுத்துகிறேன்.

உங்கள் பிள்ளைகளுக்கென்று நேரம் செலவழியுங்கள். குடும்ப நேரத்தில் ஒரு ஒழுங்கைக் காக்க உங்கள் நாட்காட்டியில் அந்த நேரத்தைக் குறித்துக் கொள்வது அவசியமாய் இருக்கிறது. ஊழியத்திற்கென்று தேவையான நேரம் அதிகமாய் இருந்தாலும், உங்கள் பிள்ளைகளுக்கென்று நேரமும், அன்பும் அவசியம். எல்லா நாளிலும் இரவில் நீங்கள் வீட்டில் இருக்க முடியாவிட்டாலும் நீங்கள் வீட்டில் இருக்கும் நாட்களில் உங்கள் பிள்ளைகளின் தேவையை சந்திக்கக் கூடிய தரமான வேலையை அது எடுத்துக் கொள்ளும். சில மக்கள் தங்கள் உறவுகளை ஒன்று சேர்ந்து கட்டுவதற்கென்று நேரம் எடுத்துக் கொள்ளுவதற்கு பதிலாக தங்கள் சொந்த காரியங்களுக்கென்றே அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றனர்.

ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதின் மூலமாகவும், இடைபடுதல் மூலமாகவும் உறவுகளை கட்ட முடியும். ஒன்று கூடி காரியங்களை நடத்துவதின் மூலமாக இவற்றை நிறைவேற்றுவதின் வழியை உங்களால் கண்டுபிடிக்கக் கூடும். பிள்ளைகள் வளரும் போது உங்களோடு அவர்களை இணைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதில் அவர்களும் ஒரு பகுதி என்பதை உணரச் செய்யுங்கள். இதுவும் ஒருவரோடொருவர் உறவு முறையை கட்டுவிக்கும்.

இறுதியாக இணைந்து குடும்ப தியான வேளையை நிறுவுங்கள். (கணவன் மனைவி ஜெப நேரத்தைத் தவிர) அந்த நாளில் நீங்கள் இணைந்து ஜெபித்து, வேதம் வாசித்து, ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளுங்கள். ஒரு பழஞ் சொல்லில், 'சேர்ந்து ஜெபிக்கும் குடும்பம் சேர்ந்து வாழ்ந்திருக்கும்'

இது உண்மை என்று நான் நம்புகிறேன். இரவில் நம்முடைய குடும்ப தியான வேளையை வைத்துக் கொள்ளலாம். பொதுவாக எனது கணவர் வேதம் வாசிப்பார். சில நேரங்களில் அதைக் குறித்து நாங்கள் பேசுவோம். பின்பு நாங்கள் ஜெபித்து எங்கள் பிள்ளைகளை படுக்கைக்கு அனுப்புவோம். பிள்ளைகள் சிறு பிள்ளையாய் இருக்கும் போது இது மிகவும் ஆர்வமாய் இருக்கக் கூடும்! பொதுவாக அநேக உற்சாகமான உரையாடல்களும் இதில் இருக்கும்!

ஊழியத்திற்கான நேரம்

நாம் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கும் போது நம்முடைய வேலை நேரம் என்பது ஒழுங்கான காலை 9 மணி முதல் சாயங்காலம் 6 மணி வரை என்று இருக்காது. நமது அழைப்புக்கேற்றவாறு நமது நேரமும் மாறுவதாய் இருக்கும். எதிர்பாராத வேளைகளில் நாம் அழைக்கப்படலாம் அல்லது பல இரவுகள் சிறப்பு ஆராதனைக்கென்று நாம் செல்லலாம். எதுவாயிருந்தாலும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின் படி நாம் நெகிழ்ச்சியும் உணர்வுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். எங்கு நீ செல்ல வேண்டும், எப்போது நீ ஜெபிக்க செல்ல வேண்டும் மற்றும் எப்போது செல்லக் கூடாது என்று உன் ஆவியில் உணர்ந்து கொள்வதிலும், உன் துணைவரோடு அதைப் பகிர்ந்து கொள்வதிலும் உண்மையுள்ளவனாய் இரு. நானும் என் கணவனும் கூட்டத்திற்கு செல்வதற்கு பதிலாக வீட்டில் தங்கி இருப்பது அவசியமாய் உணர்ந்த நேரங்கள் உண்டு. பிள்ளைகள் சோர்ந்து அவர்களோடு அநேக நேரங்கள் தங்கி இருக்கக் கூறுவதைப் பொதுவாக காண முடியும்.

உங்கள் வீட்டிற்கு தொலைபேசி அழைப்புகள் வரும். எல்லா தொலைபேசி அழைப்புகளும் உடனடியாக அவர்கள் யார் என்றும், அவர்கள் தேவை என்னவென்றும் கூறுவதாய் இருக்கும். சில நேரங்களில் அவர்கள் போதகரிடம் மட்டுமே பேச விரும்புவர், ஆனால் அநேக நேரங்களில் நீங்களோ அல்லது மற்றவரோ அதைக் கையாளக் கூடும்.

தொலைபேசியில் ஆலோசனைக் கூற உன்னுடைய சபையில் சிலரைப் பயிற்றுவித்து நிறுவும்படி கர்த்தர் உன்னை வழி நடத்துவாராக. இந்த வழியில் நீ அநேக தொலைபேசி அழைப்புகளைப் பெறும் போது சில அழைப்புகளை மற்றவர்களுக்கு அனுப்பி உதவி செய்யக் கூறலாம். நான் அவர்களுக்கு ஆலோசனைக் கூறும் போது, அவர்களை அதிகம் பேசச் சொல்லி உற்சாகப்படுத்தும் கிருபையின் வரத்தை எனக்குக் கொடுத்திருக்கிறார். எனது கணவர் இரவு சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வரும் போது உணவு ஆயத்தமாய் இருக்கும். ஆனால் தொலைபேசியில் யாரோ ஒருவருக்கு ஆலோசனை கூற நேரிடும். நான் மக்களுடைய தேவையை எப்படி அடையாளம் கண்டு கொள்வது, ஜெபிப்பது, அவர்களோடு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வது, தயவாய் விருப்பு கேட்டுக் கொள்வது திரும்பவும் நாம் சபையில் பேசிக் கொள்ளலாம் என்பதை அறியச் செய்வது போன்றவற்றைக் கற்றிருந்தேன்.

சில மக்கள் நமது நேரம் முழுவதையும் எடுத்துக் கொள்வார்கள். ஆவியானவரின் உதவியோடு, அன்போடு ஆனால் உறுதியாய் எப்படி அவர்களைக் கையாளுவது என்பதைக் கற்று இருந்தேன்.

உங்கள் முதன்மைத்துவத்தைக் குறித்து எப்பொழுதும் தெளிவாயும் எல்லாவற்றையும் கர்த்தருடைய மகிமைக்கென்றும் செய்வீர்களாக!

கிறிஸ்துவைப் போல பணி செய்வதின் அவசியம்: பணி செய்யுமிடத்தில்

இதைக் காத்துக் கொள்ளும்படி நம்மை உந்தி செல்வது என்ன? அநேக மக்கள் தாங்கள் ஓய்வு பெறும் நேரத்தில், தங்கள் பிரயாண நேரத்தைத் தவிர 1,00,000க்கும் அதிகமான மணி நேரத்தை தங்கள் பணிக்கென செலவழிக்கின்றனர். இதோடு இந்த குறிப்பிடத்தக்க நேர முதலீட்டில், அநேக மக்கள் உண்மையிலேயே விருப்பமின்றி பணியாற்றி தங்கள் நேரத்தை வீணாக்குகின்றனர். ஏன் ஆணும் பெண்ணும் வேலை செய்கின்றனர்? கணவனும் மனைவியும் தங்கள் நேரத்தை வேலைக்காக செலவழித்து, இருவர் வருமானத்தினால் குடும்பத்தை நன்கு பராமரிக்கவும், அந்த வேலையை திருப்திகரமாக செய்யவும், அந்த பணியை காத்துக் கொள்ளவும் எப்படி முடியும்?

நாம் வேலை செய்வதின் காரணம்

முதலாவது ஆணும் பெண்ணும் ஏன் வேலை செய்ய வேண்டும் என்ற அவசியத்தை முதலில் பார்ப்போம். ஒருவர் நன்றாக இருப்பதற்கும், அவருடைய வாழ்க்கை தரமாக இருப்பதற்கும் தொடர்புடைய வேலையைக் குறித்த இந்த கேள்விக்கு சிலர் சிந்தனை அற்றவர்களாய் இருக்கின்றனர். 'நாம் ஏன் வேலை செய்ய வேண்டும்?' 'நம்முடைய தேவையை சந்திப்பதற்கு வேலை செய்கிறோம்' என்ற பதில் திருப்திகரமானது. இந்த கேள்விக்கு அதிக சிந்தனை முறையை அணுகுவோமாகில், பதில் குழப்பமானதாய் இருக்கும். நவீன கால ஆணும் பெண்ணும் வேலை செய்யும் காரணத்தை அவர்கள் நோக்கில் பார்ப்போமாகில் நாம் அந்த காரணத்தை அறிந்து கொள்வோம். பணம், தனிப்பட்ட சுதந்தரம், தனி நபர் திருப்தி மற்றும் சமுதாய சந்தை விரிவாக்கம், கணவன் மனைவியைத் தனித் தனியே அழைத்து இதே கேள்வியைக் கேட்கும் போது அவர்களிடமிருந்து வித்தியாசமான பதிலைப் பெற முடியும்.

இருவர் வருமானம் ஈட்டும் திருமண வாழ்க்கையில் ஆணிடமிருந்து கிடைக்கும் பதில் குடும்பத்தைச் சிறப்பாய் நடத்தவும், சமுதாய எதிர்பார்ப்பின்படி தன் மனைவி மற்றும் பிள்ளைகளை ஆதரிக்கவும், தன் சுய திறமையை வெளிப்படுத்தும் முறையை கண்டுபிடிக்கவும், சமுதாயத்திற்கு உதவி செய்யவும் என்று கூறுவர். மனைவியோ பொருளாதார தேவைக்காகவும், எதிர்கால திட்டத்திற்காகவும் (சொந்த வீடு வாங்கவும், பிள்ளைகளின் மேற்படிப்பிற்கென்று பணம் சேமித்து வைக்கவும், ஓய்வு காலத்திற்கென்று சேமித்து வைக்கவும்) தங்கள் அழைப்பை நிறைவேற்றவும், தனி வாழ்வில் வளர்ச்சியையும், நிறைவையும் அடையவும், தங்களுடைய உணர்வின் தேவைகளை சந்திக்கவும் வேலைக்குச் செல்வதாகக் கூறுவர்.

கணவனும் மனைவியும் கிறிஸ்தவர்களாக இருப்பின் மேலே கூறிய காரணங்களோடு வேதாகம குறிப்புகளையும் தங்கள் பதிலாகக் கூறுவர். முதலாவது வேதாகம பதிவுகள் கர்த்தரை, கிரியை செய்கிற கர்த்தர் என்று கூறுகிறது. (ஆதி. 2:2,3; யோ. 5:11) மனிதன் தேவனின் சாயலாய் படைக்கப்பட்டபடியால் அவனும் உருவாக்கவும், கிரியை செய்யவும் வேண்டுமென்று ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறான். (ஆதி. 1:27,28) மனிதனுடைய வீழ்ச்சியின் பலனால் வந்த வேலை என்பது சாபம் அல்ல, அது கர்த்தருடைய ஈவு.

இரண்டாவதாக கிறிஸ்தவனுடைய பார்வையில் வேலை என்பது கர்த்தருக்கும், மனிதருக்கும் ஊழியம் செய்வதாகும். கிறிஸ்தவ கணவனும் மனைவியும் இருவர் வருமான திருமண வாழ்வில் தங்களுடைய உலக வேலையில் வேதாகம நோக்குடையவராய் இருக்க வேண்டும். மனைவிகள் தாங்கள் வீட்டில் மட்டும் வேலை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறபடியால் தங்கள் வீட்டு வேலைகளோடு கர்த்தருக்கும் மற்ற மனிதருக்கும் குடும்ப தலைவி என்ற பங்கோடு வெளியில் பணி செய்பவர்களைப் போல பணிபுரிய வேண்டும்.

வேலைக்கான அர்த்தத்தைக் கண்டுபிடித்தல்

கணவனும் மனைவியும் வீட்டிற்கு வெளியே வேலை செய்வதால் மட்டும் அவர்கள் வேலை அர்த்தம் உள்ளதாயும், அவர்கள் சுய திருப்தி உள்ளவர்களாயும் இருக்க முடியாது. கிறிஸ்தவ பணியாளர்கள் தங்கள் வேலை திருப்தியாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்க என்ன செய்ய வேண்டும்? இதன் பதில் 3 கருத்துக்களைக் கொண்டது: அழைப்பு, உக்கிராணத்துவம் மற்றும் முக்கியத்துவம்.

- அழைப்பு - பாத்திரர்:

கிறிஸ்தவ வினைச் சொற்களில் இது முக்கிய வார்த்தை. பவுல் இதை எபே. 4:1ல் உபயோகிக்கிறார். 'நான்.... நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து.' இங்கு அழைப்பில் 2 காரியங்களை பவுல் குறிப்பிடுகிறார்; கர்த்தரோடுள்ள உறவில் அழைப்பு என்பதில் ஒருவனுடைய முழு இருதயமும், ஆத்துமாவும், பெலனும் அடங்கும். மற்றும் அந்த அழைப்புக்கென்று அவன் அனுதினமும் பணியாற்ற வேண்டும். கர்த்தரால் நியமிக்கப்பட்ட கிறிஸ்தவ வேலையாட்கள் அனுதினமும் பணியாற்ற வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றனர். மேலும் அவர் சொல்லுமிடத்தில் பணியாற்ற வேண்டும். அழைப்பின் நோக்கத்தோடு பணியாற்றுவதால் கிறிஸ்தவ சந்தைகளில் பிரச்சினைகளும், சோர்வுகளும் இருக்காது என்பதல்ல. ஆனால் அந்த வேலைக்கு ஒரு நோக்கமும், அர்த்தமும் கர்த்தரால் அருளப்படும்.

- உக்கிராணத்துவம்:

அழைப்போடு சேர்ந்து உக்கிராணத்துவமும் கிறிஸ்தவப் பணியாளர்களுக்கான முக்கிய கருத்தாகும். சுருக்கமாக இதைப் பார்க்கும் போது வேதத்தின் பார்வையில் உக்கிராணத்துவம் என்பது பூமியில் கர்த்தர் உருவாக்கி கர்த்தருக்கு சொந்தமான மனிதர்களையும், அதில் ஈவாய் உள்ள பொருட்களையும் பாதுகாப்பதாகும். (சங். 24:1) கர்த்தருடைய வரங்களை ருசித்த மனிதன் இதற்கு உக்கிராணக்காரனாய் இருக்கிறான். பூமியில் உள்ளவைகளை அவன் உபயோகப்படுத்திக் கொண்டவற்றிற்கேற்ப அவன் கர்த்தருக்கு ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கிறான். (1 கொரி. 4:2) வேலை செய்ய கர்த்தரே பெலன் அளிக்கிறார் என்பதை மறந்து போகிறவனை வேதம் கடுமையாக எச்சரிக்கிறது. (உபா. 8:11-18) அவ்வாறு தவறான ஆதயாத்தை விரும்புகிறவனையும் வேதம் எச்சரிக்கிறது. (லூக். 12:15) சந்தோஷமான கிறிஸ்தவ வேலையாட்கள் கர்த்தருடைய பிரதிநிதியாய் உலகத்தில் வேலை செய்து, கர்த்தருடைய உக்கிராணக்காரனாய் தங்கள் வருமானத்தை நிர்வாகித்து, தாங்கள் வேலை செய்ய பெலன் அளித்த கர்த்தரை மறவாதிருக்கின்றனர்.

- முக்கியத்துவம்:

மூன்றாவது முக்கிய கருத்து முக்கியத்துவத்தை அறிந்து செயல்படுவதாகும். கிறிஸ்தவர்கள் உலகப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது அல்லது தங்களுக்கென்று பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதைக் காட்டிலும் கர்த்தரோடு உள்ள உறவில் ஐசுவரியவான்களாவதே முக்கியமானதாகும். தங்களுடைய குறிக்கோளை அடைவது அல்லது தங்களுடைய தற்போதைய தேவையை சந்திப்பதற்கென்று பணம் ஈட்டுவது, தங்கள் விருப்பம் மற்றும் எதிர்கால வசதிக்கென்று பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் உறவில் பெலனைக் காத்துக் கொள்வது முக்கியமானது ஆகும். ஒரு சிறந்த கிறிஸ்தவன் ஒரு பலமான கிறிஸ்தவ குடும்பத்தை உண்டாக்கி, ஆரோக்கியமான வீட்டு சூழ்நிலையைக் காத்து, சபையோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கே முக்கியத்துவம் கொடுப்பான்.

வேலையை கர்த்தருடைய அழைப்பின் ஒரு பகுதியாய் செய்யும் போது, கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தை வெளிப்படுத்தும் போது உயர்ந்த முக்கியத்துவத்தைச் சரியாய் காத்துக் கொள்வதாலும் கிறிஸ்தவனுடைய பணி அர்த்தம் உள்ளதாயும், திருப்திகரமாயும் இருக்கும்.

உதவியாய் இருக்கக் கூடிய குறிப்புகள்

இருவர் வருமானம் ஈட்டும் குடும்பங்களில துணைவர்கள் தங்கள் வேலையின் மூலம் குடும்பம் மற்றும் உலகத்தோடுள்ள உறவுகளில் சரியாய் இருப்பதும், அதன் மூலம் தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்வதும், கிறிஸ்தவ திருமணம் மற்றும் கிறிஸ்தவ குடும்ப வாழ்வில் பலனடைய எப்படி முடியும்? சில எளிய குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. சுயத்தை மையமாய் கொண்டிராமல் தெய்வீக அழைப்பின் கீழ் வாழ். ஒருவனுடைய வேலையின் இயல்பும் அவனுடைய பணியில் அவனின் திறமையின் அளவும் கர்த்தருடைய அழைப்பிற்குரியதாய் இருக்கட்டும். ஒருவனுடைய வேலையின் குறிக்கோள் கிறிஸ்துவின் அழைப்பை நிராகரிப்பது அல்லது குடும்ப உறவை குறைப்பதாய் இருக்கக் கூடாது. இரண்டுமே உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

2. தேவைக்கும் விருப்பத்திற்கும் வித்தியாசம் காண். வீட்டிற்கு வெளியே மனைவி வேலை செய்வதின் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தைக் காத்துக் கொள்ள முடியும் என்ற விருப்பம், அருகிலுள்ளவர்களைக் காட்டிலும் அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற விருப்பத்தைக் காட்டிலும் வித்தியாசமானது. பேராசை, இச்சை, சமுதாயத்தில் வல்லமை போன்ற நோக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

3. மனிதர்களைக் காட்டிலும் பொருள்கள் மற்றும் மனித தன்மையற்ற வல்லமைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் வாழ். தொழில் முறையில் தன்னுடைய சமுதாய, பொருளாதார நிலையை உயர்த்துவதனால் தங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்களையும், அவர்கள் தேவையையும் அசட்டை பண்ணுவதால் அவர்கள் பாவம் செய்கிறவர்களாகி கர்த்தருடைய நியாயந்தீர்ப்பின் கீழ் வருவார்கள்.

4. கிறிஸ்தவர் அல்லாதவர்களைக் காட்டிலும் அதிக ஒழுக்கத்தோடும், உண்மையோடும் வாழும் கிறிஸ்தவ வாழ்க்கையை ஏற்றுக் கொள். இரட்சிக்கப்படாதவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் கிறிஸ்தவ வேலைக்காரராகிய நம்மிடத்தில் தரத்தையும், நம் குடும்ப மற்றும் திருமண வாழ்வில் அதிக காரியங்களை கர்த்தர் எதிர்பார்க்கிறார். அதே நேரத்தில் கர்த்தர் அருளும் கிருபையினால் சுய ஒழுங்கை காத்துக் கொள்ளவும், குடும்பம் மற்றும் உலக வேலையில் சமநிலையைக் காத்துக் கொள்ளவும் முடியும். (பிலி. 4:13; 1 யோ. 4:4)

நீயாக நடத்தப்படுகிறாயா அல்லது பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகிறாயா?

ஊழியத்திற்குள் நாம் நுழையும்பொழுது கர்த்தருடைய அழைப்பை நாம் கேட்ட பின்பும், அவருடைய ஆவியானவரால் நடத்தப்படுவது அவசியமாகும். அதனால் மாத்திரமே நாம் கர்த்தருக்கென்று அக்கினியாய் மாற முடியும்.

ரோமர் 8:14யை நான் வாசிக்க விரும்புகிறேன். 'மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.' நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இதை நடைமுறைப்படுத்தாவிட்டால் ஒரு கிறிஸ்தவன் நிறைவை அடைய முடியாதென்று நான் நம்புகிறேன். இந்த ஆச்சரியமான ஆவியானவரின் ஊற்றப்படுதல் உடனடியாக கிடைக்கிற அனுபவமல்ல அல்லது இதைப் பெற்ற நாம் குடி, சிரிப்பு போன்றவற்றிற்கு அடிமையாவதைப் போல அடிமையாகும் அனுபவத்தைப் பெறுவோம். இந்த அனுபவத்தைப் பெற்ற சில இடங்களில் அவர்களுடைய குணத்தில் மாறுதல் உண்டானதை என் தனிப்பட்ட அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். அதை அநேகருக்கு சாட்சியாகவும் கூறி இருக்கிறேன்.

ஆவியானவர் மூலமாக வல்லமையாக மறுரூபமாகுதல்

என்னுடைய அறைக்கு வெளியே அமர்ந்து என்னுடைய விருப்பத்தை அவரால் காண முடியும். 'உனக்காக கர்த்தர் மிகப் பெரிய காரியங்களை வைத்துள்ளார். அவரால் உன்னை இழக்க முடியாது! உம்முடைய ஆவியானவரால் இவரை நிரப்பும்' என்றார். உடனடியாக என் கண்ணுக்குத் தெரியாத வல்லமை ஒன்று என்னுடைய கரங்களையும், என் மணிக்கட்டுகளையும் மெதுவாய் தொட்டது போல் இருந்தது. ஆனால் அதற்கு பின்னால் ஒரு பெரிய வல்லமை இருந்தது. என்னுடைய மார்பும், தலையும் பின்னாக சென்று இயற்கைக்கும் மேற்பட்ட வல்லமையால் அதிக நேரம் மூச்சுகூட விடாமல் விழுந்திருந்தேன். என்னுடைய சோர்வு, அவநம்பிக்கை, வாக்குவாதம், கடின இருதயம் உடைய மக்களிடம் நான் செய்த ஊழியங்கள் மாறக் கண்டேன். என்னை விட்டு எல்லாம் செய்வதைப் போலவும், இயேசுவை சிலுவையிலே தரிசனமாய்க் காண்பதைப் போலவும் உணர்ந்தேன். அந்த தரிசனத்தில் நான் என் சரீரத்தை விட்டு வெளியே எடுத்துக் கொள்ளப்படுவது போலவும், மிகவும் இரைச்சலான ஒரு பெரிய சத்தத்தில் அவர் என்னோடு பேசியது 'முடிந்தது, முடிந்தது' என்றார். தொடர்ந்து நான் 5 நிமிடங்கள் இதே வார்த்தையைக் கூறிக் கொண்டு இருந்தேன். முடிவில் நான் அழுகிறவனாக காணப்பட்டேன். மிக மெல்லிய சத்தத்தோடு பரிசுத்த ஆவியானவர் எனக்குள் பேசியது, 'இதுவரை நீயாக நடத்தப்பட்டாய், இனி நான் உன்னை நடத்துவேன்' என்றார்.

இந்த அபிஷேகத்திற்கு பின்பாக நான் மிகவும் உறுதியாய் மாறி கர்த்தருடைய வல்லமையான தொடுதல் மூலம் என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் நுழைந்ததை உணர்ந்தேன். அந்த நாள் முதல் என் வாழ்க்கை மாறியது. என்னுடைய பழைய வழிபாடுகள் மற்றும் போதிக்கும் பழக்க வழக்கங்கள் மாறி சுவிசேஷகனாகிய என் ஊழியத்தில் விடுதலையாய் உணர்ந்தேன். என்னுடைய வாழ்க்கை மற்றும் ஊழியம் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள் வழி நடத்தப்பட்டதே இதன் சாரம்சம் ஆகும். இதைத் தொடர்ந்து என்னுடைய குணமும் மாறியது. என்னை அறிந்திருந்த மக்களும் இதை உறுதிபடுத்தினர்.

நம்மை நாமே வழி நடத்துவதில் உள்ள ஆபத்து

உங்களைக் குறித்து என்ன? உங்களை நீங்களே கடினப்படுத்தி வழி நடத்துவதின் மூலம் அநேக காட்சிகளை இழந்திருக்கிறீர்களா? கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசைகளை ஆராய்ந்து நீங்களே உங்களை நடத்துகிறீர்களா? அப்படியானால் நீங்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்?

மக்களால் நடத்தப்படுவோர்:

அவர்கள் பொதுவாக புத்தகங்களை வாசித்தும், கருத்தரங்குகளில் கலந்து கொண்டும், அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்தும் எந்த நேரத்தில் மிகவும் வல்லமையாய் செயல்படுத்த முடியும் என்றும் மேலும் மேலும் குறிக்கோள்களை குறித்துக் கொண்டு அதற்கான வழிகளை நோக்கி எப்போதும் அதை நிறைவேற்றி முடிக்க முனைபவரா.

அதை செய்து முடிப்பதற்கான குறிகளோடு இருப்பர்... இதன் அர்த்தம் தங்கள் நிலைமையை குறிக்கும் அடையாள குறியைக் குறித்து விழிப்புள்ளவர்களாய் இருப்பர்: பதவி, அலுவலகத்தின் அளவு மற்றும் இடம். அமைப்பு வரைபடத்தில் உள்ள பதவி மற்றும் சிறப்பு சலுகைகள்.

கட்டுப்படுத்த முடியாத விரிவாக்கத்தில் பிடிக்கப்பட்டவராய் இருக்கிறீரா. அதிக வெற்றியையும் மிகவும் பெரிதாகக் கூடியதுமான ஏதோ ஒன்றிலும் அவர்கள் ஒரு பகுதியாய் இருக்க விரும்புவர்.

நிலைத்துவத்தில் எல்லையை உடையவராய் இருத்தல் .... வெற்றிக்கான குறுக்கு வழியே அவர்கள் வாழ்க்கையின் வழி முறையாய் மாறும். அவர்களுடைய குறிக்கோளே முக்கியமாய் இருப்பதால் தங்கள் ஒழுக்கத்தையும் விட்டு விட நினைப்பர். மக்களால் வழி நடத்தப்படுபவர் முன்னேற்றத்தை மட்டுமே நோக்கமாய் கொண்டு அதற்காக ஏதோடும் ஒத்து செல்ல நினைப்பர்.

முன்னேற்றமடையாத மக்களுடைய திறமை அல்லது அவர்களுடைய எல்லையை சொந்தமாக்கிக் கொள்வர். மக்களால் வழிநடத்தப்படுபவர் பொதுவாக மற்றவர்களுடைய எழுச்சிக்காக அவர்களுடைய சரீரங்களை உபயோகப்படுத்திக் கொள்வர். அப்படிப்பட்டவர்கள், 'அவர்கள் தாங்க முடியாத வேலையில் இருக்கின்றனர். ஆனாலும் காரியம் சீக்கிரமாய் முடியும்' என்று கூறுவதை கேட்டிருக்கலாம்.

மிகவும் போட்டி மனதை உடையவர்களாய் மற்றவர்களை போட்டியாளர் அல்லது எதிரிகளாய் கருதி இந்த செயல் முறையில் மனிதாபிமானத்தை இழப்பர்.

பொதுவாக இயல்புக்கு மாறாய் அதிக வேலையில் இருக்கிறீரா .... திருமணம் மற்றும் குடும்பம் அல்லது நட்பு போன்ற சாதாரண உறவும் கொள்ள முடியாதபடியும், கர்த்தரோடு பேச முடியாதபடியும் அதிக அலுவலாய் இருக்கிறவரா?

ஆவியானவரால் நடத்தப்படுவோர்

இயற்கையாகவே நாம் பார்த்தபடி மக்களால் நடத்தப்படுவோர் அல்லது வேலைக்கு அடிமையானோர் அதிகம் கிரயம் செலுத்துகிறவராய் இருப்பர். அவர்கள் நிறுவனங்களைத் தொடங்கி வேலை வாய்ப்புகளை வழங்குகிறவர்களாய் இருப்பர். அவர்கள் செய்யும் காரியங்களில் தங்கள் வழியில் மிகவும் பிரகாசம் உடையவர்களாகி அநேகருக்கு நன்மை செய்கிறவர்களாய் இருப்பார்கள். ஆனால் அதற்கு அவர்கள் செலுத்தும் கிரயம் என்ன? அவர்கள் தங்கள் வேலையோடு இளைப்பாறுவர். ஆராதனை, மற்றும் விளையாட்டு என்ற சமநிலை இல்லாமல் மிகவும் காரியவாதிகளாக மட்டுமே இருப்பர். அவர்கள் வாழ்க்கைக்கு உரிய அர்த்தத்தை விட்டு தவறி செல்கின்றனர்.

தங்களைத் தாங்களே வழி நடத்துவோர் நிறைவின் அனுபவம் இராமல் வெற்றியை அடைகின்றனர். எல்லாம் அவர்களுக்கு இருந்தாலும் தனிமையாயும், இது மட்டும் போதாது என்று அறிகிறவர்களாயும் இருக்கிறார்கள். 'நீங்கள் மிகவும் கடினமான பூமியின் கடைசிக்கு பயணம் செய்கிறவர்களாய் இருக்கலாம் ... ஆனால் வழியிலுள்ள மலர்களை முகர்ந்து பார்க்க மறவாதீர்.'

எபி. 4:9,10 கூறுகிறது, 'ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாய் இருக்கிறது. ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தமது

கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.' கிறிஸ்தவனின் முதிர்ச்சிக்கு வழியாய் இருப்பது: சுயமாய் தன்னை நடத்திக் கொள்ளாமல் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவது! இத்தகைய அற்புதமான வேளையில் நம்மைப் புதுப்பித்துக் கொண்டு நாம் கூறுவது, 'ஆண்டவரே, என் வாழ்க்கையில் நான் சிறுகவும், உம்முடைய பரிசுத்த ஆவியானவர் பெருகவும் வேண்டும். நான் இன்னும் அதிகமதிகமாய் கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்தும் பிம்பமாய் மாறச் செய்யும்.'

தனிப்பட்ட உதாரணம்

என்னுடைய ஊழிய வாழ்க்கையில், நான் எவ்வழி செல்ல வேண்டுமென்று கர்த்தர் எனக்குத் தெளிவாய் காட்டினார். மிகவும் கடுமையாய் மக்கள் என்னிடத்தில் சந்தேகங்களை எழுப்பும் போது நான் எளிதாய் கூறும் பதில், 'பரிசுத்த ஆவியானவரே என்னை வழி நடத்துகிறார்.' ஊழியக்காரனாகிய நான் எதைப் போதிக்கிறேனோ, அதையே நடைமுறைப்படுத்த வேண்டும்! நானாக அல்ல, இப்பொழுது நான் வழி நடத்தப் படுகிறேன்.

திரும்பவும் அந்த கேள்வி: உங்களைக் குறித்து என்ன? பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட கூடிய துவக்க நேரம் இதுவா? கர்த்தருடைய அசைவாடுதல் என்ன என்பதே இதில் முக்கியமான பகுதி.

வரதட்சணையைக் குறித்து என்ன?

பெண் வீட்டாரிடம் ஒரு பெரிய தொகையை மணமகன் வீட்டார் கேட்டுப் பெறுவது சமுதாய தீமை ஆகும். சிறந்த மனநிலையை உடைய ஒவ்வொரு குடிமகனும் உண்மையான கிறிஸ்தவர்களும் இதை எதிர்த்துப் போராட வேண்டும். வரதட்சனைக்கு எதிரான சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தாலும் வரதட்சனை முறை இன்னும் ஒழிந்து போகவில்லை. கணவனாலும் கணவன் வீட்டாராலும் பணம் கேட்டு ஏற்படுகிற தொந்தரவினால் பெண்கள் எரிந்து போவதை இன்னமும் செய்தி தாள்களில் வாசிக்கிறோம். இந்த பிரச்சனையில் கிறிஸ்தவர்களாகி நாம் எப்படி இருக்க வேண்டும்?

பழங்காலத்து மத்திய கிழக்குப் பகுதியில், ஒரு மனிதன் பெண்ணின் தகப்பனாருக்கு வெகுமதி அளிப்பதை எதிர்பார்த்தனர். (ஆதி. 34:15) வரதட்சனை என்பதற்கான உண்மையான அர்த்தம்: 'பெண்ணிற்கான - விலை' ஆனால் இன்று அது 'மணமகனுக்கான - விலை'யாக மாறிவிட்டது! பெண்ணிற்கான விலையும் பணமாக பொதுவாக செலுத்தப்படுவதில்லை. லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்து கொள்வதற்காக யாக்கோபு 7 வருடங்கள் வேலை செய்வதாய் இருந்தது. (ஆதி. 29:18) தாவீது 100 பெலிஸ்தியர்களை கொன்ற போது சவுல் தன் மகளை தாவீது திருமணம் செய்து கொள்ள கூறி, 'இதற்கு மேல் ஒன்று பெண்ணிற்காக' பெற விரும்பவில்லை என்று கூறியதிலிருந்து நிருபணம் ஆகிறது. (1 சாமு. 18:25) பெண் திருமணம் முடிந்து வரும் போது பெண்ணின் தகப்பனும் அவளுக்கு வெகுமதியை அளித்தனர். லாபான் தன் மகள்களுக்கு வேலைக்காரப் பெண்களைக் கொடுத்தார். (ஆதி. 29:24,29) காலேப் தன் மகளுக்கு தண்ணீர் பாயும் நல்ல வயல் நிலத்தைக் கொடுத்தார். (யோசுவா 15:17,19). மணப்பெண்ணுக்கு மணமகனும் வெகுமதி அளித்தனர். (ஆதி. 24:53) கிறிஸ்துவும் தன் மணவாட்டியாகிய சபையை நேசித்து தம்மையே கொடுத்தார். (எபே. 525) மணவாளனாகிய கிறிஸ்துவின் தகப்பன் பிதாவும் தம் சொந்த குமாரனையே கொடுத்தவர் மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? (ரோமர் 8:32)

திருமணத்தில் பண விவகாரம் பெரிய காரணியாய் மாறும் போது எல்லாவித தீமைகளும் அங்கு முளைக்கிறது. பணம் முக்கியமான காரணமாய் மற்றவர்களுக்கு இருக்கும் போது கிறிஸ்துவை மையமாய் கொண்ட திருமணங்களில் அது ஒரு பொருட்டாய் இருக்கக் கூடாது. அநேக கிறிஸ்தவ வாலிபர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் போது பெற்றோரின் வற்புறுத்தலினால் பணத்திற்கு முதலிடம் கொடுப்பதால் கர்த்தருடைய சிறந்த தெரிந்தெடுப்பை இழக்க நேரிடுகின்றனர். பணம் அல்லது பிரச்சனைகளை அல்ல. தங்கள் குணத்தை இழந்து போகின்றனர். (நீதி. 31:30) விசுவாசியான வாலிபர்கள் கர்த்தருடைய முதுகெலும்பாய் இருக்கிறபடியால் பெற்றோருடைய வேதத்திற்கு புறம்பான வற்புறுத்தல்களை எதிர்த்து நிற்க வேண்டும். முழு குற்றச் சாட்டையும் பெற்றோர் மேல் தூக்கி எறிவது மனித தன்மை ஆகாது.

சில வட்டாரங்களில் ஆண்களுக்கு சொத்தை அளிப்பதால் பெண்களை மாற்றான் தாய் பிள்ளைகள் போல நடத்துகிறார்கள். இருவருக்கும் சம உரிமை என்ற வேத கோட்பாட்டிற்கு இதுவும் புறம்பானது. பெற்றோர் பெண் மற்றும் ஆணை இவ்வாறு நடத்துவதால் இதுவே வரதட்சனை முறைக்கு மிக முக்கியமான பணியாய் அமைகிறது. நானும் என் மனைவியும் வரதட்சனை முறையை எதிர்க்கிறவர்களாய் இருந்தோம். எங்கள் திருமணம் இதற்கு சாட்சியாய் இருக்க வேண்டுமென்று விரும்பினோம். அவள் என்னைத் திருமணத்திற்கு என்று அணுகும் போது, அப்போது தான் என் படிப்பை முடித்து இருந்தேன். நான் கடன் வழங்கும் திட்டத்தின் கீழாக படித்திருந்தேன். என் தகப்பனாருடைய வங்கி கணக்கும் பூஜ்ஜியமாக இருந்தது. ஆகவே என் தகப்பனார் அவளுடைய பெற்றோரிடம் மணமகளுக்கு திருமண உடை வாங்க கூட பணம் இல்லை. ஆதலால் அவன் சம்பாதிக்கும் வரை சிறிது காலம் பொறுத்திருக்க முடியுமா என்று கேட்டார். அதற்கு அவளின் தகப்பனார் நாங்கள் உங்கள் மகனின் மேல் தான் ஆர்வமாய் உள்ளோம் வேலையின் மேல் அல்ல என்று கூறினார். பின்பு அவராகவே முன் வந்து என் திருமண செலவிற்கென்று ஒரு தொகையை கொடுத்தார். அந்நாட்களில் பொறியியல் மேற்படிப்பு படித்தவர்களுக்கு அதிக விலை கொடுக்கப்பட்டு வந்ததால் என் பெற்றோர் இந்த சிறிய தொகையை திருப்தியாய் வாங்கி கொண்டதற்காக கர்த்தரை துதிக்கிறேன். என் திருமணத்திற்கு முன்பதாக நான் என் மாமனாரிடம்

எனது வருமானத்தில் சிறிது காலத்திற்குள் இதை திருப்பி செலுத்தி விடுகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் 'இந்த தொகை என்பது மிகவும் பெரிதோ அல்லது வரதட்சனையாக கேட்கப்பட்டதோ அல்ல. திருமணத்தை நடத்துவதற்கென்று உங்கள் பெற்றோருக்கு உதவி செய்ய நான் அளித்தது மிகவும் குறைந்ததே என்றார்.' ஆகையால் நீங்கள் தெளிவான மனசாட்சியோடு செல்லுங்கள் என்றார்.

அநேகர் வழி முறைகளுக்குப் பதிலாக ஒரு விருந்தின் மூலம் திருமணத்திற்குள் நுழைவது நாகரிகமானது. குறைந்த வருமானம் உள்ளவர்களை அதிக கடனுக்குள் கொண்டு செல்வது கிறிஸ்தவம் ஆகாது. கிறிஸ்தவர்களாகிய நாம் மாதிரியாக இராவிட்டால் பின்பு யார் அவ்வாறு இருப்பார்கள்?